# வானமெல்லாம்
# ஆசைக் காற்றாடி

பி. வி. ஆர்.

கங்கை புத்தகநிலையம்

13, தீனதயாளு தெரு,
தி. நகர், சென்னை-17.

முதற் பதிப்பு : மார்ச், 1995

சென்னை மாவட்ட கிளை நூலகம்
கொளத்தூர், சென்னை 99.

விலை : ரூ. 45-00

21202

3741781

அச்சிட்டோர் :
ஸ்ரீ கோமதி அச்சகம்,
55, மல்லன் பொன்னப்பன் தெரு,
திருவல்லிக்கேணி,
சென்னை-600 005.

# முன்னுரை

இதோ என்னுடைய சிறு முன்னுரை!

பல வருடங்களாகவே என்னுள் ஒரு கேள்வி அடிக்கடி எழுந்து கொண்டே இருந்தது. ஒரு மனிதன் ஏதேனும் ஒன்றில் ஆசை வைக்கிறான். அந்த ஆசை நிறைவேறும் போது அவனுக்கு மட்டுமே மகிழ்ச்சி ஏற்படுகிறது. நிறைவேறாவிட்டால் ஏமாற்றம். இதுவும் அவனுக்கு மட்டுமே சொந்தம். இந்த ஆசையை விட லட்சியம் என்பது பன்மடங்கு உயர்ந்த உணர்ச்சி அல்லவா? ஆசை வேறு லட்சியம் வேறு அல்லவா?

ஒரு லட்சியத்தை நோக்கி ஒருவனோ, ஒருத்தியோ செல்லும்போது, பாதை கரடு முரடாகத்தான் இருக்கிறது. பல இன்னல்களைச் சந்திக்க நேரிடுகிறது பல எதிர்ப்புக்களை எதிர் கொள்ள வேண்டியிருக்கிறது. இவைகளையெல்லாம் கடந்து லட்சியப்பாதையின் எல்லைக்கு வரும்போது அவனுடைய மனத்தில் வெற்றிக் களிப்பு இல்லை; ஏதோ ஒன்றை சாதித்து விட்டதான பெருமை இல்லை; மற்றவர் அடைந்து விட்டதைத் தான் அடைந்து விட்டதான கர்வம் இல்லை; ஒரு லட்சிய புருஷனிடம் இருக்க வேண்டிய மனத்திருப்தி மட்டுமே அவனுள் ஒளி வீசுகிறது.

இதற்கு முக்கிய காரணம் அவனுடைய வெற்றி. அவனுக்கு மட்டும் சொந்தமன்று. அவனைச் சுற்றியுள்ள சமூகம் அவனுடைய லட்சியத்தால் நன்மைகள் பல பெறுகின்றது.

நமது நாட்டிலும் எல்லா அயல் நாடுகளிலும் லட்சிய புருஷர்கள் தோன்றியிருக்கிறார்கள். செல்வத்தையோ, வளமான ஒரு வாழ்க்கையையோ எதிர்பார்த்து எந்த லட்சியவாதியும் செயல்படுவதில்லை. ஆனால் ஒரு சிலர் தங்கள் ஆசைகளையே லட்சியங்கள் என்று நினைத்து-

தவறான கண்ணோட்டத்துடன் தவறான பாதையில் செல்ல விழைகிறார்கள்.

இந்த நாவலில் வரும் நாயகி மேற்சொன்ன வர்க்கத்தைச் சேர்ந்தவள். ஒரு ஆசையையே லட்சியம் என்று நினைத்துக்கொண்டு அதை நிறைவேற்றிக் கொள்ளத் துடிப்பவள். அவளுடைய அறியாமைத் திரையை அகற்ற பல பாத்திரங்கள், பல திசைகளிலிருந்து வர வேண்டியிருக்கிறது.

இந்தக் கதையில் பாலக்காட்டுத்தமிழ் வருகிறது. இதற்குக் காரணம் என் சொந்த கிராமத்தை நிலைக்களனாக வைத்துக் கொண்டே நல்லதோர் நாவல் எழுத வேண்டுமென்று நீண்ட நாளாக விரும்பி வந்தேன். பாலக்காட்டுத் தமிழர்கள் அனைவருமே சில நூற்றாண்டுகளுக்கு முன் தஞ்சை, திருச்சி, மதுரை போன்ற இடங்களிலிருந்து குடி பெயர்ந்தவர்கள். அங்கு கால் ஊன்றிய பிறகு அவர்களுடைய தமிழில் மலையாள வாசனை கமழலாயிற்று. ஒரு புதுமையான சூழ்நிலையை உருவாக்கும் வாய்ப்பு ஸ்ரீராம் டிரஸ்ட் நிறுவனம் நடத்திவரும் 'அமுதசுரபி' மூலமாகக் கிடைத்தது. இந்த நாவல் பத்திரிகைத் தொடராகவும் வநதது. இதைப் புததக வடிவில் கங்கை திரு. இராமநாதன் வெளியிட உதவி செய்தமைக்கு நான் அவருக்குக் கடமைப்பட்டிருக்கிறேன். புத்தக வடிவில் கொண்டுவர எனக்கு அனுமதி அளித்த அமுதசுரபி ஆசிரியர் கலைமாமணி டாக்டர் விக்கிரமன் அவர்களுக்கும், ஸ்ரீராம் டிரஸ்ட் நிறுவனத்தாருக்கும் எனது உளங்கனிந்த நன்றிகள்.

கதையில் வரும் சில நிகழ்ச்சிகள் உண்மையாகவே நடந்தவை. நான் நேரில் பார்த்தவை. இந்த நாவலில் குறைகள் ஏதேனும் இருப்பின் என்னை மன்னியுங்கள் நிறைவுகள் இருப்பதாகத் தோன்றினால் மனதுக்குள் ரசித்து மகிழுங்கள்.

''சுபஸ்ரீ''
22, 4-வது பிரதான சாலை,
பெசன்ட் நகர், சென்னை-90

பி. வி. ஆர்.
3-4-1995

சென்னை மாவட்ட ... நூலகம்
21202
374(781
கொளத்தூர், சென்னை-99.

# வானமெல்லாம் ஆசைக் காற்றாடி

## 1

அவளுக்குக் கலியாணம் நாளை நடக்கப்போகிறது. இந்தச் சாதாரணக் கழுத்துக்கு ஒரு மஞ்சள் கயிறு மூலமாக முக்கியத்வம் கிடைக்கப் போகிறது. கால் விரல்களில் மெட்டிகள் தஞ்சமடையப் போகின்றன.

மாடியில் பிற்பகல் வெளிச்சம் காணாத அறையில் பழையதோர் நாற்காலியில் பாரதி உட்கார்ந்திருந்தாள். இருக்கையின் ரப்பர் மூலாம் தேய்ந்து, கிழிந்து வெளிறிக் கிடக்க பஞ்சு இரும்புக் கெட்டியாகப் பலகை போலாகி விட்டது. வலியை உணராமல், இம்சையை நினைத்தும் பாராமல், அவள் ஜன்னல் மூலம் பார்த்தவளாய் இருந்தாள்.

அவள் எப்படி இந்தத்திருமணத்துக்குச் சம்மதித்தாள்? ஆறு மாதங்களுக்கு முன்வரை அம்மா, அப்பாவிடம் வீராப்புடன் பேசியவள் ஏன், எப்படி மனம் மாறினாள்? அப்பாவின் நெஞ்சிலிருந்து உருவி வந்த வெண்ணெய்க் கசிவு வார்த்தைகள் அவள் மனத்தைப் பாதித்தனவா? அம்மாவின் அழுகையும், தற்கொலை பயமுறுத்தலும் அவளை அயரச் செய்தனவா! அவளுடைய அண்ணா மேற்படிப்புக்காக அமெரிக்கா போனான். போனவன்

அங்கேயே தங்கி ஒரு அமெரிக்கப் பெண்ணை மனைவியாக்கிக் கொண்டு வாழ்கிறான். அவன் மேற்படிப்பை அயல்நாட்டில் வைத்துக் கொள்ளாமல் தாய் நாட்டிலேயே நடத்தினாலும், அண்ணன் காட்டிய வழியில் தங்கையும் போகக்கூடும் என்று அம்மா அஞ்சுகிறாள். அந்தப் பயத்தைப் போக்க வேண்டும் என்ற எண்ணத்தில், இந்தத் திருமணத்துக்கு இசைந்தாளா?

அவளுக்கு விதியில் நம்பிக்கை இல்லை. ஆனால் இப்போது விதியின் சூழ்ச்சியால்தான் அவள் மணமேடையில் உட்காரப் போகிறாளோ என்று நினைக்கத் தோன்றியது.

இது ஒரு திடீர்ச் சம்பவம் அன்று. ஒரு விபத்தும் அன்று! ஆனால் பாதிக்கப்பட்டிருப்பது அவள்தானே? இதிலிருந்து இனி அவளால் தப்ப முடியாது. தன்னைத்தானே மீட்டுக் கொள்ளவும் இயலாத காரியம், என்ன செய்யலாம்? இரவோடு இரவாக யாருக்கும் தெரியாமல் அவள் ஓடி விடலாம். பஸ்ஸையும், ரெயிலையும் பிடித்துச் சென்னையை அடைந்து அங்கிருந்து டெல்லிக்குப் பறந்து விடலாம். ஆனால் நெஞ்சில் உரம் இல்லையே? அல்லது அன்று மாலையே, இந்தத் திருமணத்தில் விருப்பமில்லை என்று நாலு பேர் முன்னிலையில் பிரகடனம் செய்துவிட்டு விடுதலை வாங்கிக் கொள்ளலாம். ஆனால் அது நாகரிகமும் இல்லை, விவேகமும் இல்லை. அவளுடைய சம்மதம் தெரிந்த பிறகுதான் எல்லா ஏற்பாடுகளும் ஆரம்பமாகியிருக்கின்றன. இப்போது நேர்மாறாகப் பேசினால் அம்மா, அப்பாவுக்கு அல்லவா துரோகம் செய்ததாகிவிடும்? அவளால் அவர்கள் என்றென்றும் தலை நிமிர முடியாமற் போய்விடுவார்களே?

அவளைத் தன் துணைவியாக ஏற்றுக் கொள்ளப் போகிறவன், அப்பாவின் சொந்தத் தங்கை பிள்ளை. அவள் மண்ணில் வீழ்ந்தபோதே, அவள்தான் தன்னுடைய மருமகள் என்று அத்தை முடிவு செய்துவிட்டாளாம்.



அப்பாவும் தங்கையின் பிள்ளைதான் தம்முடைய மருமகன் என்று அறிவித்து விட்டாராம். என்ன பைத்தியக்கார எண்ணங்கள்! அண்ணன் தங்கை பாசங்கள் சினிமாவில் பார்க்க வேண்டுமென்றால் நன்றாக இருக்கும் ரசிகர்கள் வேண்டுமானால், நிழலில் தெரியும் உணர்ச்சிக் காட்சியைக் கண்டு, நீர் வடிக்கலாம். ஆனால் நிஜ வாழ்க்கையில் அவளைத் தவிர, பாதிக்கப்பட்டவளைத் தவிர வேறு யார் நெஞ்சின் கண்ணீரோடு துடிக்கிறார்கள்?

மெல்ல மெல்ல அவனுடைய உருவம் கண் முன் வந்து நின்றது.

ஆறு அடிக்கு ஓர் அங்குலம் கூடக் குறையாத உயரம். எலுமிச்சம் பழம் போன்ற நிறம். அகலமான நெற்றி. பார்வையிலேயே சிரிப்புக் களித்தது. நீண்ட, கத்தி முனைக்கு இறங்கிய மூக்கு. ஆஜானுபாகுவாய், வஜ்ரம் ஏறின உடற்கட்டோடு இருக்கும் அவனுடைய நடையில் ஒரு நிதானம். பேச்சில் அளவு இல்லாவிட்டாலும் தெளிவு

நான்கு மாதங்களுக்கு முன்-நன்றாக நினைவில் இருக்கிறது. தீபாவளிக்கு மறுநாள்-அவன் திடீரென்று டெல்லியில் வீட்டுக்கு வந்திருந்தான். கேரளத்து விவசாயிகளின் பிரதிநிதிகளில் ஒருவனாக வந்திருந்தவன், தன் தாயாரின் ஆக்ஞை பேரில் மாமாவைப் பார்க்க வந்தான். அவளுக்கு அவன் யார் என்று புரியவில்லை. எங்கேயோ, எப்போதோ பார்த்த முகமாகத் தெரிந்தாலும் நினைவில் முட்டவில்லை.

''நீ பாரதி அல்லவா?''

''யெஸ்.''

''மாமா இருக்காரா?''

''யூ மீன், மை ஃபாதர்?''

''ஆமாம்.''

''ப்ளீஸ் கம் இன்...டாட், ஸம் ஒன் இஸ் ஹியர் டு ஸீ யூ.''

''யார்ம்மா...அடடே, நாணாவா!...வாவா எப்ப வந்தே? தங்கம்மா எப்படி இருக்கா...? அப்பா, தாத்தா பாட்டி எல்லோரும் சௌக்கியம்தானே?''

''எல்லோரும் ஒரு விதமா சௌக்கியம்.''

''பாரதி!''

''யெஸ், டாட்...''

''இவன் யார்னு மொதல்ல புரியலே இல்லே?''

''யெஸ் டாட்!''

''உன் அத்தை புள்ளை...நாம பல வருஷங்களுக்கு முன்னாலே உன் சித்தப்பா கலியாணத்துக்குப் போனோமே, நினைவு இருக்கா?''

''ஐ வாஸ் ஜஸ்ட் டென் அட் தட் டைம்.''

''பாரதிக்குத் தமிழ் தெரியாதா, மாமா?''

''அம்மாகூடப் பேசுவா.''

''மாமி இல்லியா?''

''இப்பத்தான் குளிச்சுட்டு ட்ரெஸ் மாத்திக்கப் போனா...இப்ப வந்துடுவா...பாரதி அம்மாவைச் சீக்கிரம் வரச்சொல்லு...''

''மெதுவா வரட்டும். மாமா! டெல்லியில பத்து மணிக்கு மேலதான் குளியல் போலிருக்கு.''

''டெல்லியில என்ன திடீர்னு...''

''மினிஸ்டரைப் பார்க்க வந்தோம். நான் பாலக்காட்டுப் பிரதிநிதி.''

''மீட் பண்ணியாச்சா?''



''முந்தா நாள் மீட் பண்ணினோம். பாதிப் பேசிண்டிருக்கறச்ச பி.எம். ஒபிஸிலிருந்து ஃபோன் வந்தது. ஓடிட்டார்...இன்னைக்கு உச்சிக்கு அப்புறம் மீட் பண்ணச் சொல்லியிருக்கார்...கிருஷி பவன்ல.''

''கொஞ்ச நாள் இருப்பே இல்லியா?''

''ஹேய்.. நாளைக்குக் கேரளா எக்ஸ்பிரஸ்லே போறோம்.''

''நீ நேரே நம் வீட்டுக்கு வந்திருக்கணும். நாணா! நான் இங்கே இருக்கறப்ப நீ வேற எங்கானும் தங்கலாமா?''

''நான் ப்ளெஷர் ட்ரிப்புக்கு டெல்லி வரலே மாமா.... நாங்க பந்திரண்டு பேர் வந்திருக்கோம் கேரள சமாஜம் இருக்கு இல்லியா, அங்கே எறங்கியிருக்கோம்.''

''நாலு வருஷம் முன்னால நீ டெல்லி வந்தப்ப இங்கே வரலே.''

''அதுக்கு அப்றம் அஞ்சாறு பிராவஸ்யம் வந்தாச்சு. ஒரு காரியமா வர்றப்ப அங்கே இங்கேன்னு போயிண்டிருக்கக் கழியுமா, மாமா? இன்னைக்கு எப்படி வர முடிஞ்சதுன்னு கேட்பேள்? நேத்தைக்கே மந்திரிட்ட என்னென்ன பேசணும்னு எங்களுக்குள்ளே முடிவு எடுத்துண்டாச்சு. பந்திரண்டு மணி வரையில் அவா அவா இஷ்டம் போலப் போலாம்னு தீர்மானிச்சோம். அம்மாவும் வேற ரொம்பக் குறைப்பட்டுண்டா, நான் மாமா, மாமியைப் பார்த்து விசாரிக்கறதில்லைன்னு அதான் வந்தேன்...அதா மாமி வர்றாளே கொஞ்சம் தடிச்சுப் போயிட்டாளோ? என்ன மாமி, ஒன் பொண்ணு தான் புடைவை உடுத்திக்கலை...நீயும் அவளை மாதிரி ஹவுஸ் கோட்டு போட்டுண்டிருக்காய்?''

''இங்கே இதுதான் சௌகரியம். சீப்பும் வேற... எப்ப வந்தே... அம்மா, அப்பா எல்லாரும் எப்படி இருக்கா...?''

''எல்லாம் மாமாகிட்டச் சொல்லியாச்சு. கேட்டுத் தெரிஞ்சுக்குங்கோ... மின்னால இதை வாங்கிக்குங்கோ...''

''என்ன இது?',

''பெங்காலி மார்க்கெட்டுக்குப் போயிருந்தோம். கொஞ்சம் ஸ்வீட்டு, பாரதி! இந்தா இது உனக்கு.''

இதுவரையில் சோபாவில் உட்கார்ந்திருந்தவள் நிமிர்ந்து பார்த்தாள். பிறகு அப்பாவைப் பார்த்தாள்.

''வாங்கிக்கோ, பாரதி!''

''வாட் இஸ் திஸ்?'' கை நீட்டிப் பெற்றுக்கொண்டே கேட்டாள்.

''நீ தலையை நன்னாக் கட் பண்ணிண்டிருக்காய். பாதி. இருந்தாலும் கழுத்து வரை கேசம் இருக்கே... வாரிக்கலாம்.''

தந்தச் சீப்பை ஒரு தடவை பார்த்துவிட்டு அவனுக்குப் பதில் சொல்ல பரரதி வார்த்தைகளைத் தேடினாள்.

தம் பெண் உள்ளுக்குள் பொருமிக் கொண்டிருக்கிறாள் என்பதை உணர்ந்த அப்பா சமிக்ஞையால் அவளை அடக்கினார்.

''நான் இப்படிப் பேசினதில் பாரதிக்கு தேக்ஷ்யம் இல்லையா?'' என்றான் நாராயணன்.

''அதெல்லாம் ஒண்ணுமில்லை'' என்று அம்மா சமாளித்தாள்.

''சுசீலா, மணி பதினொன்னு அடிக்கப் போறது. சமையல் ரெடிதானே?

''சமையலை முடிச்சுட்டுத்தான் குளிக்கவே போனேன், வா. நாணா சாப்பிடலாம்.''

''ஹேய், நான் சாப்பிட வரலை, நாங்களெல்லாம் பந்த்ரண்டு மணிக்கு மேலே ஒந்நா ஒட்கார்ந்து சாப்பிடறதா இருக்கோம். நான் பொறப்படறேன்.''



''என்ன அவசரம். நாணா... இரு போகலாம். நான் என் கார்ல கொண்டு விடறேன்?''

''ஆவஸ்யம் இல்லை மாமா... கிட்டக்க பஸ் ஸ்டாப் இருக்கு... நான் போய்க்கறேன், நான் வரேன் மாமி... வரேன் பாரதி.''

நாராயணன் எழுந்தான்.

''ஒரு வாய் காப்பி குடிச்சா அது சோத்தை அடைக்கும்...மாமா, மாமி ரெண்டு பேரும் சேர்ந்து நில்லுங்கோ! நமஸ்காரம் பண்ணிட்றேன்''.

''பரவாயில்லை நாணா''

''நமஸ்காரமெல்லாம் ஒண்ணும் வேண்டாம், நாணா. எங்க ஆசீர்வாதங்கள் எப்போதும் உனக்கு உண்டு.

''இப்படிச் சொன்னா நான் விட்டுட மாட்டேன். நில்லுங்கோ.''

நின்றார்கள்; சாஷ்டாங்கமாக விழுந்து நமஸ்கரித்து எழுந்த நாராயணன் சிரித்தான்.

''எல்லார்க்கும் போயிட்டு வரேன்''.

''ஒரு நிமிஷம் நாணா.''

''என்ன மாமா?'.

''வெறும் கதர் வேஷ்டியும், ஜிப்பாவுமா டெல்லிக்கு வந்திருக்கிறே... ஒரு ஸ்வெட்டர் போட்டுக்கோ. இரு தரேன்.''

''ஹெய் ஸ்வெட்டர் ஒண்ணும் ஆவஸ்யம் இல்லை. நான் வரேன்.

பாரதியைப் பார்த்தான்.

சிரித்தான்.

''நீ ரொம்ப மோடர்னா இருக்காய், பாரதி... தோஷமில்லை. ஆனா அதுக்காகச் சலூன்ல கேசத்தைக்

கட் பண்ணிக்கண்டாம். நெத்தியில ஒரு குங்குமப் பொட்டு இருந்தா மோகம் லட்சணமா இருக்கும்''

பாரதிக்குக் கோபம் தலைக்கேறியது. ஆனால் எப்படி எதிர்த்துப் பேசுவது? அப்பாவின் தங்கை பிள்ளை. கிராமத்து நாகரிகத்தில் பேசுகிறான்.

நாராயணன் வெளியேறிய பிறகு, சந்திரமௌலி, ''நல்ல பிள்ளை!'' என்றார்.

''நம்மை நமஸ்காரம் பண்ணத் தோணித்தே அவனுக்கு! இந்தக் காலத்தில் இப்படிப்பட்ட பிள்ளைகள் எங்கே இருக்கிறார்கள்?''

''அவனோட இன்னொரு பண்பையும் கவனிச்சியா, சுசீலா?''

''என்ன''

''நம்ப பரத்தைப் பற்றி ஒரு வார்த்தை விசாரிக்கலே... நம்ப மனசு கஷ்டப்படக் கூடாதுன்னு...''

''நாணாவுக்குத் தெரியும் இல்லியா, பரத் ஓர் அமெரிக்காக்காரியைக் கலியாணம் செய்து கொண்டது?''

''நன்னாத் தெரியும். இவன் போன வருஷம் அமெரிக்கா போயிருந்தபோது அங்கே அவர்களைச் சந்தித்திருக்கிறான். பரத் ஒரு தடவை போன்ல பேசினப்பச் சொன்னான்''

''டாட்!''

''என்ன பாரதி?''

''இந்த ஆள் அமெரிக்கா போயிருக்கானா?''

''பாஸ்போர்ட்டும் விசாவும் இருந்து பணமும் இருந்தா யார் வேணும்னாலும் போகலாம், பாரதி... அது சரி, நீ என்ன சொன்னே? இந்த ஆள்னு; இல்லே?''

''தப்பா?''



''அவன் உன் அத்தை பிள்ளை!''

''ஸோ வாட்?''

''உன்னைக் கலியாணம் பண்ணிக்கப் போறவன்''

''நான்சென்ஸ்... ஒரு கண்டிரி ப்ரூட் என் ஹஸ்பெண்டா? டோண்ட் பி ஸ்டுபிட் டாட்?''

''கதர் வேஷ்டி, கதர் ஜிப்பா, அவன் பேசின தமிழ்''

''தமிழா அது?''

''பாலக்காட்டுத் தமிழ்! அவன் எங்களை விழுந்து நமஸ்காரம் பண்ணினது, அவன் நெத்தி நாமம்! இதெல்லாம் பார்த்து நீ நாராயணனை ஒரு கண்ட்ரி ப்ரூட் டாக்கிட்டே இல்லே?''

''ஆள் உயரமா, கம்பீரமா மட்டும் இருந்தாப் போதுமா, டாட்? மேனர்ஸ் வேண்டாம்? நான் என் தலையைப் பின்னலாப் போட்டுக் கொண்டா என்ன, இல்ல மொட்டையே அடிச்சுக்கிட்டாத்தான் இவனுக்கு என்ன... அன்கல்ச்சர்ட் அன் எஜுகேட்டட் ஃபெலோ''

அப்பா கலகலவென்று சிரித்தார்.

''என்ன டாட் சிரிக்கிறீங்க?''

''உன் கண்ணெதிரேயே உன் பழக்க வழக்கத்தையும் கலாசாரத்தையும் விமர்சித்தான். உன் அம்மா ஹவுஸ் கோட் போட்டுக்கறதையும் சுட்டிக் காட்டினான். ஆனா அவன் போன பிறகு நீ சரமாரியாக் கொட்டறே!''

''நான் அப்பவே கொட்டி இந்த ஐவரி கோம்பையும் மூஞ்சியில விட்டெறிஞ்சிருப்பேன்... ஆனா நீங்க கண் காட்டினீங்க.''

''நாராயணன் அதிகம் படிக்கலே, பாரதி.''

''அதான் தெரியறதே.''

கோயமுத்தூர் அக்ரிகல்ச்சரல் காலேஜ்ல பி.எஸ்ஸி கோல்ட் மெடல். அப்புறம் எம்.எஸ்.ஸியில் ஃபர்ஸ்ட்

ராங்க்· மேலே ரெண்டு வருஷம் அமெரிக்காவில பிஎச்டி... இவ்வளவுதாம்மா அவன் படிச்சிருக்கான். ஒரு மீட்டிங்லே எம். எஸ் சுவாமிநாதனே இவனைப் பாராட்டிப் பேசியிருக்கார். ஹிந்துஸ்தான் டைம்ஸ்ல போட்டோவே வந்தது''.

''இவ்வளவு படிச்சவருக்கு ஏன் நாகரீகம் தெரிலையாம்?''

''நாகரிகம்னா என்ன பாரதி?''

''என்னப்பா இப்படி ஒரு கேள்வி கேட்கறீங்க?''

''பதில் சொல்லேன்...''

''ஒரு ரிஃபைன்மென்ட்...நாசூக்கான அமரிக்கையான தன்மை''.

''உன் அகராதிப்படி வாய்க்குள்ளேயே கொட்டாவி விட்டுக் கொண்டா, அது நாகரிகம். வாயை ஆன்னு திறந்து விட்டா, அநாகரிகம், அன்கல்ச்சர்ட், கண்ட்ரி ப்ரூட்... இல்லே?''

''சரி விடுங்க...ஆள்தான் போயாச்சே''

''மறுபடியும் நாராயணனை ஆள்னு சொல்லாதே... இப்ப நீதான் அநாகரிகமாக நடந்து கொள்றே...அவன் உன் அத்தை பிள்ளை''

''ஐ டோண்ட் கேர்.''

''பாரதி'' அம்மா கத்தினாள். பிறகு ''உனக்குரொம்ப இடம் கொடுத்து வளர்த்திட்டோம். அதான் துளுத்துப் போயிட்டே... எவ்வளவோ தடவை டெல்லி வந்து இங்கே வராதவன் இன்னிக்கு வந்திருக்கான்னா அதுக்கு என்ன காரணம் தெரியுமா?'' என்றாள்.

''என்னவாம்?''

''நீ பார்க்க எப்படி இருக்கேன்னு தெரிஞ்சுக்க! அவனாக வந்திருக்கான்னு நினைக்காதே. உன் அத்தை உந்தித்தான் வந்திருக்கான்''



''இப்ப என்ன செய்யணும்னு குதிக்கிறே?''

''உன் அப்பா என்னிக்கோ எடுத்த முடிவு. எனக்கும் இதிலே சம்மதம், நீ உன் மனசைப் பக்குவப்படுத்திக்கோ''

''என்ன விளையாடறியாம்மா?''

''ஆமாம்''

''அப்ப ஒண்ணு செய்!''

'என்ன?''

''எனக்கும் உன் அப்பாவுக்கும் இந்த வீட்டு பாத்ரும்லேயே ஒரு தடவை கடைசித் தடவையா குளிச்சிட்டு இப்பவே படி இறங்கிப் போ!''

''டாட்''

''என்னம்மா பாரதி?''

''அம்மா சொன்னதைக் கேட்டீங்களா?''

'அவ சொன்னா என்ன, நான் சொன்னா என்ன பாரதி?''

''அப்ப...''

''இன்னும் மேலே படிக்கணும்னு சொப்பனம் காணாதே. பாரதி இன்னும் மூணு மாசத்தில நான் ரிடயர்ட் ஆபீசர். பென்ஷனர். நாம இந்த சர்க்கார் வீட்டைக் காலி பண்ணியாகணும். டெல்லியில பென்ஷனை வைச்சு வாழ முடியாது. சொந்த வீடு சொந்த ஊர்லதான் இருக்கு. மூட்டை முடிச்சோட போவதைத் தவிர வேறு வழியே கிடையாது.''

''ஓகே டாட்''

''இப்பத்தான் என் பெண்ணாப் பேசறே!''

''நான் இந்த டெல்லியிலேயே ஒரு வேலை பார்த்துக்கறேன், எம்.ஃபில்—அதுவும் இங்கிலீஷ் லிட்டரேச்சர்—பாஸ் பண்ணினவளுக்கு வேலை கிடைக்காமலிருக்காது.''

''உன் இஷ்டம்''-அம்மா.

''அப்புறம் அம்மா, பெண் உறவுகூட இல்லாமப் போயிடும். பிள்ளை வெளிநாட்டில் சீரழியறான் பெண் உன் நாட்டிலேயே சீரழியறான்னு பெருமைப்பட்டுக் கறேன்... எப்படியோ போ!''

''நீ பேசாம இரு சுசீலா இவ எம்ஃபில் படிச்சவதான் ஆனால் யதார்த்த உலகம்னா என்னன்னு தெரியாதவ. கல்யாணப்பேச்சை இதுக்குமுன்னாடி எடுத்ததே இல்லியே, அதான் சட்டுன்னு ஆத்திரமும் கோபமும் வந்தது.''

''ஸாரி டாட்...நான் ஒருநாள் இல்லாட்டா ஒருநாள் கலியாணம் பண்ணிக் கொள்ளத்தான் போறேன். ஆனா இன்னிக்கு வந்த ஆளை... ஸாரி...நாராயணனை அல்ல.''

''நாராயணனைத் தவிர வேறு எந்தப்பிள்ளையையும் நான் வரனாப் பார்க்க மாட்டேன் பாரதி'' என்றாள் சுசீலா.

''உன் அம்மா போகிற வழியிலதான் நானும் போவேன்.''

''ஐ டோண்ட் லைக் ஹிம்.''

''உன்னை மட்டும் அவனுக்குப் பிடிச்சிருக்கும்னு நினைக்கிறியா? ஆனா என் தங்கை தங்கம்மா கை அசைச்சாப் போதும், அவன் உன் கழுத்திலே தாலி கட்டிடுவான்...''

''போகப் போக உனக்கே மெல்ல மெல்ல அவனைப் பிடிச்சுப் போயிடும். 'அவர் இன்னும் வீடு திரும்பலையே. எப்ப வருவார்'னு ஏங்கற நாளும் பிறக்கும்''.

திடீரென்று தன் உடம்பை யாரோ உலுக்குவதை பாரதி உணர்ந்தாள்.

''என்னடி சேர்லேயே உட்கார்ந்து தூங்கிக்கிட்டிருக்கியா?''



''என்னம்மா வேணும்?''

''கீழே உறவுக்காரங்களெல்லாம் உட்கார்ந்திருக்கா. உன் பெரியம்மா, சித்தி அப்புறம் மாமா, மாமி எல்லாரும் உன்னைப் பார்க்கணும்னு சொல்றா.''

''என்னைக் கொஞ்சம் தனியா இருக்க விடும்மா.''

''பிள்ளை வீட்டுக்காரா வர்ற நேரமாயிட்டுது பஸ்லேயும், கார்லேயும் வரப்போறா. நீ இப்ப வா.''

''அம்மா ப்ளீஸ்...கொஞ்ச நேரம் பொறுத்து வரேன்... நீ இப்பப் போ...''

''மணி இப்பவே பதினொண்ணேகால். பன்னெண்டுக்குள்ளே அவங்க வந்துடுவாங்க.''

''வரட்டும்...இப்ப நீ போ''

வேறு வழி தெரியாமல் சுசீலா மாடி இறங்க. பாரதி நாற்காலியிலிருந்து இறங்கி ஜன்னலருகே வந்தாள், பார்த்தாள்.

கீழே அமர்க்களப்பட்டுக் கொண்டிருந்தது. ஒரே இரைச்சல், கூச்சல் இந்த நங்கவரமே ஒன்றாக எழுந்து வந்து கலியாண வீட்டை முற்றுகை இடுகிறதா?

திடீரென்று எல்லா ஓசைகளுமே அடங்கி விட்டதான பிரமை ஏற்பட பாரதி இமைகள் மூட நின்றாள்.

இப்போது அப்பா வந்தார். தொடர்ந்து அம்மா. அவர்கள் சும்மா வரவில்லை. நாராயணனையும் அழைத்துக் கொண்டு வந்தார்கள். அவனுடைய வசீகர முகமும் கண்களும் அவளைத் தாக்க எதிர் நீச்சல் போட்டு தாக்குதலிலிருந்து விடுபட மனம் துடித்தது.

## 2

இன்னும் ஜன்னல் அருகிலேயே நின்று கொண்டிருந்த பாரதி, தான் பிரமையிலிருந்து விடுபடவில்லை என்பதை உணர்ந்தாள். ஜன்னல் கம்பிகள் பார்வையை மறைக்கவில்லை. பார்த்தால் தெரிந்தவர்களும் தெரியாதவர்களும், உறவினர்களும் உறவே இல்லாதவர்களும் கொத்து கொத்தாக அங்குமிங்குமாய்க் குழுமி, வரப்போகிற பாலக்காட்டுப் பஸ்கள் மற்றும் கார்களின் வரவை எதிர்நோக்கிக் காத்திருந்தார்கள். மேள வித்துவான்கள் தயாராக நின்றார்கள்.

இந்த ஏற்பாடுகளுக்கு இந்த வாழ்க்கைப் பிரவேசத்துக்கு அவள் எப்படிச் சம்மதம் தெரிவித்தாள்?

இந்த வருடம் ஜனவரி மாதம் கடைசி நாளன்று. முப்பத்தைந்து ஆண்டுகளாக அரசுடன் பந்தப்பட்டிருந்த அப்பா விடுதலை பெற்றார். தொட்ட பிசுக்கு, விட்ட பிசுக்கு என்பதுபோலப் பென்ஷன் என்ற நூலிழை மட்டுமே எஞ்சி நின்றது. பிப்ரவரி முதல் வாரத்தில் டெல்லிக்கு நன்றி கூறிவிட்டு தங்கவரத்துக்குக் குடும்பம் பெயர்ந்தது. இந்த ஊருடன் அவளுடைய அப்பாவுக்கு இருக்கும் ஒரே பிணைப்பு இந்தப் புராதனமான பிதிரார்ஜித வீடு மட்டும்தான் தாத்தா காலத்திலேயே நிலம் கைவிட்டுப் போய்விட்டது. அப்பா வேறே எங்கே போவார்?

நெஞ்சில் துக்கம் பீரிட, 'டாட்' என்று அவர் அருகே சென்றாள்.

''என்னம்மா?''

''நானும் வரணுமா?''

''ஏன் வேற ஏதானும் பிளான் கைவசம் வைச்சிருக்கியா?''



''பிஎச். டி. அமெரிக்காவில இல்லே. இங்கேயே டெல்லியிலேயே''

''செலவுக்கு என்ன செய்வே?''

''நீங்க என் கலியாணத்துக்காகச் செலவு செய்யன்னு பணம் வைச்சிருக்கீங்க இல்லையா?''

''ஆமாம்''

''அதிலிருந்து...''

''அதிலிருந்து?'' அம்மாவின் குரல் கர்ஜனையாகக் கேட்டது.

''மாசா மாசம் ஹாஸ்டல்...அப்புறம் மத்த செலவுகளுக்கு இந்தப் பணத்திலேந்து...''

''மூடுடி வாயை''.

''அம்மா...''

''இப்ப நீ எங்களோட வர்றே... அதான் முடிவு...நீங்க ஏன் உங்க டயத்தை வீணடிக்கிறீங்க...ஆயிரம் வேலை இருக்கு.''

''அம்மா!'' குரலை உயர்த்திக் கொண்டு பாரதி சுசீலாவை நெருங்கினாள்.

''என்னடீ?''

''எனக்கு இப்ப வயசு இருபத்தி மூணு எனக்குன்னு சில உரிமைகளும் இருக்கு... ஞாபகம் வைச்சுக்கோ.''

ஓஹோ அப்படியா, உனக்குன்னு சில உரிமைகள் இருக்கா...அதை எப்படி நிலைநாட்டப் போறே? உன் அப்பாகிட்ட கையேந்திப் பணம் வாங்கியா? பி.ஏ.வோட நிறுத்தச் சொன்னேன். எம் ஏவுக்கு தாவின. அத்தோடயாவது நிறுத்திக்கிட்டாயா? எம்.ஃபில்னு ஓடின...இதுக்கெல்லாம் யார் செலவு செய்தா?''

பாரதி பதில் சொல்லத் தயாராக இருந்தாள். ஆனால் அப்பா குறுக்கே வந்தார்.

"சுசீலா நீ உள்ளே போ."

"ரன்ட்ல ஒண்ணு பார்த்தாகணும்."

"அதை நான் என் முறையிலே பார்க்கிறேன். சுசீலா! நீ இப்ப உள்ளே போ!"

அவள் சென்ற பிறகு "முதல்ல உட்கார் பாரதி" என்றார் மௌலி.

உட்கார்ந்தாள்.

"உன் வேதனை பிரச்சனையெல்லாம் எனக்குப் புரியலேன்னு நீ நினைக்காதே பாரதி எனக்கு எல்லாம்புரியறது. ஆனா இப்ப நான் கையாலாகதவனாகிட்டேன்... பிராவிடண்ட் ஃபண்ட், கிராடியுட்டி. அப்புறம் பென்ஷன்ல மூன்ல ஒரு பாகத்தை ரொக்கமா வாங்கினதெல்லாம் சேர்த்துக்கிட்டத்தட்ட மூணு லட்சம் வந்தது. இதுல உன் அண்ணாவால ஏற்பட்ட கடன் ஒண்ணரை லட்சம். அவன் டாலர் டாலரா அனுப்புவான்ங்கற தைரியத்தில வியாபாரத்தில மூலதனம் செய்யற மாதிரி கடன் வாங்கிக் கொட்டினேன். ஆமாம் பாரதி கடன் யார்ட்ட கடன் வாங்கினேன் தெரியுமா? வாங்கக் கூடாத இடத்துல தங்கையைக் கொடுத்த இடத்திலே! வட்டி இல்லாம தந்தார். பாக்கி என்ன இருக்கு பாரதி? கடனை அடைச்சப்புறம் பாக்கி ஒண்ணரை. இதிலே ஒரு அரையாவது நம்ம சொந்த வீட்டை ரிப்பேர் பண்ண ஆகும். சிதிலமாயிட்ட வீடு எவ்வளவு இழுக்கும்னு நிச்சயமாத் தெரியலே.யானை அசைஞ்சு திங்கும், வீடு அசையாமத் திங்கும் பாரதி."

"நீங்க என்ன சொல்ல வர்றீங்கப்பா?"

"நானும் என் தங்கையும் நீ பிறந்த அன்னிக்கே உனக்கும் நாராயணனுக்கும் முடிச்சுப் போட்டுட்டோம்ங்கற காரணத்துக்காக நீ அவனுக்கு மனைவியா வரவேண்டாம் பிள்ளையைத் தேர்ந்து எடுக்கறதில முழுச் சுதந்தரம் தாரேன்."



அன்னிக்கு வேறு விதமாப் பேசினீங்களே, டாட்?"

"அப்ப உன் அம்மா இருந்தா, அவளைத் திருப்தி செய்ய."

"இப்ப நான் என்ன செய்யணும் டாட்?"

"நீ இந்த டெல்லியில பிறந்து வளர்ந்தவ. உன் சித்தி மாமாக்கள் கல்கத்தா கான்பூர்ல இருக்கறவா, வருஷா வருஷம் பம்பாய்க்குப் போய் பாட்டியின் அரவணைப்ல நீ இருந்துட்டே. ரொம்பச் சின்ன வயசில நீ நங்கவரகதைப் பார்த்திருக்கே. நிச்சயமா அந்த ஊர் இப்ப உனக்கு வேம்பாகத்தான் இருக்கும். உண்மையைச் சொல்லப் போனா எனக்கும் உன் அம்மாவுக்கும் கூடப் பிடிக்கலைதான் ஆனால் என்ன செய்ய? வாழறோமோ இல்லியோ ஒரு இடத்தில இருக்கணுமே? ரெண்டு வேளை கொட்டிக்கணுமே...? நீ இப்போதைக்கு எங்களோட வா."

"உங்களுக்காகத்தான் வரணும் டாட்"

"பரவாயில்லை, வா"

"பிளச்டி?"

"மெட்ராஸ்ல முடியுமான்னு பார்க்கறேன்."

"ப்ராமிஸ்?"

"என்னால ப்ராமிஸ் எல்லாம் பண்ண முடியாதும்மா. நாம நங்கவரம் போய்ச் சேர்ந்த சில நாள்ளேயே நிச்சயம் என் தங்கையும் அவ புருஷனும் உன்னைப் பார்க்க வந்துடுவா."

"மறுபடியும்..."

"அத்தை பிள்ளையை எனக்குப் பிடிக்கலேன்னு சொல்லிட்டேன். பாரதி,கதை முடிஞ்சுடும். என் பேர்லேயும் குத்தம் வராது."

பாரதி சிணுங்கினாள்.ஆனால் என்ன செய்ய? அப்பா பாவம்! ஏற்கனவே வளைந்துவிட்ட முதுகை அவள்

ஒடித்துத்தான் ஆகணுமா? திடீரென்று அமெரிக்காவில் இருக்கும் அண்ணாவின் மீது ஆவேசம் வந்தது. நன்றி கெட்டவன்! இவ்வளவு உதவி செய்திருக்கும் அப்பாவுக்கு நன்றிக்கடன் செலுத்த வேண்டாம்? அவன் யாரைவேண்டுமானாலும் இழுத்து வந்து மனைவியாக்கிக் கொள்ளட்டும் ஆனால் அப்பாவை எப்படி மறக்கலாம்? இந்த ஒன்றரை லட்சம் ரூபாய்க் கடன் இருந்திரா விட்டால், அவளுடைய லட்சியம் நிறைவேற வாய்ப்பு இருந்திருக்குமே?

நங்கவரம் வந்தாகிவிட்டது.

ஊரில் உள்ளவர்களில் பெரும்பாலானோர் ஞாதிகள் என்றாலும் நெடுநாளாகத் தொடர்பு இல்லாததால் அப்பாவுக்கே ஊர் முகம் தெளிவில்லாமற் தெரிந்தது. இருப்பினும் பலர் குசலம் விசாரிக்க வந்தார்கள். அம்மா மெல்ல மெல்ல ஊருடன் இழைந்து இணைய முயன்றாள்.

ஒரு மாதத்துக்குப் பிறகு ஒரு நாள் பாலக்காட்டிலிருந்து கடிதம் வந்தது. அந்த வாரத்து வெள்ளிக்கிழமை, பிற்பகல் ஒரு மணி அளவில் அத்தையும் அவளுடைய கணவரும் வரப்போகிறார்கள்; நாராயணனும் உடன் வருகிறான்.

பாரதி, தன் மனத்தை ஏற்கனவே திடப்படுத்திக் கொண்டாகிவிட்டது பண்புடன் அம்மா, அப்பா மானம் போகாமல் அவள் நடந்து கொள்ளுவாள். பார்த்த நினைவு இல்லாத அத்தைக்கும், அவளுடைய கணவருக்கும் மரியாதை கொடுப்பாள். நாராயணனிடம் இயல்பான இன்முகத்துடன் பேசுவாள். கடைசியில்-கடைசியில் தன் முடிவை வெளியிடுவாள். அதன் பிறகு யார் எவ்வாறெல்லாம் அதிர்ந்து போனால் அவளுக்கு என்ன?

வெள்ளிக்கிழமை வந்தது. பிற்பகல் வந்தது.

ஒரு மணிக்கு இன்னும் ஐந்து நிமிடங்கள் இருக்கும் போது வெள்ளைநிற மாருதியும் வந்தது.



வாசல் வராந்தாவுக்குப் பக்கத்திலிருக்கும் அறையில் நின்று, சற்றே ஜன்னல் திரையை விலக்கிப் பார்த்தாள்.

முதலில் அத்தை இறங்கினாள். நாராயணனுடைய அம்மாவா இவள்? இருபது வயதில் பெற்றிருந்தாற்கூட வயது நாப்பத்தெட்டு இருக்க வேண்டுமே? எப்படி இவ்வளவு யௌவன சோபையுடன் இருக்கிறாள்?

நாராயணனுடைய தந்தையைப் பார்த்தபோது ஆணவ கப்பீரமே ஒருவித அச்சத்தை உண்டாக்கியது. இவ்வளவுக்கும் புன்முறுவல் பூக்க, கதர் வேட்டி ஜிப்பாவில் சாந்தமாக முன்னேறி வந்தார். அப்பா விபூதி பூசுகிறார். இவருடைய நெற்றியில் எப்படி நாமம் துலங்குகிறது? குழம்பிப் போனாள்.

கடைசியாக நாராயணன் டிரைவர் உட்காரும் இடத்திலிருந்து இறங்கினான். உள்ளே கை நீட்டி எதையோ இழுத்தான். ஒரு பெரிய பை. டெல்லியில் பார்த்த அதே முகம். அதே புன்முறுவல். நடையில் அதே நிதானம். திடீரென்று அவனுடைய நையாண்டி நினைவுக்கு வந்தது. தந்தச் சீப்பு தலையை வாரியது.

உள்ளேயிருந்து அம்மா குரல் கொடுத்தாள். "பாரதி இங்கே வா" அம்மாவின் அதிகார நச்சரிப்பில் அவள் புடைவை உடுத்தியிருந்தாள் சற்று இம்சையாகக் கூட இருந்தது. மெல்ல நடந்து ஹாலை அடைந்தாள்.

உட்கார்ந்திருந்த தங்கம்மா திடீரென எழுந்தாள். பாரதியை நோக்கி முன்னேறிப் பாய்ந்தாள்.

"நான்தாண்டீ பாரதி, உன் அத்தை தங்கம்மா! நீ, சின்னப் பொண்ணா இருந்தப்ப ஒரு கலியாணத்தில பார்த்தேன். அப்புறம் நானும் இவரும் ஒரு தடவை டெலவியில பார்த்தோம். அப்புறம் இன்னிக்குத்தான்... அண்ணா, உன் பொண் தங்க விக்ரகம் மாதிரி இருக்காள்டா...!"

''நான்தான் பொண்ணே, உன் அத்திம்பேர்...பேர் தெரியும் இல்லியா? ஈசுவரன். ஈச்சான்னு ஊர்ல கூப்பிடுவா. கோந்தை-அதான் என் புள்ளை, இந்த நாணா சொன்னான். உன்னை நாலஞ்சு மாசம் மின்னால பார்த்தேன்னு. நீ நன்னா அழகா இருக்காய்னான். ஆனா அவன் ஒண்ணைச் சொல்லலை?''

:''எதை ஈச்சா?'' என்றார் மௌளி.

''நீ பேசாம இருடா...நான் இப்ப உங்கிட்டயா பேசிண்டிருக்கேன்...? சோத்தியம் கேட்க வேண்டியவள் அவள்டா.''

''சோத்தியம்னா கேள்வின்னு அர்த்தம், பாரதி!'' என்றாள் தங்கம்மா.

ஆனால் பாரதி வாய் திறக்கவில்லை

ஈசுவரனே தொடர்ந்தார்.

''நீ உன் தலையைப் பாப் பண்ணிண்டிருக்காய்... எப்படிப் பூச்சூட்டிப்பாய்?''

''இந்தக் காலத்தில எத்தனையோ பெண்கள் தலை மயிரை இப்படி வெட்டிக் குறைச்சுக்கறா...இதில் ஒண்ணும் தப்பு இல்லே..'' என்றாள் தங்கம்மா.

''ஆர்டீ தப்புன்னா தங்கம்? இதை இவன் நம்பகிட்ட சொல்லலைன்னுதானே சொன்னேன் சுசீலா, தாகமா இருக்கு. கொஞ்சம் வெள்ளம் கொண்டு வா.''

''பிளாஸ்க்ல சுக்கோளம் இருக்கு.''

''சுக்கு இல்லாத நங்கவரம் வெள்ளத்தைக் குடிச்சுப் பார்க்கறேண்டீ, தங்கம்.''

சுசீலா உள்ளே போய் வந்தாள்.

''கோந்தே, நீ நிக்கறாய்னு அவளும் நிக்கறா. உட்காரு.''



''பாரதி அதனால நிக்கலேப்பா.''

''பின்ன என்னடா காரணம்?''

''இங்கேந்து எப்ப உள்ளே போகலாம்னு காத்துண்டிருக்கா.''

''பொண்ணே கோந்தை சொல்றதைக் கேட்டயா?''

''நீ என்னிக்குப் பிறந்தாயோ அன்னிக்கே நீதான் என் மாட்டுப் பொண்ணுன்னு உன் அப்பா அம்மாகிட்ட நான் சொல்லியாச்சு. அண்ணா, மன்னியும் சம்மதிச்சாச்சு சரிதானே மன்னி?''

''ஆமாம்'' என்ற சுசீலா, வர்ற வழியிலேயே சாப்பிட்டாச்சா .. இல்லே...'' என்று இழுத்தாள்.

''புளியஞ்சாதமும், தயிர் சாதமும் கட்டிண்டு வந்தோம். கரூர்ல சாப்பிட்டோம்'' என்ற தங்கம்மா, ''உன்னை அளவுக்கு மீறிப் புகழ்றேன்னு நினைக்காதே, பாரதி. நீ நல்ல சிகப்பா, உசரமா, மூக்கும் முழியுமா அழகாத்தான் இருக்கே.. நீ எம்ஃபில் படிச்சிருக்கேன்னு நாணா சொன்னான்'' என்றாள்.

அத்தையின் அன்பின் உண்மையை, பவித்திரத்தைப் பாரதியால் உணர முடிந்தது.

''பேசிண்டே நிக்காதே, தங்கம். பாரதி, உனக்குப் பாடத் தெரியுமோ?''

''தெரியாது.''

''சமைக்கத் தெரியுமா?''

''தெரியாது.''

''பாட்டை நீங்க சொல்லிக் கொடுங்கோ, இல்லாட்டா நாணா சொல்லிக் கொடுக்கட்டும். நான் இவளுக்குச் சமையல் கத்துக் கொடுக்கிறேன்.''

''ஆத்திலேயே மாட்டுப் பொண்ணுக்கு ஸ்கூலா?'' என்றார் ஈசுவரன். பிறகு ''கோந்தே, நீ ஒரு ப்ராவஸ்யம்

இவனை டெல்லியில் பார்த்திருக்காய். இருந்தாலும் தோஷமில்லை. இன்னொருக்கா நன்னாப்பார்த்துக்கோ... பாரதி நீயும் பாரு. வெட்கப்படாதே'' என்றார்.

''அப்பா?''

''என்னடா கோந்தே?''

''ஒருத்தரை ஒருத்தர் பார்த்துண்டா என்ன கிடைக்கப் போறது? நான் இவளைக் கலியாணம் கழிச்சுக்கறதா இல்லை.''

தங்கம்மா, மௌலி மற்றும் சுசீலா அயர்ந்து போனார்கள். பாரதி திகைத்துப் போனாள். இப்படி ஒரு மாற்றத்தை எதிர்பாராத ஈசுவரன் மட்டும் திடுக்கிட வில்லை,

''பின்னே எந்துக்கு இந்தைக்கு இங்கே வந்நோம்?''

''நீங்க வரணும்னேள்.''

'நீதான் ஒருக்காப் பார்த்திருக்காயே? ஊர்லேயே சொல்லியிருக்கலாமே?''

''பாரதிக்கு நான் புருஷனா வந்தா அவ சுகப்பட மாட்டாப்பா. மனசு கஷ்டப்பட்டுக் கொண்டே அவ நம்மாத்தில வாழணும். அது ஆவஸ்யமா?''

''எதை வைச்சுண்டு நீ அப்படிச் சொல்றே?''என்றாள் தங்கம்மா.

''அவ லிட்டரேச்சர்ல எம்ஃபில். யார் கண்டா, பிஎச்டி பண்ணணும்ங்கற ஆசை இருக்கும்.''

''நான் உன் அம்மா. கெமிஸ்ட்ரியில் பி.எஸ்ஸி. எம்.எஸ்ஸி படிக்கணும்னு ஆசைப்பட்டேன். முடிஞ்சுதா? மணையில உட்கார வைச்சா, இப்ப நான் மனசு கஷ்டப் பட்டுண்டா இருக்கேன்?''

''அது எனக்குத் தெரியாதும்மா. பாரதி டெல்லியில பொறந்து வளர்ந்தவ. சல்வார் கமிஸ், சூரிதார், பாண்ட், மிடி, மாக்ஸின்னெல்லாம் போட்டுப் பழகினவள். அவளுக்குச் சொந்தமா ஒரு புடைவை இருக்காங்கறதே சந்தேகம். வீட்ல ஹவுஸ் கோட்தான் போட்டுப்பா.''



''நம்ப ஊர்லேயும்தான் எத்தனையோ பொண்கள் ஹவுஸ் கோட் போட்டுக்கறா. சல்வார் கமீஸ் போட்டுண்டு காலேஜ் போறா!''

''நீ என்ன சொன்னாலும் ஒத்து வராதும்மா. இவளோட நாகரிகத்தில மூங்கி எழுந்த பிள்ளைதான் சரிப்பட்டு வரும்.''

''என்ன நாணா, இப்படி ஒரு குண்டைத் தூக்கிப் போடறே?'' என்றாள் சுசீலா.

பாரதியின் திக்பிரமை இன்னும் அடங்கவில்லை. இதன் மத்தியிலும் ஒரு புது அபிப்ராயம் நாராயணனைப் பற்றி எழுந்தது. அவளுடைய மனத்தை அவன் போட்டோ பிடித்து வைத்து இப்போது எல்லோருக்கும் காட்டுகிறான். திடீரென்று அவளையும அறியாமல் அவன்மீது, இதுவரை உணர்ந்தறியாத, அவளுக்கே இனம் தெரியாத அன்பும், அபிமானமும், மரியாதையும் உண்டாயின.

திடீரென்று ஈசுவரன் பேசினார்.

''இங்கே வா பாரதி...இவன் என்னென்னவோ சொல்றான். அதெல்லாம் சரியா?''

''ஆமாம், அத்திம்பேர்.''

''உனக்கு லிட்டரேச்சரில் டாக்டர் பட்டம் வாங்கணும்னு ஆசை இருக்கு. இல்லியா?''

பாரதி தலை ஆட்டினாள்.

''பாலக்காட்டிலேந்து ஒரு வண்டி ஏறினா மூணு மணிக்கூர்ல கோழிக்கோடு வரும். அங்கே ஒரு யூனிவர்சிட்டி இருக்கு. இன்னொரு வண்டி ஏறினா அதே மூணு

மணிக்கூர்ல எர்ணாகுளம் வரும். அங்கே கொச்சி யூனிவர்சிட்டி இருக்கு.''

''அப்பா... போகாத ஊருக்கு வழி தேடாதீங்கோ. அவளுக்கு இஷ்டமில்லாத விஷயத்தில் நாம தலை நீட்டவேண்டாம்,''

''டேய் கோந்தே, நான் ஒண்ணு கேக்கறேன். பதில் சொல்லு.''

''கேளுங்கோ.''

''இவ சரின்னா நீயும் சரியா?''

''சரின்னு பாரதி சொல்ல மாட்டா!''

''சோத்தியம் அது இல்லை. அவ சரின்னா, நீ சரியா?''

''அவ சரின்னு சொல்லட்டும். அப்புறம் சொல்றேன்.''

''இது விதண்டா வாதம்.''

பக்கத்து அறைக்குச் சென்று சுசிலா, பாரதியைத தனியே அழைத்து, ''நீ சரின்னு சொல்லு பாரதி. நிச்சயமா உன் ஆசையும் நிறைவேறும். ஒரு கோடீசுவரன் வீட்டுச் சௌகரியங்களும் கிடைக்கும். நாராயணனும் ராஜா மாதிரி இருக்கான'' என்றாள்.

கூடவே வந்த மௌலி, ''என் மானத்தை நீதான் காப்பாத்தணும் பாரதி. ஈசுவரனுடைய மனசு தாராளமான மனசு. அவரும் இங்கிலீஷ் லிட்டரேச்சர்ல எம்.,ஏ லயோலா காலேஜ்ல படிச்சவர்'' என்றார்.

அம்மாவையும், அப்பாவையும் மாறி மாறிப் பார்த்துவிட்டுப் பாரதி திடீரென்று ஒரு முடிவுக்கு வந்தாள். இத்தனை மாதங்களாக அவள் உறுதியுடன் எடுத்த முடிவு ஒரு கண நேரத்தில் தகர்ந்து போய்விட்டது.

மீண்டும் மூவரும் கூடத்துக்கு வந்தார்கள்.



''என்னடா மௌலி! ஒன் பொண் காதைக் கடிச்சியா?''

''கடிக்கலே.''

''மிரட்டினாயாக்கும்?''

''இல்லை.''

''பின்னே வார்த்தையால மயக்கினியோ? இப்போ அவ மொகத்தில ஒரு புதுப் ப்ரசன்னம் இருக்கு!'' என்ற ஈசுவரன். ''பாரதி மனசில் உள்ளதைச் சொல்லு!'' என்றார்

பாரதி ஈசுவரனைப் பார்க்கவில்லை. நாராயணனைப் பார்க்கவில்லை. மாமி தங்கம்மாவைப் பார்த்தாள். சற்றே முறுவலித்தாள்.

''சம்மதம் மாமி'' முணு முணுத்தாள்.

மறுகணம் தங்கம்மா அவளை அணைத்துக் கொண்டாள்.

''தங்கம், அவளுக்கு வலிக்கப் போறது... டேய் கோந்தே. நீ இப்ப என்ன சொல்றே?''

''இனிமே சொல்றதுக்கு என்ன இருக்கு அப்பா?'' நான் பாரதியை வார்ன் பண்ணினப்புறமும் அவ சரின்னா எனக்கு என்ன? நானும் சரிதான்'' சொல்லி நாராயணன் சிரித்தான். பிறகு பாரதியைப் பார்த்து, 'பாரதி இன்னும் ஒரு சான்ஸ் தர்றேன். நன்னா யோசிச்சுப் பாரு. முடிவை மாத்திண்டாலும் குத்தமில்ல. ரத்தினக் கம்பளத்திலகூட ஊசியும் முள்ளும் இருக்கும். இன்னிக்கு எனக்கு வாழ்க்கைப்பட்டு நாளைக்கு நீ கண் கலங்கப்படாது. கண் கசக்கப்படாது.''

''ஏண்டா கோந்தே, அவளைப் பயமுறுத்தறாய்?''

பாரதி மெலிதாகப் புன்முறுவல் பூத்தாள்.

"நீ உன் மனசுக்குள்ளே சிரிச்சுக்கறாய் பாரதி. நான் இவனைக் 'கோந்தே கோந்தே'ன்னு கூப்பிடறப்பவெல்லாம் நீ கேலியாகச் சிரிக்கிறாய். எங்க ஊர்ல மூத்த பிள்ளையைக் குழந்தே, குழந்தேன்னு தான் கூப்பிடுவோம். அது கோந்தேன்னு ஆச்சு. சாவின்னு சொல்றேள். அது தமிழ் இல்லை. திறவுகோல், தாழ்க்கோல்ங்கறதுதான் தமிழ. நாங்க தாழ்க்கோல்னு சொல்ல ஆரம்பிச்சு இப்பத்தான் கோல்னு ஆயிடுத்து" என்றார் ஈசுவரன்.

"அத்திம்பேர் நான் அதுக்குச் சிரிக்கலே."

"பின்னே?"

'என்னோட கண் அவ்வளவு சீக்கிரம் கலங்காதுன்னு உங்க பிள்ளைக்குத் தெரியாம இருக்கேன்னுதான் உள்ளூற சிரித்தேன்."

"என் புள்ளையைப் பத்தி உனக்குத் தெரியாது. அவன் பாறாங்கல்லையும் அழ வைப்பான். ஆராவது பொய் சொன்னா, ஏமாத்தினா, நாணாவோட சொரூபமே மாறிடும்."

"இப்ப நீங்கதான் அப்பா பாரதியைப் பயமுறுத்தறேள்."

திடீரென்று நாதசுரம் கேட்டது. தவில் ஓசை காதைப் பளார் என்று அறைந்தது.

பாரதி ஜன்னல் அழிகள் மூலம் பார்த்தாள்.

வீட்டின் எதிரே, வீதியின் நட்ட நடுவே கார்களும் பஸ்களும், ஒன்றன் பின் ஒன்றாய் நின்று கொண்டிருந்தன.

பாரதி நாராயணனைத் தேடினாள். கிடைக்கவில்லை.

ஒரு காரிலிருந்து ஈசுவரனும், அத்தை தங்கம்மாவும் இறங்க அவர்களைத் தொடர்ந்து ஒரு வயது முதிர்ந்த தம்பதி இளமைத் துடுக்கோடு இறங்கினார்கள்.



கார்கள் காலியாகக் காலியாக அவை நகர்ந்து முன்னேறின.

பஸ்கள் அவிழ்த்துவிடும் கூட்டத்தினுள் ஊடுருவிப் பார்த்தாள்.

திடீரென்று நாராயணன் விசுவரூபமாகத் தெரிந்தான்.

யாரிடமோ, எதையோ கூறிச் சிரித்தவனாய் பஸ்ஸிலிருந்து இறங்கினான். அதே கதர் வேட்டி, கதர் ஜிப்பா ஒரு புது மாப்பிள்ளைக்கு இயல்பாக வரவேண்டிய செயற்கைத்தனமான முகம் உயர்த்தலோ அலட்சிய நடையோ இவனிடம் இல்லை. ஏன்?

ஜானவாசம் தேவையற்ற விளம்பரம் என்று நாராயணன் உறுதியாய் நிற்க, நிச்சயதார்த்தம் ஏழு மணிக்கே ஆரம்பமாயிற்று.

பெண்ணின் கூறைப் புடைவையும், திருமாங்கல்யத்தையும் தாங்களே வாங்கி வரப்போவதாக ஏற்கனவே ஈசுவரன் கூறியிருந்ததால் மௌலியும், சுசீலாவும் மற்ற பட்டுப் புடைவைகளையே வாங்கி வைத்திருந்தார்கள்.

ஒரு தட்டில் கூறையும், திருமாங்கல்யமும், கூடியிருக்கும் பெரியோர்களின் ஆசிபெற பவனி வந்தது.

கடைசியாக அவளுடைய கைக்கு வந்தபோது பாரதி திடுக்கிட்டாள் அவள் அதிகமாகப் புடைவை உபயோகிக்காதவள்தான். ஆனால் கலியாணப் பெண்ணுக்கு அரக்கு நிறத்தில் சாதாரண நூல் புடைவையா?

இதுவும் நாராயணனுடைய ஏற்பாடோ?

பிறகுதான் ஒன்று அவள் கண்களைத் தாக்கியது. பிள்ளை வீட்டாரில் முக்கால் வாசிப்பேர் நூல் புடைவைகளில் காட்சி அளித்தார்கள். காஞ்சி முனிவரின் அறிவுரையோ?

பாரதி திகிலடைந்தாள்.

## 3

கல்யாணச் சாப்பாட்டில் பாலக்காட்டு மணம் ஓரளவாவது கமழ வேண்டும் என்ற விருப்பத்தில் ஈசுவரன் ஏற்கனவே மூன்று சமையற்காரர்களைப் பிரத் யேகமாக அனுப்பியிருந்தார். திருமணத்துக்கு உறவினர் களையும் பல சிநேகிதர்களையும் தவிர, சிப்பந்திகள், வயல் மற்றும் தொழிற்சாலையில் பணிபுரிகிறவர்கள் குடும்ப சகிதம் வருவார்கள் என்று அவர் ஏற்கனவே மௌலியிடம் அறிவித்திருந்தார். அறிவித்தபடி அவர் களும் வந்தார்கள்

கல்யாண விருந்தில் பெரும்பாலும் தமிழ் மணம் கமழ்ந்தாலும் பாலக்காட்டு வாடையும் தலை நீட்டியது. ஓலன், காலன், அவியல், எரிசேரி என்றெல்லாம் இலை யில் விழுந்தபோது, நங்கவரம் வாசிகள் திகைத்தார்கள். ருசித்தபோது பலர் முகம் சுளிக்க, சிலர் வியந்தார்கள். இன்னும் சிலர் ரசித்து ருசித்தார்கள். பால் அடைப் பிரதமன் என்னும் பாயசம் வந்தபோது எல்லோருமே ஒரு தனி உற்சாக ஒற்றுமையுடன் வரம்பு மீறினார்கள்.

பிற்பகல் மூன்று மணி அளவில் ஈசுவரன் மௌலி யைத் தேடி வந்தார்.

''என்ன ஈச்சா, ரிஸப்ஷன் ஆறு மணிக்கு வைச்சிருக் கேன். சரிதானே?'' என்றார் மௌலி

''ரிஸப்ஷனுக்கு ஆர்டா வருவா? உனக்கு வேண்டப் பட்டவர்தானே? இப்ப ஒரு காரையும், ஒரு பஸ்ஸையும் ஒழிச்சு மத்ததெல்லாம் புறப்படப் போறது. நீ என்ன செய்றாய். நாலு மணிக்குச் சாயை மாத்தரம் கொடுக்க றாய். போற வழியில பசிக்குமே...? ஒரு பத்து முன்னூறு பேருக்கு தயிருஞ் சாதமும், உப்பிலட்டதும் அஞ்சாறு அண்டா பாத்திரங்களில் போட்டுத் தா.''



''நாலு மணிக்கா...?''

''நாலு மணிக்குச் சாயை. நாலே காலுக்கு அவா பொறப்படுவா.''

''எப்ப உலை வைச்சு அரிசியைக் களைஞ்சு போட றது ஈச்சா? அது எப்ப வேகும்...? இப்பவந்து சொல் றியே?''

ஈசுவரன் சிரித்தார்.

''அண்டா பாத்திரங்களையெல்லாம் லாரியில மடக்கி அனுப்பிடறேன். என் லாரியே வரும்''

''கொஞ்சம் டயம் தாயேன் ஈச்சா''

''சாதம் இப்ப நன்னா ஆறிப்போயாச்சுடா மௌலி''

''நான் கார்த்தாலேயே, என் புள்ளை உன் பொண் கழுத்தில தாலி கட்றதுக்கு மின்னாலேயே, என்னோட சமையல்காரங்க கிட்ட சொல்லி வைச்சேன். உப்பிலட்ட துக்கு நூறு எலுமிச்சம் பழமும், மொளகாப் பொடியும் வாங்க ஏற்பாடு செய்ஞ்சேன்''

''எனக்குத் தெரியவே தெரியாதே. ஈச்சா!''

'ஒனக்கு எப்படிடா தெரியும்? எல்லாம் நாங்க எறங் கின வீட்டுக் கொல்லையில நடந்தது. இப்ப ஒன் வேலை பஸ்ல ஏத்தறது தான் ''

''தயிரு?''

''என்னடா மௌலி. அசமஞ்சமா ஒரு கேள்வி கேக்கறாய்? இத்தனை ஏற்பாட்டை செய்ஞ்சவனுக்குத் தயிரும் வேணும்னு தெரியாதா? நேத்தைக்கு சாயங் காலமே இருபது லிட்டர் பால் வாங்கச் சொன்னேன். அப்புறம் இன்னொரு காரியம்.''

'என்ன ஈச்சா?''

''வாங்கிக்கோன்னா வாங்கிக்கணும். நீ இப்ப என் மச்சுனன் மாத்ரம் இல்லை. சம்பந்தியும் ஆயிட்டாய். உம் கையை நீட்டு.''

மௌலி வாங்கிக் கொண்டார் பையைத் திறந்து பார்த்தார். கட்டுக் கட்டாக நூறு, ஐம்பது, இருபது, பத்து என்று ஒரே நெரிசல்.

"சரியா எத்தனைன்னு நான் கணக்குப் போடலை. உத்தேசமாத்தான் நானும், என் தம்பியும் போட்டோம் நான் தர்றண்டது நாப்பதாயிரத்துக்குக் குறைச்சல் இருக்காதுன்னு தோணித்து."

மௌலியின் கண்கள் கனத்தன.

"ஈச்சா... ஈச்சா! இது நியாயமா எனக்குப்படலே"

"ஒனக்கு நியாயமாப் படறதை நான் செயம ட்டேன் எது நியாயம்னு எனக்குத் தோன்றதே அதைத்தான் நான் சேவேன். நாளைக்கு நீங்களெல்லாரும் எங்களோட வர்றேன். மத்த நாள் எங்காத்தில கிருஹப்பிரவேசம். மனசிலாச்சா?"

மௌலியால் தலையாட்டத்தான் முடிந்தது.

முன்னொரு காலத்தில் கல்யாணச் செலவை இருதரப் பினரும் பகிர்ந்து கொள்வார்களாம். ஈசுவரன் இன்னும் அந்தப் பழக்கத்தைக் கடைப்பிடிக்கிறார். மௌலிக்கு உணர்ச்சிப் பெருக்கில் தொண்டை அடைத்துக் கொண் டது. நாவில் ஒலி எழவில்லை.

மறுநாள் ஒரு பஸ்ஸும், ஒரு காரும் பாலக்காட்டை நோக்கிப் புறப்பட்டன. மௌலி, சுசீலா மற்றும் பாரதி காரில் செல்ல, பிள்ளை வீட்டார் அனைவரும் பஸ்ஸில் ஏறினார்கள். மௌலி எவ்வளவு வற்புறுத்தியும் நாரா யணன் பாரதியுடன் காரில் வரவில்லை.

பள்ளிப்புறம் கிராமம் கோலாகலத்தில் ஆரவாரித்தது. அதை ஒட்டினாற்போல அமைந்த ஆதித்யபுர கிராமமும் இதில் பங்கு கொண்டது. விவாகங்கள் மூலமாக இந்த இரு கிராமங்களுக்கும் தொன்று தொட்டு உறவு உண்டு. ஒரு காலத்தில் பெரிய நிலச்சுவான்தார்களும், வியாபாரம்



மற்றும் லேவாதேவியில் பணம் ஈட்டிக் கொடி கட்டிப் பறந்தவர்களும் வாழ்ந்த கிராமங்கள். அவர்களில் பலர் இப்போது சிதிலமாகிவிட்ட வீடுகளில் பழைய பெருமை களில் ஒடிந்து போய் பெருமூச்சு விட்டுக்கொண்டிருந் தார்கள். ரேஷன் கடைகளில் அரிசி வாங்க வேண்டிய நிலை. அந்த அரிசியின் செலவுக்காகப் பிறரிடம் கைகட்டி வேலை செய்ய வேண்டிய நிர்ப்பந்தம். புதுத் தலைமுறைப் பெண்கள் கஷ்டத்துடன் கல்லூரியில் படித்து, படித்த உடனேயே வேலை ஒன்றை தேடிப் பிடிக்க வேண்டிய அவசியம்.

ஆனால் விதி விலக்காகச் சில வீடுகள் இன்னும் செல் வச் செழிப்பில் மின்னிக் கொண்டிருந்தன. அவற்றில் ஒன்று ஈசுவரனுடையது

நிலச் சீர்திருத்தங்கள் வரும் முன்னரே ஐநூறு ஏக்கர் நிலத்தை ஒரு பெரும் கூட்டுக் குடும்பப் பண்ணையாக மாற்றி, உழவுத் தொழிலை ஈசுவரனும் அவருடைய தந்தை மற்றும் சிற்றப்பாக்கள் நேரடியாக மேற்கொண் டார்கள். பாலக்காட்டில் மூன்று பெட்ரோல் மற்றும் டீசல் விற்கும் நிலையங்கள் கார், லாரி, ஸ்கூட்டர் போன்ற வாகனங்களுக்குத் தேவையான உதிரிப் பொருட் களில் வியாபாரம். ஒரு பெரிய உர உற்பத்தி நிறுவனத் தின் மாவட்ட விற்பனை உரிமை. பாலக்காடு டவுன் ரயில் நிலையத்துக்கு அருகே ஒரு பெரிய மருந்துக் கடை கோவை, மதுரை மற்றும் சென்னை நகரங்களில் பலப் பல லட்சம் ரூபாய் பெறுமானமுள்ள கட்டடங்கள். கடை வீதியில் சிறிதும் பெரிதுமாகப் பன்னிரண்டு கடை கள்.

மூதாதையர் செய்து வந்த லட்டி வியாபாரம் மட்டும் இப்போது இல்லை.

ஈசுவரனுடைய மூன்று தம்பிகளும் அவர்களின் சில பிள்ளைகளும் நாராயணனுமாக சாம்ராஜ்யத்தை நடத்தி வந்தார்கள்.

மகாலட்சுமி முகமெல்லாம் பிரகாசிக்க நர்த்தனமாடினாள். ஈசுவரன் எதைத் தொட்டாலும் அது பொன்னாயிற்று. கிராமத்தில் பல குடும்பங்கள் அவரிடம் பணியாற்றி, திருப்தியாக ஜீவனம் நடத்தின ஏழை, பணக்காரன் என்ற பாகுபாட்டைச் சிறு வயதிலிருந்தே அவர் உணர்ந்து அறியாத காரணத்தால் கிராம மக்கள் அனைவருமே அவர் மீதும் அவர் குடும்பத்தின் மீதும் தனி அன்பு, மரியாதை, மதிப்பு காட்டினார்கள்.

இப்போது ஈசுவரனுடையபிள்ளை நாராயணனுக்குக் கல்யாணம் என்று வந்தபோது கிராமமேஒன்றாக மூந்து நங்வரம் சென்று திரும்பியது. கிருஹப் பிரவேசத்துக்கான ஏற்பாடுகளைச் செய்வதிலும் தீவிரமாக ஈடுபட்டது.

ஈசுவரனுடைய மூன்று தம்பிகளில் கடைசித் தம்பி சகஸ்ரம் தன் வீட்டை, பெண் வீட்டார் தங்குவதற்காகத் தயார் செய்தான். அவனுக்கு அடுத்தவன் கோவிந்தன் விருந்துக்கான ஏற்பாடுகளில் முனைந்தான். ஈசுவரனுடைய முதல் தம்பி சிவராமன கிரஹப் பிரவேச வீட்டைத் தூய்மைப்படுத்துவதில் இறங்கினான்.

பஸ்ஸும் காரும் பள்ளிப்புரம் கிராமத்தை அடைந்த போது இரவு மணி எட்டு.

''டேய் மௌளி எங்காத்துக்குள்ளே போகாதே... என்ன அவசரம் ஒனக்கு?'' என்றார். ஈசுவரன் காரில் இருந்து இறங்கிய மௌளி தம் வீட்டு வாசற்படியில் கால் வைப்பதைக் கண்டு.

மௌளி சிரித்தார். அவருடன் சுசீலாவும் பாரதியும் மௌனமாக நின்றார்கள்,

பஸ்ஸிலிருந்து இறங்கி மௌளி அருகே வந்த ஈசுவரன் ''நேரா எதிர்க்க இருக்கிற வீட்லதான் நீங்க எல்லாரும் தங்கப் போறேள். கட்டில், கடக்கை தலகாணி எல்லாம் சகஸ்ரம் தயாராக்கியிருப்பன். நாளைக்குக் கார்த்தாலே



மேள வாத்தியத்தோட நாங்க வந்து அழைப்போம் அப்புறம் பாரதி எங்காத்துக்குள் வருவாள்'' என்றார்.

''சரி ஈச்சா.''

''ஆருக்குக் குளிக்கணுமோ அவா குளியுங்கோ...குளிக்காதவா கைகால் அலம்பிக்குங்கோ. இன்னும் அரைமணிக் கூறில் எலை போடச் சொல்றேன்''

மீண்டும், ''சரி ஈச்சா!'' என்றார் மௌளி.

''நீ என்னோட மச்சுனன்தான். எப்பவேணும்னாலும் இந்தாத்திலே பிரவேசிக்கலாம். ஆனா நீ இன்னைக்கு என்னோட சம்பந்தி. அதனாலதான் இந்த சம்பிரதாயம் கிட்டயா!'' மௌளி பதில் சொல்லவில்லை. தம் பெண்ணைப் பற்றிய சிந்தனை மின்னலாக எழுந்தது.

டில்லியில் பிறந்து அங்கேயே வளர்ந்தவள். ஏழுவயதில் ஒரே ஒரு முறை நங்கவரம் வந்திருக்கிறாள். சொந்த பந்தமெல்லாம் தாய்வீட்டு மாமா, சித்திகளுடன் மட்டும்தான். அவர்கள் பம்பாய் கல்கத்தா, கான்பூர் என்று சிதறிக் கிடந்தார்கள் கோடை விடுமுறையை அவள் பெரும்பாலும் பாட்டியுடன்பம்பாயில்கழிப்பாள். நங்கவரம் போன்றஒரு பெரிய கிராமத்தைக் கண்டே முகம் சுளித்த அவள்எப்படி இந்தக் கிராமத்தில் வாழப் போகிறாள்? என்னதான் சகல நவீன வசதிகள் இருந்தாலும் அவள் வாழ்நாள் முழுதும் வளைய வளைய வரப்போவது இந்த ஒரு அக்ரஹார வட்டத்துக்குள்தானே? பலதரப்பட்ட வட இந்தியர்களோடு சாதிமத வித்தியாசம் தெரியாமல் பழகி வந்தவள் கடைசியில் இங்கே வந்து நிற்கிறாளே?

திடீரென்று எல்லாம் தம்முடைய தவறினால்தான் என்று மனசாட்சி அடித்தது. அவர் ஒரளவுக்கு மேல் பேசியிருக்கக் கூடாது. அவருடைய வற்புறுத்தல் காரணமாக பாரதி கல்யாணத்துக்குச் சம்மதித்திருக்கிறாள். இல்லாவிட்டால் மேலே தொடர்ந்து படித்திருப்பாள். ஆங்கில

இலக்கியத்தில் டாக்டர் பட்டம் வாங்குவதில் முனைந்திருப்பாள். அவருடைய தற்போதைய நிதிப்பற்றாக்குறையும், தங்கை தங்கம்மா அந்தக் காலத்தில் இந்தக் குடும்பத்தினுள் பிரவேசித்தவள் என்ற உண்மையும்தானே அவர் கண்களை மூடின?

''என்னக் குத்துக் கல்லாட்டம் நிக்கறீங்க. வாங்க வீட்டுக்குள்ளேயே போகலாம்'' என்று சொல்லி சுசீலா மௌலியை இன்றைய உலகுக்கு அழைத்து வந்தாள்.

கிரஹப் பிரவேசம் விமரிசையாக நடந்து முடிந்தது. ஈசுவரனுடைய எழுபத்து நாலு வயதுத் தாயார் பாலும் பழமும்அளித்து கைலாகு கொடுத்துபாரதியை அழைத்துச் சென்றாள். எண்பத்திரண்டு வயதுத் தந்தை கூட நடந்தார்.

''எச்சுமி இப்ப நோக்குத் திருப்தியாச்சா? கோந்தைக்குக் கல்யாணம் ஆகணும். பொண்ணுக்கு உன் கையாலே பாலும் பழமும் ஊட்டணும்னு ரொம்ப நாளா விசாரப்பட்டயே. இப்ப அது நடந்தாச்சு'' என்றார். நாணுப்பாட்டா என்கிற நாராயண அய்யர்.

''நீங்க மாத்தரம் ஈஸிச்சேர்ல ஒக்காந்து ஒக்காந்து 'எப்படி எச்சுமி நம்ம கோந்தை ஒரு பொண்ணு கழுத்லே தாலி கட்டுவான்னு' ஏங்கலியாக்கும்?''

''இதிலே ஒரு அதிசயத்தைப் பார்த்தியா?''

''அதன்ன பெரிய அதிசயம்? புள்ளை ஈச்சாவுக்கு. ஒருத்தி நங்கவரத்திலேந்து வந்திருக்கா. அந்த மண்ணோட அதிர்ஷ்டமா?''

''நோக்குத் தெரியாது. சும்மா தொண தொணக்காதைக்கு இருங்கோ.''

பாரதியின் வாயில் இன்னும் பாலின் சுவை தவழ்ந்து கொண்டிருந்தது. சுவையேயானாலும் அகற்றிவிட வேண்டும் என்று நா துடித்தது. இந்தக் கூட்டத்திலிருந்து



எப்படி அவளால் வெளியேறிவாய்க்கொப்பளிக்கமுடியும்? மாமனார் மாமியார், நாராயணனுடைய சித்தப்பாக்கள், சித்திகள் இன்னும் ஊரிலே பல உறவினர்கள் அவளைச் சுற்றிக் குழுமி இருக்கும்போது அவள் மெல்ல நழுவிப் போகவும் முடியாதே?

வேறு வழி தெரியாமல் சகித்துக் கொண்டாள்.

தம்பதியை மணையில் உட்கார வைத்தார்கள். நாராயணன் வெகு அருகே, இடிக்காத தோஷமாக உட்கார்ந்திருந்தும் அவன்தொலை தூரத்துக்குப் போய்விட்டதான பிரமை பாரதிக்கு ஏற்பட்டது. அவன் இதுவரையில் அவளுடைய கண்களைச் சந்திக்கவில்லை. ஏன்? அம்மாவின் வற்புறுத்தலின் பேரில் மூன்று முடிச்சுப் போட்டு விட்டானா? நங்கவரத்துக்குப் பெண் பார்க்க வந்தபோது தனக்கு இந்தக் கல்யாணத்தில் விருப்பமில்லை என்றான். அதற்கான காரணங்களையும் கூறினான். தன்பொருட்டுத் தான் அவன் அப்படிப் பேசினான் என்று அவள் நினைத்துத் தானே அவளே தான் கொண்டிருந்த முடிவை மாற்றிக் கொண்டாள். அவன் மீது திடீரென்று எழுந்த மதிப்பு மரியாதை அபிமானம் எல்லாம் தானே முடிவை மாற்ற வைத்தது? அதன் பிறகு மெல்ல அவளுடைய மனமும் அவன்பால் வயப்படத் தொடங்கியதே!

இப்போது நாராயணன் அலட்சியமாக, பராமுகமாக இருக்கிறான். ஏன்? புரியவில்லை. திடீரென்று உள்ளுக்குள் கோபம்தான் வீசியது.

அவள் டில்லியில் வளர்ந்தவள். எம்ஃபில் படித்தவள், தூக்கி எறிந்து பேசுவதில் அவளை மிஞ்சுபவர்கிடையாது. நாராயணன் அலட்சியமாக இருந்தால் அதற்கும் மேலாக அவளால் அலட்சியமாக இருக்க முடியும்.

திடீரென்று மாமனார், ஈசுவரனுடைய குரல் கேட்டது.

''பொண்ணே, பாரதி! எழுந்திரு. ரெண்டு பேரும. சபைக்கு நமஸ்காரம் பண்ணுங்கோ.''

பாரதி எழுந்தாள்.

இருவரும் நமஸ்கரித்தார்கள்.

மீண்டும் உட்கார்ந்தார்கள்.

பெண்கள் கூட்டம் அவளுக்கு அருகே இருந்தது அவர்கள் தாழ்ந்த குரலில் பேசிக் கொண்டாலும் அவள் காதில் வார்த்தைகள் விழுந்தன.

''டில்லியில படிச்சவளாச்சே, அதான் 'எதுவும் பிடிக்கலை'ன்னு மூஞ்சியை மர நாயாட்டம் வைச்சுண்டு இருக்கா.''

''இந்தைக்கு சகஸ்ரம் ஆத்துக்குப் போனேன்டீ. அப்பத்தான் அவ குளிக்க பாத்ரூம் போனா.

''கழுத்துக்குக் கீழே தலை மயிர் இல்லை''

''பொய்டீ...தலைவாரிப் பின்னிண்டிருக்காளேடீ?''

''சவுரி இருந்தா மொட்டைப் பாட்டியும் பின்னிப் பூ குட்டிக்கலாம்டீ''

''அபத்தமாப் பேசாதே, சொர்ணம்.''

''தெளிச்சுப் பேசாதேடீ...அவ காதுல விழப் றது.''

''இல்லாததையா சொல்றேன்''

''இன்னும் குரலைத் தாழ்த்துடீ...''

''நாராயணனுக்கு நல்ல பெண்டாட்டியா அமைவான்னு தேக்குத் தோணலை.''

'அவன் சொன்னபடி இவகேட்கலேன்னா இவளுக்குத் தான் கஷ்டம்.''

''டீ, அவ நம்ப பக்கம் பார்க்கறா.''



''ஒனக்கு இங்லீஷ் வரலேன்னா அவகிட்டப் போடீ...''

''மூக்குக் குத்திக்கலை, கண்டியா?''

''எச்சுமிப்பாட்டி ரெண்டு மூக்கையும் குத்திக்கச் சொல்லுவாடீ...''

பாரதியால் அந்த இடத்தில் எதுவும் செய்ய முடிய வில்லை. மௌனமான கோபம் கட்டிப் போட்டது.

முதல் இரவு.

''பாரதி, நான் உங்கிட்டக் கொஞ்சம் பேசணும்.''

அத்தையாகவும், மாமியாராகவும் இருக்கும் தங்கம்மா அவள் அருகே வந்தாள்.

''சொல்லுங்க அத்தை''

''நீ தொள்ளாயிரத்துத் தொண்ணூறில இந்தப் பாலக்காட்டுக்கு வந்திருக்கே. நான் அம்பத்தாறில் பத்தொன்பது வயசில பி.எஸ்ஸி கடைசிப் பரிட்சை எழுதின கையோட இங்கே வந்தவள். அப்ப நான் பச்சை மண. கண்ணைக் கட்டிக் காட்டில விட்டமாதிரி இருந்தது. இங்கே பேசற தமிழே புரியலே நீட்டி இழுத்து முழக்கிப் பேசறதைக் கேட்கறப்ப சிரிக்கத் தைரியமில்லே. அழத் தெரியலே. யார் யாரெல்லாமோ வருவா. சொந்தம் கொண்டாடுவா-கையையும் கழுத்தையும் காதையும் பிடிச்சு இழுத்துப் பார்ப்பா. வளையலும் சங்கிலியும் வைரமும் உண்மையா போலியான்னு வார்த்தையை வெளியே கொட்டாமக் கேட்பா அழுகை வரும். அம்மா அப்பாவை அவமானப்படுத்தறாளேன்னு ஆத்திரம் வரும். ஆனா என்ன செய்ய? மாமனார், மாமியார் சாந்த சொருபிகள். கட்டின புருஷன்? அவரைப் பத்திச் சொல்லவே வேண்டாம். சகல சுதந்திரத்தையும் கொடுத்தார். ஆனா நின்னு பேச டயம் கிடையாது. பம்பரம் அவர்ட்ட தோத்துப் போகும். எப்பவும் ஓட்டம்.

இதை விடு. சாப்பாடு? வடிக்கிற சாதத்தில்தான் தேங்காய் இருக்காது மத்த எல்லாத்திலேயும் ஒரே தேங்காய் மயம். அப்றம் இன்னொண்ணு சாம்பார் மட்டும்தான். ரசம் இராது. நான் தினமும் டம்ளர்ல ரசத்தை விட்டுக்குடிச்சுப் பழகினவள். மிளகூட்டல்னு ஒருவகைக் குழம்பு. பொரிச்ச கூட்டுன்னு மொதல்ல நினைச்சேன். ஒரே தேங்காயும், நாலஞ்சு வகைக் காய்களையும் போட்ட ஒரு சுதம்பம். ஜீரகமும், வறட்டு மொளகாயும், தேங்காப் பூவில கலந்து அரைச்சுக் கொட்டி. தேங்கா எண்ணெயில தாளிச்சு ஒரு கிளை கருவேப்பிலையப் போட்டு கச்சட்டியில தயார் பண்ற விஷயம். என்னால வாய்ல வைக்க முடியலே... என் மாமியார் புரிஞ்சுண்டா. 'தங்கம்மா, நீ உனக்குப் பிடிச்சதைத் தனியா சமைச்சுக்கோன்னா' இந்தத் தாராளத்தில் கொஞ்ச நாள் சமைச்சுண்டேன். ஆனா நான் ஆக ஆக, இப்படிச் செய்யறது சரியில்லைன்னு பட்டது. மெல்ல மெல்ல மிளகூட்டல், எரிசேரி, காளன் ஓலன் இத்யாதிகளின் ருசிக்கு என்னைப் பழக்கிக் கொண்டேன்.''

பாரதி வாய் திறவாமல் அத்தையின் சுயபுராணத்தைக் கேட்டு அலுத்துப் போனாள்.

''இதெல்லாம் இப்ப நான் ஏன் சொல்ல வர்றேன்னு யோசிக்கிறியா, பாரதி? பின்னணி புரிஞ்சாத்தான நீ முன்னணியில நிற்க முடியும். இன்னிக்குக் கார்த்தால சில பெண்கள் உன்னைப் பத்தி விமர்சனம் பண்ணினா. என் காதுல விழுந்தது. ஆனா ஒண்ணு, மனசில பட்டதைப் படார் படார்னு சொல்றது இந்த ஊர்க் குணம். ஆனா யார் மனசிலுமே வெறுப்போ, விரோதமோ இல்லை. அவங்களே நாளைக்கு உன்னைத் தேடிண்டு சிநேகமாக்கிக்க வருவாங்க. அவங்க சொன்னதையெல்லாம் நீ உன் மனசில ஒட்ட வைச்சுண்டு பராமுகமா இருந்துடாதே.''

''சரி அத்தே.''



''அப்றம் இன்னொரு முக்கியமான விஷயம்.''

''சொல்லுங்க அத்தே.''

''நாராயணன் யார்ட்டேயுமே அதிகம் பேச மாட்டான். ஊர்ல மத்தவங்களோட உட்சார்ந்து வம்பு பேசறது. அரட்டை அடிக்கிறது இதெல்லாம்தெரியாதவன். அவன் கவனம் எப்பவும் நிலத்திலும், தோட்டத்திலும் விவசாய ஆராய்ச்சியிலும் நெலைச்சிருக்கும். சர்க்கார் நியமிச்சிருக்கிற எத்தனையோ கமிட்டிகள்ளே மெம்பர். விவசாயிகள் சங்கத்திலே செக்ரடரி. எல்லாப் புது மாப்பிள்ளை மாதிரி அவன் உன்கிட்ட நடந்து கொள்ள லேன்னா அதைத் தப்பா எடுத்துக்காதே.''

''சரி அத்தே...ஆமாம் நீங்க மட்டும் எப்படி பாலக்காட்டு வாடை இல்லாம இப்ப என் கிட்டப் பேசறீங்க?''

தங்கம்மா சிரித்தாள்

''என் பிறந்த ஊரு நங்கவரம். அங்கேபேசின தமிழை இப்ப உன் கூட பேச எனக்கு சான்ஸ் இருக்கிறப்ப அதை நழுவ விடுவேனா? ஆனா நானே நாளைக்கு மத்தவான் கிட்டே எப்படிப் பேசறேன்னு பாரு.''

''ஏற்கெனவே பார்த்தாச்சு அத்தே.''

''இங்கே எல்லோருமே நல்லவா என் ஓர்ப்படிகள் எல்லோருமே தங்கங்கள்; நீயும் நல்லவள். 'குடும்பத்தோடு இணைஞ்சு போகிறவள்'னு பேர் வாங்கணும்.''

''சரி அத்தே''

''டமாரம் கொட்டி இந்த சாந்தி முகூர்த்தத்தை அம்பலப்படுத்த நாராயணன் விரும்பலே. அதான் சாயங்காலம் ஊர்க் கூட்டம் வரலை. சரி வா! வெளியே போகலாம்.''

வெளியே வந்ததும் மூத்த ஓரகத்தி சிரித்தாள். ''என்ன மன்னி! பர்ஸ்ட் நைட்டுக்கு மாட்டுப் பொண்ணுக்கு டியூஷனா?''

''பேசாம இரேன் கமலம்''

பாரதியை மாடிப்படிவாயிலில் விட்டு விட்டுத் தங்கம்மா சென்றாள். பாரதி மெல்ல மெல்லக் கால் வைத்துப் படியேறினாள்.

அறை வாயிலில் நின்றபோது அறை பெரிதாக ஆனால் மங்கலான வெளிச்சத்தில் உறைந்திருப்பதைக் கண்டாள். நட்ட நடுவே ஒரு பெரிய இரட்டைக் கட்டில் கட்டிலைத் தாண்டி சுவரோரமாய் ஜன்னலுக்கு கீழே ஒரு பெரிய மேஜை.மேஜை மேல் கேள்விக்குறி அமைப்பில் ஒருவிளக்கு பிரகாசமாய் எரிந்து கொண்டிருந்தது. நாற்காலியில் உட்கார்ந்து நாராயணன் ஏதோ எழுதிக் கொண்டிருந்தான்.

அவள் அறையினுள் பிரவேசித்து ஒரிரு நிமிடங்கள் நின்றாள். தூக்கம் வரவில்லை என்றாலும் கட்டிலில் அவனில்லாமல் உட்காரவோ படுக்கவோ தோன்றவில்லை.

மெல்ல அவனருகே சென்றாள். அவள் மிகவும் நெருங்கி வந்த பிறகுதான் நாராயணன் உட்கார்ந்து கொண்டான், எழுதுவதை நிறுத்திவிட்டு.

''பாரதி நான் இந்த ரிப்போர்ட்டை விடியறத்துக்குள்ளே முடிச்சுத் தீர்த்தாகணும். கார்த்தால ஐலண்டு எக்ஸ்பிரஸில் இதை எடுத்துண்டு எர்ணாகுளம் போய் ஆகணும். நீ தூங்கிக்கோ. கொஞ்சம் கொசு கடிக்கும். ஒலைக்குக் கொசுவலையை எடுத்துத் தரச் சொல்லிட்டு வண்டி ஏர்றேன். வேணாம்னா ஃபேனைப் போட்டுக்கோ.''



''சரி'' என்றாள் பாரதி.

''என்னைத் தெத்து தரிக்காதே பாரதி... ஸாரி... என்னை மிஸ்டேக் பண்ணுக்காதே...''

மௌனமாய்ப் பாரதி கட்டிலுக்கு வந்தாள் முதலிரவில் பெரியதோர் நாட்டத்தை அவள் உள்ளடக்கி வைத்துக் கொண்டிருக்கவில்லைதான் என்றாலும் ஏமாற்றத்தை அவளால் ஏற்க முடியாமற் போயிற்று.

## 4

நீண்ட நேரம் கண்களை மூடியவளாய்க் கிடந்த பாரதி எப்போது உறக்கம் கொண்டாளோ, அவளுக்கே தெரியாது. டில்லியில் முதன் முதலாக நாராயணனைப் பார்த்த சம்பவத்திலிருந்து கல்யாணம் முடிந்து பாலக் காட்டுக்கு வந்த நிகழ்ச்சி வரை எல்லாமே அவளுடைய மார்பைத் தாக்கின. திருமணம் ஆவதற்கு முன் அவள் தன் எதிர்காலம் பற்றி எந்தக் கனவையும் கண்டவள் அல்ல. தானும் ஒருநாள் இல்லாவிட்டால் ஒருநாள் அம்மாவைப்போல, பாட்டியைப் போல, அவளுக்கும் முன்னால் தோன்றியவர்களைப் போல தாம்பத்திய வாழ்க்கையில் இறங்கப் போகிறவள்தான் என்ற எண்ணம் எப்போதாவது லேசாக மனத்தில் இழை ஓடும். ஆனால் திடீரென்று ஒரு அதிதீவிர வேகத்துடன் எதிர்பாரா விபத்து நிகழ்வது போல தாம்பத்திய வாழ்க்கை தொடங்கி விட்டது இந்தப் பாதை ஆரம்பித்தது. ஆரம்பித்ததுதான் திரும்பிச் செல்லவோ, வேறு திசையில் செல்லவோ வழி இல்லை. அத்தை தங்கம்மா, தான் ஒரு முன் உதாரணம் என்று சொல்லி அவளைத் தேற்றப் பார்க்கிறாள். புகுந்த இடத்தில் அனுசரித்துக் கொண்டு போகும் மனப்பக்குவம் இருந்து விட்டால் தன்னைப்

போல பாரதியும் நாளடைவில் மகிழ்ச்சியுடன் வாழலாம் என்று உபதேசமும் செய்கிறாள். மகிழ்ச்சி என்றால் என்ன? கலகலப்பாகச் சிரித்துப் பேசி, உறங்கினால் மகிழ்ச்சியாகிவிடுமா? கணவனுடைய உள்ளார்ந்த அன்பிலும், அரவணைப்பிலும் இருந்து விட்டால் அது தாம்பத்திய சுகமாக இருக்கலாம். ஆனால் வாழ்க்கையில் மகிழ்ச்சி என்று சொல்ல முடியுமா? அவளுக்குக் கிராமம், சுற்றுப்புறம் எல்லாமே மனத்துக்கு ஒவ்வாததாக இருக்கிறது. பேச்சின் பாணியும் ஓசையும் சிற்சில வார்த்தைகளும் நாராசமாக ஒலிக்கின்றன. டில்லியில் அவளுடைய உணவு வகைகளே வேறு விதமாக அமைந்திருந்தன. சின்னஞ்சிறு வயதிலிருந்தே தண்டூரி, பரோட்டா, நான், பேல்பூரி, புல்கா போன்றவைகளுக்குப் பழக்கப்பட்டவள். அங்கே ருசி பார்த்த சப்ஜி, ரைத்தா, ஸாலடுகளுக்கும் இங்கே அனுபவிக்கப் போகிற தோரன், அவியல் பச்சடிகளுக்கும்தான் எத்தனை எத்தனை வேற்றுமைகள்! அவளுடைய அம்மா தயார் செய்யும் மோர்க் குழம்பு மற்றும் சாம்பாரையே அவள் விரும்ப மாட்டாள்.

அவள் இப்போது, இதுவரை கற்பனையிலும் பார்த்து அறியாததோர் புது உலகினுள் பிரவேசித்திருக்கிறாளா, அல்லது புகுந்தவீடு எனும் மாபெரும் சிறைக்குள் தள்ளப்பட்டிருக்கிறாளா? சங்கிலித் தொடர்ச்சிந்தனையில் மனம் வலிக்க உடலும் சோர்வுற்றது. அவளுடைய கண்கள் தாமாக நித்திரைக்கு அழைத்துச் சென்றன.

பாரதி திடீரென்று கண் விழித்தாள். வெளியே மழை பெய்து கொண்டிருந்தது. ஜூன் முதல் வாரத்தில்தான் கேரள மழை தென்மேற்குப் பருவக் காற்றின் போது துவங்கும் என்று படித்திருந்தாள். ஏப்ரல் முதல் வாரத்தில் எப்படி மழை பெய்ய முடியும்?

மெல்ல எழுந்தாள். படுக்கை அறை விளக்கின் வெளிச்சத்தில் ஒரே ஓர் உண்மைதான் புரிந்தது, கணவன்



நாராயணன் அறையில் இல்லை. விளக்கைப் போட்டாள். மெத்தையும் தலையணையும் உபயோகப்படுத்தப்படாமல் இருப்பதைக் கண்டாள். நாராயணன் இரவு முழுதுமாத் தூங்காமல் இருந்திருக்கிறான்? மேஜைமீது ஒரு அலாரம் இருந்தது. அது மணி ஐந்தேகால் என்று அறிவித்தது. எட்டு மணிக்கு முன்னால் எழுந்து அறியாதவள் எப்படி இப்போதே விழித்துக் கொண்டுவிட்டாள்?

இப்போது என்ன செய்ய? வீடே நிசப்தமாக இருந்தது எல்லோரும் தூங்கிக் கொண்டிருக்கிறார்களோ? அவளுக்குத் தூங்கி எழுந்ததும் பல்துலக்கின கையோடு காப்பி குடித்தாக வேண்டும். புகுந்த வீட்டுச் சமையல் அறைக்குள் புகுந்த மறுநாளே எப்படிச் சுதந்திரமாய் புக முடியும்?

உடனடியாகக் காப்பி கிடைக்கிறதோ இல்லையோ பல்லாவது தேய்க்கலாம் என்ற எண்ணத்துடன் மெல்ல ஒலி எழுப்பக்கூடாது என்ற அச்சத்துடன் மாடிப் படிகளில் இறங்கினாள். படிகள் மரத்தில் செய்யப்பட்ட அகலமில்லாத பலகைகள். ஊன்றிக் கொள்ள இருபுறமும் சுவர்கள். வயதானவர்களுக்குச் சிரமமில்லாமல் இருக்க, ஒரு பக்கத்தில் நீண்ட கனமான கயிறு ஓடியது. கடைசிப் படியில் அவள் கால் வைக்கவும் வலப்புற ரேழியிலிருந்து ஈசுவரன் கூடத்துக்குள் பிரவேசிக்கவும் சரியாக இருந்தது.

ஒரு சில கணங்கள் பாரதி திடுக்கிட்டு நின்றாள்.

"பொண்ணே, நநநாத் தூங்கினியா...? போய்ப் பல்லைத் தேய்ச்சுட்டு வா... தங்கம் காப்பி தருவள்... தங்கம், தங்கம்... பாரதி எழுந்திருந்தாச்சு. காப்பி கலந்து கொடு.

பாரதி மௌனமாய் நடந்தாள்.

ஊஞ்சலில் அமர்ந்தபடி மாமனாரின் தந்தை நாணுப்பாட்டா நாமம் மின்னும் நெற்றியுடன் இருகை

களையும் கட்டி, விஷ்ணு சகஸ்ர நாமத்தை மெல்லிய குரலில் அவனுக்கு விநோதமாகப் பட்ட ராகத்தில் உச்சரித்துக் கொண்டிருந்தார். ஊஞ்சலைத் தாண்டி நடந்தபோது மிடப் பக்க முற்றத்துத் தூண் ஒன்றில் சாய்ந்தவளாய்ப் பாட்டி ஒருபுத்தகத்தில் மூழ்கி இருந்தாள். வட்ட வடிவமான மூக்குக் கண்ணாடி மூக்குப் பள்ளத் தாக்கிலிருந்து வழுவியிருந்தது.

குளியல் அறையில் பல் தேய்க்கையில் ஒரு பசுவின் தாபம் ஒலிக்கும் குரல் கேட்டது. மறுகணமே சமையலறையிலிருந்து தங்கம்மா, "எந்தா தாட்சாயணி! தொழுத்துப் பெரையிலே, இனியும் பருத்திக் கொட்டை அரச்சுக் கொடுத்தில்லே! மாடு கரையுன்னு. வேகம் தினி இடு!" என்று கத்தினாள்.

பாரதி இன்னும் தொழுவம் பக்கம் போனதில்லை. சமயம் கிடைக்கும்போது வீட்டின் எல்லாப் பகுதிகளையும் அவள் பார்த்து அறிந்து கொள்ள வேண்டும். பல் தேய்த்து விட்டு வெளியே வருகையில் ஒரு கேள்வி திடீரென்று எழுந்தது. சமையல் வேலையை யார் செய்கிறார்கள்? தங்கம்மா தனித்துச் செய்கிறாளா? அல்லது ஒரு சமையற்காரி உண்டா? இவ்வளவு பெரிய பணக்கார வீட்டில் ஒரு சமையற்காரி இல்லை என்றால் வீட்டின் மதிப்புக்குக் குறையாக இருக்குமே?

தயங்கித் தயங்கி பாரதி சமையலறை வாயிலில் நின்றாள்

"வா பாரதி...நன்னாத் தூங்கினாயா?"

"தூங்கினேன் அத்தே."

"நாராயணன் இலண்ட்ல போறதாச் சொல்லிட்டு, இன்னும் முன்னாலேயே கொச்சி எக்ஸ்பிரஸைப் பிடிக்கறேன்னு போனான்,"

பாரதி கேட்டுக் கொண்டாள்.



"உனக்கு காப்பி எப்படி இருக்கணும்? பஸ்ட் டிகாக்ஷன்ல ஸ்ட்ராங்காவா, இல்லே ரெண்டாவது டிகாக்ஷனும் கலந்து லைட்டாவா? பஞ்சாரை... அதான் சர்க்கரை-அதிகமா இல்லே குறைச்சலா?"

"நீங்க சிரமப்படாதீங்க அத்தை ..நானே கலந்து கொள்றேன் "

"இன்னிக்கு ஒரு நாள் ரெஸ்ட் எடுத்துக்கோ பாரதி. நாளையிலிருந்து நாம ரெண்டு பேரும் தானே இந்தக் கிச்சன்ல சாம்ராஜ்யம் நடத்தப் போறோம்!"

"எனக்கு ஸ்ட்ராங்கா, சர்க்கரை குறைச்சலா சூடா இருக்கணும், அத்தே!"

"அப்படிச் சொல்லு. நாராயணன் பாதி நாள் சாயை அதான் டீ குடிப்பன். காப்பியில அதிக இஷ்டமில்லை."

பாரதி ஒன்றும் கூறவில்லை.

"சுசிலா உனக்குச் சமையல் எல்லாம் கத்துக் கொடுக்கலே, இல்லியா?"

"நான் கத்துக்கலே அத்தே."

"அதுக்கு இப்ப ஏன் வருத்தப்படறே, பாரதி? நான் செய்யறப்ப கூடமாட இரு. மெல்ல மெல்ல நீயே கத்துப்பே. முன்னொரு காலத்தில நானும் உன்னை மாதிரித் திருதிருன்னு முழிச்சுண்டு நின்னவதானே? என் மாமியாருக்கு ஒத்தாசையா மொதல்ல இருந்தேன். அப்புறம் ஒவ்வொண்ணாக் கத்துண்டேன். நகராத குழந்தையுப் தவழும்...இந்தா காப்பி...தவழற குழந்தையு முட்டுக் கொந்கத் தொடங்கும்.. சூடா இருக்கா... அப்புறம் சுவத்தைப் பிடிச்சுண்டு விழுந்து, எழுந்து நடக்கும்...சர்க்கரை சரியா இருக்கா பாரு... அப்புறம் என்ன? குழந்தை நம்ப கைக்கும் அடங்காம ஓட ஆரம்பிக்கும்."

"காப்பி நன்னாயிருக்கு "

''மாமனாருக்குக் கோபமே வராது. ஆனா அவரோட காப்பி மட்டும் சரியா இல்லைன்னா எரிஞ்சு விழுவார். சின்ன வயசிலே காப்பியை முற்றத்திலே கொட்டவும் கொட்டியிருக்காராம். மாமியார் சொல்லுவா.''

''உங்க பிள்ளைக்கும் கோபம் வராது போலிருக்கு''

''வராது. வந்துட்டா தாங்க முடியாது. சில இடங்கள்ளே பகையே உண்டாயிருக்கு.''

''அத்தே!''

''என்ன சொல்லு''

''அம்மாவும் அப்பாவும் இன்னிக்கு ஊர் திரும்பறா அதனாலே...''

''அதனாலே? உனக்கும் அவர்கூடப் போய்க் கொஞ்ச நாள் இருக்கணுமா?''

''அது இல்லே அத்தே''

''பின்னே என்ன சொல்லேன்.''

''அம்மா அப்பா போகிற வரைக்கும் நான் அவாகூட இருக்கலாமா?''

''இதை ஏண்டி பாரதி இப்படித் தயங்கித் தயங்கிப் பயந்து பயந்து கேட்கிறே? குளிச்சு சுவாமி படங்களுக்கு நமஸ்காரம் பண்ணிட்டுப் போ. இன்னிக்கு எல்லாருக்கும் சகஸ்ரம் வீட்லதான் சாப்பாடு மலையாளச்சிக்கு அதான் வேலைக்காரி, தாட்சாயணிக்கு மாத்திரம்தான் சாதம் வடிக்கப் போறேன்.''

''ரொம்ப தாங்க்ஸ். அத்தே'.

தங்கம்மா என்னதான் அப்பாவின் தங்கைஎன்றாலும் அவள்மீது தாளமுடியாத எரிச்சலும், ஆத்திரமும் உண்டாயின. தன்னுடைய இந்தத் திடீர்த் தாம்பத்தியப் பிரவேசத்துக்கு அவள்தான் மூல காரணம். பிறந்த அன்றே அவளைத் தன் மருமகளா வரித்து விட்டாளாம்!



அவனுடைய குறுக்கீடு மட்டும் இல்லாமலிருந்தால் அவள் இந்த நாலாந்தர ஊருக்கு வந்திருக்கவே மாட்டாள். அப்பாவிடம் பிடிவாதம் பிடித்து, புரண்டு அழுது டில்லியிலேயே தன் படிப்பைத் தொடர்ந்திருப்பாள். திடீரென்று தானும் ஒரு வகையில் இந்தப் பொறியில் மாட்டிக் கொள்ளக் காரணம் என்று மனம் உறுத்தியது. அப்பாமீது சிறுவயதிலிருந்தே உள்ள அன்பும் மதிப்பும் ஒரு காரணம். நாராயணனின் தாராள மனப்பான்மை நிறைந்த பேச்சு. தன்னைத் திருமணம் செய்து கொண்டால் பாரதி சுகப்படமாட்டாள் என்று சொன்ன பண்பு இவையெல்லாம் அவளுடைய மனத்தைத் திடீரென மாற்றியது. யானை தன் தலையில் தானே மண்ணை வாரிப் போட்டுக் கொண்டு விட்டதா?

இந்தச் சிறிய நகரத்தில் ஒரு சிறியதோர் அக்ரஹாரக் கும்பலில் அவளால் நீண்ட நாள் தள்ள முடியாது எப்படி விடுதலை பெறுவது? பி.எச் டி. படிக்கக் கேரளத்தில் இருக்கும் இரு சர்வகலாசாலைகளைப் பற்றி ஈசுவரன் குறிப்பிட்டார். கொச்சி பெரிய நகரம். கோழிக்கோடும் அப்படித்தான் இருக்க வேண்டும். இரண்டு ஆண்டுகளுக்கு முதலில் விடுதலை கிடைத்தாற் போதும். அதன் பிறகு வாழ்க்கையின் திசையை எப்படி மாற்றிக் கொள்வது என்று தீர்மானிப்பாள்.

அவளுடைய மேற்படிப்புக்கு மாமனாரும் அத்தையும் அங்கீகாரம் கொடுத்தால் போதுமா? நாராயணன் என்ன சொல்லுவான்? அவனுடைய முடிவு எத்தகையதாக இருக்கும்? அனுமதி மறுத்தால்? எதிர்ப்பதா? எதிர்த்தால், விளைவுகள்? சிந்தனையினூடே அவள் சகஸ்ரம் வீட்டை நோக்கி நடந்தாள். அவள் கொஞ்ச நாட்களுக்குத் தன் சுயரூபத்தை மறைத்துக் கொள்ளவேண்டும். விட்டெறிந்து பேசும் சுபாவத்தை அடக்கிக் கொள்ள வேண்டும். தன் மனத்தில் என்ன இருக்கிறது. என்பதைப் பிறர் அறியாம

விருக்க அவள் நடித்தே ஆகவேண்டும். இனிமேல் நடிப்பு, நடிப்பு நடிப்புதான்,

ஆங்கில இலக்கியத்தில் பிஎச்.டி! டில்லி வாழ்க்கை இவைதான் இனி அவளுடைய குறிக்கோள்கள்!

சகஸ்ரத்தின் வீட்டினுள் அவள் பிரவேசித்தபோது மணி ஏழு.

சகஸ்ரம் ஊஞ்சலில் உட்கார்ந்து ஒரு கையால் சங்கிலியைப் பிடித்தவனாய் உரை நிகழ்த்திக்கொண்டிருந்தான். அவனுடைய மனைவி ராஜியும், அம்மாவும் ஒரு சோபாவில் உட்கார்ந்திருக்க, இன்னொன்றில் அப்பா அமர்ந்திருந்தார்.

பாரதியின் உருவம் தெரிந்த உடனேயே உரை சட்டென்று நின்றது.

"வாம்மா பாரதி!" என்ற ராஜி, "ஒன் சின்ன மாமனார் இந்த பாலக்காட்டோடு ஹிஸ்டரியைச் சொல்லிக் கொண்டிருந்தார், இரு காப்பி கொண்டு வரேன்" என்றாள்.

"வேண்டாம் சித்தி. காப்பி குடிச்சாச்சு.

"உன் சித்தப்பா கார்த்தாலே ஒன்பது மணிக்குள்ளே அரை அரைக் கிளாஸா நாலு பிராவசியம் காப்பி குடிப்பார்."

"இன்னும் ரெண்டாம் காப்பி வரலை ஒறமைஇருக்கா ராஜி? உட்காரு, பாரதி! ஒறமைன்னா ஞாபகம்னு அர்த்தம்"

"எல்லார்க்குமே கொண்டு வரேன்"

ராஜி உள்ளே சென்றாள்.

"பாலக்காட்டைப் பத்தி நான் என்னென்னமோ நெனைச்சுப் பயந்து போயிருந்தேன். பாரதி இவர் இப்ப



சொன்ன சரித்திரத்திலிருந்து ஒரு பெரிய உண்மை இன்னிக்குத்தான் தெரிஞ்சுது" என்றாள் சுசிலா.

"இன்னொரு வாட்டி சொல்லு சகஸ்ரம்... என் பொண்ணுக்கும் பயம் தெளியட்டும்... என்றார் மௌளி.

"மின்னால காப்பி வரட்டும்" என்றான் சகஸ்ரம்.

காப்பி வந்தது. சகஸ்ரம் சொட்டுச் சொட்டாக ருசித்தான்.

மில்டன், ஷெல்லி, கீட்ஸ்களில் ஈடுபாடு உள்ள பாரதிக்குச் சரித்திரத்தின் இடிந்து போனகோட்டைகளில் அக்கறை இல்லை. இருப்பினும் ஒரு நாற்காலியில் உட்கார்ந்து காது கொடுத்தாள்.

"ஐந்நூறு அறநூறு வர்ஷத்துக்கு மேல இருக்கும்" என்று துவங்கிய சகஸ்ரம், எல்லோரையும் ஒரு முறை கண் சுழற்றிப் பார்த்தான். பாரதியின் கண்களில் ஆர்வம் மின்னுவதாகத் தோன்றியது அவனுக்கு.

"அப்ப ஒரு ராஜா. சேகரவர்மன்னு பேரு அவன் சும்மா காட்ல வேட்ட ஆடிக்கொண்டிருக்கப்படாதா? அவனோட கண்ணுக்கு ரூப சுந்தரியாகத் தெரிந்த ஒரு மலைஜாதிப் பெண்ணை மோகிச்சான். அவனுக்கும் மோகம், கல்யாணம் கழிச்சுக்கணுமே? நம்பூதிரிப் பண்டிதம்மார் சரின்னு சொல்லணுமே? அவா ஒத்தைக் கால்ல நின்று படாதுன்னா. ராஜபரம்பரை நாசமாகப் படாதுன்னா. ஆனா ராஜா கேக்கலை. அவளைக் கழிச்சுண்டான். அவள் ராணியா வந்ததும் மொதக் காரியமா தன்னை ஏசிப் பேசின நம்பூதிரிகளையெல்லாம் துரத்தி அடிச்சா இப்பவும் பாருங்கோ நம்பூதிரிகளோட இல்லங்கள் பாலக்காட்ல இல்லே.

"நம்பூதிரிகள போயிட்டா, என்ன செயறது? ராணிக்கு பக்தி அதிகம். பூஜை புனஸ்காரமெல்லாம் உண்டு. ராஜாவுக்கும் வேத சாஸ்திர பண்டிதர்கள் இருந்

தாகனும்னு தோணித்து என்ன சேதான் தெரியுமா? கும்பகோணம், மாயவரம் மாதிரி உள்ள ஊர்கள்ளேந்து வேதம் படிச்ச பிராமணர்களை வரவழைச்சான். நிலம் கொடுத்தான். வீடு கொடுத்தான். வந்தவா ஒரு அக்ரஹாரத்தை உண்டாக்கினா. ராஜா சேகரவாமா பேர்ல மின்னு மின்னால் மொளைச்ச அக்ரஹாரம். அதான் சேகரிபுரம் அப்புறம் என்ன? மெள்ள மெள்ள திருச்சி, தஞ்சாவூர்ல இருந்து க்ஷீணிச்சுப போனவாளும் வியாபாரம் செய்ஞ்சு நாலு காசு சம்பாதிச்சுப் பொழைக்கலாங்கற ஆசை உள்ளவாளும், குடும்பம் குடும்பமா மூட்டை முடிச்சோட வரத் தொடங்கினா.

கோயமுத்தூர் வழியா வர சாத்தியமில்லை. வாளையார்க்காடு தடுத்தது. பயங்கரமான காடு. அதனால திண்டுக்கல், பழனி, பொள்ளாச்சி, வழியா வந்தா. கூடவே செட்டிமார்களும் சட்டிபானை உண்டாக்கிற குசவன் மார்களும் வரத் தொடங்கினா. வர்ற குடும்பங்கள் வழியிலே சின்னச் சின்ன அக்ரஹாரங்களை அமைச்சுண்டுது. அதாவது சித்தூர், நெம்மாளை, அய்யலூர், ஆலத்தூர், பெருங்குளம்னு நிறைய கிராமங்கள். ஹிஸ்டரியைப் படிச்சா இன்னும் ஒண்ணு தெரியும் விஜயநகர சாம்ராஜ்யம் அழிஞ்சு பாமினி சுல்தான்கள் வந்தப்ப வட ஆர்க்காடு, காஞ்சிபுரம் போல உள்ள ஊர்கள்ளேந்தும் பிராமணாள் வரத் தொடங்கினா.

''பாலக்காட்ல மின்னால தொண்ணூத்தாறுபிராமண கிராமங்கள் இருந்தது. கழுதை தேய்ஞ்சு கட்டெறும்பு ஆன மாதிரி இப்ப பதினெட்டுத்தான் இருக்கு. எல்லா கிராமங்களையும் நீங்கச் சுத்திப் பார்த்தா ஒரு விசேஷம் தெரியும் தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, மதுரை ஜில்லாக்கள்ளே தங்களோட கிராமங்கள்ல இருந்தப்ப என்ன இஷ்ட தெய்வம் இருக்கிறதோ அதே தெய்வத்தைத்தான் இங்கேயும் பிரதிஷ்டை பண்ணிக் கோயில் கட்டினா. வைத்தீஸ்வரன் கோயில்லேந்து வந்தவா இப்ப இருக்கிற

21202
374(781



கிராமம்தான் வைத்தியநாதன். குமரபுரத்தில கைலாசபதியான். சொக்கநாதபுரத்தில் மீனாக்ஷி சுந்தரேசுவரர். கல்பாத்தி, நூரணி திருநல்லாய், லட்சுமி நாராயணபுரம், கோவிந்த ராஜபுரம், எங்க ஊரு பள்ளிபுரம் எல்லாமே பதினெட்ல அடங்கும். தமிழ் நாட்ல இல்லாத இன்னொரு மகாப் பெரிய விசேஷம் என்ன தெரியுமா? இங்கே ஹரியும், ஹரனும் ஒண்ணுதான். தாங்க நாமம் போடறவா. இது மாதிரி எத்தனையோ கிராமங்கள்ளே நாமம் போடறவா உண்டு. சேகரிபுரத்தில சந்தனக் கீத்து, கல்பாத்தி குமரபுரம் சாத்தப்புரத்தில விபூதி. ஆனா எங்களுக்குள்ளே அய்யர் அய்யங்கார்ங்கற வித்தியாசம் இல்லை. என்ன சொல்றாய் மௌளி? நீ நங்கபுரம். விபூதி. ஒன் தங்கை அதான் என் மன்னி தங்கம்மாவும் இதோ ஒன் பொண் பாரதியும் இந்த ஊர்ப் பொண்களா வந்திருக்கா.

''ஒரு சரித்திர ஆராய்ச்சிக்காரன் எழுதியிருக்கான். இருநூறு வர்ஷத்துக்கு மின்னாலே பேருக்குப் பின்னாலே அய்யர். அய்யங்கார்னு போட்டுக்கலையாம். இன்னைக்கும் ஸ்ரீனிவாச சர்மா. ஸ்ரீனிவாச தீக்ஷித் அப்படின்னெல்லாம் வைஷ்ணவாளோட பேர் இருக்கு. வேணும்னா ஸ்ரீரங்கம் போய்ப்பாரு.''

மௌளி சிரித்தார்.

''வேதம் சொல்றதுக்குன்னு வந்தவங்க எப்படி எப்படியெல்லாம் ஆயிட்டாங்க சகஸ்ரம்.''

''ஆரு சொன்னா இப்ப வேத கோஷம் இல்லைன்னு? கல்பாத்திக்குப் போய்ப் பாரு அங்கே வேத பாராயணத்தை மாசக்கணக்கா நடத்திப்புட்டு கிராமம் கிராமமா வேதம் சொல்றவா போவா.''

''நிறையப் பேர் வியாபாரம் செய்யறாங்க.''

''என்ன தப்பு? தஞ்சாவூர்லேந்து எல்லா தரப்பட்ட மனுஷாளும் வந்தா. அவா அவா தங்களுக்கு ஏத்தபடி நடந்து கொண்டா. ஏன் மத்ததை மறந்துட்டாய்?

சகஸ்ரம்? பெரிய பெரிய வக்கீல்கள், ஜட்ஜுகள், சங்கீத வித்வான்களெல்லாம் இந்தப் பாலக்காட்ல பொறந்திருக்கா, ஒரு செம்பையையும் ஒரு மணியையும் ஆர் தந்தா? இன்னும் சொல்றதானா, தஞ்சாவூருக்கும் பாலக்காட்டுச்கும் ரொம்ப வித்தியாசம் ஒண்ணும் இல்லை. இங்கே நிலைச்சுப் போனதால நாங்க பேசற தமிழ் மலையாள வாசனையோட ஒலிக்கிறது. முக்காலே மூணு வீசம் பேருக்குத் தமிழ் எழுதவும் பேசவும் தெரியும். இந்த ஊருக்கு வராத தமிழ்ப் பத்திரிகை இல்லை.''

''பாலக்காடு மகாத்மியம் கேட்க நன்னாத்தான் இருக்கு. ஆனா இப்பவும் பெண்கள் வீட்டோடயே அடைஞ்சு கிடக்கறதாப் படறது'' என்றாள் சுசீலா.

''தப்பு. இப்பவெல்லாம் பொண்கள் கோலேஜுக்குப் போறா. கிட்டக்கேயே மெர்ஸி கோலேஜ் இருக்கு.''

ராஜி, ''வா பாரதி! நாம உள்ளே போவோம். உன் சித்தப்பாவுக்கு ஆரம்பிக்கத் தெரியும். முடிக்கத் தெரியாது!'' என்றாள்.

எல்லாரும் சிரித்தார்கள். சகஸ்ரமும் சிரிப்பில் கலந்து கொண்டு, 'மூணாம் காப்பியின் வேளை தாண்டியாச்சு'' என்றான்.

மாடியில் அம்மாவுடன் தனியாக இருக்கும் வாய்ப்பு பிறந்தது. பெண்ணின் கண்கள் கனத்துக் கிடப்பதைக் கண்டாள் சுசீலா.

''என்னம்மா, பாரதி... என்னாச்சு?''

பாரதி மெல்லக் கேவலானாள்.

''மாப்பிள்ளை ஏதானும் சொன்னாரா?''

இல்லை என்று பாரதி தலையாட்டினாள்.

''தங்கம்மா?''



மீண்டும் தலையாட்டல்.

''நேத்து ராத்திரி.''

''அதான் அழறியா?''

முதன் முதலாக அம்மா மீது பாரதிக்குக் கோபம் உண்டாயிற்று.

''எம்மா என்னை இவ்வளவு மட்டமா எடை போட்டுட்டியே?'' என்றாள் அழுகையினூடே.

''அப்ப விஷயத்தைச் சொல்லு.''

''எனக்கு ஒண்ணுமே பிடிக்கலேம்மா.''

''டில்லியில் பொறந்து வளர்ந்துட்டே, அதான் உனக்கு.''

''இடம். சுத்துப்புறம் எல்லாமே மனசுக்குக் கசப்பா இருக்கு அம்மா.''

''எல்லாம் போகப் போகச் சரியாயிடும் பாரதி...உன் அத்தையைப் பாரேன்.''

''அது வேற யுகம் அம்மா.''

''யுகம் மாறினாலும் மனுஷாளோட மனசுகள் மார்றதில்லை பாரதி. நாகரிகம் மாத்திரம்தான் மார்றது. ஆனா அது மட்டும் வாழ்க்கை இல்லை. ஈசுவரனும், நாராயணனும் நல்லவா, இந்த சகஸ்ரத்தைப் பாரேன். நம்மை வேத்து மனுஷாளாவே பாவிக்கறதில்லை.''

''நான் என் இஷ்டப்படி இருக்க முடியாது போலிருக்கு.''

''உன் இஷ்டப்படின்னா?''

''நெனச்சப்ப தூங்கி எழுந்து, நெனைச்சப்ப குளிச்சுச் சாப்பிட்டு நெனைச்சப்ப...''

''போதும் பாரதி...'' என்று கோபமாய் ஆரம்பித்த சுசீலா சாந்தமாக மாறி, ''ஓரளவுக்கு உனக்கு எல்லா சுதந்திரமும் புகுந்த வீட்ல நிச்சயம் கிடைக்கும். ஆனா பிறந்த வீட்ல ஆடின மாதிரி ஆட முடியாது. ஆட ஆசைப் படவும் கூடாது. உன்னை அவா தங்க வீட்டு பொண்ணாத்தான் மதிப்பா. ஓர் அடிமை மாதிரி இல்லை'' என்றாள்.

''நான் டில்லிக்கே...''

மீண்டும் கோபம். அது சாந்தமாக மாறவில்லை.

''மூடு வாயை நீ எம் ஏயும், எம்ஃபில்லும் படிச்சு என்ன புண்ணியம்? இது என்ன சிலேட்ல எழுதி அழிக்கற கதையா? பழசில மனசை ஊறப் போடாம, கிடைச்சிருக்கற வாழ்க்கையை எப்படி சௌகரியமா அமைச்சுக்கறதுங்கறதில கவனம் செலுத்து இங்கே உனக்கு ஒரு குறையும் இல்லே. பொல்லாத மாமியாரோ எரிஞ்சு விழற புருஷனோ உனக்கு இல்லை'' என்றாள் சுசீலா.

இப்போது பாரதிக்குத் தன்னுடைய பிரச்சினையே என்ன என்று புரியாமற் போயிற்று. மேலும் அம்மாவிடம் பேசுவதில் அர்த்தமில்லை என்று நினைத்தாள்.

அன்று மாலை அம்மாவும், அப்பாவும் நங்கவரம் செல்ல ரயில் ஏறினார்கள்.

''நீ வேணும்னா ஸ்டேஷனுக்குப் போயிட்டுவா, பொண்ணே!'' என்றார் ஈச்சா.

''நான் போகலே, மாமா.''

''நீ வண்டி பொறப்படறப்ப கண்ல வெள்ளம் வரும். அதை நாலு பேர் பார்த்துச் சிரிப்பான்னு பயப்படறியோ?'' என்று ஈசுவரன் சொல்லிச் சிரித்தார்.

கோயிலில் தீபாராதனை ஆரம்பமாகப் போவதை அறிவிக்க மேளம் ஒலித்தது,



''வாடி பாரதி. கோயிலுக்குப் போவோம்'' என்றாள் தங்கம்மா.

மௌனமாய்ப் பின் தொடர்ந்தாள்.

''நாம இருக்கிறது ரெட்டைத் தெரு. கோயிலைச் சுற்றியுள்ள தெருக்களெல்லாம் ஒத்தைத் தெரு. இடப் பக்கமா நேராப்போனா குளம் இருக்கு. அதுக்கு முன்னால அரசமரம். அதன்கீழே பிள்ளையார் குளத்தைச் சுத்திட்டுப் போனா ஒரு சின்ன சிவன் கோயில். குளத்தில் பெண்கள் குளிக்கறதுக்குன்னு தனியா ஒரு துறை உண்டு. நான் வந்த புது சில என் மாமியார் என்னை அழைச்சுண்டு போவா இங்கேஎல்லாப் பெண்களுக்குமே நீச்சல் தெரியும். நீயும் நீந்தப் பழகணும்னு மாமியார் சொல்லி என்னை ருக்மணிட்டே விட்டா. நாலு நாள்ளே நான் நீஞ்சத் தெரிஞ்சுண்டேனே... அதோ தீபாராதனை ஆரம்பிச்சாச்சு பாரு.''

பாரதி பார்த்தாள்.

பெரிய சரதீபம், சிறிய சரதீபம் சங்கு தீபம் என்று ஆராதனை. டில்லியில் பாரதி ஹனுமான் மந்திர் போயிருக்கிறாள். பிர்லா மந்திர் போயிருக்கிறாள். பக்தி உணர்ச்சி ஏற்பட்டதே இல்லை. இங்கே எல்லோரும் கண்களை மூடி, கை கூப்பி 'நாராயணா' என்று வணங்குகிறார்கள். மாமியாரும் அவர்களைப் போல. பாரதியின் கரங்கள் தாமாக வந்து சேர்ந்தன. என்ன வேண்டிக் கொள்ளுவது என்றுதான் புரியவில்லை.

''இங்கே லட்சுமி நாராயணன் பள்ளி கொண்டிருக்கிறார் ஒரு பக்கம் ஸ்ரீதேவி இன்னொரு பக்கம் பூதேவி அதோ ஒரு நடை தெரியறதே... அங்கே சாஸ்தாவைப் பிரதிஷ்டை பண்ணியிருக்கு...''

தங்கம்மா பயணிகளின் வழிகாட்டி போலப் பேசிக் கொண்டே போனாள்.

திரும்பி வருகையில் இரு புறமும் பார்த்துக்கொண்டே பாரதி நடந்தாள். ஒன்றை ஒன்று தொட்டு முத்தமிட்டுக் காட்சி அளித்த வீடுகள். சிலவற்றில் திண்ணைகளுக்குக் கம்பி அழிகள் இருந்தன. சில மூளியாகக் கிடந்தன.

''நான் வந்த புதுசில் கிராமமே ஜேஜேன்னு இருக்கும். முக்கால்வாசிப் பேர்களும் ஞாதிகள். ஆண்களோட பிறந்த நாள் வந்துட்டாப் போதும் ஆயுஷ்ஹோமம் தடபுடலா நடக்கும். விருந்தை ஸத்தின்னு சொல்லுவா. அதில் பால் பாயசம் இருந்தாகணும். பால் பாயசத்துக்குச் செல்லமா சொல்ற பெயர் என்ன தெரியுமா, பாரதி? ராஜா! ஒரு வீடு பாக்கி இல்லாம அழைப்பா. இலை போட்டதும் ரெண்டாம் தடவை அழைப்பு. யார் வீட்டிலேயும் அடுப்பு எரியாது. எல்லாரும் போவோம்...இப்ப? எல்லாம் பெருங் காயம் வைச்ச சொப்பு. ஏதோ தெய்வத்தோட கருணையில நம்ப குடும்பம் கஷ்டமில்லாம ஓடறது...''

மௌனமாகக் கேட்டுக்கொண்டே வந்த பாரதிக்கு அலுத்தது. இருந்தும் புன்னகையை விட்டுக் கொடுக்காமல் காதில் வாங்கிக் கொண்டாள்.

வீட்டுக்குள் கால் வைத்ததுமே நாயாணனுடைய குரல் கேட்டது.

## 5

கிராமத்து வீடுகளில் திண்ணையைத் தொடர்ந்து ரேழியும், ரேழிக்கு அப்பால் முன் தாழ்வாரமும் இருக்கும். முன தாழ்வாரத்தின் ஆரம்பத்தில் ஐந்து அல்லது ஆறு அடி சதுரத்தில் ஒரு மேடை கட்டப்பட்டிருக்கும். சாதாரணமாக இந்த மேடை மீதுதான் அலமாரிகள் வைக்கப் பட்டிருக்கும். மீதமுள்ள இடத்தில் காலைக் குறுக்கிப் படுத்துக்கொள்ளலாம். தூண் மீது சாய்ந்து சௌகரியமாக உட்காரவும் செய்யலாம்.



பாலக்காட்டுப் பாஷையில் சொல்லுவது என்றால் இந்த மேடையின் பெயர் தரை மேல்தரை.

இதன்மீது தூணில் சாய்ந்து கண்களை மூடியவனாய் நாராயணன் காலை நீட்டி உட்கார்ந்து ஊஞ்சலில் அமர்ந்திருந்த பாட்டியின் கேள்விகளுக்குப் பதில் கூறிக் கொண்டிருந்தான்.

''கோந்தே, நம்பளோட தொடியில மாங்காய் நந்நாக் காய்ச்சிருக்கோடா?''

''தோஷமில்லை பாட்டீம்மா.''

''இந்நைக்கு கார்த்தால எர்ணாகுளம்தானே போனாய்?''

''ஆமாம்.''

''செல்லப்பா ஆத்துக்குப் போனாயோ?''

''சமயம் கெடக்கலை.''

'கெடைச்சாலும் போகண்டாம். என்கூடப் பொறந்த தம்பின்னு பேரு. மாசத்துக்கு ஒரு பிராவசியம் பொண்ணைக் காண கல்பாத்திக்கு வரான். ஒருக்காக்கூட என்னையும் ஒன பாட்டாப்பாவையும் காண வர்றதில்லை. அதா ஒன் அம்மையும், பாரதியும் வர்றா.''

''எப்ப வந்தாய்?'' என்று கேட்டாள் தங்கம்.

''காமணிக் கூறாச்சு.''

''இப்ப ஏது வண்டி? '

''மாதவன் நாயரோட கார்ல வந்தேன்?''

''பாரதி! நாணாவுக்கு சாயைப் போட்டுக்குடு'' என்றாள் பாட்டி.

''வேண்டாம். நான் குளிச்சுச் சாப்பிடப் போறேன்... அம்மா பப்படாம் காய்ச்சறயா?''

"நீ மின்னால குளிச்சுட்டு வா" என்ற தங்கம் சமையலறையை நோக்கி நடந்தாள்.

நாராயணனும் எழுந்தான்.

ஓரிரு நிமிடங்கள் நாராயணன், தங்கம்மா மற்றும் பாட்டியை மௌனமாகப் பார்த்து நின்ற பாரதிக்கு அவனிடம் ஏதாவது பேச வேண்டும் என்று தோன்றியது. பொய்மையான உபசார வார்த்தைகள் பேச அவளுக்குப் பிடிக்கவில்லை. இப்போது பேச என்ன இருக்கிறது? இந்தக் கேள்வியும் பிறந்தது. அவளுடைய உள்ளத்தில் மேலோங்கிக் கிடக்கும் பிஎச்.டி ஆசையை வெளியிட இது நேரமல்லை. அவள் மௌனமாக நிற்க, நாராயணன் அவளைப் பார்த்துப் புன்முறுவலித்து விட்டுக் குளியலறையை நோக்கி நடந்தான்.

கூடத்தில் ஒரு சாப்பாட்டு மேஜை இருந்தாலும், சமையலறையில் உட்கார்ந்து சாப்பிடுவது என்ற வழக்கத்தைப் பல ஆண்டுகளாகக் கொண்டிருந்த நாராயணன் கீழே உட்கார்ந்தான்.

"பாரதி! நீ பரிமாறு" என்றாள் தங்கம்மா.

"வேண்டாம்மா... நீயே போடு... எதெது எங்கங்கே இருக்குன்னு அவளுக்கு இன்னம் மனசிலாயிருக்காது "

பாரதிக்குச் சீற்றம் வந்தது. தன்னை நாராயணன் அலட்சியப்படுத்துகிறான் என்ற எண்ணம் பிறந்தது.

"அவளுக்கு நீ எல்லாம் நந்நா சொல்லிக் கொடு. இன்னும் ஒரு மாசத்துக்குள்ளே மொளகூட்டல், பச்சடி கிச்சடி, தோரன், எல்லாம் அவளே செய்யும்படியா டியூஷன் கொடு."

"நீ இப்ப சாப்பிடுடா, கோந்தே."

சாப்பிட்டப் பிறகு நாராயணனே தட்டை எடுத்துக் கொண்டுபோய்த் தேய்த்துக் கழுவினான்.



"சின்ன வயசிலிருந்தே அவன் இப்படித்தான். என்னை எடுக்க விடமாட்டான்..." என்றாள் தங்கம்மா.

பாரதி பதில் கூறவில்லை.

"ஆனா இனிமேல் நீ அவன் சாப்பிட்ட தட்டை அலம்பி வைக்கணும்."

பாரதி மௌனமாய் மாமியாரைப் பார்த்தாள்.

"உன் மாமனார் சாப்பிட்டத் தட்டில்தான் நான் சாப்பிடற வழக்கம்."

"எச்சில் தட்டிலேயா?"

"என்ன தப்பு!"

"தப்பு ரைட்டுன்னு சொல்லலே அத்தே... என்னதான் கட்டின புருஷன்னாலும் எச்சில் எச்சில்தானே?"

"நீ டில்லியிலே ஓட்டல்லே சாப்பிட்டிருக்கே! டீ காப்பி குடிச்சிருக்கே, இல்லையா?"

"அதுக்கென்ன அத்தே?"

"ஆயிரக்கணக்கான பேர் சாப்பிட்டத் தட்டுகள்ளேயும் டம்ளர்கள்ளேயும் தானே நீயும் சாப்பிட்டிருக்கே, பாரதி?"

"க்ளீனா அலம்பித்தானே வைக்கிறா?"

"ஓட்டல் தட்டு எவ்வளவு க்ளீனா இருக்கும்னு எனக்குத் தெரியும்... ஆம்படையானும், பொண்டாட்டி உதட்டை அழுத்தி முத்தம் கொடுத்துக்கறப்ப ரெண்டு பேருடைய எச்சிலும் சங்கமம் ஆகலாம்னா ஆம்படையான் சாப்பிட்ட தட்லே பொண்டாட்டி சாப்பிடறது தப்பு இல்லை. ரெண்டு பேரும் ஒண்ணுன்னு காட்டத்தான் அநாதிகாலமா இந்தப் பழக்கம் ஏற்பட்டிருக்கு."

"முதல்ல பெண்டாட்டி சாப்பிட்டுட்டா அந்தத் தட்லேயே புருஷன் சாப்பிடுவானா, அத்தே?"

"இது குதர்க்கம் பாரதி. இந்தப் பரம்பரையிலே ஆம்படையானுக்கு மின்னால பெண்டாட்டிசாப்பிட்டதா சரித்திரம் இல்லை."

"நீங்க சொல்றது எனக்கு நியாயமாப் படலே அத்தே... பசி, வயறோட சம்பநதப்பட்ட விஷயம். அதுக்கும் இன்னொருத்தரோட வய்த்துப் பசிக்கும் சம்பந்தமில்லை."

தங்கம்மா பதில் பேசவில்லை. பாரதியும் தன் பிடியை விட்டுக் கொடுக்கவில்லை.

அன்று இரவு அவள் மாடி அறைக்குள் பிரவேசித்த போது மணி ஒன்பதரை. கட்டிலை விட்டுச் சற்றுத் தள்ளி தரையில் ஒரு பாயின்மீது நாராயணன் வலது காலை இடது காலின் மீது போட்டுப்படுத்து, ஒரு ஃபைலைப் படித்துக் கொண்டிருந்தான். அவளுடைய வருகையை உணர்நத அவன்,

"நீ கட்டில்லே படுத்துத் தூங்கு பாரதி" என்றான்

"ரெட்டைக் கட்டில்லே ரெண்டு பேர் படுத்துக்கத் தலையணை இருக்கு போலிருக்கு."

"என்னால கொசு வலைக்குள்ளே அடங்கிக் கிடக்கக் கழியாது, பாரதி."

"உங்க இஷ்டம்."

"நமக்கு ஃபர்ஸ்ட் நைட் இன்னும் பொறக்கலே... என் மண்டைக்குள்ளே ஆயிரம் பிரச்னை இருக்கு."

"நான் ஆயிரத்தோராவது பிரச்னை"

"என்ன சொல்றாய் பாரதி?"

கையிலிருந்த ஃபைலை அருகே வைத்து விட்டு நாராயணன் நிமிர்ந்து உட்கார்ந்தான், அவளை ஊடுருவிப் பார்த்தான்.



"இந்த ஆயிரத்தோராவது பிரச்சினைக்கு ஒரு சின்ன ஆசை."

"சொல்லு. ஹனிமூன்னா அது எனக்குப் பிடிக்காது கோவா பீச்ல ஓடறதும் சாடறதும்கட்டிப்பிடிச்சுக்கறதும். தான் ஹனிமூன்னா அது நேக்கு ஆவசியம் இல்லை."

"நான் ஹனிமூனைப் பத்தி நினைக்கவேயில்லை."

"பின்னே என்ன வேணம், சொல்லு?"

"நீங்க அடுத்த தடவை எப்ப எர்ணாகுளம்போவீங்க கோழிக்கோடு போகிற சான்ஸ் உண்டா?"

"என்ன வேணம்? அதைச் சொல்லு."

"யூனிவர்சிட்டியிலிருந்து அப்ளிகேஷன் பார்ம்ஸ்."

"பிஎச்.டியா?"

"யெஸ்"

"மேலே'படிக்கணும்னு உனக்கு நம்ப கல்யாணத்துக்கு மின்னாலேயே உத்தேசம் இருந்தது, இல்லையா?"

"அது...அது..."

"இதப்பாரு பாரதி, நான் ரெண்டு மூணு பிராவசியம் உங்கிட்டேச் சொன்னேன், நந்நா ஆலோசிச்சு டிஸைட் பண்ணுன்னு... நான் ஒனக்கு ஏத்த ஆம்படையான் இல்லைன்னு ஒன் அம்மா அப்பா மின்னாலேயே சொன்னேன். நீயும் ஒன் அப்பா அம்மாகூட உள்ளே போய் என்னமோ பேசிண்டேள். அதுக்கு அப்றம்தான் நீ வந்து என் அம்மைட்ட சம்மதம்னு சொன்னாய்...

"இதையெல்லாம் நான் மறுக்கலே நாராயணன்."

"ஆம்படையானைப் பேர் சொல்லிக் கூப்பிடறது சில இடங்கள்லே நாகரிகமாக இருக்கலாம். நாம ரெண்டு பேரும் சமம்ங்கறதை நான் ஏத்துக்கறேன். ஆனா இந்த நாகரிகம் நேக்குப் பிடிக்கல்லே...

"பின்னே எப்படிக் கூப்பிடறது?"

"என் பாட்டீம்மா பாட்டப்பாவை எப்படிக் கூப்பிடறான்னு பாரு, என் அம்மை அப்பாவை எப்படிக் கூப்பிடறான்னு கவனி."

"நீங்க அமெரிக்கா போய் வந்தவர், முற்போக்கா இருப்பீங்கன்னு நினைச்சேன்."

'நான் படிக்கத்தான் அங்கே போனேன்! ஃபேஷனைக் கத்துக்க இல்லை. மனுஷன் எங்கே போயிருந்தாலும் மனுஷனாகத்தான் திரும்பி வரணும். நான் ஒரு மனுஷன்· இந்த பாரதத்திலே, கேரள பூமியிலே ஜனிச்ச மனுஷன். இந்த மண்ணோட மணம்தான் என் சோரியில-அதான் ரத்தத்தில் இருக்கும்."

"சில சமயங்கள்லே-மணத்துக்கு பதிலா நாத்தமும் வர்றது."

"மணமும், நாத்தமும் மோந்து பாக்கற மூக்கைப் பொறுத்திருக்கு."

"நமக்குள்ள ஆரம்பத்திலேயே தகராறு. இது அவசியம்தானா?"

"சபாஷ்! நந்நாப் பேசறாயே? ஆரம்பிச்சது நீ...நான் உத்தரம்தான் சொன்னேன்."

"உங்க அப்பா சொன்னார். பாலக்காட்லேந்து ரெயில் ஏறினா மூணு மணி நேரத்தில கோழிக்கோடு. இல்லாவிட்டால் எர்ணாகுளம் போய்ச் சேரலாம்னு, அங்கேதான் யூனிவர்சிட்டி இருக்குன்னும் சொன்னார்!"

"கரெக்டாத்தான் சொல்லியிருக்கார்."

"எதை மனசிலே வைச்சுட்டு அதை அப்படிச் சொன்னார்? நான் மேலே படிக்க ஆசைப்பட்டா படிச்சுக்கலாம்னுதானே?"



"நிச்சயமா மேலே படிக்க வைக்கிறோம்னு என் அப்பாவும் சொல்லலை, நானும் சொல்லலை."

"வெறும் எம்ஃபில் ஒரு ரெண்டுங்கெட்டான். பட்டம்."

"உன்னாலே ஏன் மின்னாலேயே பிஎச்டி சேர முடியலை? அதைச் சொல்லு."

"அம்மாவுக்கு இஷ்டமில்லை. அப்பாவோட நிதி நிலைமை சரியா இல்லை."

"உன்னாலே இப்ப எங்கிட்ட வார்த்தைக்கு வார்த்தை யுத்தம் செய்ய முடியறது. ஆனா உன் அம்மா அப்பாவை எதிர்த்து ஜெயிச்சு காரியத்தைச் சாதிச்சுக்கக் கழியலை, அல்லவா?"

"எப்படி ஜெயிக்க முடியுமாம்?"

"ஏன் முடியாது? எம்ஃபில் படிச்சவள் ஒரு கோலேஜ்ல லெக்சரராச் சேர்றது. வேலையிலே இருந்துண்டே, பிஎச்டிக்கு தீஸிஸ் தயார் செய்யறது."

"அப்படிச் செய்யத்தான் நெனைச்சு டில்லியிலேயே தொடர்ந்து இருக்கலாம்னு திட்டம் போட்டேன் ஆனா அப்பா அழாத தோஷமாகக் கெஞ்சினார். நங்கவரம் வந்ததும் அம்மா கண்டிப்பும் கறாருமா இருந்தா..."

"நீ சொல்றதிலேந்து ஒண்ணு நந்நாத் தெரியறது."

"என்ன அது?"

"உனக்கு வாய்த் திமிர் இருக்கிற அளவுக்கு முதுகெலும்பு இல்லைன்னு."

"நான் சென்ஸ்."

"நான் இப்பப் பேசறது உனக்கு நான்சென்சாத்தான் தெரியும். உண்மையான லட்சிய வெறியும், பிஎச்டி பாஸ் பண்ணி தம்பேருக்கு முன்னாலே 'டாக்டர்'னு போட்டுக்கணும்ங்கற தீவிரமும் இருந்திருந்தா நீ உன்

கழுத்தை எனக்கு நீட்டியிருக்க மாட்டே...அப்பாகிட்டே நிதி வசதி இல்லை. ஆனாப் போற எடத்திலே நெறய இருக்கு. அது மூலமா பிளச்டி வாங்கலாம்னு நீ பிளான் போட்டே...ஒண்ணு நீ கழுக்கு ஆசைப்படு. இல்லாட்டா மீசைக்கு ஆசைப்படு. ரெண்டு ஆசையும் வைச்சுண்டா நீ தவிச்சுப் போவே."

"அப்ப உங்க முடிவு?"

"இந்த ஆத்துக் காசிலேந்து நீ எத்தனை வேணும்னாலும் கேளு தரேன். புடைவை, நகை எது வேணம்னாலும் வாங்கிக்கோ...ஆனா செம்பாலடிச்ச காசு...ஒரு காசு. நான் உன்னோட பிளச்.டிக்காகத் தரமாட்டேன்."

"அப்ப நான் இந்த கிராமத்திலேயேதான் ஜன்மம் பூராவும் சிறைப்பட்டுக் கிடக்கணுமா?"

"இது ஒரு கிராமம், சின்ன ஊர்ல ஒரு சின்ன கிராமம் இதெல்லாம் தெரிஞ்சுதானே சம்மதம் சொன்னாய்? இங்க வந்தப்புறம் பிளச்.டிக்கு ஓடலாம்னு பிளான் பண்ணியிருக்காய்னு அப்ப நேக்கு ஸ்பஷ்டமாத் தெரியாது. உன் பிளான் நடவாது."

"அப்ப நான் என்னதான் செய்யறதாம?"

"என் பாட்டிம்மா செயறதைச் செய் என் அம்மை செய்றதைச் செய்."

"சுத்தப் போர்."

"இந்காத்துக்கு இந்தக் குடும்பத்துக்குப் புதுசா வந்திருக்கிற பொண்ணாத்தான் ஊர்ல உள்ள அத்தன பேரும் நெனைக்கறா...ஆனா உனக்கு அப்படித் தோணலை. தப்பு உன் பேர்ல இல்லை. எல்லாம் இதுவரை பார்க்காததா இருக்கு. வீடுகள், மனுஷாள், சுத்துப்புறம் எல்லாமே புதுசு. நீ கொஞ்சம் கொஞ்சமா மனசு வைச்சா நோக்குப் பத்திப் போயிடும். கொஞ்சம்



கொஞ்சமாய் பிடிக்கவும் செய்யும். அப்றம் இந்த ஊர் மாதிரி உண்டான்னு நீயே நாலு பேர்ட்ட சொல்லுவே."

"அது இந்த யுகத்தில் நடக்காது."

"நீ மனசு வைச்சா நடக்கும், பாரதி."

"அப்ப என் பிளச்டி?"

"நடக்காது. இந்தாத்திலே நீ என் ஒய்ஃபா இருக்கற வரைக்கும் என் அப்பா, அம்மைக்கும்மாட்டுப்பொண்ணா இருக்கற வரைக்கும் நடக்காது."

"நீங்க இவ்வளவு நேரமா, இவ்வளவு அழுத்தமாப் பேசினாலும், ஏன் உங்க குரல்லே கோபம் ஒலிக்கலே? உங்க பார்வையிலே கோபம் தெரியலே..."

"நான் ஒரு மனுஷன். வார்த்தைகள் மூலமா கோபத்தைக் காட்டினா என்ன புண்ணியம், பாரதி? எதிராளியின் மனசிலே படும்படியாய் பேசிட்டாப் போதும். கோபம் மனுஷனோட வீக்னஸ்...ஓரளவுக்கு நான் அதை, இந்த பலவீனத்தைக் குறைச்சுக்கப் பார்க்கறேன்..."

"நீங்க சிறந்த மனுஷனா இருக்கலாம் ஏன் இருக்கிங்க...ஆனா நான் ஓரளவு மறைவு இல்லாமச் சொல்லிடறேன். நீங்க எனக்குச் சிறந்த புருஷனா இருக்க முடியாது."

நாராயணன் சிரித்தான்.

"உன்னை நான் ஒரு நல்ல சிறந்த மனைவியா மாத்திக் காட்டறேன். பாரதி. என்னை உனக்கேத்த புருஷனா மாத்த நீ ட்ரை பண்ணு."

"போகாத ஊருக்கு நான் என்னிக்குமே டிக்கெட் வாங்க மாட்டேன்."

"ஆனா பிளச்டி டிக்கெட் கவுண்ட்டர்ல ரொம்ப நேரமா நிக்கறாய்."

''அது நான் நிச்சயமாய்ப் போகிற ஊர்.''

''டிக்கெட் கொடுக்கத்தான் கவுண்டர் கிளார்க் வர மாட்டான்.''

''வரவழைக்கிறன்.''

''விஷ்யூ ஆல் தி பெஸ்ட். குட் நைட்.''

படுக்கை அறையில் விளக்கு அணைந்தது. மெலிதான குறட்டை ஒலி நிசப்தத்தில் பயங்கரமாகக் கேட்கிறது என்பதை உணராமல் நாராயணன் உறங்க, கட்டிலில் கிடந்த பாரதி தூக்கம் வராமல் தவித்துக் கொண்டிருந்தாள்.

நாலா புறங்களிலிருந்தும் பி எச். டி அவளைத் தாக்கியது. அவள் பொருமினாள். ஆவேசப்பட்டாள். உள்ளூற அம்மா, அப்பாவைச் சபித்தாள். தன்னுடைய தற்போதைய இயலாமையை நினைத்து வெகுண்டாள். தான் ஒரு கட்டிப் போடப்பட்ட மிருகமாகிவிட்டதாகக் கற்பனை செய்து கொண்டாள்.

மனத்தின் உணர்ச்சிச் சுமை அதிகமாக அதிகமாக உடல் தளர்ந்தது. கை கால்கள் சோர்ந்தன. கண் இமைகள் தாமாக மூடிக்கொண்டன.

அவளுக்கு எப்போது உறக்கம் பிடித்தது என்பதை அறியாள்.

ஆனால் காலையில் கண் விழித்தபோது மணி என்ன என்று சுவர்க்கடிகாரம் உணர்த்தியது.

ஒன்பது அடித்து இருபது நிமிடங்கள். வெட்கத்தில் கால்கள் தயக்கத்துடன், உடல் சற்றே கூனிக்குறுகிய தோற்றத்தில் மனம் குற்றம் செய்துவிட்ட தான உணர்வில் செயல்பட—

பாரதி மாடிப் படிகளில் இறங்கினாள்.



முன் தாழ்வாரத்துக்குத் தரை மேல்தரையில் தாத்தா உட்கார்ந்திருக்க, முற்றத்தின் அருகே தூணில் சாய்ந்தவளாய்ப் பாட்டி அமர்ந்திருக்க, மாமனார் ஈஸ்வரன் ஊஞ்சலில் ஆடியிருக்க, அவள் எல்லோரையும் கடந்து குளியலறையை நோக்கி நடந்தாள். போகும் வழியில் மாமியாராகிவிட்ட அத்தை தங்கம்மா நின்றாள்.

யாரும் அவளுடன் எதுவும் பேசவில்லை.

அவள் சமையலறைக்குள் பிரவேசிக்கக் கால் வைக்க இருக்கையில்—

''ஒரு நிமிஷம்!''

''என்ன அத்தே?''

''குளிக்கறதுக்கு முன்னாலே சமையலறைக்குள் வர்றது இந்த வீட்டு வழக்கமில்லே...உன பாஷையிலே சொல்றதானா எச்சில் உள்ளே வரப்படாது.''

அத்தையின் வாயிலிருந்தா இப்படிப்பட்ட வார்த்தைகள் வருகின்றன?

மனத்தில் ரௌத்திரம் பொங்க பாரதி தங்கம்மாவின் கண்களைச் சந்திக்க நிமிர்ந்தாள்.

அதற்குள் தங்கம்மா உள்ளே போயவிட்டாள்.

ஓரிரு நிமிடங்களுக்குப் பிறகு ஒரு தம்ளர் காப்பி வாயிற்படிக்கு வந்தது.

எடுத்தாள்.

காப்பி கொதித்தது.

பாரதிக்கு காப்பி மட்டும் கொதிக்கவில்லை. வீடே கொதித்தது.

# 6

ஒன்று மட்டும் பாரதிக்கு நன்றாகப் புரிந்தது. அதிகாலையில் எழுந்திராமல் ஒன்பது மணிக்கு மேலேயும் அவள் தூங்கியதை யாரும் ரசிக்கவில்லை. மௌனமான கோபத்தில் எல்லோரும் தங்கள் அதிருப்தியைக் காட்டுகிறார்கள். அவர்களில் யாராவது ஒருவர் வாய் வார்த்தையால் கடிந்து கொண்டிருந்தால் அவளால் பதில் சொல்லியிருக்க முடியும்.

டில்லியில் அவள் சிறு வயதிலிருந்தே இரவு நீண்ட நேரம் கண் விழித்துவிட்டு, காலையில் எட்டு அல்லது எட்டரை மணிக்குத்தான் கண்விழிப்பாள். குளிர் காலத்தில் கேட்கவே வேண்டாம். கம்பளியிலும், ரஜாயிலும் ஒடுங்கிக் கொண்டு தூங்குவதில் ஒரு தனி சுகத்தை அனுபவித்த அவள், அப்பா மௌலியுடன் போட்டி போடுவாள். பத்து மணிப் பள்ளிக்கு அவசா அவசரமாகப் புறப்படும்போது, ஏன் காலையில் இன்னும் முன்னதாக எழுந்திருக்கவில்லை என்ற எண்ணம்கூட வராது. அப்பா அவளை லோடி காலனியில் உள்ள பள்ளிக்கு முன் இறக்கிவிட்டு, ஸ்கூட்டரிலோ, காரிலோ பறப்பார். கல்லூரி நாட்களில் கேட்கவே வேண்டாம். அவளுக்குச் சாயங்காலம் ஆரம்பிக்கும் கல்லூரியில்தான் இடம் கிடைத்தது. அம்மாவுக்கு இதில் ஓர் ஏமாற்றம் இருந்தாலும் அவளுக்கு ஒரு திருப்தி. காலைக் கல்லூரி எட்டுமணிக்குத் துவங்கும். தூக்கத்துக்கு அது ஒரு தடை அல்லவா?

பல வருடப் பழக்கத்தை அவளால் சட்டென்று திருத்திக் கொள்ள முடியவில்லை. இவ்வளவுக்கும் கடந்த சில ஆண்டுகளாக அம்மா பலமுறை எச்சரித்திருக்கிறாள். பிறந்த வீட்டுச் சுகசௌகரியங்கள் புகுந்த வீட்டில் கிடைக்காது. அவள் தன்னைத்தானே மெல்ல மெல்ல மாற்றிக் கொள்ள வேண்டும் என்று அம்மா உபதேசம் செய்திருக்



கிறாள். பாரதி காதிலேயே வாங்கிக் கொண்டதில்லை. எம்ஃபில் படிப்பைப் பற்றி அம்மாவுக்கு என்ன தெரியும்? இருபதாம் நூற்றாண்டு இலக்கிய கர்த்தா ஒருவர் எழுதிக் குவித்த நூல்களையெல்லாம் ஒரு முறைக்குப் பல முறையாக ஊன்றிப் படித்து, குறிப்புகள் எழுதி அவ்வப்போது பேராசிரியரிடம் காட்டவேண்டும். இருபத்து நாலு குடியிருப்புகளைக் கொண்ட ஓர் அடுக்கு மாளிகையில் தீப்பெட்டி போன்ற ஒரு வீட்டில்வாழ்க்கை. நாலா பக்கங்களிலிருந்தும் இரைச்சல். தமிழ், மராத்தி, ஹிந்தி, பஞ்சாபி என்று அரசியல் சட்டத்தில் இடம்பெற்ற எல்லா மொழிகளும், எல்லா வீடுகளிலிருந்தும் கிளம்பி வெடித்து ஓயும். இரவு பத்து மணிக்கு மேல்தான் ஓரளவு நிசப்தம் கிடைக்கும். டி எச். லாரென்ஸ் எழுதிய நூல்களை அவள் தன் ஆய்வுக்கும், ஆராய்ச்சிக்கும் எடுத்துக் கொண்டாள். எத்தகைய கடினமான இலக்கியம் என்று தெரிந்து கொள்ளப் பல நாட்களாயின. லாரென்ஸ் பற்றி நன்றாக அறிந்து கொள்ள அவரைப் பற்றி வெளி வந்த பல நூல்களைச் சர்வகலாசாலை நூலகத்திலிருந்தும், பிரிட்டிஷ் கவுன்சிலிலிருந்தும்சிரமப்பட்டு வாங்கி, குறித்த நாளன்று திருப்பிக் கொடுத்தாக வேண்டும். கவனமாக சிரத்தையுடன் படித்துத் திருப்தியுடன் தீஸிஸ் எழுத பகல் நேரம் சரியாக அமையவில்லை. மேலும் தினசரி சர்வகலாசாலைக்குப் போக வேண்டும். நூலகங்கள் செல்ல வேண்டும். என்ன செய்ய முடியும்? இரவுதான் அவளுக்குப் பகல்

இப்போது இந்தப் பாலக்காட்டில் ஒரு வீட்டுக்குள் புக வேண்டிய நிர்ப்பந்தம் அவளுடைய மதியீனத்தாலோ பெற்றோரின் பிடிவாதம் காரணமாகவோ அல்லது விதி வசத்தாலோ ஏற்பட்டு விட்டது. முதல் இரவு அன்று அகஸ்மாத்தாக அவள் கண் விழித்தபோது அதிகாலையாக இருந்தது. அத்தை அதைப் பாராட்டியிருக்க வேண்டும் அதனால்தான் பாரதியின் நெஞ்சு நெகிழ

தங்கம்மா பேசினாள். இரண்டாவது இரவு அவளால் சிந்தனைச் சிக்கல்களிலிருந்து எளிதாக விடுபட முடிய வில்லை, நீண்ட நேரம் சிந்தனையில் தன்னைத்தானே மாய்த்துக் கொண்டிருந்தாள் யார் கண்டார்கள், விடிவ தற்குச் சில நிமிடங்கள் முன்தான் அவளுடைய கண் இதழ்கள் மூடியிருக்கக் கூடும் என.

யாராவது ஒரு கேள்வி - ஒரே ஒரு கேள்வி கேட்டிருந் தால். கேட்டவர் மனம் சமாதானம் அடையும் வகையில் அவளால் பதில் கூறியிருக்க முடியும். யாரும் கேட்க வில்லையே?

காப்பி ருசிக்க விட்டாலும் குடித்தாக வேண்டும் என்று தோன்றியது. குடித்தாள். தம்ளரைக் கழுவி வைத்தாள். மீண்டும் முன் தாழ்வாரம் செல்ல மனம் தயங்கியது. தாத்தாவும், பாட்டியும் ஏதும் கேட்காமலிருக் கலாம். மாமனாராகிவிட்ட அத்திம்பேர் குசும்பாக. குதர்க்கமாக ஏதாவது பேசிவிட்டால்? அவளுக்குச் 'சுருக்' கென்று பட்டுவிடும். அப்படிப் பட்டு விட்டால் அவளால் வாயை அடக்கிக் கொள்ள முடியாது. பேசி விடுவாள். அப்புறம் என்ன? 'மாமனாரை எதிர்த்துப் பேசும் மருமகள்' என்ற பட்டம் இந்த கிராமத்து வீடுகளிலெல் லாம் முழங்கும்.

உடனேயே குளித்துவிட்டு மாற்றுப்புடவை கட்டி சமையலறையினுள் செல்ல அவள் விரும்பவில்லை. அவள் அத்தை தங்கம்மாவை உச்சாணிக் கொம்பில் வைத்திருந் தாள். ஆனால் அவள் சில சாதாரண யதார்த்த வார்த்தை களைப் பேசிய விதம், அப்போது இருந்த அவளுடைய முகபாவம் இதெல்லாம் அத்தையை உச்சாணிக் கொம்பி லிருந்து வீழ்த்திவிட்டன. நேற்றுவரை அன்பும், கனிவு மாக இருந்தவள், புத்தம் புதிதாக வந்திருக்கும் மருமகளிடம் அவளுடைய மனத்துக்கு இசைந்தாற்போலப் பேசவேண்டும் என்பதை உணர்த்தியவள், திடீரென்று



மாறிவிட்டாள்! ஏன்? பாரதி அதிகாலையில் எழுந்து பல் தேய்த்து, குளித்துச் சமையலறைக் காரியங்களில் முனைய வில்லை என்றா? உண்மையாகவே அத்தையிடம் அன்பும், கனிவும் இருந்திருந்தால் என்ன செய்திருக்க வேண்டும்? காரணம் கேட்டிருக்க வேண்டும். அவளுடைய பதிலில் திருப்தி அடைந்து ஒன்றுமே நடந்திராதது போல நடந்து கொண்டிருக்க வேண்டும்,

பாரதி தொழுவத்தை நோக்கி நடந்தாள். முதன் முறையாக அவள் தொழுவத்தைப் பார்க்கிறாள்.

பிரவேசித்தாள்.

ஆச்சரியப்பட்டு போனாள்.

பிரமாண்ட கொட்டகை போலக் காட்சி அளித்தது. வலப் புறத்தில் ஒரு ஜெர்சி பசு. அது உடலை மடித்து உட்கார்ந்திருக்க, கன்று அதைச் சுற்றித் துள்ளித் துள்ளி விளையாடிக் கொண்டிருந்தது. பசு வெளியே வராமல் இருக்க மரச்சட்டம், பசுவின் தலை நன்றாக நுழைந்து தீனியை எடுத்துக் கொள்ளும் அளவுக்கு இடைவெளிவிட்டு மர அழிகள் போட்டிருந்தார்கள் தரை வழ வழப்பாக இல்லை என்றாலும் பாதங்கள் உரசலில் வலிக்கவில்லை. தொழுவத்தின் இடப்புறத்தில் விட்டு விட்டு நான்கு குழிகள் மூலையில் நான்கைந்து உலக்கைகள் சுவரை ஒட்டினாற்போல ஐந்தாறு மூட்டைகள். அருகே போய்ப் பார்த்தாள். ஒரு மூட்டை திறந்திருந்தது. நெல், குழி, உலக்கை. நெல்! புரிந்து கொண்டாள். இவை தவிர, தரையில் குழி வெட்டி அமைத்த அடுப்புகள், அருகே பிரும்மாண்டமான பித்தளை மற்றும் வெண்கலஉருளிகள் கடாக்கள் அண்டாக்கள்.

நெல்லை வேக வைக்க, பெரிய அவள் இதுவரை கண்டிராத அளவில் பித்தளைப் பானைகள்.

தொழுவத்தைத் தாண்டிச் சென்றாள்.

குதூகலமான ஆனால் நீளமான ரேழி போன்ற அமைப்பில் வெராந்தா. வெராந்தாவிலிருந்து இறங்கிய போது மா, வாழை மரங்கள் தெரிந்தன. மிளகாய்ச் செடியில் பிஞ்சு மிளகாய்கள் தொங்கின. ஒரு பக்கம் சேப்பங்கிழங்கு இலைகள் யானைக் காதுகள் போல படர இன்னொரு பக்கத்தில் மல்லிகைப் பந்தல். கத்திரி, வெண்டைச் செடிகளைப் பார்க்க பாரதி தவறினாள். நீண்டு பரந்து விரிந்த கொல்லையின் எல்லையில் ஓர் எட்டு அடி அகல வாயில் தெரிந்தது. வாயிலை மூடியிருந்தார்கள் ஒரு பழைய அம்பாஸிடர் கார் மௌனமாக நின்று கொண்டிருந்தது.

மீண்டும் தொழுவத்துக்கு அவள் வந்தபோதுதான், மின் விசிறியைக் கவனித்தாள், தொழுவத்தில் மின் விசிறியா?

பார்த்துக் கொண்டே நகர்ந்த பாரதி. தங்கம்மாவின் குரலைக்கேட்டு ஒரு கணம் நடுங்கினாள்.

"கிட்ட வராதே."

பாரதி பார்த்தாள்.

"சகஸ்ரம் பெண்டாட்டி ராஜி-என் ஓர்ப்படி-வீட்டில் தான் எல்லோருக்கும் மூணு நாளுக்குச் சாப்பாடு."

பாரதி பதில் சொல்லவில்லை. புரிந்து கொண்டாள். டில்லியில் அம்மாவோ அவளோ என்றுமே ஒதுங்கி உட்கார்ந்ததில்லை. கடவுளே, அவள் என்ன செய்வாள் இனிமேல்? எப்படி அவள் தொழுவத்தில் மாதா மாதம் மூன்று நாட்கள் தள்ளுவாள்?

"மூணு மணிக்கு எல்லாருக்கும் டீ போட்டுக்கொடு... தெரியுமில்லையா?'

"தெரியும்."

"தோசை வார்க்கத் தெரியுமா?"

' வார்த்தது இல்லை. ஆனா ட்ரை பண்றேன்."



"தெரியலைன்னா இன்னொரு ஓர்ப்படி இருக்காளே கமலம், அவளை நான் வரச் சொன்னேன்னு சொல்லிக் கூப்பிடு."

"சரி."

"சட்னி இல்லைன்னா உன் மாமனாரும், என் மாமனாரும் தோசையைத் தொடமாட்டா."

அவள் மெல்ல நகர்ந்தாள்.

"இன்னொரு விஷயம்."

"நீ மத்தியானம் ஒன்று ரெண்டு மணி நேரம் தூங்கறதில் தப்பு இல்லே..."

'புரியறது."

"மாமியாரும் மாமனாரும் கார்த்தாலே நாலு நாலரைக்கு எழுந்திருப்பா உன் மாமனாரும் அப்படித் தான். ராத்திரி ரெண்டுமணிக்கு தூங்கப் போனாக்கூட நாராயணன் அஞ்சு மணிக்குக் கண் முழிச்சுப்பான்."

பாரதி மௌனமாக எங்கேயோ பார்த்தவளாய் நின்றாள்.

"இன்னிக்குப் போனாப் போறது."

பதில் சொல்லாமல் பாரதி நகர, தங்கம்மா. "உனக்கு உள்ளூற ஆத்திரமும், கோபமும் இருக்குன்னு தேக்குத் தெரியும். அதைப் பத்தி நான் கவலைப்படலை. கடமை, கண்ணியம், கட்டுப்பாடுன்னு மூணு வார்த்தைகள் அண்ணாதுரை மேடை மேலே ஏறிச் சொல்றதுக்கு மின்னாலேயே நம்ப நாட்டிலே இருந்திருக்கு ரொம்பப் பேர் உதாசினப் படுத்தினதாலேதான் அண்ணாதுரை ஞாபகப்படுத்தும் படியாச்சு" என்றாள்.

பாரதி வாய் திறக்க வில்லை.

"ஏன் உன்னாலே பதிலே சொல்ல முடியலையா?"

''முடியறது. ஆனா வேண்டாம்னு பார்த்தேன்.''

''முடியறதன்னா சொல்லு.''

''காலா காலத்திலே எழுந்து குனிஞ்சு நிமிர்ந்து செய்ய வேண்டிய வேலைகளையெல்லாம் ஒழுங்காச் செய்யறது கடமை. நெஞ்சில் பொய்ம்மை இருந்தாலும் அதை வெளிக்காட்டாம உபசார வார்த்தைகளைப் பேசி, மரியாதையா நடந்து கொள்றது கண்ணியம். இந்த வீட்டுக்குள்ளு சில சட்ட திட்டங்கள் இருக்கு அதை ஒரு வட்டத்துக்குள்ளே வளைய வளைய வர்றது கட்டுப்பாடு இதெல்லாம் நானே இந்த வீட்டு அகராதிப்படி, கடமை, கண்ணியம், கட்டுப்பாடு? அண்ணாதுரை யார்னு எனக்கு அவ்வளவாத் தெரியாது. ஒரு லீடர்னுதான் தெரியும். அவருடைய அறிவுரை, சமூகத்துக்குத்தான், வீட்டுக்கு இல்லேன்னு நான் நினைக்கறேன்.''

''பல வீடுகள் சேர்ந்தால்தான் சமூகம் இருக்கும். இந்த சமூகம் நல்லபடியா இருக்கணும்னா அது ஒவ்வொரு வீட்லேந்துதான் ஆரம்பிக்கணும். இந்த அடிப்படைத் தத்துவம் புரியலேன்னா எனக்கு கோபம் வராது. முட்டாள்தனத்தைக் கண்டு ஏளனம்தான் வரும்.''

''நானும் உங்களைப்போல, உங்க மாமியாரைப் போல இந்த வீட்டுக்கு வந்த மருமகள்தானே?''

''ஏன் கேட்கிறே?''

''பாட்டி ரொம்ப சீனியர் அப்புறம் நீங்க... உங்களுக்கு ஜூனியர் நான். மத்தபடி நம்ப மூணு பேருக்குள்ளே என்ன வித்தியாசம்? என்ன தாரதம்யம் இருக்குன்னு எனக்குப் புரியலே... தெரிஞ்சா ஒருநாள் சாவகாசமா சொல்லுங்க, நான் இப்பக் குளிக்கப் போறேன்''

தங்கம்மா ஓரிரு நிமிடங்கள் அயர்ந்து போன நிலையில் உறைந்து போனாள்.



தன் அண்ணாவைப்போலத்தான் அவனுடைய பெண்ணும் இருப்பாள் என்று எடை போட்டது எவ்வளவு பெரிய தவறு?

மருமகளை எளிதில் சீண்ட முடியாது என்பதை அவள் உணர்ந்த போதிலும், இப்போது முதலே அவளை அடக்கி, வைக்க வேண்டிய இடத்தில் வைத்தாக வேண்டும் என்ற சீற்றம் பிறந்தது. அந்த நாட்களில் தன்னுடைய மாமியார் குறி வைத்து எய்த சொல்லம்புகளும் அவ்வப்போது குற்றம் சாட்டியதும் நினைவுக்கு வந்தன. ஆனால் தங்கம்மா என்ன செய்தாள்? மாமியாரை எதிர்த்துப் பேசவில்லை! வார்த்தைக்கு வார்த்தை வாயாடவில்லை. அதீதமான பொறுமையைக் கடைப்பிடித்தாள். மெல்ல மெல்ல மாமியாரின் மனதில் நல்லதோர் பீடத்தில் அமர்ந்தாள்.

இந்த பாரதி அந்தக் காலத்து தங்கம்மா அல்லள். வீட்டில் நல்ல பெயர் எடுக்க வேண்டும் என்ற எண்ணமும் பாரதிக்கு இருப்பதாகத் தெரியவில்லை. சீனியர், ஜூனியர் என்று கோஷிக்கிறாள். அவள் மூலமாக குடும்பத்துக்கு அவப்பெயர் வராமலிருக்க வேண்டுமென்றால், பாரதியை அடக்க வேண்டிய முறையில் அடக்க வேண்டும். சர்க்கஸில் புலி, சிங்கங்களையே அடக்க முடியுமென்றால் பாரதியையா வழிக்குக் கொண்டுவர முடியாது?

திடீரென்று பிள்ளை நாராயணனுடைய நினைவு வந்தது. டில்லியில் பார்த்த பாரதி தனக்கு ஏற்றவள் இல்லை என்று சொல்லியிருந்தான். பலமுறை அவளிடமும் மாமாவின் பெண் மனைவியாக வரவேண்டாம் என்று கேட்டுக் கொண்டிருந்தான். அவள் செவி சாய்த்தாலும் ஈசுவரன் செவி சாய்க்கவில்லை. தமக்கும் தான் ஆரம்பத்தில் அவளைக் கல்யாணம் செய்து கொள்ளப் பிடிக்கவில்லை ஆனால் கடைசியில் சம்மதித்தார். தாலி கட்டின நாளிலிருந்து அவர் எப்படி மாறி விட்டார்? தம் தாயார் அவளை எவ்வாறு நடத்துகிறாள் என்று அறிந்து

கொண்ட அவர் எப்படி எப்படியெல்லாம் சமாதானப் படுத்தி அரவணைத்துக் கொண்டு போனார்? இதை மனத்தில் வைத்துக் கொண்டுதானே அவர் தன் பிள்ளையை வற்புறுத்தி இசைய வைத்தார்?

பாரதி ஒரு பிரச்சனையாகி விடுவாளோ என்ற அச்சம் ஒரு பக்கம் தோன்றினாலும் பாரம்பரியத்தின் பெருமையும், குடும்பத்தின் செழிப்பும், கூடிய சீக்கிரம் பாரதி அவளைப் போல மாறிவிடுவாள் என்ற நம்பிக்கையைத் தோற்றுவித்தன.

பாரதி திரும்பி நடந்தாள். தேனொழுகப் பேசி வந்த அத்தை எப்படி திடீரென்று மாறி விட்டாள்? ஒரு வேளை இப்போது காண்பதுதான் அத்தையின் இயல்பான குணமோ? இதுவரை நடந்து கொண்டதெல்லாம் நடிப்பா? நடிப்பைப் பற்றி நினைக்கும்போது தானும் நேற்றுவரை அதைத்தானே செய்தாள் என்ற எண்ணம் வந்தது. இனிமேல் அவளும் நடிக்க வேண்டிய அவசியம் இல்லை. வெட்டு ஒன்று துண்டு இரண்டாகப் பேசினால்தான் அவளால் தன் லட்சியத்தை நிறைவேற்றிக் கொள்ள முடியும், மரியாதை கொடுத்து மரியாதை வாங்கிப் பழக்கம் உள்ளவள் அவள். இனிமேல் அவமரியாதைக்கு அவமரியாதைதான் பதிலாக அமையும்.

அவள் முன் தாழ்வாரத்துக்கு வந்தபோது ஊஞ்சலில் சுகவரன் இல்லை. ஊஞ்சல் சங்கிலியை ஒரு கையால் பிடித்துக் கொண்டு ஒரு காலை ஊஞ்சல் மீது போட்ட வண்ணம் லட்சுமிப் பாட்டி உட்கார்ந்திருந்தாள்.

''பாரதி.''

''என்ன பாட்டி?''

''நீ நேரத்திலே தூங்கி எழுந்திருக்காததுக்கு உன் மேலே தங்கம்மா தேக்ஷ்யப் பட்டாளோ?''

''தேக்ஷ்யம்னா?''

''கோபம்.''



''இல்லை.''

''இல்லையா... நீ பொய் சொல்றாய்?''

''இல்லே பாட்டி.''

''கார்த்தால ஏழு மணியிலிருந்து புறுபுறுத்துக் கொண்டிருந்தா... புறுபுறுத்தான்னா என்ன தெரியுமோ? கோபம், எரிச்சல், எல்லாம் கலந்த முணு முணுப்பு.''

பாரதி பதில் சொல்லவில்லை.

''நீ ஒந்நையும் மனசிலே வைச்சுக்காதே, கிட்டயா?'

''சரி.''

''வந்த புதுசில அவ ஏழரைக்கு மின்னால் தூங்கி எழுந்து நான் கண்டதில்லை. அப்றம், அப்றம் நான் சொல்லிச் சொல்லி ஏழு, ஆறரை, ஆறுன்னு ஆச்சு. இப்ப அஞ்சு மணிக்கு மின்னால எழுந்திருக்கறா. நீயும் அவ மாதிரி சரியாயிடுவே.''

''சரி பாட்டி.''

''இந்தாத்தில நீ நல்ல பேர் எடுக்கணும்னா நீ ஒரு காரியத்தை மனசிலாக்கிக்கணும்.''

''என்ன பாட்டி அது?''

''யார்ட்டேயும் உத்தரம் சொல்லப்படாது;வாயாடப்படாது! அடக்க ஒடுக்கமாக இருக்கணும். மத்தவா மின்னால ஆம்படையானட்டே சிரிச்சுப் பேசப்படாது. அப்புறம் எல்லாத்துக்கும் மேலா ஒண்ணு இருக்கு.''

''அது என்ன பாட்டி?''

''தேரை ஒருத்தரா இழுக்கறதில்லை. அது சாத்தியமும் இல்லை. வீடுங்கறதும் தேர் மாதிரித்தான். இந்தக் காரியத்தை இவள் செலான்னு பார்த்துண்டு நிக்கப் படாது. ஒன்னால முடிஞ்ச காரியத்தை நீயும் செயணும்.''

''சரி பாட்டி!'' தன்னையும் மீறி பாரதி மீண்டும் நடித்தாள்.

''காரியம்னா வெறும் அடுக்களைக் காரியம் மாத்தரம் அல்லா. கிழிஞ்சதைத் தைச்சு வைக்கறது, பூ பறிச்சுத் தொடுத்து வைக்கறது, பூஜை பாத்திரங்களை அலம்பிக் கோலம் போடறது... இது மாதிரி நான் சொல்லிண்டே போலாம். நீதான் பார்த்துப் பார்த்துச் செயனும்.''

பாரதி பதில் சொல்வதற்குள், ரேழியைத் தாண்டி தாத்தா முன்னேறி வந்தார்.

''என்ன எச்சுமி, பொண்ணுகிட்ட பேசிண்டிருக்காய்?''

''நீங்க அறியண்டாம்'?'

''பொண்ணே, பாட்டிம்மா என்ன சொல்றா?''

விசேஷமா ஒண்ணுமில்லே தாத்தா.''

''ரெண்டு பேரும் சொல்ல மாட்டேள் அல்லவா? போகட்டும்... எனக்குத் தெரியண்டாம்.''

தாத்தா தரைமேல் தரை மீது அமரவும் சகஸ்ரத்தின் மனைவி ராஜி வரவும் சரியாக இருந்தது.

''என்னடி ராஜி!...என்ன வேணம்?''

''பாரதியை ஆத்துக்குக் கூட்டிண்டு போலாம்னு வந்தேன். இங்கதான் சமையல் இல்லையே...''

''நான் இனிமேதான் குளிக்கப்போறேன் சின்னம்மா.''

''நாணா என்னை சித்தம்மைன்னு கூப்பிடுவான்...நீ உங்க ஊர் பாஷையில் சின்னம்மான்னு கூப்பிடறே... அதனால் என்ன, பரவாயில்லை...ஆமாம் அது எப்படி மணி பத்தே முக்காலாகப் போறது. இன்னம் குளிக்கலைங்கறாய்?''

பாரதி பதில் சொல்லவில்லை.

''சரி, நீ குளிச்சுட்டு வேகத்தில வா...சித்தப்பாவுக்கு உங்கிட்ட என்னவோ பேசணுமாம்.''



''வரேன் சித்தி.''

''ஹாங்..இது கேக்க நந்நா இருக்கு; சித்தி இப்படியே கூப்பிடு...நான் போய்ட்டு வரேன் அம்மா.''

''என்னடீ ராஜி சமைச்சிருக்காய்?''

''மன்னி ஒக்கார்ந்துட்டான்னு தெரிஞ்சப்புறம்தான் ஆலோசிச்சேன். அப்பாவுக்கு எளவனும் சக்கைக் கொட்டையும் போட்ட மொளகூட்டல்னா பிடிக்குமே. பாரதி! பூசணிக்காய்க்கு எளவன்னு சொல்லுவோம் சக்கைன்னா பலா.''

''அவளுக்கு அப்றமா பாஷை சொல்லிக் கொடுக்கலாம்டீ ராஜி. தொட்டுக்க என்ன வைச்சிருக்காய்?''

''வெண்டைக்காய் வதக்கிப் பச்சடி. கடுகு மாங்காயும் இருக்கு.''

''கேட்டேளா ஒங்க மாட்டுப் பொண் ஒங்களுக்காக என்ன செய்திருக்கான்னு. நாக்கை இப்பவே நந்நாத் தீட்டி வைச்சுக்குங்கோ...'' என்றாள் லட்சுமிப் பாட்டி கணவரைப் பார்த்து.

பாரதிக்குக்கூடச் சிரிப்பு வந்தது.

பதினொன்றே கால் மணிக்கு அவள் ஈசுவரனுடைய தம்பி சகஸ்ரத்தின் வீட்டினுள் பிரவேசித்தாள்.

அங்கே அவளுக்கு ஓர் ஆச்சரியம் காத்திருந்தது.

## 7

**ச**கஸ்ரம் ஊஞ்சலின் மீது கால்மேல் கால் போட்டு உட்கார்ந்திருக்க அவனுடைய மனைவி ராஜி, ஊஞ்சல் சங்கிலியைப்பிடித்து நிற்க, பாரதி இதுவரை பார்த்திராத ஓர் எலுமிச்சம்பழ நிற, இளம்பெண் சோபாவில் அமர்ந்திருப்பதைக் கண்டாள்.

"வா, பாரதி!...ஒனக்காகத்தான் தேவகி காத்துக் கொண்டிருக்கா" என்ற சகஸ்ரம் "தேவு இதாண நான் பறஞ்ச புள்ளி. டில்லி யூனிவர்சிட்டியா. அறியோ... இங்கிலீஷ் லிட்டரேச்சர்ல எம்ஃபில்லாண" என்றான்.

"நமஸ்காரம்! என்று முகமலர்ச்சியுடன் கைகூப்பிய தேவகி, "நீங்க உங்க ஊர் தமிழ்லேயே பேசலாம்.பாரதி. எனக்குத் தமிழ் எழுதப் படிக்கவே தெரியும்" என்றாள்.

"அப்படியா?"

"கோயமுத்தூர்ல அஞ்சு வருஷம் படிச்சிருக்கேன். அஞ்சாறு திருக்குறள் சொல்லட்டுமா? இல்லே கம்பராமாயணத்திலேந்து..."

"வேண்டாம் மிஸ் தேவகி... மிஸ் தானே?" என்றான் பாரதி.

"இன்னும் கொறஞ்சது மூணு வருஷத்துக்காவது மிஸ்ஸா இருப்பதா உத்தேசம்" என்ற தேவகி தொடர்ந்து. "சகஸ்ரம சார், நான் வந்திருக்கிற விஷயம் பத்திச் சொல்லுங்க. என்னைப் பத்தியும் ரெண்டுவார்த்தை எடுத்து விடுங்க..." என்றாள்.

"சரி சொல்றேன்" என்று சகஸ்ரம் ஆரம்பித்தான்.

"பாரதி! இவள் பேரு தேவகின்னா இவளோட அப்பா பேரு வாசுதேவன் நாயர். க்ரேட் ஷிப்பிங் அண்ட் கிளியரிங் கம்பெனின்னு ஒரு கம்பெனி இவளோட முப்பாட்டன் காலத்திலேந்து கொச்சி, பம்பாய் கோழிக்கோடுன்னு கொடிகட்டிப் பறக்கறது! இன்கம் டாக்ஸ் காரனை ஏமாத்தாதைக்கே வருஷத்துக்கு ஒரு கோடி ரூபாய் வரைக்கும் டாக்ஸ் கொடுக்கற கம்பெனி, அதோட சேர்மன் அண்ட் மானேஜிங் டைரக்டர் எல்லாம் இவ அப்பா வாசுதேவன் நாயர்தான்."

"எங்க அப்பாவோட கம்பெனி ஹிஸ்டரி எதுக்கு சார்...? என்னைப் பத்திச் சொல்லுங்க."



"பொறு, தேவு ..! நான் ஹிஸ்டரி படிச்சவன் இல்லையோ? இவள் அப்பா என்னைக்கு எந்த ஊர்லே இருப்பார்னு அவருக்கே தெரியாது, உள்நாடு, வெளிநாடு எல்லாம் தண்ணி பட்டபாடு. அதனாலதான் குடும்பமாவது ஓர் இடத்தில் நிரந்தரமா இருக்கட்டும்னு இவ இந்த பாலக்காட்லேயே இருக்கா சந்திரா நகர்னு ஊருக்குள்ளேயே ஓர் எடம் இருக்கு."

"இன்னும் ஹிஸ்டரியிலேயே இருக்கீங்க சார்!"

"வந்துடறேன விஷயத்துக்கு. இவளுக்கு இங்கிலீஷ், சமஸ்கிருதம், தமிழ் மலையாளம், கன்னடம், மராத்தி, தெலுங்கு அவ்வளவுதான் எழுதப் படிக்கத் தெரியும். இப்ப வீட்ல ஜெர்மன் படிச்சிண்டிருக்கா. அதுக்காக அடிக்கடி மதராசுக்கும் போய் மாக்ஸ்முல்லர் பவன் வாசல்லே நிப்பா.. இப்ப இவ வந்திருக்கிறது எதுக்குன்னா...

"இதைத்தான் நீங்க மொதல்லேயே சொல்லியிருக்கணும்" என்றாள் தேவகி.

"அஸ்திவாரம் இல்லாதைக்கு ஆராவது பில்டிங் கட்டுவாளோ? ஒன்னைப் பத்தி பலமாச் சொன்னாத்தானே பாரதிக்கு எல்லாம் மனசிலாகும்? இவ எம்.ஏ. லிட்டரேச்சர். கீட்ஸ், ஷெல்லியை தலைகீழா ஒப்பிப்பா... ஷேக்ஸ்பியரை அக்குவேறு ஆணிவேறா பிய்ச்சுப் பிய்ச்சுப் போடுவா...

"இப்ப இவளுக்கு என்ன ப்ரோப்ளம்னா, மேற்கொண்டு என்ன படிக்கிறதுன்னு? நான் சொன்னேன் ஹிஸ்டரியிலே எம்.ஏ படின்னு. மாட்டேன் இங்கிலீஷ் லிட்ரேச்சர்தான்னு பிடிவாதமா நிக்கறா."

"எம்.ஏ. எங்கே படிச்சே?" என்று பாரதி கேட்டான்.

"கோயமுத்தூர் ஆர்ட்ஸ் கோளேஜ்ல பி.ஏ.படிச்சுட்டு கரஸ்பாண்டன்ஸ்லே எம்.ஏ. முடிச்சேன்."

''பர்ஸ்ட் கிளாஸா?''

''ஆமாம்.''

''எம். ஃபில் படிக்கலாம்.''

''அதான் ஆசை.''

''கிட்டக்கவே கோழிக்கோடுப், கொச்சியும் இருக்குங்கறேன்... எம்.ஃபில்லுக்கு சரியில்லைங்கறா தேவகி.''

''ஏன்?''

''எம்.ஃபில் பண்ணனும்னா நல்ல லைப்ரரி வேணும். இல்லையா பாரதி? மெட்ராஸ்தான் பெஸ்ட். பிரிட்டிஷ் கவுன்சில், அமெரிக்கன் சென்டர், யூனிவர்சிட்டி, கானிமாரான்னு நிறைய லைப்ரரி இருக்கு.''

''கூடவே ஜெர்மன் படிக்கவும் மாக்ஸ்முல்லர் பவன் வசதியா இருக்கும்'' என்றான் சகஸ்ரம்.

''அப்ப கொச்சி, கோழிக்கோடு எம்.ஃபில்லுக்குக்கூட லாயக்கு இல்லியா?'' கேள்வி கேட்கும்போதேஏமாற்றமும் தொடர்ந்து வந்த துக்கமும் பாரதியின் தொண்டையை அடைத்தன.

'ரிஸர்ச் பண்ணி தீஸிஸ் எழுதணும்னா இங்கிலீஷ் லிட்ரேச்சருக்கு கேரளாவிலே எந்த எடமும் சரியில்லே.''

''எம்.ஃபில்லுக்கே இப்படின்னா பிஎச்.டிக்கு?''

தேவகி சிரித்தாள். பிறகு,

''நீங்க ஏன் டில்லியிலேயே பிஎச்.டி பண்ணலே?''

''பண்ண முடியாமப் போச்சு.''

''நீங்க ஒரு தப்பு செய்ஞ்சுட்டீங்க.''

''என்ன அது தேவகி.''

''பிஎச்.டி பண்ண முடியாதுன்னா எம்ஃபில்லுக்கே போயிருக்கக் கூடாது. பாதிக் கிணறு தாண்டற மாதிரி இருக்கு.''



''முடியும்னுதான் ஆரம்பிச்சேன் தேவகி ஆனா... ஆனா...''

''ஸாரி, பாரதி...உங்க பர்ஸனல் ப்ரோப்ளம்னா சொல்லண்டாம்.''

சகஸ்ரம், ''சரி அதெல்லாம் கிடக்கட்டும், தேவு பாரதியைப் பார்க்கணும் நிறையப் பேசணும்னாய்...கம் ஆன், பேசு'' என்றான்.

''உங்க வீட்ல வேண்டாம். சார்'' என்ற தேவகி, ''நீ எப்ப ஃப்ரீயா இருப்பே பாரதி?'' என்று கேட்டாள்.

''பாரதி எப்பவும் ஃப்ரீதான்''. என்றான் சகஸ்ரம்.

இதுவரையில் கால்கடுப்பை உணராமல் நின்று கொண்டிருந்த ராஜி உள்ளே சென்றாள். ஈசுவரன் வீட்டுக்குச் சாப்பாட்டைக் கொண்டு போகணுமே?

''நான் இங்கே வந்து முழுசா மூணுநாள்தான் ஆறது தேவகி. என்னாலே எதுவும் சொல்ல முடியலே.''

''கோந்தை காலங்கார்த்தாலேயே எஸ்டேட்டுக்குப் போயாச்சு. சாப்பிட வர்றானா இல்லியாங்கறது பகவானுக்குக் கூட தெரியாது. அண்ணா பெட்ரோல் பங்க்ல இருக்காரோ, மெடிக்கல் ஷாப்லே இருக்காரோ தெரியாது. அப்பா அம்மாவை நாங்க கவனிச்சிக்கிறோம். பின்ன ஆரு பாக்கி? மன்னிதான். அவ ஒனக்கு அத்தையாகவும் போயிட்டா... அவளும் ஆத்துல இல்லை. சரசரன்னு சாப்பிட்டுட்டு நீ இந்நைக்கே தேவுகூட அவ வீட்டுக்குப் போ பாரதி. இதப்பாரு தேவு நீ எங்காத்துப் பொண்ணை ஒன் கார்ல கூட்டிண்டு போனா மாத்திரம் போராது, கார்லேயே திருப்பி அனுப்பணும் கிட்டயா?'' என்றான் சகஸ்ரம்.

''இன்னிக்கு வேண்டாம்.''

''நாளைக்கு'' என்றாள் தேவகி.

''எதுக்கும் என் ஹஸ்பெண்ட் கிட்டே ஒரு வார்த்தை சொல்லிடறேன்.''

''அது ஆவஸ்யம் இல்லை. பாரதி கோந்தை ஒன்னை ஒண்ணும் சொல்லமாட்டான்'' என்றான் சகஸ்ரம்.

''அவ இஷ்டப்படியே ஆகட்டும் சார்... நாளைக்கு நான் ஃபோன் பண்றேன். வர்றதானா கார் அனுப்பறேன்''

''அந்த வீட்டுக்கு ஃபோன் பண்ணு.''

''சரி சார், அப்ப நான் வரேன்-தாங்க் யூ பாரதி'' என்ற தேவகி எழுந்தாள்.

''எங்கே சார் உங்க ஒய்ஃப். உள்ளே போயிட்டாங்க இல்லே?''

இரண்டு பெரிய சாப்பாட்டுக் காரியர்களுடன் ராஜி வந்து, தாண்டிப் போக யத்தனித்தாள்.

''நான் வரேன் மிஸர்ஸ் ராஜி.''

''போயிட்டு வாம்மா... பாரதி! உள்ளே ஓர் அடுக்கிலே சாதம் இருக்கு. நீ அதை மட்டும் தூக்கிண்டு வா.'' என்ற ராஜி அவசரமாக வாசலை நோக்கி நடந்தாள்.

தேவகி வெளியேறின பிறகு, ''பாரதி நீ இங்கே என் கூடச் சாப்பிடலாம். கிட்டயா?'' என்றான் சகஸ்ரம்.

''மொதல்ல சாதத்தைக் கொண்டு போய்க் கொடுக்கறேன்.''

''பாத்தரம் சுடும். கை பொள்ளப் போறது, ஜாக்கிரதை அதை அங்க வைச்சுட்டு, நீ இங்க வா.''

''தாத்தாவுக்கும், பாட்டிக்கும் பரிமாற வேண்டாமா?''

''ராஜி பார்த்துப்பள்''



''அவர் சாப்பிடறதுக்கு முன்னாலே நான்சாப்பிட்டா அது தப்புன்னு சொல்லுவாளே?''

''ஆரு சொல்லுவா? தீர்ச்சையா கோந்தை சொல்ல மாட்டான். ஈச்சா அண்ணா இதை ஒரு பெரிய காரியமாகவே எடுத்துக்கமாட்டான். ஒன் பாட்டா, பாட்டிக்கும் தேஷ்யம் வராது... பின்ன ஆரு இருக்கா? ஒன்னைக் குத்தம் சொல்றதுக்கு?'' என்று சகஸ்ரம் கேட்டான்.

''வந்து... வந்து அவரோட அம்மா.''

''மன்னி உனக்கு அத்தையாச்சே? ஊரெல்லாம் நல்லவன்னு பேர் எடுத்தவள். தன்னோட அண்ணா பொண்ணைக் கோவிச்சுக்க மாட்டா.''

''வேண்டாம் சித்தப்பா .. இன்னொரு நாள் இங்கே சாப்பிட வரேன்.''

''தேவகி ஃபோன்ல கூப்பிட்டா தீர்ச்சையாப் போகணும். கிட்டயா.''

''சரி சித்தப்பா...''

''இப்ப சாதத்தை அங்கே கொண்டு போய் வைச்சுட்டு இங்கே மடங்கி வா... ஒங்கிட்ட ஒண்ணு சொல்லணும்.''

ராஜி தன் மாமனாருக்குப் பரிமாற ஆரம்பித்ததும் பாரதி மீண்டும் சகஸ்ரத்தின் வீட்டுக்கு வந்தாள்

''என்னமோ சொல்லணும்னு இருக்கேளே சித்தப்பா என்ன?''

''நேத்தைக்கு ராத்்ரி என்ன நடந்தது?''

''என்ன நடந்தது...? நீங்க என்ன சொல்றீங்க, சித்தப்பா... ஒண்ணும் நடக்கலியே!''

''நீ பிஎச்.டி படிப்பைப் பத்தி கோந்தைட்டே பேசலையா?''

''ஓ, அதுவா?''

''அதுதான்.''

''இதுபத்தி நாங்க பேசிட்டிருந்தோம். அவ்வளவு தான்.''

''நீ எங்கிட்ட சொல்லலைன்னா தோஷமில்லை. கோந்தை காலங்கார்த்தால, எஸ்டேட்டுக்குப் போறதுக்கு மின்னால எங்கிட்ட வந்து எல்லாத்தையும் சொல்லிட்டுத் தான் போனான்.'

''அப்படியா?''

''அவனுக்கு ஒன்பேர்ல தேஷ்யம் இல்லை. ஆனா தப்புக் காரியம் தான் சேதுட்ட மாதிரி துக்கப்படறான்''

''என்ன தப்புக் காரியம், சித்தப்பா?''

''ஒன் கழுத்தில தாலிகட்டினது தப்பாப் படறது அவனுக்கு அப்பா, அண்ணா, மன்னி இவங்கள்ளாம் ஒண்ணாச் சேர்ந்து கோந்தைட்ட கொஞ்சாத தோஷமா அவனை நிர்ப்பந்தப் படுத்தினா. நான் கூட அவன் பக்கம் பரிஞ்சு பேசினேன். ஆனா எல்லாரும் என் வாயை அடக்கினா...இதெல்லாம் உனக்குத் தெரியாது, பாரதி. தெரிய நியாயமில்லை!''

பாரதி ஒரு சில நிமிடங்கள் மௌனமாக, சிலை போல நின்று சகஸ்ரத்தைப் பார்த்தாள்.

''கோந்தைக்கு எத்தனையோ எடங்கள்ளேந்து ஜாதகம் சேர்ந்தாச்சுன்னு சொல்லிண்டு வந்தா. கோழிக்கோட்ல நாலாப்புறத்துக்காரன்-மிளகு எக்ஸ்போர்ட் பண்றான்-கோடீசுவரன்-அண்ணாவைப் பார்த்துப் பேச அஞ்சாறு ப்ராவசியம் வந்தான். மன்னிக்குக் கூட ஒரு சபலம் இருந்தது. கோந்தையும் தலையாட்டத் தயாரா இருந்தான். ஆனா அண்ணாதான் பிடிச்ச முசலுக்கு மூணு கால்னு நின்னார்! கூடப் பாட அப்பா!''

''இந்த இரண்டு பேரும் பிடிவாதமா இருக்க, என்ன காரணம் சித்தப்பா?



''நங்கவரத்திலேந்து ஒரு பொண்ணு முப்பது வருஷத்துக்கு மின்னால வந்தா. கோர்ட்ல ஒரு பெரிய கேஸ் ஜெயிச்சு இருபது வருஷமா கை விட்டுப் போயிருந்த நிலமும், வீடும், தோட்டமும், திருப்பிக் கெடைச்சுது. அதனாலே அதே நங்கவரத்திலிருந்துதான் இன்னொரு பொண்ணும் வரணும்னு அப்பாவோட வாதம்... அண்ணாவுக்கும் பொண்டாட்டியோட ஊர்லேந்து பொண் வரணும்னு தன் மச்சினன் அடிநாள்ள ரொம்பக் கஷ்டப்பட்டிருக்கானாம். அவனை மாதிரி நல்லவன் இனிமேத்தான் பூமியிலே ஜனிக்கணுமாம். அவனோட சொந்த பந்தம் என்னென்னைக்கும் விட்டுப் போகப் படாதாம். ரெண்டு பக்கத்திலேயும் மனப்பொருத்தம் இருந்துட்டா ஜாதகமே பார்க்கண்டாமாம், வேணும்னா பூப்போட்டுப் பார்க்கலாம்னு அண்ணா சொன்னான. பார்த்தா. நல்ல பூ கெடைச்சுது. அப்றம்தான் பெண் பார்க்கவே பொறப்பட்டா.''

பாரதி பதில் சொல்லவில்லை.

என்ன சொல்லுவது?

திடிரென்று சகஸ்ரத்தின் முதல் கேள்வி ஞாபகத்துக்கு வந்தது 'நேற்று ராத்திரி என்ன நடந்தது?'

இந்தக் கேள்விக்கு அவள் திரும்பினாள்.

''நீங்க என்ன சொல்றீங்க, சித்தப்பா?''

''நீ ஒரு குடும்பப் பொண்ணா இருக்கணும்னு தான் கோந்தை ஆசைப்படறான், பாரதி. நீ படிச்ச படிப்பை உபயோகப்படுத்தணும்னா, சாயங்காலங்கள்ளே ஒரு மணிக்கூறோ, ரெண்டு மணிக்கூறோ இந்த ஊர்லேயும், அந்தக் கிராமத்திலேயும் அதுதான் ஆதித்யபுரம்-உள்ள குட்டிகளுக்கு இங்கிலீஷ் சொல்லிக்கொடுக்கலாம்ங்கறான். குட்டிகள்னா பொண் குட்டிகள் மாத்தரம் அல்லா. ஆண் குட்டிகளும்தான்.''

''உங்க அபிப்பிராயம்?''

''நான் என்ன சொன்னால் என்ன பாரதி? என் வார்த்தை எங்கேயும் செல்லாது.''

''ஏன் அப்படிச் சொல்றீங்க?''

''நான் ஹிஸ்டரியிலே எம்.ஏ., பர்ஸ்ட் கிளாஸ். கார் சாமான் கடையைப் பார்த்துக்கோன்னா மாட்டேன்னேன். நேக்கு மேலே மேலே படிச்சு ஒரு நீலகண்ட சாஸ்திரி மாதிரி வரணும்னு தீராத ஆசை. நான் எப்படி ஆட்டோமொபைல் ஸ்பேர் பார்ட்ஸ் ஷாப்பில் ஒக்காருவேன்?

''அப்றம் மருந்துக் கடையைப் பார்த்துக்கோன்னா... மாட்டேன்னேன். பெட்ரோல் பங்க்கும் கழியா துன்னேன்...''

''அப்ப இந்தக் குடும்பத்தின் பிஸினஸில் நீங்க எதிலுமே இல்லியா?''

''இல்லை. ஆனா கோந்தைக்கு மாத்தரம் ஹெல்ப் பண்ணுவேன்.''

''எப்படிச் சித்தப்பா!''

''இந்தக் குடும்பத்திலே அவன் ஒருத்தன்தான் இருபத்து நாலு மணிக்கூறும் சளைக்காம வேலை செயறவன். நீ ஒரு பிராலசியம் எஸடேட்டைப் போய்ப் பார்த்தாத்தான் தெரியும், அவன் எப்படி வைச்சுண்டிருக்கான்னு. ரெண்டு ஏக்கர் நெலத்தை ரிஸர்ச்சுக்குன்னு ஒதுக்கிவைச்சு, நெல், பயறு, கடலை, துவரை எல்லாம் போட்டு ரிசர்ச் பண்றான். இது சம்பந்தமா நெறைய எழுத்துகள் பல எடங்களுக்கு எழுதிப் போஸ்ட் பண்ணண்டி வரும். இதுக்கு அவனுக்கு நேரமிருக்காது. லெட்டர் எழுதி டைப் அடிச்சுப் போஸ்ட் பண்றது என்னோட வேலை. கோந்தை கேரள விவசாயிகள் சங்கத்தின் செக்ரடரி. அவன் எழுதண்ட எழுத்துகளை நான் எழுதுவேன். அவன் கையெழுத்து மாத்தரம் போடுவன்.''



''நீங்க ஏன் மேலே படிக்க முடியாமல் போச்சு, சித்தப்பா?''

''ஆலஸ்யம் இல்லைன்னா! அப்பா, 'நீ இன்னைக்குப் படிச்சு வெளியே போயிட்டா நாளைக்கு இன்னொருத்தனும் ஒன்னை எக்ஸாம்பிளாக் காட்டி வெளியே போவான். அடுத்த தலைமுறையிலே குடும்பத்தையும, சொத்தையும் பார்த்துக்க ஆள் இல்லாமல் போயிடும்'னு சொன்னார் அவர் சொல்றதும் நியாயமாப்பட்டது.''

''நான் பி எச்.டி படிக்கப் போனா யாருக்கு என்ன நஷ்டம் சித்தப்பா?''

''என்ன இப்படிக் கேட்டுட்டாய், பாரதி? ஆருககு என்ன நஷ்டமா? நீ படிச்சு முடிக்க தீர்ச்சையா ரெண்டு வருஷமாவது ஆகும அது குடும்பத்துக்கு மூத்த மாட்டுப் பொண் நஷ்டம் டாக்டர் பாரதின்னு பட்டத்தோட நீ மடங்கி வந்தா ஒரு நா இந்தக் கிராமத்திலே, இந்தப் பாலக்காட்ல இருக்க ஒனக்குப் பிடிக்காது. அப்றம் என்னவாகும்? நீ பொறப்பட்டுப் போறதுன்னு தீர்ச்சையாக் கினா, ஆராலும் ஒன்னைத் தடுத்து நிறுத்தக் கழியாது. அப்ப என்ன? கோந்தை, ஆம்படையான் குடும்பத்தை விட்டே போயிட்டான்னு கிராமம் பேசும். ஊர் பேசும். இது அவமானமில்லையோ?''

''அப்ப நான் என்னதான் செய்யறது சித்தப்பா?''

''இப்ப நான் இல்லியா? நீயும் என்னைப் போலக் கழிச்சுக் கூட்டு.

''கழிச்சுக் கூட்டறதுன்னா...''

''காலத்தைத் தள்ளிண்டிரு.'' சொல்லிவிட்டு சகஸ்ரம் சிரித்தான். பிறகு, அவன் தொடர்ந்து, ''நான் வர்றவா? போறவாளோட ஊர்வம்பா பேசறேன்? ஹிஸ்டரி பேசறேன். அதுல ஒரு தனி சுகம் இருக்கு. ஆத்ல நிறைய ஹிஸ்டரி புக்ஸ் இருக்கு. நித்தியம் அஞ்சாறு பேஜாவது பாராயணம் பண்றேன்; நீயும் அது மாதிரி ஒன் இங்கிலீஷ்

பசியையோ, தாகத்தையோ தீர்த்துக்க. நித்தியம் ஏதாவது படிச்சுண்டே இரு. இன்னைக்கும் ஈச்சா அண்ணா-ஒன மாமனார்-ஷேக்ஸ்பியர் படிப்பான். மில்டன் படிப்பான். கீட்ஸ்னா உசிர். டிக்கன்ஸ், ஸ்காட் எதையும்விட்டு வைக்க மாட்டான். இப்ப வர்ற ஹெமிங்வே, ஆர்தர் மில்லர், ஹென்றி மில்லர், ஹக்ஸ்லிகளையும் அப்பப்ப தொட்டுத் பார்ப்பான்...இது ஆருக்காவது தெரியுமோ? அவன் மருந்துக் கடைக்குப் போறதும், பெட்ரோல் பங்க்குக்குப் போறதும் தான் ஊருக்குத் தெரியும்.';

''நீங்க என்ன சொல்ல வர்றீங்க, சித்தப்பா?'

''நீ ஒரு டாக்டர் பாரதியானா ஆருக்குப் பெருமை ஒனக்கு மாத்தரம்தான். ஆனா இந்தப் பெருமை எத்தனை நாளைக்கு? கொஞ்சம் கொஞ்சமா மத்த பிஎச்.டி களைப் பார்க்கறப்ப நீயே மறந்து போயிடுவாய். பிஎச்டி பண்ணி யாச்சு. இனமே சாதிக்கறதுக்கு ஒண்ணும் இல்லைன்னு ஒனக்குத் தோணவும் ஆரம்பிக்கலாம். அப்றம் ரெண்டு மூணு வருஷத்திலே நீ படிச்சதை நீயே மறந்து போயிருப் பாய் பி.ஏ எம்.ஏ.ங்கறத்தல்லாம் நம்ம படிப்புக்கு ஓர் அடையாளம்தான். மைல்கல் மாதிரி இதுக்கு அப்றம்தான் நாம நம்ப அறிவை வளர்த்துக்கணும். நம்ப மனசுக்கு திருப்தியும், ஆனந்தமும் ஒரு நிறைவும் வேணும்னா நாம காலேஜ் இல்லாமலேயே படுச்சுண்டே இருக்கணும். ஓர் எக்ஸாம்பிள் சொல்றேன். மாஸ்டர் ராமய்யர்னு ஒருத்தர் ஊர்க் கொளத்துக்கு எதிர்க்க இருக்கார். தொண்ணூறு வயசு சோடாபாட்டில் கண்ணாடி. இப்ப நீ அங்கேபோய்ப் பாரு. தமிழ்ல சிலப்பதிகாரமோ, திருக்குறளோ பெரிய புராணமோ. படிச்சுண்டிருப்பார். எதுக்கு இதெல்லாம் சொல்ல வர்றேன்னா, நீ பிஎச்.டி. படிச்சுதான் மேதை ஆகணும்னு இல்லை.''

என்னதான் சுவாரசியமாக அர்த்தச் செறிவுடன் சகஸ்ரம் பேசினாலும் அவனுடைய கருத்துகளை பாரதியால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. அவன் கூறும்



ஆத்ம திருப்தியையும் ஆனந்தத்தையும் டாக்டர் பட்டம் வாங்கிய பிறகும் ஆரம்பிக்கலாமே? டாக்டர் பட்டம் என்ற ஒரு பெருமைக்காகவா அவள் படிக்க விரும்புகிறாள் அவளுடைய தனித்துவத்தை நிலைநாட்ட அல்லவா?

அவள் தன் வீடு திரும்பினாள்.

பாட்டி சாப்பிட்டு எழுந்தாகி விட்டது. இலையை எடுத்துப் போட்டு விட்டு சாணித் தண்ணீரால் சுத்தம் செய்த ராஜி, ''இப்பத்தான் உன்னை உன் சித்தப்பா விட்டாரா, பாரதி? உன் மாமியார் ரெண்டு தடவை உன்னைக் கூப்பிட்டாச்சு என்றாள்.

பாரதி தொழுவத்தை நோக்கி நடந்தாள். மாமியார் என்ன சொல்ல அழைக்கிறாள்?

## 8

பாரதிக்கு நெஞ்சு வெடிக்கக் கோபம் வந்தது. ஆனால் யார்மீது என்று அவளாலேயே நிர்ணயிக்க முடிய வில்லை. அத்தை உறவோடு நிறுத்திக் கொள்ளாமல் கணவனுடைய தாயார் என்ற அசைக்கவே முடியாத சொந்தத்தை உருவாக்கிக் கொண்ட தங்கம்மா மீதா? தேனொழுகப் பேசி, தாராள மனப்பான்மை இருப்பதாக வெளிச்சம் போட்டுச் சிரித்து அவளைத் தன் பெண்போல சுவீகரித்துக் கொள்ள வந்திருப்பதாக தம்பட்டம் அடித்த ஈசுவரன் மீதா? அவளைப் பலவந்தப்படுத்தி, கசப்பான மாத்திரைக்குச் சர்க்கரை முலாம் போட்டு அவளைப் பாக்கு வெட்டியின் இடையில் அகப்பட்டுக் கொள்ளும் பாக்கைப்போல இந்த வீட்டுக்கு அனுப்பினார்களே அம்மாவும், அப்பாவும் அவர்கள் மீதா? இல்லை. எதிர் காலம் பற்றி ஆற அமர உட்கார்ந்து சிந்திக்காமல், பலா பலன்களை அறியாமல் ஒரு கல்யாண மேடைமீது குதித்த தன் மீதே தானா? இதிலிருந்து விடுதலை

கிடைக்குமா? கிடைக்க வழி இருக்கிறதா? எங்கே, எப்படி வழியைத் தேடுவது.

தொழுவத்தை அடைந்தபோது அவளுக்கு எல்லா பிரச்னைகளுமே அற்றுப் போயிருந்தன. தங்கம்மாவின் குரல்கூட முதலில் கேட்கவில்லை.

''நான் கூப்பிடறது அந்த மாட்டுக்குக்கூட கேட்டிருக்கும். உன் காதில் விழலையா?''

இப்போது பாரதி தன் உலகத்திலிருந்து விடுபட்டிருந்தாள்.

''நான் மாட்டைவிட மோசம்'' என்றாள்.

''என்னடீ பதிலா சொல்றே?''

அத்தை தங்கம்மாவா இப்படிப் பேசுகிறாள்? நங்கவரத்தில் அவளை அணைத்துக் கொண்ட அத்தை எங்கே?

திடீரென்று டாக்டர் ஜெகில் அண்ட் மிஸ்டர் ஹைட் கதை நினைவில் மோதியது தங்கம்மா இப்போ அத்தை ஜெகில் இல்லை! 'மாமியார் ஹைட்.'

''இதப்பாருங்க அத்தை ஒண்ணு இப்பவே சொல்லிடறேன். நீங்க எனக்கு மதிப்பும், மரியாதையும் கொடுத்தா. நானும் மதிச்சு மரியாதை கொடுத்து மாமியாரா ஏத்துப்பேன் நான் இங்கே வந்திருப்பது ஒரு மருமகளா. வேலைக்காரிகிட்டகூட இந்தக் காலத்திலே நீங்க இப்பப் பேசின மாதிரி பேச முடியாது.''

''நீ ரொம்பப் படிச்சுட்டே!''

''இதைப்பத்தி எனக்குச் சந்தேகம் இல்லை.''

''வார்த்தைக்கு வார்த்தை வாயாடத் தெரியறது. உன் அம்மா உன்னை நன்னாவே வளர்த்தி அனுப்பிச்சி இருக்கா...''

''என் அம்மாவைப் பத்திப் பேசறதுக்கு உங்களுக்கு உரிமையும் இல்லை, யோக்கியதையும் இல்லை...இப்ப எதுக்கு என்னை இங்கே வரச் சொன்னீங்க, அதைச் சொல்லுங்க.''



''நீ இத்தனை நேரமா சகஸ்ரத்தின் வீட்ல அரட்டை அடிச்சுட்டிருந்தே!''

''பேசிட்டிருந்தேன்!''

''தாத்தா பாட்டிக்கு இலை போட்டுப்பரிமாறணும்னு கூட உன் மண்டையிலே எண்ணம் உதிக்கலே.''

''ராஜி இருந்தா.''

''ஏன் ராஜி இருந்தா? வேலைமெனக்கெட்டா? பரிமாற நீ இல்லையேன்னு அவ அந்தக் காரியத்தைச் செய்ஞ்சா கூடமாட ஒத்தாசை செய்யக்கூட உன்னால முடியலே!''

''ஆமாம் முடியலே...அதுக்கு என்ன இப்ப?''

''நன்னாத தாண்டீ பேசறே! நங்கவரத்துக்கு என்னால பெருமை வந்தது. உன்னால? நங்கவரத்துக்கு அவமானம்தான் உண்டாகும் போலிருக்கு.''

''எனக்கு நங்கவரம் இல்லே! டில்லி. டில்லிக்கு ஏற்கனவே நிறைய அவமானங்கள் இருக்கு. இப்ப ஒண்ணு ஏறிப் போனா பூமி பிளந்துடாது.''

''உன் உண்மையான குணம் இப்பத்தான் தெரியறது''

''இதே வார்த்தைகளை நானும் உங்களைப் பத்திச் சொல்ல முடியும்.''

''ஓகோ, என்னப் பொல்லாதவன்னு சொல்றியா...?''

''உங்க மனசிலே உதிக்கிற வார்த்தைகளை என் வாய்லே திணிக்காதீங்க...''

''இந்தப் பள்ளப் புரத்திலேயும் சரி அந்தக் கிராமம் ஆதித்திய புரத்திலேயும் சரி வீடு வீடா ஏறிப் போய் நான் எப்படிப்பட்டவள்னு விசாரிச்சுப் பாரு. தங்கம்மான்னா இருபத்து நாலுகாரட் தங்கம்னு சொல்லுவா.''

''தங்கமா பித்தளையான்னு அவங்க அவங்க உரசல்லே இருக்கு... சரி, இன்னும் ஏதானும் பாக்கியிருக்கா?''

"நீ போ, நாராயணன் வரட்டும்."

"அவர் உங்களுக்குப் புள்ளைன்னா எனக்குப் புருஷன்."

"அவனை எங்கிட்டேந்து பிரிச்சு உன் கைக்குள்ள போட்டுக்கத்தான் இப்ப நீ வந்துட்டியே..."

"ஓ, இப்படிப் போறாதா உங்க மனசு! இந்த மாமியார் பதவி கிடைச்சுட்டா பர்ஸ்ட்கிளாஸ் பி.எஸ்ஸி.,யும் ஒண்ணுதான். கைநாட்டுப் பேர்வழியும் ஒண்ணுதான்."

சொல்லிவிட்டுப் பாரதி நகர்ந்தாள்.

"நில்லுடீ."

நின்றாள். மாமியாரை எரிப்பது போலப் பார்த்தாள்.

"இன்னி ராத்திரியிலிருந்து நீதான் சமையல் வேலையை ஆரம்பிக்கிறே. இனிமே நான் குளிச்சு உள்ள வர்ற வரைக்கும் நாணாவோட சித்தப்பாக்கள் யார் வீட்லேந்தும் சாப்பாடு வராது."

"நான் ரெடி. ஆனா நான் சமையல் செய்ததைச் சாப்பிட மத்தவங்க ரெடியான்னு எதுக்கும் கேட்டு வைச்சுடுங்க"

பாரதி தொழுவத்தை விட்டு வெளியேறினாள்.

கொல்லைத் தாழ்வாரத்தைக் கடந்து முன் தாழ்வாரத்துக்கு வந்தபோது பாட்டி "பொண்ணே!" என்று அழைத்தாள்.

நெஞ்சு நிறைய ஆத்திரமும் ஆவேசமும் இருந்தாலும் பாரதியால் நிற்காமல் இருக்க முடியவில்லை.

"என்ன பாட்டி?"

"ஈச்சா ஓர் அவசரக் காரியமா கொல்லங்கோடு போயிருச்சானாம். சாப்பிடறதுக்கு இல்லைன்னான். கோந்தை களத்துக்குப் போனா எப்ப ஊர் மடங்குவன்னு ஆராலேயும் சொல்லக்கழியாது. அதனாலே நீ சாப்பிடு"



"சரி பாட்டி."

"தங்கம்மாவுக்குப் நீ சாப்பிட்டப்புறம் போடு, கிட்டயா?"

"சரி, பாட்டி."

"இத்தன நேரமா நீ தொழுத்துப் பெரையிலதானே இருந்தாய்?"

"ஆமாம் பாட்டி?"

"தங்கம்மா ஒங்கிட்ட என்ன சொன்னா?"

"ஒண்ணும் பெரிசா சொல்லலே பாட்டி?"

"என்னைப் பத்தி சொல்லட்டா அவளுக்குத் தூக்கமே வராதே...நான் பொல்லாதவள்னு அவகிட்ட பேர் வாங்கியிருக்கேன், தெரியுமோ நோக்கு?"

"உங்களைப் பத்தி எதுவும பேசலை பாட்டி"

"உங்கிட்ட நெவளிச்சாளா?"

"அப்படீன்னா?"

"சத்தம் போட்டாளா?"

"இல்லை."

"அதிசயமா இருக்கு. அவ எப்ப, எதுக்கு நெவளிச்சாலும் நீ காதுல போட்டுக்காதே. கிட்டயா? எங்கிட்ட வா நான் பார்த்துக்கறேன்"

"இன்னிக்கு ராத்திரி நான் சமையல் ஆரம்பிக்கணும்னா. அத்தை குளிச்சு வர்ற வரைக்கும் நான்தான்...."

"நோக்குச் சமைக்கத் தெரியுமோ?"

"குக்கர்ல சாதம் வடிக்க மட்டும்தான் தெரியும் பாட்டி, உப்பு, மிளகாய்பொடி இதெல்லாம் அளவு தெரியாது. இந்த மிளகூட்டலைப்பத்தி நான் டில்லியிலே கேள்விப்பட்டதுகூட இல்லை."

"மிக்ஸியில் தேங்காய் அரைப்பாய்; இல்லியா?"

''அரைப்பேன். ஆனா தேங்காய்த் துருவிப் பழக்கம் இல்லே?''

''நீ ஒன்றுக்கும் விசாரப்படாதே பொண்ணே... ராத்திரி வத்தக் கொழம்போ ரசமோதான் வைக்கறது. நான் சொல்லித்தரேன். அப்புறம் வெளிச்செண்ணெயை வைச்சு அதுல பப்படாம் காய்ச்சலாம். கோந்தைக்கு பப்படாம் எத்தனை போட்டாலும் போராது, சின்ன வயசிலே போக வர தின்னுண்டே இருப்பன்.''

''சாயங்காலத்து டிஃபனை கமலம் சித்தி, கொண்டு வரப் போறதாச் சொன்னா.

''ஆமாம் எங்கிட்டேயும் சொன்னா. கமலம் நல்ல பொண்ணு. ஆனா என்ன சொன்னாலும் வாயைத் தொறக்க மாட்டா. அவளைக் கண்டாலே தங்கம்மா வுக்குப் பிடிக்காது.

ஏன் தெரியுமோ? அவ அப்பா அவளுக்கு நூறுபவுன்ல பண்டம் போட்டார். வைர நெக்லஸ் போட்டார். பெரிய பணக்கார வீட்டுப் பொண்ணாக்கும் கமலம்.''

பாரதி விஷயங்களைக் காதில் வாங்கிக் கொண்டாள். பதில் சொல்லவில்லை.

''நீ போய்ச் சாப்பிடு.''

''ராஜீச் சித்தி வீட்ல நான் சாப்பிடணும்னு சித்தப்பா சொன்னார்,''

''அதான் நல்லது. சகஸ்ரம் கலகலன்னு பேசுவள் அவளுக்கு மனுஷாள் வேணம். வேகத்தில் போய்ச் சாப்பிட்டுட்டு வேகத்தில் மடங்கி வா. தங்கம்மாவைக் காக்க வைச்சா அவள் தேக்ஷியப்படுவள்.''

''சரி பாட்டி.''

தாத்தா தரைமேல் தரையில் உடம்பை வளைத்துப் படுத்துக் கொண்டிருந்தார். மெல்லிய குறட்டை ஒலி இழைந்து வந்தது.



அன்று நாராயணன் வீடு திரும்பும் போது மாலை மணி ஆறு.

பாட்டி ஊஞ்சலில் உட்கார்ந்திருக்க, பாரதி சுவரோர மாய் ஒரு நாற்காலியில் இரு கால்களையும் மடக்கி வைத்து அமர்ந்திருந்தாள்.

நாராயணனைக் கண்டதும் பாரதி கால்களைத் தளர்த்திக் கீழே போடவில்லை, எழுந்து நிற்க வேண்டும், என்பதையும் அவள் அறியாள்.

''பாட்டீம்மா அம்மை எங்கே?''

''அவ கார்த்தால ஒக்கார்ந்தா''

''எனக்குப் பசிக்கிறது.''

''கமலம் கொழுக்கட்டை உண்டாக்கிக் கொண்டு வந்தா. நந்நா உண்டாக்கியிருக்கா. ஒனக்குன்னு அஞ்சாறு எடுத்து வைச்சிருக்கேன்...பொண்ணே! கோந்தைக்குப் பலகாரம் வை. தொட்டுக்க கார்த்தால வைச்ச ரசம் இருக்கு. கடுகு மாங்கா வெள்ளம் இருக்கு.''

''சரி பாட்டி'' என்ற பாரதி நாராயணனை ஓரக்கண் ணால் பார்த்துக் கொண்டே எழுந்து நகர்ந்தாள்.

''நீ உச்சிக்கு எங்க சாப்பிட்டாய் கோந்தே?''

''களத்திலே''

''நீயே சமைச்சுண்டாய் இல்லியா?''

''வேற என்ன வழி?''

''கோந்தே.''

''என்ன பாட்டீம்மா?''

''இட்டக்க வா.''

நாராயணன் அருகே சென்றான்.

'நான் இப்ப சொல்றதைக் கேட்டு எம்பேர்ல தேக்ஷ்யப் படப்படாது...நான் இந்த மூணு நாலு நாளாப் பார்த்ததை வைச்சுண்டு சொல்றேன்.''

''சொல்லு பாட்டீம்மா.''

''பாரதி நல்ல பொண்.''

''சரி.''

''ஆனா அவளுக்கு நம்ப ஊர் இன்னும் பரிச்சய மாகலை இன்னும்நம்பளையெல்லாம் நந்நா மனசிலாக்கிக் கலை.''

''அதுக்கு இப்ப என்ன பாட்டீம்மா?''

'ஆம்படையான் வந்தா பொண்டாட்டி உட்கார்ந் திருக்கப்படாது. அவள் எழுந்து நிக்கலை.''

''காலம் மாறிண்டு வர்றது.''

''அவள் வேணும்னே ஒக்கார்ந்திருக்கலை. எழுந்து நிக்கணும்னு அவளுக்குத் தெரியலை. அம்படுத்தான்.''

''சரி.''

'':இன்னொன்னுடா கோந்தே!''

''என்ன பாட்டீம்மா?''

''தங்கம்மாவுக்குச் சில பேரைக் கண்டா உடனே பிடிச்சுப் போயிடும். அவாளோட குத்தங் குறைகள் தெரியாதளைக்கு அளவுக்கு மீறிப் பழகுவள். சிலபேரைக் கண்டா, அவா எத்தற நல்லவாளானாலும் பிடிக்காது. இது நான் சொல்லித்தான் ஒனக்குத் தெரியணும்னு இல்லை.''

''இதை எந்துக்கு இப்ப எங்கிட்டச் சொல்றாய் பாட்டீம்மா?''

''உன் பெரிய சித்தி கமலம் நல்லவள். அவளைக் கண்டாலே உன் அம்மைக்கு வெறுப்பு. ராஜிட்ட எத்தனையோ குறைகள் உண்டு. ஆனா அவள்ட்ட தங்கம் மாவுக்கு தனி தாத்பர்யம்.''

''மனசிலாறது''

''இதெல்லாம் எந்துக்கு சொல்ல வர்றேன்னு மனசி லாறதோ, நோக்கு?''

நாராயணன் மௌனமாகப் பாட்டியைப் பார்த்தான்.



''மனசிலாகலை அல்லா. ஒன் அம்மைக்கு ஒன் பொண்டாட்டியைக் பிடிக்கலை. நானும் உன் அம்மை புதுசா இங்கு வந்தப்ப அப்படித்தான் இருந்தேன். தொட்டதுக்கெல்லாம் குத்தம் சொல்லுவேன். ஒன் அப்பாவோட பேசறதுக்கு விடமாட்டேன். நான் சேத தெல்லாம் தப்புத்தான், இப்ப என்னோட விசாரம் என்ன தெரியுமா:உன் அம்மை அடி நாள்ளே எங்கிட்டக் கஷ்டப் பட்ட மாதிரி ஒன் ஆம்படையாள் படப்படாது.''

''அதா பாரதி டிபன் கொண்டு வர்றா, பாட்டீம்மா, கை கால் அலம்பி தின்னுட்டு வரேன்.''

பாட்டி பதில் சொல்லவில்லை.

ஊஞ்சல் ஆடியது.

கூடத்தில் சாப்பாட்டு மேஜை இருந்தும் நாராயணன் வழக்கம் போலத் தரையில் உட்கார்ந்தான்.

அவனுடைய பசியில் பிடிக் கொழுக்கட்டை எதிர் பார்த்ததற்கு மேல் ருசியாக இருந்தது.

''நீ சாப்பிட்டாயா''

''ஒன்னு தின்னேன்'' என்றாள் பாரதி.

''ஏன் ஒண்ணே ஒண்ணு?''

''எப்பவோ ஒரு வாட்டி பாம்பேய்ல பாட்டி வீட்ல தின்னிருக்கேன். அப்றம் இப்பத்தான். எக்கச் சக்கமா தேங்காய் இருக்கு. எனக்குப் பிடிக்காது.''

''மெள்ள மெள்ளத்தான் ருசிபிடிக்கும்.என் அம்மாவும் இப்படித்தான் ஆரம்பத்தில் கஷ்டப்பட்டிருக்காள்.''

பதில் சொல்லாமல் பாரதி ஒரு சில கணங்கள் அவனையே பார்த்துவிட்டு ''காப்பியா,டீயா?என்றாள்.''

''டீ''

''கொண்டு வரேன். பாரதி நகர்ந்தாள்.''

''பாரதி''

''உம்.''

''நேத்து நீ கோவில்லேந்து வீடு திரும்பியதும் புடைவையை அவிழ்த்து விட்டு ஹவுஸ்கோட் போட்டுண்டாய்''

''தப்பா?''

''எனக்குத் தப்பாப் படலே ஏன்னா டில்லியிலே வாழ்ந்தவள் நீ.எத்தனையோ வருஷங்களா அது உனக்குப் பழக்கமா இருக்கு என் தங்கை கூட வீட்ல ஹவுஸ்கோட் தான் போட்டுக்கறா.ஆனா இதை அங்கீகரிக்கிற மனப்பான்மை இன்னும் இந்த வீட்ல பொறக்கலே...''

''அம்மா இங்கே வர்றப்ப நாலு நூல் புடைவை வாங்கித் தந்திருக்கா. இனிமே...''

''நாலுதானா?''

''ஆமாம்.''

''அது எப்படிப் போரும்?''

பாரதி பதில் சொல்லவில்லை.

''நாளைக்குச் சாயங்காலம் அஞ்சுமணிக்கு ரெடியா இரு. நாம ரெண்டு பேரும் பாலெஸ் ஹவுஸுக்குப் போய் ஏழெட்டுப் புடைவை வாங்குவோம், நீயே செலக்ட் பண்ணிக்கோ. மாட்ச்சிங்கா சோளிக்கும் துணி எடுத்துக்கோ''

''சரி''

''இன்னும் என்னென்ன வேணுமோ அதெல்லாம் தயங்காம வாங்கிக்கோ.''

''சரி''

''என் அம்மா ஏதானும் சொன்னாளா?''

''இல்லை!''

''ஒண்ணுமே சொல்லலையா?''

''ஏன் கேக்கறீங்க?''

''நம்ம கல்யாணத்துக்கு அம்மாதான் காரணம்னு நீயும், உன் அப்பா அம்மாவும் நினைச்சுண்டிருப்பேள்''



சென்னை ... நூலகம்
21 202
374178
கொளத்தூர், சென்னை-99

''அப்ப?''

''நானும் அப்பாவும்தான். சொல்லப்போனா அப்பா தான்.''

''இது இப்பத்தான் தெரியும்.''

''ஒரு பெரிய இடத்திலிருந்து பெண் வரணும்னு அவ மனக்கோட்டை கட்டியிருந்தா.''

''அவள் நங்கவரத்துக்கு என்னைப் பெண் பார்க்க வந்தபோது அப்படி அன்பாக் குழைஞ்சு குழைஞ்சு பேசினாளே? என்னைக் கட்டிண்டாளே?'' என்றாள் பாரதி

''அப்பாவைக் கண்டால் அம்மாவுக்கு பயம் அவர் ஒருத்தர்ட்டதான் அவ எதிர்த்துப் பேசமாட்டா. அவர் ஒரு முடிவு எடுத்தாச்சுன்னு தெரிஞ்சப்புறம் தனக்கும் பிடிச்சுட்டதாக் காட்டிக்கத் தோணித்து.''

பாரதி மௌனமாக நின்றாள். கல்யாணத்தின் பின்னணியில் இவ்வளவு பெரிய கதையா?

நாராயணன் தொடர்ந்தான்.

''உன்னை எனக்குப் பிடிச்சிருந்தாலும் உன்னைக் கல்யாணம் பண்ணிக்க மனசு வரலே. ஏன் தெரியுமா? வாழ்க்கையிலே நீ சுகப்பட மாட்டேன்னு தோணித்து. இதை நீயே நன்னாப் புரிஞ்சுக்கணும்னுதான் நான் அன்னிக்கே சொன்னேன். நாலு பேர் முன்னாடி எனக்கு இந்தக் கல்யாணத்தில் இஷ்டமில்லைன்னு சொன்னது எதுக்குத் தெரியுமா பாரதி? உன்னால உங்க அம்மா அப்பா கூட இருக்கறப்ப வெளிப்படையா உன் உண்மையான அபிப்ராயத்தை வெளியிட முடியாமத் தவிக்கறேன்னு தெரிஞ்சுது. அதனாலதான் உன் நெஞ்சோட வார்த்தைகளை என் வாய் வழியாக் கொட்டினேன். ஆனா நீ என்னோட சேர்ந்து பாடாமப் பேசாம இருந்தே.!'

''இனிமே என்ன செய்ய முடியும்?''

''பல்லைக் கடிச்சுண்டு இருக்கப் பாரு. வேறு வழி எனக்குத் தெரியலே. பிஎச்.டி பத்தி நேத்து எங்கிட்டப் பேசின மாதிரி என் அம்மா, அப்பாவிடம் பேசாதே. ரெண்டு பேருக்கும் பிடிக்காது. நேத்து ராத்திரி நான் கொஞ்சம் முரட்டுத்தனமா பேசினேன். அதுக்கு ஸாரி''

பாரதியால் தன் காதுகளையே நம்ப முடியலே.

அயர்ந்து போய் நின்றாள்.

''இப்பப் போய் சாயை கலந்துண்டு வா'' என்றான் நாராயணன்.

## 9

பாரதியால் அவன் புகுந்துவிட்ட வீட்டைப் பற்றிப் புரிந்து கொள்ள முடியவில்லை. ஆரம்பத்தில் இதமாக இருந்த அத்தை முகத்தில் அறைவதுபோலப் பேசுகிறாள். அவளைப் பற்றி பாட்டி ஆரம்ப காலக் குறைகளை விவரிக்கிறாள். அவளிடம் பாசம் பொங்கப் பழகுகிறாள். இது வரையில் அவளும், நாராயணனும் ஒரு சாதாரண தம்பதியைப் போலப் பரிமாறிக் கொள்ளவில்லை. திருமணத்துக்குப் பிறகு, படுக்கை அறையில்கூட சந்திப்பு, யாருக்கும் நிகழ முடியாத விநோதமான சந்திப்பாக வாய்த்தது. ஓர் இரவு சற்றே முரட்டுத்தனமாக நடந்து கொண்டால் மறுநாளே சுருதி மாறுகிறது. தன் தாயாருக்கு விருப்பு வெறுப்புகள் காரணமின்றி எழும் என்கிறான். அவள் பிஎச்.டி. படிக்க ஆசைப்படுவதில் அர்த்தமோ நியாயமோ கிடையாது என்கிறான். அதேசமயம் மறுநாள் மாலை துணிக்கடைக்குச் சென்று அவளுக்குப் பிடித்த புடவைகளும், மற்ற துணிமணிகளும் எடுத்துக் கொள்ளலாம் என்கிறான். அவள் இன்னும் மாமனார் ஈசுவரன் ஒருவரிடம்தான் சரியாகப் பேசுவதில்லை. சதா இன்முகம் காட்டி புன்னகை பூக்கும் அவரிடம் என்ன குணாதிசயங்கள் ஒளிந்துகொண்டிருக்கின்றனவோ?

இதுவரையில் அவள் மனத்தை ஈர்த்தது சகஸ்ரம் மட்டும்தான். எதிலும் ஒளிவு மறைவு இல்லை. மனத்தில் பட்டதைத் தயங்காமல் வெளியிடுகிறார். அவளுக்குச் சமத்துவம் கொடுத்து மதிக்கிறார். அவருடைய மனைவி ராஜியை மேலோட்டமாகப் பார்த்தபோது நல்லவளாகப் பட்டாலும், அவள் லேசுப்பட்டவள் இல்லையோ என்ற சந்தேகம் வந்தது. தாத்தா, பாட்டிக்கு அவள் சாப்பாடு பரிமாறாத விஷயம் அத்தைக்கு எப்படித் தெரிய வந்தது? தொழுவத்திலிருந்து அவள் நிச்சயமாக வெளியே வந்திருக்க மாட்டாள்! ராஜியைத் தவிர வேறு யாரும் தொழுவத்துக்கு செய்தியைக் கொண்டு போகப் பிரமேயமேயில்லை. ராஜி பாம்பா, பழுதையா?

அன்று இரவு மாடி அறைக்குச் சென்ற பாரதி, இரட்டைக் கட்டிலை மிகவும் சிரமப்பட்டு இரண்டு அடி தூரத்துக்குத் தள்ளினாள். மூலையில் நாலைந்து பாய்கள் சுருட்டி வைக்கப்பட்டிருந்தன. இரண்டை எடுத்தாள். விரித்தாள். ஒன்றோடு ஒன்று ஒட்டிக் கொண்டன. மெத்தை மீதிருந்த தன் தலையணையைப் பாயின்மீது போட்டுவிட்டுக் கீழே இறங்கி வந்தாள்.

கீழே நாராயணன் டெலிபோனில் பேசிக்கொண்டிருந்தான்.

''ஓ. கே; ஐ வில் பி தேர் வித் மாதவன் நாயர்'' என்ற வார்த்தைகள் அவள் காதில் விழுந்தன.

''ஆர்டா கோந்தே?'' என்று தாத்தா கேட்டார்.

''மினிஸ்டர் பாலகிருஷ்ணமேனன். ஒத்தப்பாலத்தில் இருக்காறாம். நானும் மாதவன் நாயரும் உடனே பொறப்படணும் பாட்டாப்பா.''

''கார்ல போறயோ?''

''ஆமாம். ராத்திரி பந்தரண்டு ஆனாலும் காத்துண்டிருக்கேன்னு மினிஸ்டர் சொல்லச் சொன்னாராம்.''

''இப்ப பின்ன ஆர்ட்ட பேசினாய்?''

''மினிஸ்ட்டரோட பீ ஏட்ட''

''நீ ஒண்ணும் எம்.எல்.ஏக்கு நிக்கண்டாம்.கிட்டயா?''

''மினிஸ்டர் எந்துக்குக் கூப்பிடறான்னு தெரியலையே பாட்டாப்பா?''

''இந்த மேனோன் கொஞ்ச காலமாக ஒன்னை வட்டம் போட்டுண்டிருக்கான். நீதானே போன பிராவசியம் சொன்னாய், அவன் எம்.எல் ஏக்கு நிக்கச் சொல்றான்னு?''

''நேக்கு இப்ப நேரமாறது.நான் போயிட்டு வரேன்'' சொன்ன நாராயணன் மாடிப்படியை நோக்கி விரைந்தான்.

வழியில் நின்ற பாரதி ஒதுங்கி நிற்க, ''நீயும் கொஞ்சம் மச்சு மேலுக்கு வா!'' என்றான்.

''மச்சுமேல் என்றால் மாடி என்பதைப் புரிந்து கொண்ட பாரதி பின் தொடர்ந்தாள்.

இரண்டு பாய்கள் விரிக்கப்பட்டிருப்பதை அவள் கவனித்தாலும் அதுபற்றிப்பேசாமல், ''பாரதி நான் இப்ப ஒத்தப்பாலம் போறேன். கார்த்தாலதான் திரும்பி வருவேன். என் அலமாரியிலிருந்து ஒரு வேஷ்டி, ஜிப்பா, டவல், கர்ச்சீப் எல்லாம் எடுத்து இந்தப் பெட்டியில் வை. கீழே போய் பிரஷ், பேஸ்ட், அப்றம் சோப் இதெல்லாமும் வை. நீ வர்றதுக்குள்ளே நான் எடுக்கவேண்டிய பேப்பர்களையெல்லாம் எடுத்து வைச்சுக்கறேன்'' என்றான்.

''சரி''

அவள் நகர்ந்தாள்.

''தனியா இங்கே தூங்க பயமாயிருந்தா கீழே பாட்டி அம்மாகிட்டப் படுத்துக்கோ. அர்த்த ராத்திரியில மரநாய் சத்தம் கேட்கும் பயமா இருக்கும்.''

அவள் பதில் கூறாமல் மாடிப்படிக்கு விரைந்தாள்.

''எங்கே ஓடறே?''

''வேஷ்டி, ஜிப்பா, கர்ச்சீப்...''



ஒன்பதே காலுக்கு அவன் புறப்பட்டான். ஐந்து நிமிடங்களுக்குப் பிறகு மாமனார் ஈசுவரன் வந்தார்.

''அப்பா, கோந்தே எங்கே கார்ல போறான்?''

தாத்தா விஷயத்தைச் சொன்னார்.

''ஒரு காலத்தில் நீங்க கூப்பிட்ட குரலுக்கு ஓடி வந்தவன் இப்ப மினிஸ்டர். அவன் என் புள்ளையை வான்னு கூப்படறான் .. இவனும் ஓடறான்...பொண்ணே நீ சாப்பிட்டாச்சா?''

''இன்னும் இல்லே அத்திம்பேர்.''

''சரி, வா ரெண்டு பேருமா சாப்பிடுவோம். நான் டேபிள்ள தான் சாப்பிடுவேன்.

பாரதி மௌனமாகச் சமையலறைக்குச் சென்றாள்.

சாப்பிட உட்கார்ந்தார்கள்

பின் கட்டிலிருந்து குரல் கேட்டது.

''பாரதி.''

''ஒன் மருமாள் என்னோட சாப்பிட்டுண்டிருக்கா, தங்கம் என்ன வேணும்?''

''உங்களுக்குப் போட்டுட்டு அவ சாப்பிட உட்கார்ந்தாப் போறாதோ?''

''நான்தான் அவளை என்கூட ஒக்கார்ந்து சாப்பிடச் சொன்னேன்.''

''நீங்களே இப்படி இடம் கொடுத்தா அவ துளுத்துப் போயிடுவா.''

''நீ பேசாதைக்கு இரு தங்கம்.''

''என் வாயை அடையுங்கோ.''

'பாரதி நீ ஒம்பாட்டுக்குச் சாப்பிடு.கிட்டயா...என்ன கொஞ்சமா சாதம் போட்டுண்டிருக்காய்...?வத்தக் குழம்பு ஏ கிளாஸா இருக்கு. ஆரு வைச்சா? நீயா? தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளிக்காரா இந்த சாம்பார், வத்தக்குழம்பு வைக்கறதில மன்னன்மார்.''

''நான் புளி மாத்திரம் கரைச்சேன் அத்திம்பேர். மத்ததெல்லாம் பாட்டிதான்.''

''ஆரு வைச்சா என்ன, நாக்குக்கு அமிர்தமா இருக்கு. அந்தப் பப்படா டப்பாவைத் தள்ளு.''

தள்ளினாள்.

''இந்நைக்கு என்ன டிபன்?''

''அத்தை தோசை வார்த்து வைன்னா. ஆனா கமலம் சித்தி வீட்லேந்து கொழுக்கட்டை வந்தது.''

''ஒனக்கு இங்கே போர் அடிக்கிறது இல்லியா... கொஞ்சநாள் அப்படித்தான் இருக்கும். அப்றம் சரியா விடும். ராஜிட்டே மத்த ஊர்ப் பொண்களை இண்ட்ரடியூஸ் பண்ணி வைக்கச் சொல்லு. உன் அளவு இல்லைன்னாலும் படிச்ச பொண்கள் நிறையப் பேர் இருக்கா.''

''அத்திம்பேர்!''

''என்ன பொண்ணே?''

''அத்தைக்கு சாதம் போட்டப்புறம் உங்களோட ஓர் அஞ்சு நிமிஷம் பேசலாமா?''

''சொல்லண்டதை இப்பவே சொல்லேன்.''

''அங்க என்ன பேச்சு? மாமனார் மாட்டுப் பொண்ணுக்கு நடுவே.''

தங்கம்மாவின் குரலுக்கு ஒலிபெருக்கி தேவைப்படவில்லை.

''ஒன் காதில விழலையா?''

''குசு குசுன்னு பேசினா எப்படி விழும்?''

''நாங்க ஆயிரம் பேசிப்போம். நீ பேசாதைக்கு இரு தங்கம்.''

''உங்களுக்கு என் வாயை அடைக்கத்தான் தெரியும்''

''இப்ப அந்த வித்தையை நம்ப மாட்டுப் பொண்ணுக்கும் டீச் பண்ணட்டுமா?''



''நீங்க ஒண்ணும் டீச் பண்ண வேண்டாம்.''

''சரி.''

'அவளுக்கு இப்பவே தெரியும்.''

ஈசுவரன் வாய்விட்டுச் சிரிக்க, முதன் முறையாக அந்த வீட்டில் பாரதியும் சிரித்தாள்.

முன்னொரு காலத்தில் வீட்டின் ரேழியின் இடப்புறத்தில் பத்து அடிச் சதுரத்தில் நெல்லைக் கொட்டி வைக்க என்று ஓர் அறை இருந்தது. அறுவடை முடிந்ததும் நெல் வரும். பலநாள்கள் வெயிலில் ஓலைப் பாய்களின் மீது பரப்பி வைத்துத் தெருவில் காயப்போடுவார்கள். நிலச் சீர்திருத்தம் என்ற பெயரில் பல நிலச்சுவான்தார்கள் நெல்லை இழந்து நிற்க, இந்த நெல் அறைக்கு வேலை இல்லாமல் போய்விட்டது. பல வீடுகளில் நெல் அறையை தனி அறையாக மாற்றி மேஜை, நாற்காலி போட்டுக் கொண்டார்கள்.

இப்போது ஈசுவரனுடைய குடும்பத்துக்கு பெரிய பண்ணையிலிருந்து முன்போல் அறுவடை நெல் கிடைத்து வந்தாலும் அதை வீட்டுக்குக் கொண்டு வரவில்லை. அரசு கொள்முதல் செய்துவிட்டு எஞ்சியதை விற்று விட்டு நெல்லூர் பச்சை அரிசியை கடைகளில் வாங்கிக் கொண்டார்கள்.

இந்தப் பழைய நெல் அறையில் ஈசுவரன் பாரதியின் வருகைக்காகக் காத்திருந்தார். அவரிடம் அவள் என்ன பேச வேண்டும்? ஏதாவது பிரச்னையா? யாரிடம்? நாராயணனிடமா, அல்லது தங்கம்மாவிடமா?

''உள்ளே வரலாமா, அத்திம்பேர்?''

''வா பொண்ணே.''

பாரதி அறையினுள் பிரவேசித்தாள்.

''ஒக்காரு.''

உட்கார்ந்தாள்.

''என்ன வெஷயம்? ஐ மீன், ப்ரோப்ளம்?''

''உங்க பிள்ளை ஒரு விஷயம் பத்திப் பேச வேண்டாம்னுதான் சொன்னார்- அவர் வார்த்தையையும் மீறித்தான் இப்ப வந்திருக்கேன். ஏன்னா, என்னாலே எதையும் என் மனசுக்குள்ளே பூட்டி வைச்சுக்க முடியாது. மனசில பட்டதைப் படார்னு சொல்றது என் குணமாப் போயிட்டது.''

''இதுவரையில் உன்னைப் பத்தி நான் அப்படி நெனைக்கலையே பொண்ணே!''

''காரணம், நாம ரெண்டு பேரும் இன்னும் தனியா பேசிக்காத்தாலே இருக்கலாம். அல்லது நான் மத்தவங்களோட பேசறப்ப அங்கே நீங்க இல்லாம இருந்ததாயே இருக்கலாம்.''

''அது எப்படியோ போகட்டும். நீ என்ன பேச ஆசைப்படறே?''

''எல்லா மாமனார்களையும் போல நீங்களும் ஒரு மாமனாராக இருந்திருந்தா நிச்சயமா இங்கே பேச வந்திருக்க மாட்டேன். நீங்க என் அப்பாவோட தங்கை புருஷன். என் அத்தையின் ஹஸ்பெண்ட். அத்திம்பேர்.''

''அதான் தைரியமாப் பேச வந்திருக்கே, அல்லவா?''

'நான் என்னிக்குமே கோழை இல்லை அத்திம்பேர்.''

''சரி சொல்லு.''

''என்னைப் பெண் பார்த்து சம்பந்தம் பேச நங்க வரம் வந்தப்ப, கோழிக்கோடு, கொச்சி எல்லாம் மூணு மணி நேர ரயில் பிரயாணத்தில போயிடலாம்னு சொன்னீங்க!''

''ஆமாம் சொன்னேன்.''

''நான் தொடர்ந்து படிக்க ஆசைப்பட்டதைத் தெரிஞ்சுக்கிட்டப்புறம்தான் இதைச் சொன்னீங்க.''

''இல்லைன்னு சொல்லலே.''



''என் மேற்படிப்புக்கு நீங்க அங்கிகாரம் கொடுத்து விட்டதா அப்ப எனக்குப் பட்டது.''

''அப்படியா?''

''என்னோட அம்மா என்ன சொன்னா தெரியுமா? ''நீ சரின்னு சொல்லு, பாரதி. நிச்சயமா உன் ஆசையும் நிறைவேறும். ஒரு கோடீசுவரன் வீட்டுச் சௌகரியங்களும் கிடைக்கும். நாராயணனும் ராஜா மாதிரி இருக்கான்'' இப்படி என் அம்மா சொன்னா,''

''அப்படியா?''

''ஆமாம். சத்தியமா இப்படித்தான் சொன்னா, அத்திம்பேர் என மேற்படிப்புக்கு நீங்க ஆட்சேபிக்க மாட்டீங்கன்னு உங்க பேச்சைக் கேட்டு அம்மாவும் நம்பியிருக்கா.''

''அதனாலதான் நீ...''

''இல்லே அத்திம்பேர்... இதனால மட்டும் இல்லே... என் அப்பாவோட நிலைமை என் நெஞ்சைப் பொளந்தது. என் அண்ணாவோட அமெரிக்கப் படிப்புக்காக நீங்க ஒரு காசு வட்டி வாங்காம லட்சத்துக்கு மேல கடன் கொடுத்திருக்கீங்க. என் அண்ணா அதை டாலர் டாலரா அனுப்பி ஈடுகட்டுவான்னு அப்பா நம்பினார் நம்பிக் கையில மண் விழுந்தப்ப அவராலே என் லட்சியத்தைத் தீர்த்து வைக்க முடியாமப் போச்சு. அவர் மனசைப் புண்படுத்தக் கூடாது, நீங்களும் என் மேற்படிப்புக்கு ஆதரவு காட்டுவீங்கன்னுதான் கல்யாணத்துக்கு சம்மதிச்சேன்.''

''உன் மனசு அறிஞ்சுதான் நாணாவும் அன்னிக்கு நீ வேண்டாம்னு சொன்னான். உன் அத்தைக்கு இந்தக் கல்யாணத்தில் இஷ்டமில்லை, நான் அவன் மண்டையில் அடிச்சு அடிச்சு சம்மதிக்க வைச்சேன். ஏன் தெரியுமோ? பொண்ணே! ஒன் அப்பா மௌலி ரொம்ப நல்லவன்.

அவன்கிட்ட பணம் இல்லேன்னு நேக்குத் தெரியும். வேற இடத்திலே உன்னைக் கொடுக்கப் போனா தங்கவரம் விடுகூட இல்லாமப் போகும். ஆனா இது மாத்தரம் காரணம் அல்லா. என் தங்கம் தங்கவரம்! அவள் படி ஏறி வந்தப்புறம்தான் மின்னைக் காட்டிலும் மகாலட்சுமி அதிகமா பிரகாசிச்சாள். என் புள்ளையோட வாழ்க்கையிலும் அப்படி ஒரு பிரகாசம். இன்னொரு தங்கவரத்துப் பெண் மூலமா வரும்னு எனக்குத் தோணித்து. இது முட்டாள்தனமான நம்பிக்கையா உனக்குத் தோணலாம் ஆனா என் நம்பிக்கை அசைக்க முடியாததா இருந்தது... சரி நான் இப்ப என்ன செய்யணும்?''

''நான் பி எச்.டி. படிக்க நீங்க ஆதரவு தரணும்.''

''படிச்சப்புறம் என்ன சேவாய்?''

''உங்க மருமகளாவே திரும்பி வர்றேன்.''

ஈசுவரன் சிரித்தார்.

''என்ன அத்திம்பேர் சிரிக்கறீங்க?''

''டாக்டர் பாரதி நாராயணன்னு நம் ஆத்து வாசல்லே வேணம்னா போர்டு போட்டுக்கலாம். மத்தபடி படிச்சதோட பிரயோசனம் என்ன சொல்லு, பொண்ணே?''

பதில் சொல்லத் தெரியாமல் பாரதி விழித்தாள்.

''நீ இங்கிலீஷ்ல டாக்டரேட் வாங்கியாச்சுன்னா, ஒன்னால சும்மா இருக்கக் கழியாது. இந்தாத்தைக் கவனிச்சுக்கறதில இன்ட்ரஸ்ட் இருக்காது. ஒருகோளேஜ்ல ப்ரொபஸராய் போகணும்னு தோணும். அந்தக் கோளேஜ் இந்தப் பாலக்காட்லேயும் இருக்கலாம்... பெங்ளுரிலும் இருக்கலாம்... கல்கத்தாவிலும் இருக்கலாம்.''

மீண்டும் பாரதி விழித்தாள்.



''நீ ஓர் எம்.பி.பி.எஸ். டாக்டர்னா நாலு பேருக்குப் பிரயோசனம் உண்டு. நீ ஆசைப்படற டபக்டர் பட்டத்தாலே ஆருக்குப் பிரயோசலம் பொண்ணே? நோக்கு மாத்தரம்தான். இநதக் குடும்பத்துக்கு இல்லை.''

''என்னோட லட்சியம்...''

''லட்சியம் இருக்கறதில தோஷமில்லை. ஆனா அது மூலமா ஆருக்காவது நல்லது வரணும், அப்படி வராதுன்னு தெரியறப்ப, ஒரே ஒரு வழிதான் இருக்கு.''

''அது... அது?''

''பழைய லட்சியமா அதை மதிச்சு மறந்துடணும்.''

''இதுதான் உங்க முடிவா அத்திம்பேர்?''

''நீ இந்த ஆத்துக்குள்ளே, இந்தக் குடும்பத்துப் பொண்ணா இருக்கணும். நீ வெளியே இருக்கிறதுன்னு தொடங்கினா அதுக்கு முடிவே இருக்காது. இந்தக் குடும்பத்துப் பொண்ணாவும் ஆகமாட்டாய்...''

''தாங்க்ஸ் அத்திம்பேர், உங்க முடிவு என்னன்னு ஸ்பஷ்டமாத் தெரிஞ்சுட்டுது.''

''அவசரப்படாதே பெண்ணே! என் முடிவை மாத்தி, உன் ஆசைக்கு ஏத்தாப்ல முடிவு எடுக்கற அதிகாரம் இன்னொருத்தருக்கும் உண்டு.''

''உங்க பிள்ளை.''

''கரெக்ட்.''

''அவர் ஏற்கனவே தன் தீர்மானமான முடிவைச் சொல்லிட்டார்.''

''அப்ப அப்பீலே இல்லை!''

''இருக்கு அத்திம்பேர்!''

''என்ன?''

''அப்பீல்.''

"எந்தக் கோர்ட்ல?"

"என்னோட லட்சியம்ங்கற கோர்ட்ல! அதுதான் சுப்ரீம் கோர்ட்!"

"இப்ப என்னால ஒண்ணே ஒண்ணுதான் நிச்சயமாச் சொல்ல முடியும், பொண்ணே!"

"என்ன அது அத்திம்பேர்?"

"நீ சுப்ரீம் கோர்ட்டுக்கு அப்பீல் செய்யாம இருக்க குருவாயூரப்பன் உனக்கு நல்ல புத்தி கொடுக்கணும்."

அன்று இரவு பாரதி பாயில் படுத்தாள். உடல் உறுத்துவதையும் மறந்து சிந்தித்தாள்.

லட்சியத்தைக் குழிதோண்டிப் புதைப்பதா, அல்லது புத்துயிர் கொடுப்பதா?

புத்துயிர் கொடுத்தால் நேரக்கூடிய விளைவுகள்? பயங்கரமாகப் படவில்லையென்றாலும் நெஞ்சின் ஓரத்தில் இடித்தது.

ஆனால் எப்படித் தன் லட்சியத்தை நிறைவேற்றிக் கொள்ள முடியும்?"

திடீரென்று சகஸ்ரம் வீட்டில் அன்று காலை சந்தித்த தேவகி கண்முன் நின்றாள்.

## 10

மாமனார் ஈசுவரனோடு நடத்திய உரையாடல் ஒரு தோந்த யுத்தமாகப் பாரதிக்குத் தோன்றினாலும் அவருடைய வார்த்தைகள் மெல்ல மெல்லச் சிந்திக்க வைத்தன. அவர் வெளிப்படையாகச் சொல்லவில்லை என்றாலும், அவளுடைய மேற்படிப்பு மாபெரும் விபரீதங்களுக்கு விதை விதைக்கும் என்பதை உணர்ந்தாள்.



இரண்டு ஆண்டுகள் நிச்சயமாக அவள் இந்த வீட்டில் இருக்கமாட்டாள். அதற்குள் அவளைப் பற்றிய விமர்சனங்கள் நடந்து முடிந்துவிடும். இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு புகுந்த வீட்டிலேயே இடமே இல்லாமலும் போகலாம். பாரதி இதை ஒரு பெரிய விஷயமாக எடுத்துக் கொள்ளவில்லை என்றாலும் அம்மா - அப்பாவுக்கு நிச்சயமாகப் பதில் சொல்லியே ஆகவேண்டும். என்னதான் நாராயணனும், ஈசுவரனும் நல்லவர்களாக இருந்தாலும், அவர்களுடைய கௌரவமும், மானமும் அவளால் பாதிக்கப்படும்போது அடிபட்ட புலிபோல மாறுவார்கள். ஆனால் என்ன செய்ய அவர்களால் இயலும்? விவாகரத்துக்கு மேல் எதையும் செய்ய முடியாது. அவளுக்கு இந்தத் திருமணத்தில் ஆரம்பத்திலிருந்தே நாட்டமோ, விருப்பமோ இல்லை. அம்மாவின் உந்தலிலும், அப்பாவின் கெஞ்சலிலும் அவள் பலவீனப்பட்டு ஓர் அவசரமான முட்டாள்தனமான முடிவை எடுத்துவிட்டாள். மேற்படிப்புக்கு ஒரு வாய்ப்பு கிடைக்கக்கூடும் என்ற நம்பிக்கையையும் அம்மா கிளறிவிட்டாள்.

இப்போது மேற்படிப்புக்குச் சம்மதம் இல்லை என்று நாராயணனும், ஈசுவரனும் திட்டவட்டமாகக் கூறிவிட்டார்கள். இரண்டு பேர்களையுமே அவளால் எதிர்த்துச் செயல்பட முடியும். மனைவிக்கு எல்லா சுக, சௌகரியங்களையும் அளிக்க முன் வரும் கணவர், நாராயணன் இந்த ஒரு விஷயத்தில் மட்டும் கண்டிப்பாக இருக்கிறான் என்றால் என்ன காரணம்? அவனுக்கு தாம்பத்தியம் மிகவும் அவசியம். அவளுக்கும் தேவைதான். ஆனால் அதற்கு அவசரமில்லை. ஆங்கில இலக்கியத்தில் டாக்டர் பட்டம் வாங்கிய பிறகு நாராயணன் விரும்பும் தாம்பத்தியத்தைக் கொடுக்கலாமே? ஆனால் அதுவரையில் அவன் காத்திருப்பானா? ஈசுவரனும், தங்கம்மாவும் காத்திருப்பார்களா?

ஒன்றை மட்டும் அவள் ஒப்புக் கொண்டாள். குடும்பத்தின் விருப்பத்துக்கு மாறாக அல்லது எதிராக அவள் செயல்பட்டால் ஊர் சிரிக்கும். அவளைப் பார்த்துச் சிரித்தால் அவள் கவலைப்படமாட்டாள் கொடி கட்டிப் பறக்கும் ஒரு கௌரவமான பணக்காரக் குடும்பத்தைக் கண்டு சிரிக்கும். மறுபடியும் நாராயணனுக்குப் பெண் கொடுக்க, அதே அந்தஸ்தில் உள்ள எவரும் முன் வர மாட்டார்கள் மெத்தத்தில் குடும்ப மானம், பறக்க நாராயணனுக்குத் துரோகம் செய்வதுபோல நடந்து கொள்ள அவளே காரணமாவாள்.

இப்படிப்பட்ட தண்டனையை பாரதி நாராயண னுக்குத் தன்னையும் மீறி அளிக்கத் துணிகிறாள். இது அவசியம்தானா?

டாக்டர் பட்டம் வாங்கும் எண்ணத்தையே கை விட்டால்? நினைத்துப் பார்க்கவே பாரதிக்குப் பிடிக்க வில்லை.

இதே பாலக்காடு.

இதே பள்ளிப்புரம்.

இதே வீடு.

உப்புச்சப்பில்லாத வாழ்க்கை. நாள்கள் நகராது. அவள் நகர்த்த வேண்டும் சகஸ்ரத்தின் சரித்திர புராணங் களைக் கேட்கவேண்டும். அத்தையின் சொல்லம்புகளுக்கு எதிர்க்கணை விடவேண்டும். பாட்டி பழைய கதைகளுக்கு இழுத்துப் போவாள். நாராயணன் என்கிற கணவன் வருவான்; போவான். ஓர் இரவு இல்லாவிட்டால் ஓர் இரவு முதல் இரவாக அமையும் யார் கண்டார்கள். அவள் தாய்மைக் கோலத்துக்கே ஆளாக வேண்டி வரும்.

இந்தக் கசப்பான வாழ்க்கை எங்கே? ஆங்கில இலக்கியம் எனும் மகா சமுத்திரத்தில் மூழ்கித் திளைத்து முத்துகள் பலவற்றை எடுத்து ரசிப்பது எங்கே?



சற்றே மறந்து போயிருந்த தேவகி மீண்டும் கண் முன் வந்தாள். அவள் டெலிபோன் செய்தால் உடனே அவள் வீட்டுக்குச் செல்லவேண்டும். ஒருவேளை அவளுடைய பிஎச்.டிக்கு தேவகியே வழி வகுக்கலாம்; ஒரு கருவியாக அமையலாம்.

அவளுடைய கண்ணிதழ்கள் சோர்வுற்று மெல்ல மெல்ல இறுகிக் கொண்டன. ஆனால் அப்போதும் மன உறுதி கனவில் தலை நீட்டியது.

கண் விழித்தபோது காலை வெயில் ஜன்னல் மூலமாக அறையை ஒளிமயமாக்கியது.

பாரதி எழுந்தாள். முந்தின நாள் தாமதமாக எழுந்த மைக்கு எல்லோரும் முகம் சுளித்தார்கள். இன்றும் சுளிக்கப் போகிறார்கள். அவள் கவலைப்படமாட்டாள்.

மாடிப் படியில் இறங்கி முன் தாழ்வாரத்தை அடைந் தாள் தரைமேல்தரைமீது சப்பணமாகத்தாத்தா உட்கார்ந் திருந்தார்.

அவரைப் பாராமல் பாரதி செல்ல முயன்றாள்.

''பொண்ணே!''

நின்றாள்.

''என்ன தாத்தா?''

''தாத்தான்னா என்னமோ மாதிரி இருக்கு பாட்டாப் பான்னுதான் என்னைக் கூப்பிடுவா!''

''இனிமே அப்படிக் கூப்பிடறேன் ''

''நோக்கு ஒடம்பு சுகமில்லையோ?''

''அப்படி ஒண்ணும் இல்லே ''

''க்ளாக்கைப் பாரு. மணி ஒம்பதே கால்...இத்தற நேரம் கழிச்சுத் தூங்கி எழுந்திருக்கலாமா?''

''நான் தூங்கப் போறப்ப ரொம்ப நேரம் ஆயிடுத்து.''

''எப்பப் போனாலும் ஆறு மணிக்குள்ளே எழுந்திருக்கணும். உச்சியார்த்தத் தூங்கிச் சரியாக்கிக்கலாம்.''

''சரி தாத்...பாட்டாப்பா.''

''ஒன் நல்லதுக்குத்தான் சொல்றேன். இந்நைக்கு அடுக்களையில் ஆர் போய் காப்பி போட்டா தெரியுமோ? என் புள்ளை ஈச்சா.''

''இனிமே இப்படி நடக்காமப் பார்த்துக்கறேன்...''

''சரி போய் பல் தேய்ச்சுக் காப்பி குடி. பாட்டீம்மா கலந்து தருவள்.''

''சரி.''

''ஏன்னு கேளேன், பொண்ணே?''

''ஏன், பாட்டாப்பா?''

''ஒன அத்தை...இப்ப அத்தை அல்ல... மாமியார். ஒம் பேர்ல சீறி விழுவாள்.''

''சரி பாட்டாப்பா...''

''இங்க வா.''

பாரதி அருகே சென்றாள்.

''வந்தபுதுசில அவளும் கார்த்தால நேர்த்த எழுந்திருக்கலே. ஏழு, ஏழரைக்குத்தான் எழுந்திருப்பள். சொல்லிச் சொல்லி அவள் சரியாயிட்டாள்...நீயும் சரியாயிடுவே... ஹங் இன்னொரு வர்த்தமானம்.''

''வர்த்தமானம்'' என்றால் என்ன என்று பாரதிக்குப் புரியவில்லை. அர்த்தம் கேட்கலாம் என்று யோசித்தாள். ஆனால் தாத்தாவே தொடர்ந்தார்.

''நேத்தைக்கு சகஸ்ரத்தோட ஆத்தில தேவகிங்கற பொண்ணும், நீயும் பேசிண்டிருந்தேளாம். அவ போன் பண்ணினா.''

''என்ன சொன்னா பாட்டாப்பா?''



''பதினொண்ணு மணிக்கு வர்றாளம். ஒன்னை ரெடியா இருக்கச் சொன்னாள்.''

''இப்பப் போய் பல் தேய்ச்சுக் குளிச்சுடறேன் பாட்டாப்பா.''

முந்தின நாள் குளிக்காமல் சமையலறையினுள் பிரவேசிக்க முயன்றபோது, தங்கம்மா சீற்றத்துடன் அவளைத் தடுத்து நிறுத்தினாள். இன்று அவளைத் தடுத்து நிறுத்த முடியாது.

சமையலறை வெறிச்சோடியது.

அவள்தான் சமையல் வேலையை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று முந்தின தினம் தங்கம்மா கட்டளையிட்டிருந்தாள் இன்று பாட்டியையும் காணோம்.

காப்பியைக் கலந்து குடித்துவிட்டுத் தாழ்வாரத்துக்கு வந்தபோது, வேலைக்காரி தாட்சாயணி அவளை அழைத்தாள்.

''அம்மை நின்னை விளிக்குன்னு'' என்றாள்.

''அப்படின்னா என்ன அர்த்தம்? எனக்குப் புரியலே.''

''மனசிலாயில்லா, அல்லே.... நாராயணன் சாமியிண்டே அம்மை தொழுத்துப் பெரையில் இண்டு. விளிக்குன்னு.''

இப்போது புரிந்தது

தாத்தா போகவேண்டாம் என்று அவளை எச்சரித்திருந்தார். ஆனால் இப்போது அத்தையே வரச் சொல்லி இருக்கிறாள். என்ன செய்வாள்? தலையைச் சீவிடுவாளா? அதையும் பார்ப்போமே!

தொழுவத்தில் ஒரு பத்திரிகையும் கையுமாக தங்கம்மா உட்கார்ந்திருந்தாள்.

''அத்தே எதுக்குக் கூப்பிட்டீங்க?'' என்றாள் பாரதி.

தங்கம்மா அவளைக் கண்டதும் எழுந்து நின்றாள்.

''வாங்கோ... வாங்கோ பாரதி! சுகமா, சௌகரியமா இருக்கீங்களா... இந்த வீட்ல நானும், இப்ப உங்களை அழைக்க வந்தாளே தாட்சாயணி, அவளும் சமம். நீங்க யசமானி அம்மா. அதான் எழுந்து நின்னேன்.''

பாரதி, எட்டடிப் புலிக்குப் பதினாறு அடியாக மாறினாள்.

''பரவாயில்லே நீ உட்காரலாம். தாட்சாயணியும் நீயும் சமம்னு உன் வாயிலேந்து வந்ததைக் கேட்கவே திருப்தியா இருந்தது. இனிமே யசமானிகளைக் கூப்பிட்டு வரவழைக்கிற வழக்கத்தை வைச்சுக்காதே.''

சொல்லிவிட்டு பாரதி நகர்ந்தாள்.

''நில்லுடீ!''

நின்றாள். பிறகு,

''என்ன அத்தே விரட்டறே...? ரெண்டாம் நாளா நேரம் தெரியாமத் தூங்கிட்டேன். தப்புத்தான். மெல்ல மெல்லத் திருத்திக்கிறேன். நீ வந்த புதுசுல எத்தனை மணிக்குத் தூங்கி எழுந்தேன்னு எனக்குத் தெரியும். இப்ப என்ன வேணும்?''

''யார் பொங்கிப் போடறது?''

''எனக்கு சாதம் மாத்திரம்தான் பொங்கிப் போடத் தெரியும். இன்னிக்கு எல்லோரும் மோர் சாதம் சாப்பிடட்டும்.''

தங்கம்மா அயர்ந்து போனாள். பிறகு மெல்லச் சமாளித்துக் கொண்டு, ''அன்னிக்கே முட்டிண்டேன் என் அண்ணா பொண்ணுங்கற காரணத்துக்காக சம்பந்தம் பேச வேண்டாம்னு! யார்! கேட்டா. இப்ப அனுபவிக்கிறேன்'' என்றாள்.

''யார் யாருக்கெல்லாமோ லலிதகலா அகாடமியில் நடிப்புக்குப் பட்டமும், பரிசும் கொடுக்கறாங்க. உங்க



நடிப்புக்கு எப்படி ப்ரைஸ் வராமப் போச்சு! அப்பப்பா என்ன நடிப்பு. என்ன நடிப்பு!''

''என்னடீ உளர்றே?''

''நங்கவரம் வந்தபோது எப்படியெல்லாம் குழைஞ்சீங்க. இங்க வந்த அன்னிக்கு இதோபதேசம் செஞ்சீங்க. கோயிலின் புராணத்தை பிரவசனம் பண்ணினீங்க... இதெல்லாம் நடிப்பு இல்லேன்னா எது நடிப்பு? இப்ப சீறி விழறீங்களே இதுதான் நடிப்பா? அன்னிக்கு நல்லவளா நடிப்பு, இன்னிக்கு வில்லியா நடிப்பா?''

''உன் உடம்பு பூராத் திமிர்.''

''திமிரோட திமிர் மோதறதை உங்களால ஜீரணிக்க முடியலே இல்லே?''

''இன்னிக்கு என் அண்ணாவுக்கு லெட்டர் போடறேன்.''

''கவரா, கார்டா, இன்லண்டா? என்னை உடனடியா அழைச்சுட்டுப் போக எழுதப் போறதுன்னா அது அனாவசியச் செலவு. ஒரு வார்த்தை சொன்னா, நானே போயிடறேன்.''

''இப்ப என் முன்னால நிக்காதே போ!''

''போறேன். ஆனா அதுக்கு முன்னாடி ஒண்ணு சொல்லிடறேன். இந்த மாமியார் பூச்சாண்டி எல்லாம் எங்கிட்ட வைச்சுக்காதீங்க. வேற வழி தெரியாத, சாதுவான பெண்களிட்டதான் மாமியார் விளையாட்டெல்லாம் நடக்கும். நான் வேற வழி தெரியாத பெண் இல்லே, சாதுவும் இல்லே. யார் வம்புக்கும் போக மாட்டேன். ஆனா வம்புக்கு இழுத்தா பதிலடி கொடுப்பேன் இதை நன்னா ஞாபகம் வைச்சுக்குங்க...'' என்றாள் பாரதி. பிறகு தொடர்ந்து, ''இனிமே நீங்க எனக்கு அத்தை இல்லை. என் கழுத்தில தாலி ஏறினப்பவே அந்த பந்த சொந்தம் அறுபட்டிருக்கணும். கொஞ்சம் லேட்டா அதை அறுத்து எறிகிறேன்'' என்றாள்.

திக்பிரமை பிடித்தவளைப் போல தங்கம்மா உட்கார்ந்திருக்க பாரதி அலட்சியமாக வெளியேறினாள்.

டில்லியில் எத்தனையோ மாமியார்களின் கொடுமைகளுக்கு ஆளான பெண்களை அவள் பார்த்திருக்கிறாள். சில மாமியார்கள் மருமகள்களை எரித்துச் சாம்பலாக்கியதுக்காக சிறை சென்றுள்ளதையும் அறிந்திருக்கிறாள். அதே சமயம் ஒரு சில மருமகள்கள் மாமியாரை ஓட ஓட விரட்டி அடித்திருப்பதையும் கேள்விப் பட்டிருக்கிறாள். ஒரு செய்தித்தாளில், மருமகள் மாமியாரின் கழுத்தை நெரித்துக் கொல்ல முயன்ற செய்தியையும் படித்திருக்கிறாள்.

இங்கே வரதட்சணைப் பிரச்னை இல்லை. ஏழைப் பெண் என்கிற காரணம் இல்லை. அழகோ, படிப்போ இல்லாத பெண் என்ற எரிச்சலும் இல்லை. ஆனால் மாமியார் எதையோ மனதில் வைத்துக் கொண்டு அவளை வதைக்கப் பார்க்கிறாள். மேற்படிப்பு விஷயத்தில் அவளே வதைப்பட்டுக் கிடக்கும்போது, இன்னொரு பக்கம் இப்படி ஒரு வதையா? இதற்குப் பாரதியா அஞ்சுவாள்?

அவள் மீண்டும் முன் தாழ்வாரத்துக்கு வந்த போது தரைமேல் தரையில் தாத்தா இல்லை. காலையிலிருந்தே பாட்டியைக் காணோம். மாமனார் ஈசுவரன் புறப்பட்டுச் சென்றிருக்க வேண்டும்.

அவளுக்கு ஊஞ்சலில் உட்காரப் பிடிக்கவில்லை. அன்றைய தினசரியை எடுத்துக் கொண்டு நாற்காலியில் உட்கார வந்தாள். சுவர்க்கடிகாரம் யதேச்சையாகக் கண்ணில் பட்டது.

மணி பத்தரை.

பதினொன்றுக்கு தேவகி வருவாளே! பேப்பரைப் புறக்கணித்துவிட்டு எழுந்தாள். திடீரென போன் அடித்தது. எடுத்தாள்.

''ஹலோ.''



''ஓ, பாரதி ஐ'ம் தேவகி. குட் மார்னிங்.''

''குட்மார்னிங் தேவகி! ஸாரி கார்த்தால பேச முடியலே.''

''டோண்ட் வொர்ரி... நான் புறப்பட்டிருக்கேன்... லெவனோ க்ளாக்.''

''நான் ரெடியா இருப்பேன்.''

''சாப்பிட உட்காராதே. உனக்கு எங்க வீட்லதான் லஞ்ச்.''

''ஓ கே. ஆனா என்னை நீ நாலு மணிக்கு முன்னால ட்ராப் செய்துடணும்...''

''ஏன்?''

''நாராயணன் என்னை ஷாப்பிங்குக்கு அழைச்சுட்டுப் போறதா சொல்லியிருக்கார்.''

''ஓ.கே. நோ ப்ரோப்ளம்.''

ரிஸீவரை வைத்துவிட்டு பாரதி மாடிக்கு ஓடினாள். நேற்று தேவகி ஜீன்ஸ் அணிந்திருந்தாள். அவளுடைய 'வீட்டில்' சுதந்தரம் இருக்கிறது. இங்கே ஜீன்ஸ் அணிந்து கிராமத்துத் தெருவில் நடந்தால் அவளை ஏற இறங்கப் பார்ப்பார்கள்; சிரிப்பார்கள். மாடியை அடைந்ததும் நிச்சயமாகப் புடவை இல்லை என்று தீர்மானித்தாள்.

அலமாரியைத் திறந்தாள். டில்லியிலிருந்து புறப்படுவதற்கு முன், கான் மார்க்கெட்டில் வாங்கின சல்வார் கமீஸ் கண்ணை அறைந்தது. இன்னும் ஒரு தடவைகூட அணியவில்லை.

ஊதா நிறம் கண்ணாடியில் மின்னுவதாகப்பட்டது.

அவள் கீழே இறங்கி வரும்போது பதினொன்று அடிக்க ஏழெட்டு நிமிடங்கள் இருந்தன.

வீட்டில் தாத்தா பாட்டி இருவரும் இல்லை. தொழுவத்தில் மாமியார் ஒதுங்கி உட்கார்ந்திருக்கிறாள்.

அவளும் வெளியேறி விட்டால் வீட்டை யார் பார்த்துக் கொள்வார்கள்? ஏற்கெனவே எல்லோருடைய பூகச் களிப்புக்கும் இரையாகிவிட்டாயிற்று. பொறுப்பு இல்லாமல் வீட்டைத் திறந்து போட்டுப் போய்விட்டாள் என்ற ஏசல் தேவையா?

முன் பின் யோசியாமல் தொழுவத்தை நோக்கி விரைந்தாள்.

அவனையும் அவளுடைய உடையையும் கண்டு ஒரு கணம் திடுக்கிட்ட தங்கம்மா, வாயால் ஏதும் கேட்க வில்லை.

"நேத்து சகஸ்ரம் சித்தப்பா வீட்டுக்கு என்னைப் பார்க்க தேவகின்னு ஒரு பெண் வந்திருந்தா. இன்னிக்கு நான் அவ வீட்டுக்கு வரணும்னு சொல்லியிருந்தா. இப்ப அவ காரை எடுத்துட்டு வரா. நான் அங்கே போறேன். அத்திம்பேர் அப்புறம் தாத்தா, பாட்டி, யாரும் வீட்ல இல்லை. இதைச் சொல்லிட்டுப் போகத்தான் இப்ப வந்தேன்" என்றாள் பாரதி.

"நாட்சாயணி!" தங்கம்மா கத்தினாள்.

"எந்தா அம்மே?"

"வலியம்மை கமலம் வீட்லே இண்டு. இவ்விடே வேகம் வராம் பறையின்."

"ஆகட்டே அம்மே."

தாட்சாயணி விரைவாகப்பாரதியைக் கடந்து செல்ல, தங்கம்மா முகத்தைத் திருப்பிக் கொள்ள, வீட்டு மருமகள் வாசலை நோக்கி நடந்தாள். சல்வார் கமீஸ் எத்தகைய பாதிப்பை தங்கம்மாவின் மனத்தில் ஏற்படுத்தியுள்ளது என்று கற்பனை பண்ணிப் பார்த்தபோது பாரதிக்கு உள்ளூறச் சிரிப்பு வந்தது.

கார் வந்தது.

பாரதி ஏறிக் கொண்டாள்.



ஆனால் அதற்குள் கிராமவாசிகள் பலபேர் அவளைப் பார்த்து விட்டார்கள்.

# 11

சந்திரா நகர்.

அகலமான ஒரு வீதி.

வீதியில் தள்ளித் தள்ளிக் கட்டப்பட்டிருந்த பல பங்களாக்கள்.

தேவகியின் வீடு உள்ளடங்கி நின்றது. காம்பவுண்டு கேட்டிலிருந்து வீட்டு போர்ட்டிகோவுக்கு நடந்து சென்றால் குறைந்தது ஐந்து நிமிடங்களாவது ஆகும். கிட்டத்தட்ட அரை கிலோமீட்டர் இருக்கும் என்று பாரதி நினைத்தாள். எட்டடி அகலமான காங்க்ரீட் பாதை வளைந்து வளைந்து சென்றது. இருமருங்கிலும் பூச்செடிகள், பற்பல விதமான பூக்களைச் சுமந்து ஆரவாரித்தன. வீட்டின் முன்னால் ஒரு சிறு நந்தவனம். புல்தரை வெல்வெட் போல வழவழப்பாகக்காட்சி அளிக்க நான்கு சிமெண்ட் பெஞ்சுகள் சீராக வைக்கப்பட்டிருந்தன

மாருதியைப் போர்டிகோவில் நிறுத்தி விட்டு, "கம் ஆன் பாரதி!" என்றாள் தேவகி.

"எல்லாமே பிரமாதமா இருக்கு."

"பணம் இருந்தா என்ன வேணும்னாலும் செய்துக் கலாம். இப்ப மொதல்ல ஜில்லுன்னு கூல்டிரிங்க் சாப்பிடறோம். உனக்கு என்ன பிடிக்கும். ஆப்பிள், மாங்கோ, டொமேட்டோ... ஆர் லைம்?"

"எதானாலும் ஓகே."

"எல்லாம் வீட்ல ரெடி பண்ணினது"

"யாரு அம்மாவா?"

''அம்மாவா?'' தேவகி சிரித்தாள். பிறகு ''நோ மதர்.''

''ஐ'ஆம் ஸாரி தேவகி.''

''பட் ஐ'ம் நாட் ஸாரி.''

தேவகி சொல்லும் வார்த்தைகளுக்கு அர்த்தம் புரியாமல் பாரதி விழித்தான்.

''என்னைப் பெத்துப் போட்டுட்டு அம்மா யாரோ ஒருவனோட ஓடிப் போயிட்டா. அந்த யாரோ ஒருவன் என் அப்பாகிட்ட வேலை பார்த்தவன்!''

''ஓ. மை காட்,''

''ஓர் ஆம்பிளை பொண்டாட்டியை விட்டு இன்னொருத்தியோட ஓடிப்போனா அது நியூஸ் இல்லை. பாரதி! ஒரு பொண் புருஷனை விட்டு இன்னொருத்தனோடு சொல்லாமக் கொள்ளாம பணத்தையும் வாரிச் சுருட்டிக் கொண்டு ஓடினாத்தான் நியூஸ். இப்படிப்பட்ட நியூஸை என்னைச் சுமந்தவ, இந்த உலகத்துக்குக் கொடுத்திருக்கா.''

''நாம வேற ஏதாவது பேசுவோம் தேவகி!''

''சில உண்மைகள் கசப்பா இருக்கு இல்லே? எனக்கு ஒரு வயசு நடக்கறப்ப அவ போனா, கொஞ்ச நாள் அப்பா இடிஞ்சு போய் என்ன செய்யறதுன்னு தவிச்சார். ஆனா நான் ஒருத்தி இருக்கேனே? வளர்த்தாகணுமே? அப்புறம் என்ன? யார் யாரோ தந்த பால்லே எல்லாம் வளர்ந்தேன். அப்புறம் க்ளாஸ்கோ, அமுல்...''

''அப்பா...''

''எல்லாத்தையும் மறக்கச் சில பேர் குடிப்பாங்க. சிலபேர் போகப்படாத இடத்துக்குப் போய் வெறியைத் தீர்த்துப்பாங்க. ஆனா எங்கப்பா வியாபாரத்தில தீவிரமா இறங்கினார். அவருக்கு மதுப்பழக்கம் உண்டுதான். ஏன் நான்கூட ஒயின், ஷாம்பெயின், பீர் எல்லாம் குடிச்



சிருக்கேன். நானும் அப்பாவுமா சேர்ந்து உட்கார்ந்தே குடிச்சிருக்கோம் ஆனா அவர் என்னிக்கும் தன்சோகத்தை மறக்கக் குடிக்கலே...இதெல்லாம் இப்ப ஏன் சொல்றேன்னா, நீ என் சிநேகிதியா வருவேன்னு எனக்குத் தோணறது. என் வரலாறு என்னன்னு உனக்குத் தெரியணும்னும் நினைச்சேன்.',

''ஜூஸ்!''

''ஓ, நீ திசை மாத்தறே இல்லே?''

''ஒரு நாயர் பொண்ணா இருந்துக்கிட்டு எப்படி உன்னால இவ்வளவு நன்னாத் தமிழ் பேச முடியறது.''

''அதான் நேத்தே சொன்னேனே, கோயமுத்தூர்ல இருந்திருக்கேன்னு'' என்ற தேவகி ஃப்ரிஜ்ஜுக்குச் சென்றாள்.

இரண்டு கண்ணாடித் தம்ளருடன் திரும்பி வருகையில்.

''நீ ஹாட் ட்ரிங்க்ஸ் சாப்பிட்டதுண்டா?''

''ரெண்டு மூணு வாட்டி பீர் குடிச்சிருக்கேன். அதன் வாடை பிடிக்கலே. மத்த ஸ்டூடண்ட்ஸோட பார்ட்டிக்குப் போனா நிச்சயமா ஒயினோ, பீரோ இருக்கும்.''

''உனக்காகச் சாப்பிடணும்னு தோணியிருக்கா!''

''இல்லை.''

''ஜூஸ் நன்னா இருக்கா?''

''எக்ஸலண்ட்.''

''சீசனுக்குத் தகுந்தாற்போல ஜூஸ் தயார் செய்வேன்.''

'என்ன, தயார் செய்வியா?''

''ஆமாம்; ஏன்?'' என்ற தேவகி சிரித்துக் கொண்டே ''வீட்ல சமைக்கலாம்னா ஜூஸ் தயார் செய்யக் கூடாதா?'' என்றாள்.

''சமையலா; நீதான் செய்யறியா?''

''வீட்டைக் காவல் காக்க எனக்குத் தைரியம் பத்தாது. அதனால வாட்ச்மேன். வீடு முழுதும் பெருக்கி மெழுகி, கண்ணாடி ஜன்னல்களைத் துடைத்து, அல்லப்போது கர்ட்டன்களை மாதத, என் உடம்பில சக்தி இல்லை. அதனால ரெண்டு வேலைக்காரிகள் அவசியம். ஆனா சமையல்? ஒருத்திக்குச் சமைச்சுப் போட எதுக்கு ஆள்?'' சொல்லி விட்டுத் தேவகி சிரித்தாள்.

''நீ ஒரு காரெக்டர்.''

''நம்மால எதெல்லாம் சாத்தியமோ அதையெல்லாம் நாமதான் செய்துக்கணும். இது நான் என் அப்பாகிட்ட கத்துகிட்ட பாடம்.''

''அப்பா இங்கே வர்றதுண்டா?''

''எப்பவாவது. ஆனா நாள் விட்டு நாள் எங்கே இருந்தாலும் ராததிரி ஒன்பது மணிக்கு ஃபோன்ல பேசுவார். ஒரு வாட்டி லண்டன் ஏர்போட்ல இருந்தார். அப்ப நம்ப ஊர்ல ராத்திரி ஒன்பது மணி. ஏர்போர்ட் லேந்து ஃபோன் பண்ணினார்.''

''அவரும் ஒரு காரெக்டர்.''

''நாம எல்லாருமே காரக்டர்கள்தான் பாரதி! ஒவ்வொருத்தர்ட்டேயும் ஏதானும் ஒரு தனி அம்சம், அது நல்லதோ கெட்டதோ இருக்கும். உங்கிட்ட ஒரு தனிக் குணம் இருக்குன்னு எனக்குப் படறது.''

''என்ன அது?''

''யாராவது ஏதானும் மனசை நோக அடிக்கிற மாதிரிப் பேசினா உனக்குச் சுருக்குன்னு கோபம் வரும்.'

''கரெக்ட். ஆனா உனக்கு எப்படித் தெரிய வந்தது? நேத்துதான் முதல் தடவையா மீட் பண்ணியிருக்கோம்.'



''நான் சில வார்த்தைகள் பேசினப்ப திடீர்னு உன் முகம் மாறிப் போச்சு.''

''என்ன வார்த்தைகள்?''

''பிஎச். டி. பண்ண முடியாதுன்னா எம்ஃபில்லுக்கே போயிருக்கப்படாது. பாதிக்கிணறு தாண்டற மாதிரி இருக்குன்னேன்.''

''உண்மைதான் எனக்குச் சுருக்குன்னுதான் பட்டது.''

''பிஎச்.டி பண்ணப் போறியா?''

''தீவிரமான ஆசை இருக்கு. அதே தீவிரத்தில் எதிர்ப்பும் இருக்கு. நான் செய்ஞ்ச பைத்தியக்காரத்தனம் அவசரப்பட்டுக் கலியாணத்துக்குச் சம்மதிச்சதுதான்...''

''ஏன் அதுக்கு முன்னால அம்மா, அப்பா ஆட்சேபிச்சாங்களா?''

''அப்பாகிட்ட போதிய நிதி வசதி இல்லாமப் போச்சு.''

''ஓ.கே! பாரதி உனக்கு டாக்டரேட் வாங்கணும்ங்கற துடிப்பு இருக்கு இல்லியா?''

''ஷ்யூர்!''

''அப்புறம் என்ன செய்யலே:''

''அது தெரியலே.''

தேவகி சிரித்தாள். கேலி ஒலித்தது.

''ஒரு கோளேஜ்ல புரொஃபசராப் போகணும்னு தோணலையா?''

''எனக்கு டீச்சிங் லைன் பிடிக்கலே...''

''அப்ப என்ன செய்யலே?'!

''நம்ப நாட்ல எத்தனையோ இங்கிலீஷ் பேப்பர், மாகஸின்ஸ் இருக்கு. நிறைய கட்டுரைகள் எழுதலாம். புத்தக விமர்சனங்கள் செய்யலாம்.''

''இது சரியான குறிக்கோளாகப் படலே எனக்கு.''

''அப்படீன்னா?''

''டாக்டர் பட்டம் வாங்கணும்ங்கறது ஓர் ஆசை. உன் விஷயத்தில பேராசை. ஆனா அதுக்கு அப்புறம்தான் லட்சியம் வர்றது. லட்சியமே வைச்சுக்காம வெறும் ஆசை மட்டும் இருந்துட்டா, அது தற்பெருமைக்காக ஏதோ செய்யற மாதிரித்தான் இருக்கும்.''

''நீ குழப்பறே தேவகி.''

''நீதான் குழம்பிப் போயிருக்கே. நான் இப்ப ஜெர்மன் படிக்கிறேன். அது என் ஆசைக்கு லட்சியத்துக்கு இல்லே. எம்.ஏ. படிச்சிருக்கிற நான் எம்ஃபில் படிச்சு தொடர்ந்து பிஎச்.டியும் பண்ண நினைக்கிறேன். எதுக்குத் தெரியுமா நான் படிச்சதை நூற்றுக்கணக்கான பேர்களுக்குச் சொல்லிக் கொடுக்க! யார் கண்டா என் அப்பா எனக்காக ஒரு காலேஜ் கட்டறதுக்குக்கூடச் சம்மதிப்பார் நீ பிஎச்.டி. பண்றதும் ஒண்ணுதான். பண்ணாம இருக்கறதும் ஒண்ணுதான். ஹங்... இப்ப என் வார்த்தைகள் உன் மனசில சுருக்குன்னு படறது. உன் முகம் சொல்றது.''

பாரதிக்கு என்ன பதில் சொல்லிச் சமாளிப்பது என்று தெரியவில்லை,

''நேத்து உன்னை மீட் பண்ணினப்புறம் நான சிந்திக்க ஆரம்பிச்சேன். இவளை மாதிரி நானும் பாதிக் கிணறு தாண்டினவளா ஆயிட்டா? ரெண்டு வருஷம் வேஸ்ட்தானே? எதுக்கு எம்.ஃபில் படிக்கணும்? அப்பாவுக்கு ஏற்கனவே ஹார்ட் டரபிள் வந்து அமெரிக்காவில பைபாஸ் சர்ஜரி நடந்தாச்சு. பாதி படிச்சுட்டிருக்கறப்ப அவருக்குத் திடீர்னு ஏதானும் நேர்ந்துட்டா, அப்புறம் இவ்வளவு பெரிய கம்பெனியை யார் நடத்துவாங்க. இப்படியெல்லாம் சிந்திச்சேன்...''

''அப்புறம்?,'



''இன்னும் முடிவு எடுக்கலே. எனக்கு உண்மையான லட்சியம் இருக்கு பாரதி. பி.எச்.டி. பண்ணி காலேஜ்ல புரொஃபசரா ஆகணும்னு. ஆனா அதே சமயத்தில் இதைவிடப் பெரிய லட்சியத்தை என் அப்பா என் மடி மேல போடுவாரோங்கற பயமும் இருக்கு, அப்படிப் போட்டுட்டா, என் தனிப்பட்ட லட்சியத்தை மறந்துடுவேன்.''

''யூ மீன்...''

''எனக்கு என் அப்பாதான் முக்கியம். ரெண்டு பேரும் அடிக்கடி ஒருத்தரை ஒருத்தர் பார்த்துக் கொள்றதில்லைன்னாலும் எங்க ரெண்டு பேர் மனசுகளும் சதா சர்வகாலமும் பேசிட்டேதான் இருக்கு.''

''கம்பெனியை நடத்த நீ ஒருத்திதான் இருக்கியா?''

''இப்ப நான் அதில ஒரு டைரக்டர். அப்பாவோட பங்கு எழுபது சதவிகிதம். என்னோடது இருபது. பாக்கி பத்து பத்து பேருக்குக் கொடுத்திருக்கார். அந்தப் பத்துப் பேர்ல ரெண்டு பேர் அவருடைய காரியதரிசிகள். மூணு பேர் பிராஞ்ச் மானேஜர்கள். பாக்கி அஞ்சு பேர் குமாஸ்தாக்கள். இவர்கள் எல்லோரும் அடி நாள்லேந்து அப்பாவோட சுகத்திலும், துக்கத்திலும் பங்கு கொண்டவர்கள்.''

வாய் திறவாமல் பாரதி கேட்டுக் கொண்டு வந்தாள்.

திடீரென்று தேவகி ஒரு கேள்வி கேட்டாள்.

''உனக்கு பிஎச்.டி பண்ண ஆசை இருக்கு ஓ.கே. ஆனா அதுக்கு யார் தடையா இருக்காங்க?''

''என் ஹஸ்பெண்ட், என் ஃபாதர் இன் லா.''

''என்ன காரணம்?''

''குடும்பத்தில் கால் வைச்சதும் படிப்பு காரணமாக வெளியேறி இரண்டு வருஷம் இருக்கிறது சரியில்லைன்னு

சொல்றாங்க... நான் படிச்சு முடிச்சப்புறம் அதனால எனக்கு மட்டும்தான் பெருமை இருக்குமே தவிர வேற யாருக்கும் அது பிரயோசனப்படாதுங்கறார் என் மாமனார்.''

''கரெக்டாதான் சொல்லியிருக்கார்.''

''ஆனா என்னால இந்த ஊர்ல, இந்த கிராமத்திலே இருக்க முடியும்னு தோணலை.''

''ஏன்?''

''டில்லியில பொறந்து வளர்ந்து டில்லி நாகரிகத்தை அனுபவிச்ச என்னால, எப்படி ஒரு சின்ன இடத்தில அடைஞ்சு கிடக்க முடியும்?''

''இங்கேர்ந்து பிழைப்புக்காக டில்லி, மெடராஸ், பாம்பேன்னெல்லாம் போறாங்களே அவங்கள்ளாம் அட்ஜஸ்ட் பண்ணிக்கலையா? நீ வேணும்னா டில்லியில பிறந்திருக்கலாம். உன் அப்பா பிழைப்புக்காகத்தானே டில்லி போனார்?''

''நீ சொல்றதெல்லாம் சரிதான் தேவகி...ஆனா...''

''இதில ஆனா ஆவன்னாவுக்கு இடமில்லே பாரதி. ஓர் ஆம்புள்ளை பிழைப்புக்காகப் போய் அட்ஜஸ்ட் பண்ணிக்கறான். ஆனா நீ? வாழ்க்கையிலே ஒருத்தனுக்கு மனைவியாகி, உன் பிழைப்பை நடத்த வந்திருக்கே. டில்லியில பழக்கம் ஏற்பட என்ன காரணம்? நீ நாலு வீடுகளுக்குப் போனே...நாப்பது வீடுகளை எட்டிப் பார்த்தே. இது சின்ன வயசில ஆரம்பிச்சது. இப்ப ஒரு புது மனைவியா நீ பொறந்திருக்கே...இனிமே நீதான் மத்தவங்களைப் பார்த்து அவங்களோட பழகி இந்த ஊரை உன்னுடையதாக்கிக் கொள்ளணும். உனக்குக் கோபம் வரும்படியாச் சொல்றதுன்னா, நீ இன்னும் உன் மூக்கு நுனியைத் தாண்டி எதையும் பார்க்கலே.''



பாரதி தளர்ந்து போனாள். உண்மையில் தேவகி மீது கோபம் வரத்தான் வந்தது. ஆனால் அது முட்டாள்தனமான கோபமாகப் பட்டது.

''இங்கே பேசற தமிழே நாராசமா ஒலிக்கிறது.''

தேவகி சிரித்தாள்.

''இது தமிழுக்கு மட்டுமில்லே. எல்லாபாஷைகளுக்கும் உண்டு பாரதி. பாலக்காட்டு மலையாளம் வேறு கொல்லம் திருவனந்தபுரம் மலையாளம் வேறு ஏன் ஹிந்தியை எடுத்துக் கொள்ளேன். டில்லியிலஒரு மாதிரி, ராஜஸ்தான்ல ஒரு மாதிரி பீஹார்ல, இன்னொரு மாதிரி. இதெல்லாமா உனக்கு உன் வாழ்க்கையில் ப்ரோப்ளம்? உன் ஹஸ்பென்ட் எப்படி நடத்தறார், அது முக்கியம். ஒருவரை ஒருவர் சரியாப் புரிஞ்சுகிட்டா ஒருப்ரோப்ளமும் இல்லை பாரதி''

''என் அவஸ்தையை என்னாலச் சரியாச் சொல்ல முடியலே, தேவகி.''

''வா, சாப்பிடப் போகலாம். உனக்கு நீயேதான் ப்ரோப்ளம். அதை நீயேதான் தீர்த்துக்கணும்...'' என்ற தேவகி, ''ஃப்ரைட் ரைஸ், குர்மா, ஆலு மட்டர், நான், சாலட், சூப் எல்லாம் ஹாட்பாக்கிலே வைச்சிருக்கேன். இதெல்லாம் டில்லியை நினைவுபடுத்தறது இல்லியா?'' என்றாள்.

''உம்'' என்றாள் பாரதி,

''இந்த ஊர்ல ஒரு ராஜஸ்தானி ஓட்டல் இருக்கு. ஒரு நாள் அழைச்சுட்டுப் போறேன். புல்கா, சப்ஜி, பேல் பூரி எல்லாம் ஹைகிளாஸா இருக்கும்.''

பாரதி எதுவும் பேசவில்லை.

''நான் நறுக்குத் தெரிச்சாப்பல மனசில் பட்டதை அப்பட்டமா பேசினது உனக்குப் பிடிக்கலே, இல்லியா? பாரதி.''

''நான் எதையோ எதிர்பார்த்து இங்கே வந்தேன்.''

''எதை?''

''உன் எம்.ஃபில்லைப் பற்றிப் பேசுவாய்,நீ மெட்ராஸ் போறதானா நானும் உன்கூட என் பிஎச்.டிக்குப் புறப்படலாமான்னெல்லாம் யோசிச்சுட்டு வந்தேன்.''

''மொதல்ல உனக்கு வாழ்க்கையில என்ன தேவை? என்ன லட்சியம்? இதெல்லாம் தீர்மானம் செய். பாரதி! பாலக்காடு, பள்ளிப்புரம் இதெல்லாம் அற்ப சமாசாரங்கள். நம்மை மீறின விஷயங்களா இது? நீ பாதிக்கிணறு தாண்டியவன்னு சொன்னது தப்போன்னு இப்பப் படறது!''

''தேவகி நீ என்ன சொல்றே?''

''நீகிணத்துக்குள்ளேயே இருக்கிற தவளை.கோவிச்சுக்காதே. உன்னை எனக்கு ஏனோ ரொம்பப் பிடிச்சிருக்கு. அதான் உரிமையோட பேசறேன்.''

சாப்பாடு முடிந்தது.

இரண்டரை மணிக்கு வீட்டை விட்டுக் கார் புறப்பட்டது. பள்ளிப்புரத்தை நோக்கி வண்டி செல்லாமல், பாரதிக்குத் தெரியாத ஒரு பாதையில் கார் ஓடி ஒரு வீட்டின் முன் நின்றது.

அங்கே பாரதி திகைத்துப் போகும்படியான அனுபவம் அவளுக்கு உண்டாயிற்று.

## 12

ஈசுவரன் பன்னிரண்டு மணிக்கு வீடு திரும்பினார். ஜிப்பாவைக் கழற்றியபின் கை கால் அலம்பி விட்டு, அவர் வீட்டுக்கு நேர் எதிரே நிற்கும் தம்பி சகஸ்ரத்தின் வீட்டுக்குச் சென்றார்.



''வா அண்ணா, ஒனக்காகத்தான் காத்துண்டிருக்கேன். ராஜி! அண்ணா வந்தாச்சு எலை போடு!''

''அண்ணா காரை விட்டு எறங்கி ஆத்துக்குள்ள போறப்பப் பாத்தேன். அப்பவே எலை போட்டாச்சு.''

''வா அண்ணா சாப்பிடலாம்.'' இருவரும் சாப்பாட்டு மேஜைக்கு வந்தார்கள்.

ராஜி முதலில் பச்சடி பரிமாறி விட்டு உள்ளே சென்றாள்.

''மனசுக்குச் சுகமில்லைடா சகஸ்ரம்,''

''என்னாச்சு?.'

''இப்ப ஆத்துக்கும் போனேன். அப்பா தூங்கிண்டிருக்கார். அம்மை சிவராமன் ஆத்லஇருக்கான்னு தாட்சாயணி சொன்னா. அந்தப் பொண் எங்கே போனான்னு தெரியலை.''

சாதம் மற்றும் கறியுடன் வந்த ராஜி, ''பாரதி தேவகியோட அவாத்துக்குப் போயிருக்கா'' என்றாள்.

''எந்த தேவகி? சந்திரா நகர் தேவகியா?'' என்றார் ஈசுவரன், இலையில் விழுந்த கறியை ருசி பார்த்துக் கொண்டே.

''ஆமாம் 'நேத்தைக்கு அவ இங்க வந்திருந்தா... பாரதி எம்ஃபில் அல்லவா? தானும் எம்ஃபில் படிக்கலாமோங்கற எண்ணம் அவளுக்கு இருக்கு. அது காரியமா வந்திருந்தா.''

''நான் பெரிய தப்பு சேதூட்டனோன்னு மனசு தவிக்கிறது, சகஸ்ரம்.''

''மின்னால சாப்பிடு அண்ணா. நீ ஒரு தப்பும் சேயலை.''

''இல்லைடா. ஆத்யமே தங்கம் வேண்டாம்னா. கோந்தைக்கும் அத்ற இஷ்டமில்லை. அழகா இருந்தா

மாத்றம் போராது. ஆத்துக்கு அனுசரணையாவும் இருக்கணும்னான். நான்தான் கேக்கலை. கொஞ்சம் பிடிவாதமா இருந்துட்டேன். தங்கவரத்துப் பொண்ணுனு வந்தா நல்லதுன்னு நெனைச்சேன்.''

''கோந்தைக்கு அவளைப் பிடிக்கலையா அண்ணா? அவன் எங்கிட்ட பேசறப்ப பாரதியைப் பத்தி ஒண்ணும் குறைவாச் சொல்லலியே?''

''கோந்தை எங்கிட்டேயும் ஒண்ணும் சொல்லலை. நேத்தைக்கும், இன்னைக்கும் ஒம்பது மணிக்கு அப்புறம் தான் தூங்கி எழுந்தா.''

''இது பெரிசாப் படலை.''

''எனக்கும் படலை. புதுசா வந்த இடத்தில எப்படி எப்படியெல்லாம் நடந்துக்கணும்னு அவளுக்குத் தெரியாதைக்கு இருக்கலாம். சம்மதிக்கறேன். ஆனா தங்கத்து கிட்ட வாயாடறாளோன்னு தோணுறது.''

''மன்னி சொன்னாளா?''

''ஆமாம்''

''தர்க்கமா?''

''ஆமாம்.''

''அண்ணா நான் ஒண்ணு சொன்னா நீ எங்கிட்ட தேக்ஷயப்படப்படாது. அண்ணா கலத்தில் பபபடாம் இல்லை, ராஜி கொண்டு வா...''

''உங்கிட்ட நான் என்னடா தேக்ஷயப்பட்டிருக்கேன்.''

''ஒனக்கு ஒறமை இருக்கா...? மன்னி வந்த புதுசில அம்மை சொன்னதைக் கேக்கமாட்டா. தர்க்கம் பண்ணுவா. ஆனா அப்றம் தன்னைச் சரியாக்கிண்டா.''

''இது தங்கம்மா மாதிரி கேஸ் இல்லை, சகஸ்ரம்.''

''எப்படிச் சொல்றாய்?''



''பாட்டி இந்தக் குடும்பத்தில் மின்னால வந்தா, அப்புறம் நீ வந்திருக்கே. இப்ப நான் வந்திருக்கேன். நீ என்னைவிட ஸீனியர், அம்படத்தான்னு பாரதி தங்கத்திடம் சொன்னாளாம்.''

இதைக் கேட்டதும் சகஸ்ரம் சிரித்தான். ராஜியாலும் சிரிப்பை அடக்க முடியவில்லை.

''என்னடா நான் ஸீரியஸாகப் பேசிண்டிருக்கேன் நீங்க ரெண்டு பேரும் சிரிக்கறேள்?''

''கோவிச்சுக்காதே அண்ணா. நம்ப அப்பா இருக்கார். அவருக்கு மூத்தபிள்ளையா நீ இருக்கே. ஒனக்கு பிள்ளையா கோந்தை. அதே மாதிரிதானே, அம்மை, மன்னி, பாரதி மூணு பேரும்? ஒருத்தர் பின்னால ஒருத்தரா வந்தவா தானே?

''அப்ப நீ பாரதிக்குப் பரிஞ்சு பேசறாயா?''

''ஹேய்...நான் ஆருக்கும் பரியவில்லை, அண்ணா! பாரதி இப்படிச் சொல்லியிருக்கணும்னா, மன்னி அதுக்கு மின்னால என்ன சொன்னாளோ?''

''தெரியாது.''

''நீ ரெண்டு பேரையும் விசாரிக்கறது நல்லதுன்னு நேக்குத் தோண்றது.''

''அதான் நேக்கும் தோண்றது. மாமியார் மாட்டுப் பொண் சண்டை பிடிச்சுக்கறான்னு ஊர்ல நாலு பேர் காதில விழுந்தா அவமானமில்லையா?''

''இல்லை அண்ணா.''

''என்னடா சொல்றாய்?''

''இந்த மாமியார் மாட்டுப்பொண் பூசல் அநாதி காலமா இந்த லோகத்தில் இருக்கு. அதை மத்தவா பெரிசு பண்ணாம இருந்தா தன்னைப்போல அடங்கிப் போகும். நீ வேணும்னா பாரதியைத் தனியாக் கூப்பிட்டு நல்ல

தனமா அட்லைவஸ் பண்ணு. அவ ரொம்ப நலல பொண்ணாத்தான் நேக்குப் படறது. கொஞ்சம் சென்ஸிடிவ்வைடப்பாக இருக்கலாம். சடக்குன்னு கோபம் வரலாம். கொஞ்ச நாளைக்கு மன்னி குத்தம் குறை சொல்லாம இருந்தா,பாரதியும் அனுசரிச்சுண்டு போலாம் இல்லியா?''

ஏற்கனவே சாம்பாரை முடித்துவிட்ட ஈசுவரன் மோருக்காகச் சாதத்தைப் பிசைந்து கொண்டிருந்தார்.

''இது மாத்றம் அல்லா என்னோட ஓர்ரி...''

''பிஎச்.டியா?'' என்றான் சகஸ்ரம்.

''நோக்கு எப்படியடா தெரியும்?''

''இந்த ஊருக்குள்ளே அவ கால் வைச்ச நாள்லேந்து ஆர்ட்ட அவ அதிகமாப் பேசிண்டிருக்காள்னு நெனைக்கறாய்? மௌலியும், சுசிலாவும் இந்தாத்துலதானே எறங்கினா? அதிலேந்து நேத்தைவரை அவ இங்க ரெண்டு மணிக் கூறாவது எங்ககிட்டப் பேசிண்டிருப்பாள். மௌலியும், சுசிலாவும்தான் அவ மேற்படிப்புக்குக் குறுக்கே வந்தாளாம்.''

''இந்த பிஎச்.டி பத்தி எங்கிட்ட அவ பேசினா...'' என்றார் ஈசுவரன்.

''என்ன சொன்னா?''

''படிக்கணுமாம்.''

''நீ என்ன சொன்னாய்?''

''சுழியாதுன்னு சொன்னேன்.''

''கோவிச்சுண்டு சொன்னியா?

''இல்லை· ரெண்டு பேரும் ரொம்ப சௌஜன்யமாத் பேசினோம். என்னை அவள் மாமனார் ஸ்தானத்தில் வைச்சும் பேசலை. அத்தை ஆம்படையான்கிற எடத்தில வைச்சுப் பேசினா''

''நானும் சொன்னேன். பிஎச். டி. அவசியம் இல்லைன்னு,''



இந்தப் பாலக்காட்டிலேயே படிச்சு முடிக்கிற படிப்புன்னா நான் சரின்னு சொல்லியிருப்பேன். சகஸ்ரம் மதிராசிக்குப் போய்ப் படிக்கண்ட படிப்பு.எப்படி வீட்டுக்குப் புதுசா வந்த மாட்டுப் பெண் ஆம்படையானை விட்டு இரண்டு வருஷத்துக்கு வெளியூர்ல இருக்கலாம்?''

''கோந்தைக்கு இஷ்டமில்லை!'' என்றான் சகஸ்ரம்.

''நோக்கு எப்படித் தெரியும்டா?''

''நேத்தைக்குக் களத்துக்குப் போறதுக்கு மின்னால இங்க வந்திருந்தான். அப்பச் சொன்னான்.''

''அவளை எப்படி நல்ல வழிக்குக் கொண்டு வர்றதுன்னுதான் தெரியலை.''

''பிஎச் டி. தான் நல்ல வழின்னு அவ சொப்பனம் கண்டுண்டிருக்கா, அண்ணா''

''இப்ப என்ன செய்றது?''

''ஒரு வழி இருக்கு''

''என்னடா அது?''

''அவ வழியிலேயே கொஞ்ச தூரம் போலாம். மனசை மாத்திண்ட மாதிரி நீ நடந்துக்கோ. மதராசி வரைக்கும் போயிட்டு வரட்டும். மெட்ராஸ் யுனிவர்சிட்டியில அத்தறை வேகம் பிஎச்.டி.க்கு சான்ஸ் கிடைக்கும்னு நேக்குத் தோணலை.''

''எப்படிச் சொல்றாய்?''

''வர்ஷா வர்ஷம் குறைஞ்சது இருபது பேராவது எம்ஃபில் பாஸாறா. அதில பத்து பேராவது பிஎச்.டிக்கு ட்ரை பண்ணுவா. இவாளைத் தவிர போன கொல்லம், அதுக்கு மின்னாலத்து கொல்லத்தில் ட்ரை பண்ணிக் கிடைக்காதவாளும் இந்தக் கொல்லம் ட்ரை பண்ணுவா. செலக்ஷன்ல பாடிலிக்ஸ் நெறைய உண்டு. இன்னும் ஒண்ணு. மெட்ராஸ் யுனிவர்சிட்டியில இன்னைக்கெல்லாம் இருந்தா மூணு நாலு புரொபசர்களும் நாலஞ்சு

ரீடர்னும்தான் இருப்பா, ஒரு புரொபஸர் ஒரு காண்டிடேட்டைத்தான் எடுத்துப்பன். இப்படி இருக்கறச்ச நம்ப பாரதியை ஒருத்தன் எடுத்துப்பன்னு என்ன நிச்சயம்?''

''அப்ப இவன் அப்ளை பண்ணினாலும் கெடைக்கச் சான்ஸ் இலலைன்னு சொல்றாய், அல்லவா சகஸ்ரம்?''

''டெல்லின்னா அப்படிச் சொல்ல மாட்டேன். மெட்ராஸ்ன்னா சொல்ல முடியும். எத்தனை எம்ஃபில் படிச்சு அஸிஸ்டண்ட் புரொஃபசரா தவிக்கிறா தெரியுமா அண்ணா! இவ டில்லி யூனிவர்சிட்டி! மெட்ராஸ் யூனிவர்சிட்டி இவனை அத்தறை வேகத்தில சீண்டாது.''

''அப்ப என்ன சொல்றாய்?''

''மின்னால எழுந்து கை அலம்பு. உண்ட எடத்தில் ஒக்கார்ந்தா கண்ட எடத்தில் கரிப்பா''

இரண்டு பேரும் எழுந்தார்கள்.

''ராஜி! அவரைக்காய்தோரன் ரொம்ப நன்னாயிருந்தது. சாம்பார்லதான் கொஞ்சம் புளி தனல நீட்டித்தோன்னு தோணித்து ''

''எனக்கே புளியைக் கரைக்கறைப்ப தோணித்து. புதுப் புளியாச்சா. கணக்கு சரியாத் தெரியலை.''

அண்ணாவும். தம்பியும் கூடத்திலிருந்து முன் தாழ்வாரத்துக்கு வந்தார்கள்,

''அப்ப என்ன சொல்றாய்?''

''அவனை அப்ளிகேஷன் பாரத்துக்கு எழுதிப் போடச் சொல்லு. அது வர்றதுக்கு திர்ச்சையா ரெண்டு மூணு ஆழ்ச்சையாவது ஆகும். லயோலாவில் உங்ககூடப் படிச்சானே அனந்தகிருஷ்ணன் அவனுக்கு நான் இன்னைக்கே ஃபோன் பண்ணி விசாரிக்கச் சொல்றேன்''

''எந்த அனந்த கிருஷ்ணன்? சேகரிபுரம் அனந்த கிருஷ்ணனா?''



''அவன்தான்''

'.இப்ப என்ன சேயறான்? அவன் பாம்பேயிலே இருக்கலியோ?''

''ரெண்டு வருஷமா மதிராசியிலதான் இருக்கான். இண்டியன் பாங்க்ல டெபுடி ஜெனரல் மானேஜராக இருக்கான் நல்ல இன்ஃப்ளுயன்ஸ் உண்டு''

''உண்டு.''

''அவன் மூலமா பாரதிக்கு ஸீட் கெடைக்காதைத்குப் பார்த்துக்கறேன்.'

''ஸீட் வாங்கறதுக்குத்தான் சிபாரிசுக்குப் போவா... நாம என்னடான்னா...''

''இப்பக் காரியம் பெரிசா. வீர்யம் பெரிசா அண்ணா?''

''நாம இப்படிச் செய்யறது சரியா சகஸ்ரம்?'.

''நீ ஒன் பிஸினஸ்ல அரிச்சந்திரனா இருந்திருக்காயோ? ஆருக்கும் கைக்கூலி கொடுத்திட்டில்லையோ? லைசன்ஸுக்குப் பெர்மிட்டுக்கும் சிபார்சுக்குப் போன தில்லையோ?''

''எந்துக்குடா அதையெல்லாம் இப்ப இழுக்கறாய்?''

''துரோணர் சாகறதுக்கு தர்மபுத்திரனே சூழ்ச்சியாப் பேசினார். நீ அவனை விடப் பெரியவன்னு சொல்லு. நான் ஒதுங்கிக்கிறேன்.''

''சில சமயங்கள்ளே சாதுரியமும், சாமர்த்தியமும் ஆவசியப்படறது. அல்லவா?''

''இது ரெண்டும் இல்லை. அண்ணா, ஏமாத்து வேலை. ஆனா ஒரு நல்ல காரியத்துக்கு''

''நல்ல காரியம்னா?''

''நம்மாத்து மாட்டுப் பொண்ணால நமக்குச் சங்கடம் வரப்படாது. அவகிட்ட நாம விரோதமா இருக்கோம்னு

அவளும் நெனைக்கப்படாது. நம்ப கோந்தையும் அவகூட சுகமா இருக்கணும்''

''இதுதான் என் ஆசை சகஸ்ரம்!''

''என் மனசில இன்னொரு காரணமும் இருக்கு''

''ஒருத்தனோட மண்டைக் கனத்தைக் குறைக்கணும்னா அவனோட மண்டையிலே ஒரு தட்டு தட்டணும். நான் டில்லிக்காரி. எம்ஃபில் படிச்சவள். என்னைப் போல ஆருமில்லைன்னெல்லாம் பாரதி சொல்லாமச் சொல்லிக் காட்டறா? இப்பவே அவ கனத்தை ஒரு தட்டு தட்டிட்டா சரியாயிடுவா. சின்ன மன்னி கமலம் எகனாமிக்ஸ் எம். ஏ., கோவிந்தன் ஒய்ஃப் பி. எஸ்ஸி., பி.எட். ராஜி பி.ஏ. பர்ஸ்ட் கிளாஸ்னு எதுவும் பாரதிக்கு தெரியாது. இவாளெல்லாம் எப்படிக் குடும்பத்துக்கு ஏத்தபடியா நடந்துக்கறாங்கதையும் அவ தெரிஞ்சுக்கலை. அவ இதை தெரிஞ்சுக்கணும். இந்த பாரதியையும் இவாளை மாதிரி நல்ல பொண்ணா மாத்தணும் அண்ணா!''

''எல்லாம் நீ பார்த்துக்கோடா சகஸ்ரம். அவ இங்கதான் அதிகமா வர்றா''

''ஆனா நீ உன் மனசு மாறியாச்சுங்கறதை அவனுக்குத் தெரியப்படுத்தணும் அண்ணா''

''சரி, சகஸ்ரம்! நான் போய்ட்டு வரேன்''

''கோந்தை எப்ப வருவன்?''

''தெரியாது. மினிஸ்டரைப் பார்க்க அல்லவா போயிருக்கான்!''

''நீ மன்னிட்ட விபரமா எல்லாத்தையும் கேள். அப்றமா பாரதியை விசாரிச்சுக்கலாம்.

ஈசுவரன் தலையாட்டி விட்டுத் தம் வீடு திரும்பினார்.

ஈசுவரன் வெளியேறிய பிறகு ராஜி சிரிப்பும், களிப்புமாக சகஸ்ரத்தை அணுகினாள்.



'நீங்க சாணக்கியனா. இல்லே சாதாரண மனுஷனா?''

''ஏன் ஒனக்கு இப்படி ஒரு சந்தேகம் புதுசாக் கிளம்பியிருக்கு?''

''இல்லே பாரதிக்கு கூழும் ஊட்டி, மீசையும் வைக்கிறேளே, அதான் கேட்டேன்.''

''என் பிளானைப் பற்றி நீ என்ன நினைக்கிறாய், ராஜி?''

''ஐடியா எக்ஸலண்ட். ஆனா.கோந்தைக்கு தெரிஞ்சா தீர்ச்சையா தடுத்து நிறுத்துவன், அவனுக்கு அந்தத் தில்லுமுல்லெல்லெல்லாம் பிடிக்காது. நேரே வா. நேரே போங்கற லட்சியம் உள்ளவன் அவன்.''

''அவனோட குடும்பமும், தாம்பத்தியமும் நந்நா இருக்கணும்னுதானே நான் இந்த ஐடியாவில எறங்கினேன்?''

''இருக்கலாம். ஆனா கோந்தைக்குத் தெரிஞ்சா அவன் என்ன சொல்லுவன் தெரியுமா?''

''ஆர்ட்ட?''

''எல்லார்ட்டேயும், மின்னால பாரதிட்ட....'

''என்ன சொல்லுவன், அதைச் சொல்லு ராஜி.''

''இதப்பாரு பாரதி! நீ ஒன் டாக்டர் பட்டத்துக்கு ஓடணும்னா ஓடிக்கோ. ஆனா அப்றம் இந்த வீட்டுப் படியில ஒங்க பொண்டாட்டி நான்னு சொல்லிண்டு ஏறாதே. பிஎச்.டி வேண்டாம்னு நெனச்சா நீ ஜென்மம் பூரா என் ஆம்படையாளா இரு'' இப்படித்தான் சொல்லுவன் கோந்தை.''

''வேற என்ன வழிதான் இருக்கு ராஜி? ஆனை மேலேயும் ஏறணும். அங்காடி வழியாகவும் போகணும். ஆரும் பார்க்கவும்படாதுன்னா அது எப்படிச் சாத்தியம்?''

"நான் ஒரு வழி சொல்றேன்."

"என்ன?"

"மெர்ஸி கோளேஜ்ல லெச்சரர் வேலை வாங்கிக் கொடுங்கோ. ஒண்ணு ரெண்டு வர்ஷம் கழிச்சு பிஎச்.டிக்குப் போய்க்கலாம்னு சொல்லுங்கோ. கோந்தை கிட்டேயும் சொல்லி அவளையும் சம்மதிக்க வையுங்கோ."

"பாரதி மாட்டேன்னு சொன்னா?"

"சொல்ல மாட்டா, நானும் அவகிட்டச் சொல்லிப் பாக்கறேன்."

"அவ பேசற பேச்சைப் பாத்தா லெக்ச்சரர் வேலைக்குப் போறவளாத் தெரியலே."

"அவ மாட்டேன்னு சொன்னா அப்புறம் இந்த அஸ்திரத்தை ஒடுக்காம லாஸ்ட்டா பிரயோகம் பண்ண லாம். ஆனா அதுவும் கோந்தைக்குத் தெரிஞ்சுதான்."

"கோந்தை வரட்டும்."

"அவனுக்கு நூறு வயசு. அதா வர்றான்."

"குஞ்சப்பா,"

"வாடா கோந்தே. மினிஸ்டர் பாலகிருஷ்ண மேனன் என்ன சொல்றான்?"

"அதை அப்றமாச் சொல்றேன். இந்நைக்கு அம்மைக்கும் பாரதிக்கும் இடையில என்ன நடந்தது?"

"ஏன் கேக்கறாய்?"

"தொழுத்துப் பெரையில் அப்பா அம்மையைத் திட்டிண்டிருக்கார், நான் நின்னு கேக்கலை. பேச்சில பாரதியோட பேரு அடிபட்டது."

"தெரியாதுடா கோந்தே."

"இந்த ஆத்திலே நான் இல்லாதப்ப என்னவெல் லாமோ நடக்கறது. என்ன வேணும்னாலும் நடக்கட்டும், நான் எஸ்டேட் வீட்லேயே இருந்துக்கறேன்."



"அப்படி இருக்கறதானா ஒரு காரியம் சேய்."

"என்ன குஞ்சப்பா அது?"

"ஒன் ஒய்ஃப் பாரதியையும் கூட்டிண்டு போய் வைச்சுக்கோ."

நாராயணன் பதில் சொல்லவில்லை. அவன் திரும்பி நடந்தான்.

"இருடா, கோந்தே" என்ற சகஸ்ரம் "இவனுக்குக் காப்பி எனக்கும் காப்பி கொண்டு வா, ராஜி" என்றான்.

"இப்பத்தானே சாப்பிட்டுக் கை அலம்பினேள்?"

"காப்பி எப்ப வேணும்னாலும் குடிக்கலாம்டீ, ராஜி!"

"அவளை அஞ்சுமணிக்கு பாலெஸ் ஹவுஸுக்குக் கூட்டிண்டுபோய் ஏழெட்டு புடைவை வாங்கிக் கொடுக் கலாம்னு இருக்கேன்."

உள்ளே போய்க் கொண்டிருந்த ராஜியின் காதில் இத்த வார்த்தைகள் விழுந்ததும் "இன்னைக்கு அவ தேவகி ஆத்துக்குப் போகக் காரில் ஏறினப்பப் பார்த்தேன் வயலட் கலரில் சல்வார் கமீஸ் போட்டுண்டிருந்தா. ரொம்ப எடுப்பா அழகா இருந்தது" என்றாள்.

"இன்னம் நிறைய நேரம் இருக்கு" என்ற சகஸ்ரம்,

"கோந்தே, உன் ஆம்படையாள் பிஎச்.டி பண்ண நீ பெர்மிஷன் கொடுக்கறதுதான் நல்லதுன்னு எனக்குத் தோண்றது."

"குஞ்சப்பா!"

"அண்ணாவுக்குச் சம்மதம்"

"அப்பா சொன்னாரா?"

"நீயே கேளேன்."

''அவளைக் கூட்டிண்டு எஸ்டேட்டுக்குப் போன்னு சொன்னாய். எப்போ? இப்போ! அதுக்குள்ளே பேச்சை மாத்தறாய், குஞ்சப்பா!''

சகஸ்ரம் சிரித்தான். அவனால் அப்போதைக்குச் சிரிக்கத்தான் முடிந்தது.

## 13

காரை நிறுத்திவிட்டு இறங்கிய தேவகி, ''கம் ஆன் பாரதி'' என்றாள். புதிதான இன்னொரு கிராமத்தில், மொட்டைத் திண்ணையுடன் காட்சி அளிக்கும் புராதன மான வீட்டில் யார் இருக்கிறார்கள்? யாரை தேவகி அவளுக்கு அறிமுகம் வைக்கப் போகிறாள்?

சாயம் இழந்து வெளிறிப் போன ஐந்து அடி உயரமும் மூன்று அடி அகலமும் கொண்ட ஒற்றைக் கதவு சாத்தப் பட்டிருந்தது. தேவகி கையால் தட்டி விட்டுக் காத்திருந் தாள்.

''இந்த ஊருக்கு வேட்டக்கரங் காவுன்னு எளிசா சொல்லுவாங்க. சரியான பெயர், வேட்டைக்கு ஒரு மகன் காவு. காவுன்னா கோயில்னு அர்த்தம். இந்தப் பாலக்காட்டுக் கிராமங்களில் தமிழ்நாட்டுப் பாணியில் கோயில்கள் இருந்தாலும், பகவதிக்கான கோயில்களையும் மற்ற சில அய்யப்பன் போன்ற மூர்த்திகளுக்கும் உள்ள கோயில்களையும் காவுன்னு சொல்லுவாங்க. அய்யப்பங் காவு, வடக்கந்தரைக்காவு, ஹேமூரி பகவதிக்காவு, மீன் கொளத்திக் காவு, கோதான் குளத்திக் காவுன்னு நிறைய காவுகள் உண்டு. மடப்பள்ளிக்காவு, ரொம்பப் பெரிசு விசேஷமும்கூட'',

இவள் இன்னொரு சகஸ்ரம் என்று தன்னுள் நினைத்துக்கொண்ட பாரதி மௌனமாக நின்றாள்.



கதவு இன்னும் திறக்கப்படவில்லை. மீண்டும் தட்டினாள் தேவகி.

''ஹேமூரி பகவதிக் காவில பகவதியின் உருவம் என்ன தெரியுமா, பாரதி? கை, அதைப் பார்த்தப்பறம்தான் இந்திரா காந்தி தன் கட்சியோட சின்னமாக் கையை வைச்சுக்கிட்டா''

கதவு திடீரெனத் திறந்தது.

''நமஸ்காரம் சார்''.

''அடடா, தேவகியா! என்ன ஆச்சரியம்! வா, வா... வாங்கோ மேடம்... தலையைக் குனிஞ்சு வாங்கோ... அகஸ்தியர் மட்டும்தான் தலை இடிச்சுக்காம வர முடியும்!''

நாற்பது அல்லது நாற்பத்திரண்டு வயது மதிக்கத் தகுந்த ஒருவர் இளமைத் துடுக்குடன் முன் நடக்க ரேழியின் இருட்டைக் கடந்து, மங்கலான வெளிச்சத்தில் உறைந்து கிடந்த முன் தாழ்வாரத்தை பாரதி அடைந் தாள்.

''இதோ வரேன் தேவகி'' சொன்னவர் உடனே போனார்.

''டேக் யுவர் டைம் சார்''

வீட்டின் நிசப்தமே பாரதிக்குப் பயங்கரமாக இருந்தது.

இருவரும் சிதிலமாகி விட்ட தரைமேல் தரையின் மேல் உட்கார்ந்து கொண்டார்கள். தரை முன்னொரு காலத்தில் வழவழப்பாக இருந்திருக்கலாம். ஆனால் இப்போது அங்கங்கே உடைந்து சிதைந்து காட்சி அளித்தது. ஓரிரு இடங்கள் பள்ளமாகி காரை வெட்க மில்லாமல் தலை நீட்டியது. சுவர்களும் இதே லட்சணம் தான். ஆணி அடித்தால் சுவரே விழுந்து விடுமோ என்ற பயத்தில்தான் ஒரு காலண்டர் அல்லது ஒரு படம்கூட

இல்லையோ? முற்றம் மிகவும் சிறிதாக மூன்று அடிக்கு இரண்டடி என்ற கணக்கில் ஒடுங்க, சரிந்து வந்து முற்றத்திற்கு ஓடுகளின் இணைப்புக்காக கம்பி அழிகள் போட்டிருந்தார்கள். இங்கே வெட்ட வெளியாக இருந்தது. யார் வேண்டுமானாலும் எளிதாக ஓட்டுக்கூரை வழியாக இறங்கிவிடலாம்.

முன் தாழ்வாரத்தில் ஊஞ்சல் இல்லை, ஒரு காலத்தில் இருந்தது என்பதை உணர்த்த உளுத்துப்போன விட்டத்தில் இரண்டு இரும்புக் கொக்கிகள் தொங்கின.

"இவ உள்ளே காரியமா இருந்தா. சீக்கிரத்தில் முடிக்க ஹெல்ப் பண்ணிட்டு கையோட கூட்டிண்டு வந்தேன்..." என்றார் அவர்.

"எப்படி இருக்கேம்மா தேவகி?"

"சௌக்கியமா இருக்கேன். நீங்க ரெண்டு பேரும் நேத்துக் காலையிலே வந்தது எனக்குத் தெரியும்..."

"எப்படி?"

"நீங்க பஸ்லேந்து எறங்கி ஆட்டோவிலே ஏறினீங்க. ஓர் அரை நிமிஷம் முன்னாடிப் பார்த்திருந்தா நான் கார்லே ஏத்திண்டு வந்திருப்பேன்..." என்ற தேவகி, பாரதியைக் காட்டி, "அடடா, என்கூட வந்திருக்கிறவ இவ யாருன்னு இன்னும் உங்களுக்குச் சொல்லலே, நீங்க யாருன்னு இவளுக்கும் தெரியாது." என்றாள்.

"பாலக்காட்டுக்குப் புதுசு போலிருக்கு" என்ற அவர் "என் பேரு கைலாசம். இவ என் மனைவி மீனாட்சி" என்றார்.

"பெயர்ப் பொருத்தம் மட்டுந்தான் இருக்குன்னு நினைக்காதே. பாரதி, என்னென்ன பொருத்தங்கள் உண்டோ அவ்வளவும் இவங்களுக்கு இருக்கு... சார் இவ பேர் தான் பாரதின்னு சொல்லிட்டேன். டில்லி யூனிவர்சிட்டிலே இங்கிலீஷ் லிட்ரேச்சர்லே எம்.ஃபில். இப்ப



பள்ளிப்புரம் நாணுப்பட்டர் வீட்டு மாட்டுப் பொண்... அதாவது ஈசுவரனுடைய டாட்டர்-இன்-லா"

"அப்படியா? கேட்கவே அமிர்தமா இருக்கு. மாசத்துக்கு ஒரு தடவை ஒரே தடவை, வர்றேன். நாராயணனைப் பார்க்கணும்னு நினைப்பேன். ஆனா அது இதுன்னு ஏதாவது வேலை வந்துடும்...ஆமாம் நாராயணனுக்கு இப்பத்தானே கலியாணமாச்சு? எனக்கு இன்விடேஷன் அனுப்பியிருந்தான். என்னாலே வாழ்த்துகள் கூட அனுப்ப முடியலே... தேவகி அப்ப நான் ரொம்ப தூரம் காட்டுக்குள்ளே போயிருந்தேன். அஞ்சாறு பாம்பு கெடைச்சுது. எல்லாம் குட்டிப் பாம்பு. வாரிப் பையிலே போட்டுண்டேன்."

"பாரதி,கைலாசம் சாருக்குச் சொந்த ஊரு மதுரை."

"கரெக்டா சொல்லு தேவகி, வத்தலகுண்டு."

"காட்டிலாகாவிலே ஆபீசர். அவரோட மனைவிக்கு..."

"கல்பாத்தி. பழைய கல்பாத்தி, இங்கேயிருந்து ஒரு கிலோ மீட்டர்" என்ற கைலாசம் தொடர்ந்து "நான் ஃபாரஸ்ட் டிபார்ட்மெண்ட்லே இருந்தப்ப வர்ஷத்துக்கு ஒரு தடவை டேராடூன் போவேன்.அங்குதான் ஃபாரஸ்ட் ரிசர்ச் இன்ஸ்டிடியூட் இருக்கு."

"ஹி இஸ் எ டாக்டரேட் இன் ஃபாரஸ்ட்ரி" என்றாள் தேவகி.

பாரதி சற்றே வியந்து போனாலும் வியப்பைக் காட்டிக் கொள்ளவில்லை. வசதி இருந்தால் யார் வேண்டுமானாலும் டாக்டரேட் வாங்கலாம் என்று நினைத்துக் கொண்டாள்.

"நான் இந்த டிபார்ட்மென்ட்லே இருந்தேன்னு இறந்த காலத்திலே தேவகி சொன்னா... இப்ப..."

''அதையும் நானே சொல்லிடறேன் சார்... இப்ப இவர் வாளையார் காட்லே ஒரு ஸ்கூல் நடத்திட்டு வர்றார். ஸ்பெஷல் ஸ்கூல்.''

''ஸ்கூல்லே என்ன ஸ்பெஷல், தேவகி?... ஹாண்டி காப்ட் சில்ட்ரனுக்கா, இல்லே மென்ட்டலி ரிட்டார்டட்..பாரதி இழுத்தாள்.

கைலாசம் சிரித்தார்.

''நீ சொல்றதெல்லாம் இப்ப ஸ்பெஷல் இல்லேம்மா. ரொம்பக் காமனாப் போயிட்டுது. வாளையார் காட்லே மலை ஜாதிக்காரா ரொம்பப் பேர் இருக்கா. நரித்தோல் புலிநகம் மான் தோல் கொம்புத் தேன் இதையெல்லாம் கள்ளத்தனமா எடுத்து வந்து பிழைப்பு நடத்தற குடும்பங்கள் அநேகம் இருக்கு.''

தேவகி இடைமறித்தாள்.

''நான் ரெண்டு மூணு தடவை வாளையார் போயிருக்கேன். வாளையார்னா ரெயில்வே ஸ்டேஷன் இல்லே, காடு. அந்தக் காலத்து அடர்த்தியும் பயங்கரமும் இப்ப இல்லேன்னாலும் காடு காடாத்தான் இருக்கு. பகல் வேளைகளிலே கூட இருட்டா இருக்கும் பாரதி. இந்தக் காட்டுக்கு மத்தியிலேதான் இவரோட ஸ்கூல் இருக்கு என்றாள் அவள்.

''ஸ்கூல்லே என்ன பாடம் சொல்லித் தரோம்னு சொல்லேன் தேவகி, அப்பதானே பாரதிக்குப் புரியும்?''

''குழந்தைகளுக்குத் தமிழும், இங்கிலீஷும் பெரியவங்களுக்கு கொஞ்சம் ஆரம்பப் படிப்பு.நிறைய, பலவிதமான கைத்தொழில்கள். பெண்களுக்கு எழுதப் படிக்கக் கத்துக் கொடுத்துட்டு தையல் வேலை, ஸ்வெட்டர் பின்னற வேலை, கண்ணாடி வளையல் செய்யற விதம் இப்படி என்னென்னவெல்லாமோ சொல்லிக் கொடுக்கறார், மிஸஸ் கைலாசம்.''



21202
3741781
...னத்தூர், சென்னை-99.

''சொல்லப்போனா [illegible] ஆரம்பிச்சேன்' இவ உக்கிரமா நடத்தறா!''

''உங்க குழந்தைகள்?'' என்றாள் பாரதி.

கைலாசம் சிரித்தார். 'காட்டுவாசிகள் அண்ணன் தம்பி, அக்கா, தங்கைகள்னா அவங்க குழந்தைகளும் எங்க குழந்தைகள் தானே...'' என்றார் அவர்.

''எத்தனை நாளா இந்த ஸ்கூல் நடக்கிறது?'' பாரதி.

''எத்தனை வருஷமான்னு கேட்டிருக்கலாம் சரி. நான் கணக்கிலேயே சொல்றேன். மூவாயிரத்து இருநூத்து எண்பத்தஞ்சு நாளா. முன்னூத்து அறுபத்தஞ்சால வகுத்துக்கோ.''

''ஏன் அவளைத் திண்டாட வைக்கறீங்க? ஒன்பது வருஷமா பாரதி.''

''அப்ப நீங்க சர்வீஸை விட்டு ஒன்பது வருஷமாச்சா'.

''சர்வீஸ்லே இருக்கறப்பவே ஆரம்பிச்சேன் பாரதி அதிலேந்துதான் தலைவலி ஆரம்பிச்சுது.''

''ஸ்கூல் மூலமா காட்டு வாசிகளோட ஆதரவு கிடைச்சுது. அது மூலமா இவர் காட்டு மரங்களை வெட்டிப் பணம் பண்றார்னு ஒரு குத்தத்தைச் சுமத்தினாங்க.நிரூபிச்சுக் காட்டுங்கன்னு இவர் பதில் எழுதினார் அதுக்கு நடவடிக்கை எடுக்காம இவரை நீலம்பூர் காட்டுக்கு மாத்தினாங்க. நீயும் வேண்டாம். உன் வேலையும் வேண்டாம்னு அரை நிஜாரையும் பேண்ட்டையும் சட்டையும் போட ஆரம்பிச்சார்'' என்றவாறே தேவகி எழுந்தாள். கூடவே பாரதியும் எழுந்தாள்.

''இரும்மா தேவகி! ரெண்டு பேருக்கும் குடிக்க மோர் கொண்டு வரேன்... என்று சொல்லி மீனாட்சி உள்ளே சென்றாள்.

''அப்படியே ஆளுக்கு ஒருபாட்டில் தேனும் கொண்டா மீனாட்சி. காட்டுத்தேன். உன் மாமனார் ஈசுவரன்

எங்கிட்டே அடிக்கடி சொல்லிவைப்பார். ஒரு பாட்டிலுக்கு ஐந்நூறு ரூபா கொடுப்பார். இந்த தேவகியோட அப்பா மாசாமாசம் ரெண்டாயிரம் ரூபா அனுப்பறார்.''

''தேன் அவ்வளவு காஸ்ட்லியா?''

''இலங்களை மாதிரி இன்னும் சில பேர் இருக்காங்க. ஹாஜி மொய்தீன் வருஷத்துக்கு பத்தாயிரம் தர்றார். கேனுண்ணி அஞ்சாயிரம். இப்ப ஸ்கூல்க்குக் கட்டடமே இருக்கு இருபது. தையல் மெஷின். நாங்க இருபது பைசாவுக்குப் பண்ற பம்பரத்தை கோயமுத்தூர்லே ஒரு ரூபாய்க்கு விக்கறாங்க...''

மோர் வந்தது.

''நாங்க காப்பி, டீ சாப்பிடறதில்லே. அதான் மோர்'' என்றார் கைலாசம். ''எப்ப காடு திரும்பறீங்க?'' என்று தேவகி கேட்டாள்.

''நாளைக்கு ஃபஸ்ட் பஸ்லே.''

''அப்ப நாங்க வர்றோம். இந்தாங்க தேனுக்குக் காசு'' என்ற தேவகி கைப்பையிலிருந்து மூன்று நூறு ரூபாய் நோட்டுகளை எடுத்து நீட்டினாள்.

''மீனாட்சி, வாங்கிக் குறிச்சுக்க ரசீதை அப்றமா அனுப்பலாம்'' என்றார் கைலாசம்.

பாரதியும், தேவகியும் வாசலை நோக்கி நடக்க, தம்பதியர் பின் தொடர்ந்தார்கள்.

''போய்ட்டு வரேன் சார்.'' போய்ட்டு வரேன் மிஸஸ் மீனாட்சி! என்று தேவகி மீண்டும் விடைபெற்றுக் கொண்டு கார் அருகே செல்ல—

கைலாசம் ''ஒரு தடவை பாரதியையும் அழைச்சுட்டு ஸ்கூலுக்கு வாயேன்!'' என்றார்.

''நான் வரேன். ஆனா பாரதியைப்பற்றி எனக்குத் தெரியாது. அவ பி எச்.டி...படிக்க மெட்ராஸ் போகக் காத்துட்டிருக்கா.''



கைலாசம் சிரித்தார்.

''நான் காடுகள் சம்பந்தமா படிச்சு லண்டனுக்குப் போய் தீஸிஸ் எழுதி டாக்டரேட் வாங்கினேன். இப்ப என்ன செய்துட்ருக்கேன் பாரு...ஹங் இன்னொரு விஷயம் கேட்க மறந்துட்டேன். கடைசியா வந்த நேஷனல் ஜியாகரபிக்கல் மேகஸினை எடுத்து வை. அடுத்த வாட்டி வர்றப்ப வந்து வாங்கிக்கறேன்.''

''அமேஸான் ஃபாரஸ்ட் பத்தி பெரிய ஆர்ட்டிகிள் வந்திருக்கு. எடுத்து வைச்சிருக்கேன்'' என்று சொல்லி விட்டுத் தேவகி காரில் ஏறிக்கொண்டாள்.

கார் சிறிது தூரம் சென்றதும், ''கைலாசத்தையும், மீனாட்சியையும் பத்தி என்ன நினைக்கறே பாரதி'' என்று தேவகி கேட்டாள்.

''நல்ல தம்பதியர்''

''மீனாட்சி ஹோம் சயன்ஸ்லே பிஎஸ்.சி. கைலாசம் ஒரு பிஎச்.டி.''

''அதான் சொன்னாரே.''

''ஆனா அவர் சொல்லாத ஒன்றை நான் சொல்றேன்.''

''என்ன?''

''அவருடைய ஆசையின் விளைவு பிஎச்.டி. ஆனா உள்ளூற முடங்கிக் கிடந்து திடீர்னு வெடிச்சுப் பீரிட்டு வந்தது. காட்டுவாசிகளும் முன்னேறணுங்கற லட்சியம்.''

பாரதி மௌனமாகச் சாலையை பார்த்தவாறு உட்கார்ந்திருந்தாள்.

ஆசைக்கும். லட்சியத்துக்கும் இடையிலுள்ள நெடுந் தூரத்தை தேவகி அவளுக்கு உணர்த்துகிறாளா? இந்த தம்பதி மூலமாக. அவள் கீதோபதேசம் செய்கிறளா?

கார் பள்ளிப்புரத்தை அடைந்து, அவளுடைய வீட்டின் முன் நின்றது.கடிகாரத்தைப் பார்த்தாள். நான்கு. வாசற்படியில் நாராயணன் நின்று கொண்டிருந்தான்.

காரில் இருந்தபடியே ''குட் ஈவினிங் மிஸ்டர் நாராயணன். ஹௌ ஆர் யூ'' என்றாள் தேவகி.

''சௌக்கியமா இருக்கேன். ஏன் கார்லேயே உட்கார்ந்திருக்கே. இறங்கி வா, தேவகி! காபியோ, டீயோ குடிச்சுட்டுப் போகலாம்.''

''இன்னொரு நாள் நாராயணன்...! நீங்க பாரதியை அழைச்சுட்டு ஷாப்பிங் போக வேண்டாமா? டாட்டா...'' கார் நகர்ந்தது.

ஒரு தேன் பாட்டிலுடன் பாரதி இறங்குவதைக்கண்ட நாராயணன் ''கைலாசம் வீட்டுக்குப் போயிருந்தியா பாரதி?'' என்றான்.

''ஆமாம். தேவகி வர்ற வழியில் அவர் வீட்டுக்குப் போனா.''

''என்னிக்குத் திரும்பிப் போறார், தெரியுமா?''

''நாளைக்குக் கார்த்தால...ஃபர்ஸ்ட் பஸ்லேன்னு சொன்னார்''

''அடடா! இந்த வாட்டியும் மிஸ் பண்ணிட்டேனே? பாரதி, ஒரு முக்கிய காரியமா நான் அவரைப் பார்த்தாகணும். ஷாப்பிங்கை முடிச்சுட்டு திரும்பறப்ப அவர் வீட்லே எறங்கலாம். அங்கே அரை மணிநேர வேலை இருக்கு.''

''சரி.''

''லேகத்திலே உள்ளே போய்ப் புடைவை கட்டிக்கோ... தொழுத்துப் பெரையிலிருந்து அம்மா உன்னைப் பார்க்கண்டாம.''

பார்த்தால் பார்க்கட்டுமே, தலையையா எடுப்பா?'' என்று பதில் சொல்ல நா துடித்தது. அடக்கிக் கொண்டான் ''ஏன் சல்வார் கமீஸ் அணிந்து கொண்டாய்?'' என்று நாராயணன் கேட்கவில்லை என்ற நினைப்பும் அதே கணம் எழுந்தது.



மாடியை அடைந்தபோது இன்னோர் எண்ணமும் உதித்தது.

நாராயணனைப் பொறுத்தவரை அவளுக்கு, அவள் எம் மாதிரியான உடை உடுத்தினாலும் ஆட்சேபனை இல்லை. தன் அம்மாவை முன்னிட்டுத்தான் புடைவை வாங்கிக் கொடுக்க அவன் துடிக்கிறான்.

அம்மா என்றால் பயமா?

அன்பு இருக்க வேண்டும். பாசம் பரிவு இருக்க வேண்டும். மரியாதையும் அபிமானமும் இருக்கலாம். ஆனால் அம்மாவிடம் பயம் ஏன்?' என் மனைவி அலங்கோலமாக ஆபாசமாக நிக்காத வரையில், அவள் என்ன உடுத்தி கொண்டால் உனக்கு என்ன? என்று கேட்கக் கூடிய அளவுக்குத் திராணியும், தைரியமும் இருக்க வேண்டாமா ஒரு கணவனுக்கு?

இருவரும் சரியாக ஐந்து மணிக்குப் புறப்பட்டார்கள்.

முதன் முறையாக கணவன் காரை ஓட்ட அவன் அருகே உட்கார்ந்து செல்லும் அனுபவம் பாரதியின் உள்ளத்தில் சிறியதோர் மாற்றத்தை உண்டு பண்ணுவதாகத் தோன்றியது.

மனத்தில் இப்போது என்ன உணர்ச்சி கொப்பளிக்கிறது?

திருப்தியா?

மகிழ்ச்சியா?

இனம் தெரியாத ஆனந்தமா?

ஓரிரு தடவை ஏற்பட்ட ஸ்பரிசத்தால் புல்லரிப்பா? இல்லை, எல்லாமே ஒன்று சேர்ந்த கலவையா?

பாரதிக்குப் புரியவில்லை,

ஆனால் பாதிப்புகள் ஆரம்பித்துவிட்டன என்பதைத் திர்மானமாக உணர்ந்தாள்.

தேவகியின் வீட்டில் ஒருவகையான பாதிப்பு. கைலாசத்தின் வீட்டில்முற்றிலும் வேறுவிதமானபாதிப்பு. இப்போது முதல் அனுபவத்தின் பாதிப்பு

இந்தப் பாதிப்புகளெல்லாம் அவளுடைய ஆசை வெள்ளத்துக்கு அணைகளாக அமைந்து விடுமோ?

ஒரு கணம் பாரதி பயந்து போனாள்

ஆசைக்கும், லட்சியத்துக்கும் உள்ள தூரத்தைத்தான் தேவகியால் உணர வைக்க முடிந்ததே தவிர, அவள் மனத்திலும் ஏதேனும் ஒரு லட்சியம் முடங்கி ஒளிந்து கிடக்கக் கூடும் என்று சொல்ல முடியவில்லை.

ஒளிந்து கொண்டிருக்கக் கூடிய லட்சியம்தான் என்ன என்று தன் மனத்தையே ஊடுருவிப் பார்த்தாள்.

என்ன தேடியும் அது அகப்படவில்லை.

## 14

'பாலெஸ் ஹவுஸ்' என்கிற பெயரில் கொடி கட்டிப் பறக்கும் ஜவுளிக்கடையின் முதலாளி, நாராயணன் பிரவேசிப்பதைக் கண்டதும் இருக்கையை விட்டு எழுந்து முன் சென்று வரவேற்றார்.

''வாங்க நாராயணன் சாரே வாங்க. கதர்க் கடையை விட்டுட்டு எங்க கடைக்கு வந்திருப்பது சந்தோஷமா இருக்கு''

''அவசரப்படாதீங்க, முதலியார்! அங்கே பாருங்க...''

''உங்க ஒய்ஃப்தானே? பத்திரிகை வந்தது. வாழ்த்துத் தந்திகூட அனுப்பினேன். நேர்லே நான் வந்து விசாரிக்க முடியலே.''

''பரவாயில்லே... அவளுக்குப் புடைவை வேணும்...''



''ஒரு நிமிஷம்...கோபாலா, மொதல்ல இவங்களைக் கவனி'' என்றார் முதலியார்.

''பாரதி''

''உம்.''

''உனக்குப் பிடிச்சதை எடுத்துக்கோ. எத்தற புடைவை வேணும்னாலும் கூச்சப்படாம எடுத்துக்கோ. இங்கே செலக்ட் பண்ணினது போக, இன்னும் வேணும்னு இருந்தா பக்கத்திலேயே மைசூர் சில்க் ஹவுஸ் இருக்கு. அப்றம் லேடீஸ் கார்மெண்ட்ஸ் ஷாப்லே ரெடிமேட் இருக்கு. உனக்குத் தேவையானதையெல்லாம் வாங்கிக் கலாம்,''

''சரி'' என்ற அவள் ''நீங்க வெளியே போணுமா இப்ப?'' என்றாள்.

''நம்ப மெடிகல் ஷாப் எதிர்த்தாப்ல இருக்கு. நான் அங்கே போய் ஒக்கார்ந்துக்கறேன்.''

''எனக்குப் புடிச்ச புடைவை உங்களுக்குப் பிடிக்க லைன்னா?''

நாராயணன் சிரித்தான்.

''உனக்குப் பிடிச்சிருந்தா அது எனக்கும் பிடிச்சிருக் குன்னுதான் அர்த்தம்.''

சொல்லிவிட்டு அவன் முதலியாரிடம் விடை பெற்றுக் கொண்டு வெளியேறினான்.

''மேடம்! புதுப்புது டிஸைன்லே நிறைய இருக்கு கோட்டா, கல்கத்தா, ஹைதராபாத் எல்லாம் இருக்கு!'' என்றார் அவள் அருகே வந்த முதலியார்.

''பார்க்கறேன்.''

''ஏன் மேடம் இந்தத் தடவையாவது எம்.எல்.ஏ. டிக்கட் வாங்கிக்க நாராயணன் சம்மதிச்சாரா? அடுத்த மாதக் கடைசியில் பை எலக்ஷன் வர்றதே?''

''தெரியாது.''

''போன எலக்ஷன்லே எல்லோரும் கையைப் பிடிச்சு இழுத்தா. இவர் மாட்டேன்னுட்டார். அவனவன் டிக்கட்டுக்காக அலையறான். இவர் என்னடான்னா...''

''நான் புடவையை செலக்ட் பண்றேன், சார்...''

''ஸாரி...ஸாரி. செலக்ட் பண்ணுங்க. நான் கூல் ட்ரிங்க் வரவழைக்கறேன் ''

''தாங்க்ஸ் எதுவும் வேண்டாம்.''

' முதல் முதலா நம்ப கடைக்கு வர்றீங்க. நான் கூல் ட்ரிங்க் வரவழைக்கிறேன். நீங்க சாப்பிடறீங்க...டேய், சாத்துக்குட்டி இங்க வா...''

முதலியார் உற்சாகத் திமிர்ப்பில் காட்சி அளித்தார்.

இன்னொரு கடைக்குச் செல்ல பாரதி விரும்பவில்லை. ஆறு நிறங்களில் புடைவைகளை எடுத்த அவள் இணையான சோளித் துணிகளையும் வாங்கிக்கொண்டு கடை வாயிலுக்கு வந்தாள்.

எதிர்த் திசையில் மருந்துக்கடை. ''ஈசுவரன் அண்ட் பிரதர்ஸ்'' என்ற பெயர்ப் பலகை பெரிதாகக் கடையை விளம்பரப்படுத்தியது. இதை நாராயணனுடைய மூத்த சித்தப்பா சிவராமனும் அவருடைய மகன் நாராயணனும் (தாத்தாவின் பெயர்தான்) நடத்தி வருகிறார்கள் என்பதை அவள் அறிவாள்.

நாராயணன் அவளைக்கண்டதும் விரைந்து வந்தான்.

''ஆறு புடைவை எடுத்துண்டேன்.''

''ஏன் ஆறு? இன்னும் ரெண்டு மூணு எடுத்துண்டிருக்கலாமே...''

''இதுவே ஆயிரத்து ஐந்நூறுக்கு மேலே ஆயிடுத்து.''

''இப்பப் பணமாப் பிரதானம்? சரி வா, ரெடிமேட் ஷாப்புக்குப் போவோம்.''

''பில் போட்டிட்டிருக்கா...''



''கணக்கிலே ஏத்திப்பார் முதலியார்.''

''நீங்க மருந்துக் கடையில் இருங்க. நான் மட்டும் ரெடிமேட் எடுக்கப் போய்க் கொள்கிறேன். எங்கே இருக்கு?''

''இதே வரிசையில் நாலாமத்துக்கடை இந்தா. ஆயிரம் இருக்கு.''

''எதுக்கு இவ்வளவு?''

''கையிலே வைச்சுக்கோ.''

சொல்லிவிட்டு அவன் மீண்டும் மருந்துக்கடையை நோக்கி நடந்தான். பாரதி மருந்துக்கடைக்கு வந்தபோது மணி ஆறேமுக்கால்.

''உச்சிக்கு என்ன சாப்பிட்டாய்?''

சொன்னாள்.

''எல்லாம் நார்த் இண்டியன் டிஷஸ்...சாயங்காலம் ஆத்தில் டிபன் இருக்கலை அல்லவா?''

''தெரியாது.''

''அப்ப நீ டிபன் சாப்பிடலை.''

''இல்லை.''

''வா! ஹரிஹரபுத்ராவுக்குப் போவோம். டிபன் நன்னா இருக்கும். இலை அடையும், சேவையும் திங்கலாம்.''

''மணி ஏழு அடிக்கப் போறது.''

''அதனால் என்ன, வா போலாம்.''

'கைலாசம் விட்டுக்குப் போகணும்னு சொன்னேளே?'

''ஒன்னை ஆத்ல கொண்டு விட்டுட்டு போய்க்கறேன்.''

இருவரும் காரில் ஏறினார்கள்.

''உனக்கு இலை அடை பிடிக்கலே இல்லே?''

''பலாப்பழ வாசனையா இருக்கு.''

''வெல்லம், தேங்காய், சக்கைப்பழம் இது மூணும்தான் பிரதானம். அஸ்திவாரத்துக்கு இலையில் வடாம் எழுதற மாதிரி அரிசிக் கூழை இட்டு அது மேல் பூர்ணத்தைப் போட்டு ஆவியில் வேகவைச்சா அது இலை அடையா யிடும்.''

''நான் டில்லியிலே பலாப்பழம் சாப்பிட்டதே இல்லே. ஒரே ஒரு வாட்டி நங்கவரத்திலே சாப்பிட்டிருக்கேன். அதுவும் சமீபத்திலே கலியாணத்துக்கு முன்னால''

''எறியறத நான் தின்னுக்கறேன்.''

''எச்சப் பண்ணிட்டேனே?''

''அதனால் என்ன பரவாயில்லே. ஒய்ஃப்போட எச்சில் தானே?'' தான் தின்று விட்டு மீதி வைச்சதை அவன்பால் தள்ள பாரதி தயங்கினாள்.

நாராயணன் சிரித்துக்கொண்டே கை நீட்டித் தட்டை இழுத்துக் கொண்டான்.

''பி.எச்டி...யைப் பத்தி ரொம்ப மும்முரமா இருக்கே போலிருக்கு.''

''ஒரே குழப்பமா இருக்கு ''

''நேத்தைக்கு அப்பாகிட்ட டிஸ்கஸ் பண்ணினாய். எப்ப சகஸ்ரத்துகிட்டப் பேசினாலும் இதைப் பத்திச் சொல்றாய்.''

''எல்லா பக்கங்களிலிருந்தும் எதிர்ப்பு.''

''முதல் வில்லன் நான்தான் இல்ல்லியா?''

அவள் மௌனமாக அவனைப் பார்த்தாள்.

''தேவகி வேறு ஸ்க்ரு கொடுத்திருப்பாளோ?''

''இல்லை''

''ஆச்சரியமா இருக்கு!''

''அவ ஒரு கேரக்டர்.

''அவளோட அப்பா வாசுதேவன் நாயரை நீ பார்த்திட்டில்லை. அபூர்வமான மனுஷன்.''



''தேவகி சொன்னதை வைச்சுக்கிட்டுப் புரிஞ்சுண்டேன்.''

''காப்பியா, டீயா?''

''ரெண்டுமே வேண்டாம்.''

''வடை, போண்டா, பஜ்ஜி?''

''ஹூம்''

''நான் காப்பி குடிக்கறேன்''

''டீதானே பழக்கம்?''

''நாயர் கடை காப்பியும் நந்நா இருக்காது. அய்யர் கடையிலே டீயும் நந்நா இருக்காது. நல்ல டீ வேணும்னா அப்பப்ப டிகாக்ஷன் போட்டு பாலை விடணும். இங்கே எப்பவோ டிகாக்ஷனைப் போட்டு வைச்சிருப்பா.''

''எல்லாம் தெரிஞ்சு வைச்சிருக்கீங்க.''

'சாந்தினிசௌக்ல அன்னபூர்ணா இருக்கே. அங்கே ஒருக்கா டீ குடிச்சேன். இப்ப நெனைச்சுப் பார்த்தாலும் வாய் மணக்கறது.''

''அன்னபூர்ணா பெங்காலி ஸ்வீட்ஸுக்கு ஃபேமஸ். சந்தேஷ், ரஸ்குல்லா, மில்க் பர்பி எல்லாம் நன்னா இருக்கும் ''

காபி வந்தது.

மடக்மடக்கென்று குடித்தான்.

''அப்ப நீ இன்னும் பி.எச்டியைப் பத்தி முடிவு எடுக்கலை.''

''நான் மட்டும் எடுத்தாப் போதாதே!''

''நாளை ஒருநாள் விட்டுடு. மத்த நாளைக்கு நீயும் நானும் நம்ப களத்துக்குப் போவோம்.

''யூ மீன் எஸ்டேட்.''

''ரெண்டும் வெவ்வேறேதான். ஆனா நம்ப களம் எஸ்டேட் மாதிரி இருக்கும். முப்பது ஏக்கர்ல நெல்லு.

இருபது ஏக்கர்ல தேக்கு. தேக்குத் தண்டில வளர்ற மிளகுக் கொடி. அப்றம் ஒரு நாப்பது ஏக்கர்லே ரப்பர். ரப்பர் போட்டு ரெண்டு வர்ஷம்தான் ஆறது. அதெல்லாம் தவிர தென்னை, மா, புளின்னு எல்லா மரங்களும் உண்டு. ஹங்...சொல்ல மறந்துட்டேனே ஏழெட்டு ஏக்கர்லே மரச்சீனியும் உண்டு. மரச்சீனின்னா டாபியோக்கா. ஏழைகளோட ஆகாரம்."

"இதுக்கெல்லாம் நடுவிலே நாம இருக்கணுமா?"

"வீடும் இருக்கே, டெரஸ்வீடு, அப்பாவும், அம்மாவும் எப்பவாவது போய்த் தங்குவா. அவா சௌகரியத்துக்காக ஒரு ரூமை ஏஸி பண்ணியிருக்கேன்."

ஒரு சில நாள்களுக்கு கிராமத்திலிருந்தும், முக்கியமாக மாமியாரிடமிருந்தும் விடுதலை கிடைக்கும் என்று உள்ளூற திருப்தி அடைந்த பாரதி, "நாமும் போவோம். நம்ப ஹனிமூன் அங்கே நடக்கட்டும்" என்றாள்.

"எனக்கு ஹனிமூன்லே நம்பிக்கை இல்லை."

"இப்ப நேரம் ஏழரை" என்ற பாரதி, கைப்பையைத் திறந்து, "இந்தாங்க" என்று சொல்லி கரன்ஸி நோட்டுகளை நீட்டினாள்.

"ஆயிரத்தில் பாக்கியா?"

"ஆமாம்."

"உங்கிட்டேயே இருக்கட்டும். சரி, வா, போகலாம்."

மௌனமாக இருவரும் காரை நோக்கி நடந்தார்கள்.

நாராயணனை அவளால் இன்னும் சரியாகப் புரிந்து கொள்ள முடியவில்லை. அவனுடைய உண்மை சொருபம் தான் என்ன?ஏன் அவனாக பிஎச்டி.பற்றி விசாரிக்கிறான். அவளுடைய உள்ளத்தை சீண்டி பார்க்கவா?

இரவு ஒன்பதரை மணிக்குத் தங்கம்மாவைப் பாம்பு தீண்டியது.



அவளுடைய அலறல் வீட்டையே அதிர வைத்தது. நல்ல வேளையாக அதற்குச் சில நிமிடங்கள் முன்புதான் ஈசுவரன் வீடு திரும்பினார்.

"என்னடீ தங்கம்? என்னாச்சு?"

"பாம்பு... பாம்பு... கடிச்சுட்டது."

"பதறிப்போகாதே, தங்கம், ஒனக்குஒன்னும் சம்பவிக்காது. பாரதி! பாரதி, வேகத்திலே இங்கே வா."

தங்கம்மாவின் அலறல் கேட்டு ஏற்கனவே முன் தாழ்வாரத்தை அடைந்துவிட்ட பாரதி நாலே எட்டில் பாய்ந்து பின் கட்டை அடைந்தாள்.

"எங்கே கடிச்சுது?"

"வலக் கால்லே-கட்டை விரலுக்கு மேலே. புறங் கால்லே கயத்தைக் கொண்டு வந்து கட்டுங்கோ.

"இரு இரு..." ஈசுவரன் ஓடினார்.

"பார்த்துண்டு நிக்கறயேடீ..." என்று பீதிக் கிடையிலும் தங்கம் இரைந்தாள்.

"ஈசுவரன் கயிறுடன் வருவதற்குள். பாரதி தன் புடைவைத் தலைப்பைக் கிழித்துச் சுருட்டியாகிவிட்டது.

"கணுக்காலுக்கு மேலே இறுக்கிக் கட்டுடீ..."

கட்டினாள்.

"பொண்ணே இதை முழங்கால்லே கட்டு நந்நா இறுக்கிக்கட்டு அத்தையை வேகத்தில் காருக்கு கூட்டிண்டு வா. நான் சகஸ்ரத்து கிட்டப் போய் சங்குண்ணிட்ட விபரம் சொல்லச் சொல்றேன். நாம போறதுக்குள்ளே கோழிகளை ரெடி பண்ணுவன்"

பின் ஸீட்டில் தங்கம்மா ஏறிக்கொள்ள அருகே அவளை அணைத்தவாறு பாரதி உட்கார்ந்தாள், கார் சீற்றத்துடன் புறப்பட்டது.

செய்தி ஒரே நிமிடத்தில் ஊர் முழுதும் பரவ பெரிவர்களும், வாலிபர்களும் ஈசுவரன் வீட்டுமுன் குழுமினார்கள்.

''எங்கே சதாசிவம்? அவனைக்கூப்பிடுங்கோடா!'' என்றார் ஒருவர்.

''இங்கேதான் இருக்கேன். அண்ணா''

''போடா...போய் பாம்பு இருக்கான்னு பாரு.கையில் தடியும் கயிறும் இருக்கா?''

''கொண்டு வந்திருக்கேன் அண்ணா!'' என்று சொன்ன சதாசிவம ஐந்து அடி நீளமுள்ள கழியின் முனையிலுள்ள இரு துவாரங்களில் மணிக் கயிறைச் செருகிக் கொண்டே வீட்டினுள் பிரவேசித்தான். அவன் பின்னால் ஐந்தாறு பேர் சென்றார்கள்.

''தங்கம்மா அங்கதான் படுத்துண்டிருந்தா''என்றாள் பாட்டி.

''சதாசிவன் போனான். ஐந்து அடி அகலமுள்ள நீளமான தாழ்வாரத்தின் ஒரு மூலையில் காலிப் பெட்டிகளும் டின்களும் கிடந்தன. நான்கைந்து கோணிப் பைகள். சுவரின்மீது சாய்த்து வைக்கப்பட்ட சில முறங்கள்.

''இங்கே இருந்தாத்தான் உண்டு ஆராவது வெள்ளத்தில் பெருங்காயத்தை நந்நாக் கரைச்சுக்கொண்டு வாங்கோடா'' என்று சதாசிவம் கட்டளையிட,ஒருவன் ''அடுக்களையில் பெருங்காயம் எங்கே வைச்சிருக்கு?'' என்று கேட்க ''சின்ன ஷெல்பிலே தாழத்துப்படியில் உப்பு பரணி கிட்ட இருக்கு'' என்று பாட்டி பதிலளிக்க இரண்டு பேர் ஓடினார்கள்.

''சாரையா இருக்குமோ?'' என்றான் ஒருவன்.

''சாரையா, சர்ப்பமா எதானா என்னடா. இப்ப அதுவா காரியம்? எதாயிருந்தாலும் சங்குண்ணி பார்த்துப்பன்'' என்றான் இன்னொருவன்.

''இந்தச் சமயம் பார்த்து கோந்தை ஆத்லஇல்லையே'' என்றான் இன்னொருவன்.

''அவன் இருந்திருந்தா என்னடா சேதிருப்பான்? சங்குண்ணிட்டதானே அம்மையைக் கூட்டிண்டு போய் இருப்பன்.''



பெருங்காயம் கரைத்த நீர் வந்தது. ஒருவன் கையால் அள்ளி அள்ளி சுவர் மீதும், காலிப் பெட்டிகள் மீதும் தெளிக்க இன்னொருவன் கம்பால் அவற்றைக் கிளறிவிட, பாம்பின் வால் தெரிந்தது.

''சர்ப்பம்டா''

கம்பை மேலும் கிளற, பாம்பின் உடல் தெரிந்தது. அது மெதுவாக நகர்ந்து திடீரென்று படம் எடுத்தது.

''பெரிய தப்ளையா ஒரு தப்ளையை முழுங்கிட்டு ஒட்டம் பிடிக்கக் கழியாதைக்குப் படம் எடுக்கறது பார்'' என்றான் நீரைத் தெளித்தவன்.

மறுகணம் மின்வேகத்தில் சதாசிலம் தன் கைக்கழியால் பாம்பின் படத்தை அழுத்த, பாம்பு நழுவ முடியாமல் முகத்தைச் சுருக்கிக்கொண்டது. சில விநாடிகளில் கழியின் துவாரங்களின் வழியே சென்ற மணிக்கயிறு வளையம் பாம்டைச் சுற்றிக்கொள்ள சதாசிவம் கயிற்றின் இன்னொரு முனையை இழுத்தான். தலைக்குக் கீழே சுருக்கு! பாம்பு அநாதையாய்த் தவித்தது.

''குடமோ, சட்டியோ, பானையோ கொண்டு வாங்கோடா'' என்ற சதாசிலம் இப்போது வலக் கை விரல்களால் பாம்பின் வாய்க்குக் கீழே அழுத்திக் கொண்டிருந்தான்.

ஒரு குடத்திலுள் பாம்பைச் சிறை வைத்து குடத்தின் வாயையும் கோணித் துண்டால் மூடிக் கட்டிய பிறகு, ''ஆராவது சைக்கிள்ளே கொண்டு பொழையைத் தாண்டி விட்டுட்டு வாங்கோடா!'' என்றான் சதாசிவம்.

மயக்கமுற்ற நிலையில் இருக்கையை விட்டும் எழ முடியாமல் கிடந்த தங்கம்மாவை ஈசுவரனும், பாரதியும் மெல்லத் தூக்கிக் கொண்டு சங்குண்ணியின் தோட்டத்திலுள் பிரவேசித்தார்கள்,

''எந்த சங்குண்ணி போன் கிட்டியோ?''

''கிட்டி சாமி...இது எப்ளா நடந்தது?''

''ஒம்பதரை மணிக்கு. கோழிகள் இண்டு அல்லே ''

''எழுபது எழுபத்தஞ்சு. இண்டு அது மதி.''

''கழிஞ்ச மாசம் நம்மட ராமசாமிக்கு எத்தற கோழி வைச்சு?''

''நல்லோணம் ஓறமை இல்லா. அறுபத்தஞ்சு எண்ணம் இருக்கும்.''

'பாம்புக்கடிக்கும், கோழிகளுக்கும் என்ன சம்பந்தம்? பெரிய டாக்டரிடம் செல்லாமல் யாரோ ஓர் ஆளிடம் அத்தையைக் கொண்டு வந்திருக்கிறார்களே!'

திடீரென்று சகஸ்ரம் வந்தான். பாரதி அவனைப் பார்க்க சகஸ்ரம்,

''பாரதி, கோந்தை எங்கே?'' என்று கேட்டான்.

சொன்னாள்.

''கைலாசம் கிட்டத்தான் இருக்கான் நான் போய்க் கூட்டிண்டு வரேன்...மன்னி...மன்னி...''

''அவ மயங்கிக் கிடக்கறான்டா, சகஸ்ரம்''

சங்குண்ணி ஒரு லைஃபாய் சோப்புடன் வந்து தங்கம்மாவின் பாதத்தை ஒரு தடவைக்கு இரு தடவையாகத் தேய்த்துக் கழுவினான். துடைத்தான். டார்ச் லைட் அடித்து உற்றுப் பார்த்தான்.

பிறகு இடுப்பில் செருகியிருந்த கத்தியை எடுத்தான். கத்தி சிறிதே என்றாலும் கூர்மையாக இருந்தது.

பயத்தில் பாரதி சிலிர்த்துப் போனாள்.

## 15

கூர்மையானதோர் சிறிய கத்தியை எடுத்த சங்குண்ணி டார்ச் விளக்கின் ஒளியில் கடிவாயைத் தேடினான். இரு சிறு குண்டூசி முனை அளவு — புள்ளிகள்



கண்ணில்பட அடுத்த வினாடி கடிவாயைச் சுற்றிக் கீறினான். அரை மயக்கத்தில் இருந்த தங்கம்மா 'ஐயோ' என்று வீரிட்டாள்.

''ஒண்ணும் இல்லை தங்கம் பயப்படாதே... சோரை (சோரி) நெறய வந்தாத்தானே கோழியை வைக்க முடியும். எல்லாம் சரியாயிடும். குருவாயூரப்பன் இருக்கால்'' என்றார் ஈசுவரன்.

உடம்பெல்லாம் நடுங்க, பாரதி வைத்த கண் எடுக்காமல் பார்த்துக் கொண்டு நின்றாள். கோழிகளைக் கொண்டு இந்த ஆள் என்ன செய்யப் போகிறான்?

சங்குண்ணியின் மகன் ஒவ்வொரு கோழியாகக் கொடுக்க அவன் கோழியின் சிறகுகளை விலக்கி, அதன் அடிப்பாகததைக் கடிவாயின் மேல் வைத்தான். அவனுடைய இடக்கை பறவையின் கழுத்தை நெரிப்பது போல இறுகி இருந்தது. ஓரிரு வினாடிகளில் கோழி பதை பதைத்துச் சிறகு அடிக்க முயன்றுதோல்வியுற்று, உடலெல்லாம் நீலம் பாரிக்க, இறந்து போயிற்று.

இரண்டாவது, மூதற்கோழியைப் பின் தொடர மூன்றாவது, நான்காவது என்று சங்குண்ணியின் கையில் இருந்து விழுந்து கொண்டே வந்தன. தங்கம்மாவைச்சுற்றி நின்ற கூட்டம் சற்றே விலகி நின்றது.

''அப்பா! எப்ப நடந்தது?''

நாராயணனுடைய குரலைக் கேட்டு பாரதி நிமிர்ந்து பார்த்தாள். அவனுடைய பார்வை ஒரு சாய்வு நாற்காலியில் அரைக்கண் மூடிக்கிடக்கும் தங்கம்மா மீது நிலைத்திருந்தது.

ஒரு மணி நேரத்துக்குள் இருபத்திரண்டு கோழிகள் அங்குமிங்குமாய்க் கிடந்து மற்ற கோழிகளுக்காகக் காத்துக் கொண்டிருந்தன.

பாரதி சகஸ்ரத்தைப் பார்த்தாள். அவனும் அவளைப் பார்க்கவே, மெல்ல அவன் அருகே சென்றாள்

''என்ன வைத்தியம் இது சித்தப்பா?''

''கோழி வைத்தியம்.''

''இப்பவுமா தமாஷ்.''

''பாம்பு கடிச்சா கண் கண்ட வைத்தியம் இந்தப் பாலக்காட்ல இப்ப இதுதான்.''

''இவன் என்ன செய்யறான்? ஏன் கோழி ஒவ்வொண்ணா செத்து விழறது?''

''கோழி சாகலைன்னா உன் அத்தை செதது போவள். ஆரோட உசிரு பெரிசு? கோழியை வெட்டித் திங்கலாம்னா, ஓர் உசிரை மீட்டுக்க அதை உபயோகப்படுத்திக்கப் படாதா?

''அதாவது அத்தை ரத்தத்திலுள்ள விஷம் கோழிக்கு வர்றது!'' என்றாள் பாரதி.

''கரெக்ட். இந்தக் கோழியோட ஏனஸ்—அதான்—ஆசனவாய் ஸ்பாஞ் மாதிரி ரொம்ப மிருதுவா இருக்கும். ரத்தம் பட்டவுடன் ஆஸ்மாஸிஸ்—அதான்— ஈர்ப்புத் தன்மை முறையில் கோழி சோரையை வாங்கிக்கறது. வெறும் பிளட் மாத்றமா? கூடவே விஷமும் போறது! அப்றம்? கோழி க்ளோஸ். அங்க பார் பாரதி! இப்ப இருபத்தாறு கோழி மடிஞ்சு விழுந்தாச்சு.''

''இப்படிப்பட்ட வைத்தியததைப் பத்தி நான் கேள்வி பட்டதே இல்லை.''

''இப்பத்தான நேர்லேயே பார்க்கறாயே?''

''அத்தை உசிருக்கு ஆபத்து ஒண்ணுமில்லையே?''

''நிறையக் கோழிக் கைவசம் இருக்கிற வரைக்கும் ஆபத்து இல்லை, அங்க பாரு. உன் அத்தை என்ன செய்யறான்னு.''

பாரதி பார்த்தாள்



அவள் மெல்ல வாயைத் திறக்க நாராயணன் கொஞ்சம் கொஞ்சமாக டீ கொடுத்துக் கொண்டிருந்தான்.

''எங்காத்துக்கு மூணாவது ஆத்ல ராமசாமின்னு ஒருத்தர் இருக்கார்... கொஞ்சம் குள்ளமா கொழு கொழுன்னு செக்கச் செவேல்னு அவர் உன் கலியாணத் துக்கு வந்திருந்தார் அவரைப் போன மாசம் பாம்பு கடிச்சுது. நான் கார்ல போட்டுண்டு இங்கே பறந்து வந்தேன். அவர் இப்ப இன்னும் கொழு கொழுன்னு இருக்கார்.''

''பாவம் அத்தை கத்தியாலக் குத்திக் கிளறினப்ப துடி துடிச்சுப் போயிட்டா.''

''அனிஸ்திஷியா கொடுத்திருக்கலாம்னு சொல்றியா? இந்த வைத்தியத்துக்கு ஆபரேஷன் இப்படித்தான்...பாரு அங்கே பாரதி! முப்பத்திரண்டு தாண்டியாச்சு, மன்னி நன்னாக் கண்ணைத் திறக்கறா. ஆர் கண்டா ஒன்னைக் கூப்பிட்டாலும் கூப்பிடுவா.''

பாரதி பதில் பேசாமல் கை சோராமல் செயல்படும் சங்குண்ணியையும், தளராது கோழிகளை விரைந்து கொடுக்கும் அவனுடைய பிள்ளையையும் மாறி மாறிப் பார்த்தாள் கவிழ்த்துப் போட்டிருந்த இரு பெரிய அண்டா போன்ற கூடைகளில் கோழிகள் தூக்கு மேடைக்குத் தயாராகிக் கொண்டிருப்பதையும், கூடைகளின் சதுர ஓட்டைகள் மூலம் கண்டாள்.

குறிப்பு : (பாம்பின் விஷத்தை இறக்கி உயிர் கொடுக்க இப்படிப்பட்ட வைத்திய முறை பாலக் காட்டில் உண்டு. இதை இந்தக் கதையின் ஆசிரியர் நேரில் பார்த்து அறிந்திருக்கிறார்.)

நாற்பது, நாற்பத்து நாலு, ஐம்பது என்று ஒரு நாள் கிரிக்கட்டில் ரன்கள் ஏறுவது போலக் கோழிகள் இறங்கி வந்து சங்குண்ணியின் கை வண்ணத்தால் உயிர் நீத்தன.

அறுபத்திரண்டாவது கோழி முரண்டு பிடித்தது. எத்தனை தடவை சங்குண்ணி முயன்றும், தான் சாகத் தயாரில்லை என்று கூறுவதுபோல் வீரிட முயன்றது.

இன்னொரு கோழியை எடுத்து பரீட்சை நடத்த, அதுவும் தனக்கு நீண்ட ஆயுள் இருப்பதை உணர்த்தியது.

பாரதி பார்த்தாள். வியப்பில் அவள் தன் கண்களையே நம்ப முடியாதவளானாள்.

சாய்வு நாற்காலியில் தங்கம்மா உட்கார்ந்திருந்தாள். முகம் சோர்வில் வாடிப் போயிருந்தாலும் உடலின் தெம்பு குறையவில்லை.

''எந்தா சங்குண்ணி, தீர்ந்நோ? என்று கேட்டார் ஈசுவரன்.''

''தீர்ந்து சாமி,''

''கதை முடிஞ்சாச்சு, பாரதி. இனிமே சங்குண்ணிக்கு சம்பாவனை கொடுக்க வேண்டியதுதான் பாக்கி உன் அத்தை ப்ளட்ல இப்ப ஸ்நேக் பாய்சன் இல்லை. வேற பாய்சன் இருந்தா அதை இங்கே எடுக்கக் கழியாது. இனிமே ஊர் திரும்பண்டதுதான் பாக்கி.''

''எப்படி பாம்பு விஷம் அத்தை ஒடம்பில இல்லேங்கறீங்க?''

''ரெண்டு கோழிகளை சங்குண்ணி அஞ்சாறு பிராவசியம் குடிவாயிலே வைச்சு வைச்சுப் பார்த்தான். விஷம் இருந்திருந்தா கோழி உயிர் மூச்சை நிறுத்தி யிருக்கும். அங்கே பாரு. அத்தையோட கால் கட்டுகளை யெல்லாம் அவிழ்த்தாச்சு. உன் அத்தை எழுந்து நிக்கறா.

''சிவராமா?''

''அண்ணா!''

''நான் தங்கத்தைக் கூட்டிண்டு ஆத்துக்குப் போறேன் நீ சங்குண்ணிக்குக் கொடுக்கண்டதைக் குடுத்துட்டு வந்து சேரு. அறுபத்தொண்ணு கோழி நஷ்டமாயிருக்கு. சங்குண்ணி நம்ப கிட்ட எத்தற கேக்கறதுன்னு தெரியாம முழிப்பன். அவன் கேட்டத்துக்கு மேலே ஓர் ஆயிரம் கொடு.''

''சரி அண்ணா.''



''வா தங்கம்... மொள்ள வா... ஒரு கண்டத்தைத் தாண்டியூட்டாய். ஒன்னை ஆரு அந்த இடுக்கான தாழ்வாரத்திலே படுத்துக்கச் சொன்னா? கோந்தே எங்கே பாரதி?''

''குஞ்சப்பாவோட பேசிண்டு நிக்கறார்.'' என்றாள் பாரதி.

''டேய் இவனும் என் கார்ல வரட்டும்!''

''சரிப்பா.''

''நாங்க மூணு பேருமாத்தான் இங்கே வந்தோம். மூணு பேருமாவே மடங்கிப் போறோம்.''

''சரிப்பா.''

''அவ புடைவைத் தலைப்பைக் கிழிச்சுச் சுருட்டி இறுக்கக் கட்டினா, நாளைக்கு அவளைக் கூட்டிண்டு பாலெஸ் ஹவுஸுக்குப் போ... வேணுங்கற புடைவையை வாங்கிக் கொடு.''

நாராயணன் பதில் சொல்லாமல், பாரதியைப் பார்த்து முறுவலித்து சமிக்ஞையால் வரும்படிக் கூறினான்.

''கோந்தை கூப்பிடறான். நீ போ பாரதி, நாளைக்குப் பார்ப்போம்.''

''இப்ப என்ன டயமாறது?''

''ரெண்டு அடிக்கப் போறது.''

''ரெண்டா!''

''தியேட்டர்லே நைட்ஷோ எப்பவோ முடிஞ்சிருக்கும் இந்நிக்கு ராத்திரி சிவராத்திரிதான்.''

பாரதி நகர்ந்து நாராயணனை அடைந்தாள்.

''நல்ல காரியத்தைச் சமயத்திலே செய்தே, பாரதி.''

''கோந்தே!''

''அப்பா கூப்பிடறாள். நீ அவரோட போ...உம் வேகம்'' என்ற தங்கம்மா, ''பாரதி நீ முன்ஸீட்ல உட்கார்ந்துக்கோ'' என்றாள்.

"இப்ப எல்லாருக்கும் தீண்டல்தான். ஒன்னை நானும் தொட்டேன அவனும் தொட்டா, அப்ப ஆபத்துக்குத் தோஷமில்லைன்னு நீ பேசாதைக்கு இருந்தாய் இப்பவும் பேசாதைக்கு வா... பாரதி, நீ அத்தை கிட்டக்கலே ஒககார்ந்துக்கோ. நான் கயத்தை எடுத்து வர்றதுக்கு தாமசமாச்சு. ஆனா அவசரத்தை மனசிலாக்கிண்டு, புடைவைத் தலைப்பைக் கிழிச்சு கயறாக்கிக் கட்டினியே, அது கிளாஸ். ஒன் அத்தை, என் ஒய்ஃப் பொழைக்க நீதான் காரணம் பொண்ணே."

ஈசுவரனுடைய நெகிழ்ச்சியை உணர்ந்த போது பாரதிக்கு அவளையும் மீறிக்கண்ணில் நீர் துளித்தது.

அதன் பிறகு காரில் மூவரில் ஒருவர்கூட இன்னொருவரிடம் பேசவில்லை.

வீட்டை அடைந்தபோது இரவு மணி இரண்டரை.

"ஈச்சா எல்லாம் சரியாச்சா?"

"ஆச்சுப்பா "

"எத்தறை கோழி?"

சொன்னார்.

"இப்ப கோழியோட விலை விஷமாட்டமா ஏறியிருக்கு. போன மாசம் அம்பது ரூபாய்னு ராமசாமிட்ட வாங்கியிருக்கான் சங்குண்ணி."

"எத்தறையானா என்னப்பா? விலை விஷமாட்டமா ஏறினாலும் தங்கத்தோட விஷம் எறங்கித்தே."

"ஒன் அப்பா விஷ்ணு சகஸ்ரநாமத்தை அப்பத் தொடங்கினதுதான். கார் சத்தம கேட்டப்பறம்தான் நிறுத்தினார்" என்றாள் ஈசுவரனுடைய தாயார். பிறகு, "நீ ரேழியிலே பாயில் படுத்துக்கோ ஈச்சா! பாரதி இந்தத் தாழ்வாரத்திலே ஓர் ஓரமாப் படுத்துக்கட்டும். தங்கம் ஆத்ல இல்லாத சமயத்தில் பாம்பு கடிச்சிருக்கு. ரெண்டு பேரும் அவளைத் தொட்டிருக்கேள். மத்த துணிகளையும் தீண்டலாக் கண்டாம்" என்றாள்.



"நான் இப்ப நேராக் குளிக்கப் போறேன். அதுவும் கொளத்திலே" என்றார் ஈசுவரன்.

"அச்சமயத்தில் எதுக்குடா குளத்திலே முங்கணும்?"

"நீ பேசாதைக்கு இரும்மா... பொண்ணே பாரதி... நீ என்ன செயப் போறாய்? தரை மேல் தரையிலே பாயும் தலகாணியும் இருச்கு பாட்டிம்மா எடுத்துத் தருவள்."

"நான் பாத்ரும்லே குளிக்கப் போறேன் அத்திம்பேர்..."

"அப்ப கீஸரைப் போட்டுக்கோ."

"சரி அவர் வரட்டும்."

"கோந்தையும குளிக்கணும். அவனும் தங்கத்தைத் தொட்டு சாயை கொடுத்திருக்கான். இன்னும் சகஸரத்து ஆத்திலே ஆரும் தூங்கப் போகலே. ராஜியை வரச் சொல்லேன். ஒனக்கு என்ன வேணும்?"

"ராஜிட்ட சொல்லிக்கறேன் அத்திம்பேர்."

"சரி அவளை இப்பவே அனுப்பறேன்!" சொல்லிவிட்டு ஈசுவரன் வெளியேறினார்.

ஒரு சில நிமிடங்களில் ராஜி வந்தாள்.

"சித்தி ஒரு சின்ன ஹெல்ப்."

"சொல்லு."

"மாடியில் அலமாரியிலிருந்து புடைவை, சோளி, உள்பாவாடை, பிரேசியர் எடுத்துத் தர்றீங்களா?"

"டவல் வேண்டாமா?"

"மறந்துட்டேன்."

"இரு. கொண்டு வரேன்."

கொண்டு வந்தாள்.

"தலைக்கும் குளிச்சாத்தான் உங்க ஊர் பாஷையிலே மடி பாரதி!"

"தெரியும் சித்தி. இதெல்லாம் கொண்டு வந்ததுக்கு ரொம்ப தாங்க்ஸ்.

"நீ ரொம்ப ஃபார்மலா இருக்கே பாரதி."

"ஸாரி, சித்தி."

"இதுவும் ரொம்ப ஃபார்மல்தான். ஆமாம் மன்னி எங்கே?"

"படுத்துண்டாச்சு!"

"எங்கே, காணோமே?"

"அதே இடத்திலே."

"பாம்பு வந்த எடத்திலேயா?"

"ஆமாம் சித்தி."

"உன் அத்தைக்குக் கொஞ்சம் பிடிவாதம் அதிகம் தான்."

"கார்லேந்து எறங்கினா. ஆர்ட்டேயும் எதுவும் பேசலே... நேராப் போனா, படுத்துண்டா."

"அண்ணா வர்ற வழியிலே ஏதானும் சொன்னாரா?"

"அப்படி ஒண்ணும் கடிஞ்சு பேசலை, சித்தி."

"விதி இருந்தாத்தான் பாம்பு கடிக்கும். நீ பார்த்துப் போ. போற வழியிலே ஒன் சத்தம் கேட்டு மன்னி எழுந்திருக்கண்டாம்."

"சரி, சித்தி"

"நாளைக்குக் கார்த்தாலே ஆத்துக்கு வா."

"சரி."

"நான் எல்லார்க்கும் அங்கே காப்பி போட்டுக் கறேன்."

"வேண்டாம் சித்தி. நான் போடறதா தீர்மானம் பண்ணிட்டேன்."

"நீ எப்பத் தூங்கி, எப்ப எழுந்து, எப்ப காபி போடு வாய்?"

"தூங்கினாத்தானே அந்தப் பிரச்சனை? உங்க பாஷையிலே சொல்றதானா, ப்ரோப்ளம்."



"என்னடீ ராஜி! இன்னுமா குசுகுசுன்னு பேசிண்டு நிக்கறாய்? ஆத்துக்குப் போகலியா?" என்றாள் பாட்டி.

ராஜி வெளியேறினாள்.

குளித்துவிட்டு வெளிவந்த பாரதி, வெட்டிவிட்டு இருந்தது போக எஞ்சியுள்ள கேசத்தை டவலில் பொதிந்து கொண்டாள். கூடத்தினுள் சென்று, சுவாமி படங்களுக்கு முன்னால் இருந்த குங்குமச் சிமிழை எடுத்தாள்.

நெற்றியில் பொட்டு வைக்கும்போது பொறி தட்டினாற போன்ற ஒரு கேள்வி எங்கிருந்தோ பறந்து வந்து அவளைத் தாக்கியது.

எங்கே யார் என்ன ஆராய்ச்சி செய்து, பட்டம் பெற்று இந்த வைத்திய முறையை ஸ்தாபித்தார்கள்?

சங்குண்ணி ஒரு சாதாரண ஆள். அவனிடம் உன்னத மான வைத்திய முறை இருக்கிறது. இவனே டெல்லியில் இருந்திருந்தால்? பல நாட்டுத் தூதர்கள் சங்கமிக்கும் இடத்தில் அவனை அமெரிக்காவுக்கு அள்ளி வாரித் தூக்கிப் பிளேனில் ஏற்றி இருப்பார்களே.

திடீரென்று இரு குரல்கள் கேட்டன.

அப்பாவும், பிள்ளையும்.

மாமனாரும் கணவரும்.

ஒருவர் குளத்தில் மூழ்கி விட்டு வருகிறார். இன்னொருவர் இப்போதுதான் வீடு திரும்பியிருக்கிறார்.

கூடத்தில் இருக்கும் கடிகாரத்தைப் பார்த்தாள்.

மூன்றரை.

பாட்டிக்கும், தாத்தாவுக்கும் இன்னும் அரைமணி நேரத்தில் விடிந்துவிடும்.

அன்று நிச்சயமாக அவள் ஒன்பது மணிவரை தூங்க மாட்டாள்.

சமையலறைக்குள் பிரவேசித்தாள். விளக்கைப் போட்டாள். காப்பிப்பொடி எந்த டப்பாவில் இருக்கிறது என்று அவளுக்குத் தெரியும்.

ஃபில்டர்கள் மூன்று இருந்தன.

பெரிய பித்தளை ஃபில்டரை எடுத்தாள். கழுவினாள்...

காஸ் அடுப்பில் தண்ணீரை வால் பாத்திரத்தில் ஊற்றி வைத்து விட்டு ஸ்பூன் ஸ்பூனாகக் காப்பிப்பொடியை எண்ணாமல் போட்டாள் ஃபில்டரில் பாதிக்கு மேல் வந்தபோது ஒரு சிறு தம்ளரின் அடி பாகத்தால் சற்றே அழுத்தினாள்.

ஃப்ரிஜ்ஜில் முந்தைய நாள் கறந்த பால் இன்னும் காய்ச்சப்படாமல் இருந்தது. எடுத்தாள்.

'ஜில்' குறையட்டும் என்று காத்திருந்து விட்டு அடுப்பில் வைத்தாள்.

''பொண்ணே!.'

ஈசுவரனுடைய குரல் கேட்டதும் திரும்பிப் பார்த்தாள்.',

''ஓர் அஞ்சு நிமிஷம், அத்திம்பேர் ஸ்ட்ராங்கா சர்க்கரை—ஸாரி பஞ்சாரை குறைச்சலா காப்பி கலந்து தரேன்!''

ஈசுவரன் அயர்ந்து போய் நின்றார். பிறகு மெது வாக உள்ளே வந்து. ''நீயும் தூங்கலையா?'' என்றார்.

''இல்லே.''

''ஏன்?''

காரணத்தைச் சொன்னாள்.

ஈசுவரன் கலகலவென்று சிரித்தார்.

''என்ன சத்தம் அங்கே?''

தங்கம்மாவின் குரல் அடிப்பதுபோலக் கேட்டது.

## 16

பாரதி, ஈசுவரன் காப்பியை ரசித்து, ருசித்து, உறிஞ்சிப் பருகும் காட்சியைக் கண்டாள்.

''நன்னா இருக்கா அத்திம்பேர்?''



''ஏ க்ளாஸ்! ஒனக்கு அடுக்களை வேலையைத்தெரியா துன்னு சொன்னாயே?''

'தெரியாமயே எத்தனை நாள் இருக்கறது அத்திம்பேர்? பிள்ளையார் சுழி போடற மாதிரி காப்பியிலே ஆரம்பிச் சிருக்கேன்.''

''மெள்ளப் பேசு. தங்கம்மா முழிச்சுண்டாச்சு.''

''அத்தைக்கு என்னைப் பிடிக்கலே.''

''இன்னமே பிடிக்கும்.''

''எப்படிச் சொல்றீங்க?''

''நீதானே மின்னு மின்னால ஃபர்ஸ்ட் எய்டு கொடுக் கிற மாதிரி புடைவையைக் கிழிச்சுக் கட்டைப்போட்டே?''

'அதை நான் செய்யலே அத்திம்பேர் எல்லார்ட்டேயும் இருக்கற மனிதாபிமானம் செஞ்சுது.''

''நெஞ்சு ஈரம் இருந்தாத்தானே பொண்ணே மனிதா பிமானம் பொறக்கும்?'' பாட்டாப்பா குளிச்சு வந்தாச்சு. அவருக்கும் காப்பி கலந்து குடு. இததற ஸ்டராங்கா இருக்கப்படாது. பஞ்சாரையும் கொஞ்சம் தூக்கலா இருக்கணும். அத்தை நாளைக்குத்தானே குளிக்கறா?''

''ஆமாம்.''

''அவ ஒக்கார்ந்து வீட்டுக்குள்ள வர்றத்துக்குள்ளே ஒரு புராணமே நடந்துடுத்து பாத்தாயா? இதுதான் தெய்வச் செயல்ங்கறது. நாம எதிர்பாராததையெல்லாம் வைக்கறவன் அவன் ஒருத்தன்தான். கிளாஸை அலம்பி வைச்சுடட்டுமா?''

''நான் அலம்பி வைச்சுக்கறேன்'' என்ற பாரதி, ''ஏன் இந்தாத்திலே எல்லாரும் காப்பியை வெள்ளி தம்ளர்லே குடிக்கிறா?''

''பரம்பரையா வந்த பழக்கம். அதுவுமில்லாம வெள்ளியிலே சூடு வேகத்தில் தணியாது.''

''அதோ, தாத்தா வந்தாச்சு.''

''இந்நைக்கு நாம ரெண்டு பேருமா சமையல் செய்வோம். நான்தான் ஒன்னோட மின்னாலத்த குரு.''

பாரதி லேசாகச் சிரித்தாள்.

''பொண்ணே!''

''என்ன அத்திம்பேர்?''

''என் செலக்‌ஷன் தப்பாப் போயிடுத்தோன்னு பயந்துண்டிருந்தேன். தப்பாப் போகலை.''

''ஒரு விஷயம்.''

''என்ன பொண்ணே?''

''நேத்தைக்கே உங்க பிள்ளை பாலெஸ் ஹவுஸ்லே புடைவை வாங்கித் தந்தாச்சு. ஆனா சிரமமா இருக்கு. ஹவுஸ் கோட்ல ரொம்ப சௌகரியமா இருக்கும். நம்ப பக்கத்து உடுப்பு இல்லைன்னாலும் ஆபாசமில்லாதது.''

''நேக்கு ஆட்சேபணை இல்லை. எதுக்கும் நாராயணன் கிட்டேயும் சொல்லு.''

''ஈசுவரன் வெளியேற, பாரதி தாத்தாவுக்குக் காப்பி கலந்து கொடுத்துவிட்டுத் தானும் குடித்தாள்.

காலை ஏழு மணிக்குப் பிறகு உற்றார் உறவினர்கள் தனியாகவும் இரண்டு மூன்று பேர்களாகச் சேர்ந்தும் வந்தார்கள்.

பாம்பு நீளமான பாம்பா?

மூர்க்கனா?

கருநாகமா?

கோதுமை வீரியனா?

கடித்தபோது எப்படி வலித்தது? கடுப்பு ரொம்பவா?

தங்கம்மாவுக்கு என்ன தோன்றியது?

உயிர் போயிடுமோ என்கிற பயம் உண்டாயிற்றா?

யார் முதலில் உதவி செய்ய முன்வந்தார்கள்?

சங்குண்ணி எப்படி ஆரம்பித்தான்?

எத்தனை கோழிகள்?



எப்ப ஆரம்பித்து எப்ப முடிந்தது?

தங்கம்மா சோர்ந்து போயிருந்தாள். கத்தியால் கீறின இடம் வலித்தது. ஏதோ ஒரு பச்சை இலையை அரைத்துக் கடிவாய் மேல் போட்டிருந்தான். அதை ஒரு துணியாலும் கட்டியிருந்தான். கீறின இடம் சீக்கிரத்தில் குணமாக டாக்டரிடம் ஆயின்ட்மெண்ட் வாங்கிக் கொள்ள வேண்டும்.

எட்டு மணிக்குள் ஊர் முழுதும் வந்து விசாரித்து விட்டுப் போய்விட்டது, தங்கம்மாவுக்குப் பெருமையாகவும் மகிழ்ச்சியாகவும் இருந்தது.

ஆனால் ஒரே ஒரு குறை அவளுடைய மனத்தைப் பாதித்தது. பாரதி காப்பியை வைத்துவிட்டு மௌனமாகப் போனாளே தவிர இவளுக்கு 'இப்போது எப்படி இருக்கிறது? உடம்பு க்ஷீணமாக இருக்கிறதா? கத்தி பட்ட இடம் வலிக்கிறதா?' என்றெல்லாம் கேட்கவில்லை. புடைவைத் தலைப்பைக் கிழித்து பாரதி போட்டுவிட்ட கட்டுப் மாபெரும் சாதனையாகப் படவில்லை. யார் அருகே இருந்திருந்தாலும் இதையேதான் செய்திருப்பார்கள். அவளுக்குப் பதிலாக பாரதியைப் பாம்பு தீண்டியிருந்தாலும் தங்கம்மா அவளுக்கு முதலுதவியாக இதைத்தான் செய்திருப்பாள்!

திடீரென்று அவளுக்குக் கோபம் வநதது.

''பாரதி!''

அத்தை இன்று தொழுவத்துக்குச் செல்லாமல் பின் தாழ்வாரத்தின் எல்லையில் தள்ளி உட்கார்ந்திருப்பதை அறிவாள்.

''என்ன அத்தே?''

''அடுக்களையில் என்ன செய்திட்டிருக்கே?''

''உப்புமா பண்ணிட்டிருக்கேன்.''

''யார் உப்புமா பண்ணச் சொன்னா?''

''அத்திம்பேர்.''

''அவர் சொன்னா உடனே செய்துடறதா... ஃப்ரிஜ்ல தோசை மாவு ரெண்டு நாளா இருக்கே?''

''மாவு நாலு தோசைக்குக்கூட வராது.''

''ரவையை நெய்யில வறுத்தியா?''

''வறுத்தேன்.''

''இஞ்சி போட்டியா?''

''போட்டேன்.''

''யார் போடச் சொன்னா? என் புள்ளை-கோந்தைக்குப் பிடிக்காது.''

திடீரென்று நாராயணனுடைய குரல் வந்தது..

''தோஷமில்லை அம்மா. இஞ்சி உப்புமாவில்ஒரு நாள் இருந்தா இருந்துட்டுப் போகட்டுமே.

''நான் போட்டா என்னைத் திட்டுவே! நேற்றைக்கு வந்தவ போட்டா தோஷமில்லையாக்கும்?'' என்றாள் தங்மம்மா.

சமையலறையிலிருந்து ஈஸ்வரன் வெளிப்பட்டர்

''எந்துக்குத் தங்கம் இப்படி நெவளிக்கறாய்?''

''ஓ, நீங்க அடுக்களையிலதான் இருக்கேளா...?''

''ஏன் இருக்கப்படாதா?''

''நான் இத்தற நேரம் பேசிண்டிருந்தேன். நீங்க பூனையாட்டம் அங்கே இருக்கேள்!''

''நான் பூச்சையும் இல்லை. எலியும் இல்லை. சுடச்சுட உப்மா திங்கணும்னு தோணித்து. இஞ்சி, பச்சை மிளகாய் எல்லாம் நறுக்கிக் கொடுத்தேன். எத்தறை உப்பு போடணும்னு காட்டிக்கொடுத்தேன்.''

''டியூஷனா?''

''என்ன தப்பு? அது சரி. ஒன்னைப் பார்த்தா நேத்திக்கு உன்னைப் பாம்பு கடிச்சுதுன்னு ஆரும் சொல்லமாட்டா.''



''சரி இன்னமே நான் வாயைத் தொறக்கலே, போதுமா?''

''போதும் தங்கம்'' சொல்லிவிட்டு ஈசுவரன் சமையலறைக்குத் திரும்ப, அமைதி பிறந்தது.

தரை மேல் தரையில் உட்கார்ந்து இன்றைய தினசரியைப் படித்துக் கொண்டிருந்த நாராயணன் முந்தின நாள் அவன் மந்திரியை ஒத்தப் பாலத்தில் சந்தித்தது பற்றிய செய்தி வந்திருப்பதைக் கண்டான். செய்தியைப் படித்தபோது கோபம் வரவில்லை. சிரிப்பு தான் வந்தது. மந்திரி சொல்லி அனுப்பித்தான் அவன் இரவு பத்து மணிக்கு மேல் ஒத்தப் பாலத்துக்குப் புறப் பட்டுப் போயிருக்கிறான். பதினொன்றே முக்கால் மணிக்கு மேனனைச் சந்தித்திருக்கிறான். இருவரும் மூன்று மணி வரை பேசிக் கொண்டிருக்கிறார்கள். இது நடந்த கதை. ஆனால் பத்திரிகை நிருபர் என்ன எழுதி அனுப்பியிருக்கிறார்?

''இடைத் தேர்தலில் நிற்க, பாலக்காட்டு மாவட்ட விவசாயிகள் சங்கத் தலைவரும், கேரள விவசாயிகள் சம்மேளனத்தின் காரியதரிசியுமான நாராயணன் மந்திரியின் ஆதரவைக் கேட்டு நீண்ட நேரமாகக் காத்திருந்தார்.''

யார் யாருக்காகக் காத்திருந்தார்கள்?

''கோந்தே?''

''என்ன பாட்டாப்பா?''

''நீ இன்னும் டிபன் திங்கலை, அல்லவா?''

''போறேன்.''

''ஒன் ஆம்படையாள் நன்னா உண்டாக்கியிருக்காள்.''

நாராயணன் சமையலறைக்கு வந்தான். அப்பா சேனைக்கிழங்கு நறுக்கிக் கொண்டிருந்தார். பாரதி குக்கரை அடுப்பில் ஏற்றிக் கொண்டிருந்தாள்.

''என்னடா கோந்தே?''

''என்னப்பா இது, நீங்க கிச்சன்ல.''

''பாரதிக்குச் சொல்லிக் கொடுக்கறேண்டா! அவள் எப்ப கத்திரிக்காய் சாம்பாரும், சேனைக்கிழங்கு கறியும் செய தெரிஞ்சுக்கறது?''

''நல்ல நாள் பார்த்தேள். பாரதி உப்புமா பண்ணியிருக்கியே... எனக்கும் ஒரு சட்டுவம் தா!''

''எப்பத் தூங்கப் போனாய்?''

''தூங்கலை...''

''பின்னே?''

''குஞ்சப்பாவோட பேசிண்டிருந்தேன்.''

''பாம்பைப் பத்திப் பேசியிருப்பாய். பாம்பு, பல்லி, மொதலை எல்லாம் ஒரே ஜாதி. ரெப்டைல்ஸ், இப்படி எல்லாம் சொல்லி சாட்சிக்கு டார்வினையும் இழுத்திருப்பன். அது இருக்கட்டும், டார்வின் தியரியிலே மீன்னு மின்னால எந்த ஜாதி உயிர் உண்டாச்சு, சொல்லு.''

''இது நம்பாத்து மலையாளச்சி தாட்சாயணிக்குக் கூடத் தெரியும்.''

''இப்ப நீ சொல்லேன்.''

''ஃபிஷஸ்! மீன் ஜாதி.''

''மகாவிஷ்ணுவோட மொதல் அவதாரமும் அது தான். மத்ஸ்யாவதாரம். இப்ப நோக்குளன்ன தெரியறது'' என்ன, நாராயணன் சிரித்தவனாய், ''இந்த உப்புமாவிலே அண்டிப் பருப்பும் போட்டிருக்கான்னு தெரியறது'' என்றான்.

'முந்திரிப் பருப்பு நான்தான் போடணும்னு போட்டேன். பிடிக்காதா?'' என்றாள் பாரதி.

''நான் பார்த்ததைச் சொன்னேன் அம்படத்தான்'' என்ற நாராயணன், ''அப்பா! பாரதிக்குச் சொல்லிக்



கொடுக்கறேன்னு சொல்லி சமையலைக் குட்டிச்சுவராக் கிடாதிங்கோ'' என்றான்.

''உப்மா திந்நாச்சோ இல்லியோ நீ வெளியே போய் ஒன் காரியத்தைப் பாரு'' என்றார் ஈசுவரன்.

தாத்தா முதலில் சாப்பிட்டு முடிக்க, பின்னாலேயே பாட்டி வந்தாள். பாட்டி இலையிலிருந்து எழுந்திருக்கையில்,

''பொண்ணே!'' என்று அழைத்துக் கொண்டு ஈசுவரன் வந்தார். அவரைத் தொடர்ந்து நாராயணன்.

''கோந்தே இந்நைக்கு ஒரு நா டேபிள் சாப்பாடு சாப்பிடுடா.''

''ஏம்ப்பா?''

''ஒக்காறேன்... சொல்றேன்.''

நாராயணன் உட்கார, பாரதி ஆச்சரியப்பட்டாள். அவன் சமையலறையில் தரையில் உட்கார்ந்து சாப்பிடுவதைத்தான் அவள் பார்த்திருக்கிறாள். அப்படி அமர்ந்து உணவு கொள்ளுவதைத்தான் விரும்புவான் என்பதையும் அறிந்து வைத்திருக்கிறாள்.

இன்று ஏன், இப்படி?

இரு வெள்ளித் தட்டுகளுடன் பாரதி மேஜை அருகே வர–

''எல்லாத்தையும் டேபிள் மேல் வைச்சுட்டு இன்னொரு தட்டும் கொண்டு வா, பொண்ணே!''

''யாராவது சாப்பிட வர்றாங்களா, அத்திம்பேர்?''

''வேற ஆரும் இல்லை!''

''பின்னே?''

''நீ.''

''நானா?''

''நீயேதான். போய் நான் சொன்ன பிரகாரம் செய்''

பாரதி நாராயணனைப் பார்த்தாள்.

''அப்பா சொல்லியாச்சே! அவர் சொன்னபடி செய்'' என்றான் நாராயணன்.

''அத்தைக்குத் தெரிஞ்சா...''

''தங்கத்தை நான் பாத்துக்கறேன்.''

அவள் உள்ளே சென்று இன்னொரு தட்டுடன் வந்தாள்.

''சில எடங்கள்ளே பாத்திருக்கேன். டேபிள் மேல் எல்லாம் இருக்கும். ஒருத்தனுக்கு இன்னொருத்தன் பரிமார்றதுங்கற கதையெல்லாம் இல்லை. டில்லியில் உங்காத்திலே எப்படி?''

''இப்ப நீங்க சொன்ன மாதிரித்தான் அத்திம்பேர்.''

''அப்ப அந்த ஸிஸ்டம் இங்கேயும் தொடங்கட்டுமே? தோஷமில்லை.'

பாரதி உட்கார்ந்தாள்.

''நேக்கு இந்த ஈக்வாலிட்டி, பொண்களுக்கு சம உரிமை. இதுகள் பத்தியெல்லாம் பேசத் தெரியாது. ஆனா ஆண் வயறும் பொண் வயறும் ஒண்ணுதான். ரெண்டுக்கும் பசிக்கும்னு தெரியும். என்ன ஒரு வித்தியாசம்! பொண்ணு வயத்திலே கர்ப்பப்பை இருக்கு. ஆண் வயத்திலே இல்லை. உம் சாப்பிடத் தொடங்கு, பொண்ணே...''

''என்னால ஒரே ஒரு விஷயத்தை மட்டும் புரிஞ்சுக்க முடியலே அத்திம்பேர்!'' என்றாள் பாரதி.

''என்ன அது?''

''இந்த வீட்ல ஒவ்வொருத்தர் ஒவ்வொரு சமயத்திலே ஒவ்வொரு மாதிரியா இருக்கா. எப்பப் பயப்பட்டு ஒதுங்கி நிக்கணும். எப்ப மனசுவிட்டுத் தைரியமாப் பேசலாம்னு எனக்குத் தெரியலே.''

ஈசுவரன் சிரித்தார்.



''சமய சந்தர்ப்பங்கள் ஒரே மாதிரியா இருந்தா மனுஷாளும் ஒரே மாதிரி இருப்பா. நோக்கு அது தெரியலே. எந்தச் சமயத்தில எதைப் பத்திப் பேசலாம்னு தெரியலை. அதான் வெஷயம்.''

''சாப்பிடுங்கே, அப்பா'' என்ற நாராயணன், ''பாரதி அந்தப் பப்படா டப்பாவைத் தள்ளு'' என்றான்.

''கோந்தே.''

''என்னப்பா?''

''உன் ஆம்படையாள் பிஎச்.டி படிக்கப் போறதும் போகாததும் உன் கையில் இருக்கு.''

''ஒங்க முடிவைத்தான் நீங்க பாரதிட்டே சொல்லி ஆச்சே?''

''என் அபிப்பிராயத்தைத்தான் நான் சொன்னேன். முடிவை அல்ல''

''என் முடிவு என்னன்னு பாரதிக்குத் தெரியும்.''

''சரி இப்ப இதைப் பத்தி நீயும், நானும் தர்க்கிக் கண்டாம். நீயாச்சு, பாரதியாச்சு.''

சாப்பாட்டுக் கடை மூடியாகிவிட்டது.

பாரதி கடிகாரத்தைப் பார்த்தாள். ஒன்று அடித்து ஐந்து நிமிடங்கள். மூன்று அல்லது மூன்றரை மணிக்கு மீண்டும் காப்பி போட வரவேண்டும். டிபன் தயார் செய்ய வேண்டும். என்ன செய்வது? யோசித்தாள்.

அவளுடைய கண்கள் முந்தின இரவு முழுதும் தூங்காததால் வலித்தன. இதழ்கள் மூடி மூடித்திறந்தன.

மாடிக்குப்போய்ப் படுத்தால் என்ன? ஈசுவரன் தம் அறையில் நிச்சிந்தையாக உறங்குகிறார். தாத்தா தரை மேல் தரையில் உடலைக் குறுக்கிச் சுருக்கிக் குறட்டைவிட பாட்டி ஊஞ்சலில் கண் அயர்ந்து போயிருந்தாள்.

நாராயணன் ஏற்கனவே காரை எடுத்துக்கொண்டு போய்விட்டது அவளுக்குத் தெரியும். என்ன மனுஷன்

இவன்? முந்தாநாள் இரவு பத்து மணிக்கு மந்திரியைப் பாக்க ஒத்தப்பாலம் சென்றிருக்கிறான் நேற்று இரவு முழுதும் தூங்கவில்லை! அவனுடையஉடலுக்குச் சோர்வே கிடையாதா? எதை அடக்கிக் கொள்ள முடிந்தாலும் தூக்கத்தை அடக்கிக் கொள்ள முடியாதே? நாராயண னால் எப்படி முடிகிறது?

மாடியை அடைந்தாள்.

மின் விசிறியைச் சுழல விட்டாள். அலாரம் கடிகா ரத்தை அருகே வைத்துக் கொண்டாள். அவள் மூன்ற ரைக்குக் கண் விழிக்க அது அலற வேண்டும்.

அலாரம் தன் கடமையை முடித்தது.

ஆனால் பாரதியால் எழுந்திருக்க முடியவில்லை.

அவள் கண் விழித்தபோது இருட்டி விட்டதை உணர்ந்தாள். அத்தை என்ன பாட்டெல்லாம் பாடப் போகிறாளோ? அவளை முன்பு எதிர்த்துப் பேசியது போலப் பேசவும் மனத்தில் தெம்பு இல்லை.

அவசர அவசரமாகக் கீழே வந்தாள். அப்போது மணி ஏழு.

ஊஞ்சலில் பாட்டி உட்கார்ந்திருக்க, சிவராமனுடைய மனைவி கமலம் முற்றத்துத் தூணின் மீது சாய்ந்தவளாய் அமர்ந்திருந்தாள்.

''நந்நாத் தூங்கினாயா பாரதி? பாவம் ராத்திரி முழுக்க நீ தூங்கலேன்னு அண்ணா சொன்னார்.''

''ஸாரி, சித்தி ..என்னை அறியாம...''

''சேச்சே என்ன நீ? போய் ஒன் அத்தையைப் பாரு. அப்பத் தூங்கத் தொடங்கினவள் இன்னும் கண் தொறக்கலே. கோந்தை, சகஸ்ரத்தோட ஆத்ல தூங்கிண்டிருக்கான். அண்ணா இப்பத்தான் டிபன், காப்பி குடிச்சுட்டு மெடிககல் ஷாப் வரை போய்ட்டு வரேன்னு போனார். போறதுக்கு மின்னால ஒன்னை ஆரும் எழுப்பப்படாதுன்னார். மூஞ்சியை அலம்பிண்டி



வா! பல் தேய்க்கணும்னு தோணினா தேய்ச்சுட்டு வா. ஹாட்பாக்ல சப்பாத்தியும் உருளைக் கிழங்கு மசாலும் இருக்கு வா, திங்கலாம்!''

''எனக்கு என்ன சொல்றதுன்னே தெரியலே சித்தி...''

''போடீ பைத்தியக்காரி! நம்ம தேகம் மனுஷ தேகம் தானே? அது அசத்தாதா?''

விரைவாக பாரதி குளியல் அறையை நோக்கி நடந்தாள். அவளுக்கு டிபன் காப்பி கொடுக்கவில்லை என்றுதான் கமலம் சித்தி இத்தனை நேரமாக உட்கார்ந் திருக்கிறாள் என்பதை உணர்ந்தாள்.

அவள் டில்லியை நினைத்துப் பார்த்தாள். இயந்திர வாழ்க்கை, வீட்டில் அம்மா, அப்பா, அண்ணா என்று எல்லோரும் இருந்தாலும் ஒரு குடும்ப மரமாக நிற்க வில்லை. சொல்லப் போனால் அடிமரமே இல்லாமல் வெறும் கிளைகளே இஷ்டப்படி இஷ்டப்பட்ட திசையில் போயின. அம்மாவின் பாசமோ, அப்பாவின் கனிவோ அவ்வப்போது தெரிந்தாலும், இப்போது நினைத்துப் பார்க்கும்போது அந்த உணர்ச்சிகள் ரத்த பாசத்தால் முளைத்தே ஆகவேண்டிய உணர்ச்சிகள்தாமே?

ஆனால் இங்கே?

கணவன் தன் விதத்தில் அன்பைச் செலுத்துகிறான். கிறான்.

சகஸ்ரம் ஓர் அத்தியந்த நண்பனிடம் பேசுவது போல அவளிடம் பேசுகிறான்.

மாமனார் தம் பாராட்டைத் தம் வழியில் காட்டு கிறார். பாட்டி அவளைப் பார்க்கும்போதெல்லாம் ''சாப்பிட்டாயா, காப்பி குடிச்சாயா, நன்னாத் தூங்கி னாயா'' என்று கேட்கிறாள்.

ராஜி சித்தி அவளிடம் கலகலப்பாகப் பேசுகிறாள் என்றால், இதுவரை நேரடித் தொடர்பே இல்லாத கமலம் சித்தியும் வாஞ்சையுடன் பேசுகிறாளே.

ஏன்?

இதற்கெல்லாம் என்ன அர்த்தம்?

அவர்கள் முன்பின் பார்த்திராத ஒரு பெண் அவள்!

அவள் மீது பாசம் காட்டுகிறார்கள். அன்பைச் சொரிகிறார்கள்.

பரிவை உணர்த்துகிறார்கள்!

ஏன்?

ஏன்?

கேள்விக்கு விடை தேடும் முயற்சியைக் கைவிட்டு விட்டு, கமலம் சித்தியை நோக்கி நடந்தாள்.

## 17

நாராயணனால் வாக்களித்தபடி பாரதியை அழைத்துக் கொண்டு எஸ்டேட்டில் இரண்டு மூன்று நாள்கள் தங்க இயலாமல் போயிற்று. தவிர்க்க முடியாத சில வேலைகளும், ஓரிரு சந்திப்புகளும் அவனைப் பாலக்காட்டிலேயே கட்டிப்போட்டு வைத்தன. ஆனால் அவனால் வீட்டிலும் நினைத்தபடி இருக்கவோ தங்கி ஓய்வெடுக்கவோ முடியவில்லை.

பாரதிக்கு ஏமாற்றமாக இருந்தாலும் அவள் காட்டிக் கொள்ளவில்லை. அவள் அவனுக்காகக் காத்திருந்தாள்.

ஐந்தாறு நாள்களாக வீட்டில் அவளுக்குப் பல வேலைகள் இருந்து வந்தன. அத்தை முன் போல் தொட்டதற்கெல்லாம் முகத்தில் அடிப்பதுபோலப் பேசவில்லை. என்றாலும் தங்கம்மாவின் போக்கு புதுவிதமாகப் பாரதிக்குப் பட்டது.

''எந்தக் காய்களை நறுக்கணும்?'' என்று அவள் கேட்டாள்,



''உன் இஷ்டம்போல எதை வேணும்னாலும் நறுக்கு'' என்றாள்.

''நான் சகஸ்ரம் சித்தப்பா வீட்டுக்குப் போறேன்.''

''இதை எங்கிட்ட சொல்லுவானேன்?''

''தேவகி போன் பண்ணினா, கார்ல வந்து அழைச்சுட்டுப் போறாளாம்.''

''நான் தடுத்து நிறுத்தலையே?''

''அத்திம்பேருக்கு அடை மிருதுவா இருக்கணுமா இல்லை முறுகலா?''

''நீ எப்படித் தட்டிப் போட்டாலும் அவர் திம்பார்.''

ஒருநாள் பாரதி ''அத்தே நீங்க மாறிப் போயிட்ட மாதிரிப் படறது'' என்றாள்.

இதன் பிறகு பாரதி தங்கம்மாவிடம் தானாக வலிய வந்து பேசவில்லை. எப்பவாவது ஏதானும் கேள்விகள் கேட்டால் ஓரிரு வார்த்தைகளில் பதில்களைக் கூறினாள்.

மொத்தத்தில் மற்றவர் அறியாமல் அவர்களிடையே ஒரு மௌன யுத்தம் துவங்கியது.

மற்ற எல்லோரும் எப்போதும் போல இயல்பாக நடந்து கொண்டார்கள். 'பொண்ணே, பொண்ணே' என்று சுபாவமாக அவளை அழைப்பதை ஈசுவரன் நிறுத்தவில்லை. பாட்டி பழைய கதைகளைத் தொடர்ந்தாள். அவள் சின்னப் பெண்ணாக இருந்தபோது ஒரு வீட்டில் குட்டிச்சாத்தான் செய்த திரிசமன்களை விவரித்தாள். ஒரு தடவை மூன்று வயது ஈசுவரனை அழைத்துக் கொண்டு திருப்பதிக்கு பஸ்ஸில் சென்றதையும், திரும்பி வரும் பொழுது புத்தூர் அருகே விபத்து நேர்ந்ததையும் கதை போல விவரித்தாள். கோந்தை அமெரிக்காவுக்குப் படிக்கச் செல்லுவதற்கு முன் அவளை நமஸ்கரித்ததையும் அப்போது அவள் பொங்கப் பொங்க அழுததையும் கண்ணீர் மல்கக் கூறினாள்.

மெல்ல மெல்ல அதிகாலையில் தூங்கி எழுந்திருக்கும் பழக்கம் ஏற்பட்டது. இதைத் தங்கம்மா வாய் வார்த்தையால் பாராட்டா விட்டாலும், முகபாவனையால் திருப்தியை வெளிப்படுத்தினாள். பல் தேய்த்ததும் அவள் காப்பியைத் தேடி வரவில்லை. குளித்துவிட்டுப் புடைவை மாற்றிய பிறகே சமையலறைக்கு வந்தாள். அவளே தன்னுடைய காப்பியையும் கலந்து கொண்டாள்.

அவளுடைய நடவடிக்கைகளைக் கண்டு வந்த ஈசுவரன் அவளைத் தம் அறைக்கு வரவழைத்தார்.

"பொண்ணே, வா! ஒக்காரு."

"பரவாயில்லே அத்திம்பேர்"

"ஒக்கார்னா ஒக்காரணும். நான் பெறலைன்னாலும் என் புள்ளையோட பொண்டாட்டி எம் பொண் மாதிரி தான்."

பாரதி உட்கார்ந்தாள்.

"ஒங்கிட்ட ஒரு மாத்தம் தெரியறது.

"இல்லையே அத்திம்பேர், நான் எப்பவும் போலத் தான் இருக்கேன்."

"ஒம்பது மணி வரைக்கும் தூங்கறியா?"

"இல்லை."

"குளிச்சுட்டு நீயே ஒன் காப்பியைக் கலந்துக்கறாய்."

"அது...அது..."

பாரதி பதில் சொல்லவில்லை.

"மின்ன மாதிரி தங்கமும் ஒன்னை இஷ்டப்படிக் கரிச்சுக் கொட்றதில்லை.

"அத்தை கரிச்சுக் கொட்டினாக்கூடத் தாங்கிக்கலாம் போலிருக்கு அத்திம்பேர்! ஆனா வாயைத் திறக்காமே இருக்கா...நான் என்ன தப்பு செய்ஞ்சேன்னு எனக்கேத் தெரியலை."



"வந்த புதுசுல நோக்கு ஒண்ணும்தொயாமஇருந்தது. அத்தை, அத்திம்பேர் தானேன்னுகொஞ்சம் அசிரத்தையா இருந்தே...அப்ப, 'நான் அத்தை அல்ல. ஒன் மாமியார்'னு சொல்ல தங்கத்துக்குச் சான்ஸ் கிடைத்தது... இதெல்லாம் இருக்கட்டும் இப்ப எப்படி எல்லார்ட்டேயும்சௌஜன்யமா இருக்க உன்னாலக் கழியறது?"

"எங்கிட்ட எல்லாரும் அன்பா நடந்து கொள்றா அத்திம்பேர். நீங்க, அவர், சகஸ்ரம் சித்தப்பா, சுமலம், ராஜி, சித்திகள், பாட்டி, தாத்தா எல்லோரும் என்னை ஒரு பெண்ணா மதிச்சு கனிவா நடத்தறா இலங்களெல்லாம் இப்படி இருக்கறப்பநான்என்னோட அதிருப்தியாலே அலட்சியமா இருக்கலாமா அத்திம்பேர்? அது அநாகரிகமில்லையா? அன்கல்ச்சர்ட் இல்லையா? எனக்குச் சின்ன வயசிலிருந்தே ஒண்ணு, ரெண்டு கெட்ட சுபாவங்கள் உண்டு."

"நானும் தெரிஞ்சுக்கறேனே?"

"என்னை மதிச்சா நானும் மதிப்பேன் என்னைத் தூக்கி எறியப் பார்த்தா நானும் தூக்கி எறிவேன்."

"இது கெட்ட குணம்னு ஆரு சொன்னா? நமக்குன்னு ஒரு இன்டிவிஜிவாலிட்டி-தனித் தன்மைன்னு சொல்லலாம் இல்லியா அதை விட்டுக் கொடுக்கறது கோழைத்தனம். உம் அப்புறம் வேற என்ன கெட்ட குணம்?"

"பிடிவாதம். நான் பிடிச்ச முயலுக்கு மூணுகால்னு அடிச்சுச் சொல்ற அளவுக்குப் பிடிவாதம். ஜன்ம குணம். இதுக்காக அம்மா என்னை கொஞ்சமாலா அடிச்சிருக்கா கிள்ளியிருக்கா! காலேஜ்லகூட என் பிடிவாதம் காரணமா ஒரு தடவை சஸ்பெண்ட் பண்ணியிருக்கா."

"நல்ல காரியங்களுக்காகப் பிடிவாதம் பிடிக்கறது குத்தமில்லை பொண்ணே...ஆமாம், இப்படி பிடிவாதம் உள்ள நீ எப்படி கல்யாண விஷயத்திலே கோட்டை விட்டே?"

''மொதல் காரணம் அப்பா - ரெண்டாம் காரணம் உங்க புள்ளை...''

''மூணாவது நான்.''

''நாலாவது தங்கம்!'' என்றான் ஈசுவரன்.

''ஆமாம். ஆனா அப்பாவோட மனசு கதறினப்ப என்னாலே பிடிவாதமா இருக்க முடியலே.''

''பிஎச்.டி. விஷயத்திலே ஒன் பிடிவாதம் இப்ப எந்த அளவிலே இருக்கு?''

''பரமபத சோபான படம் மாதிரி அத்திம்பேர்.''

''மனசிலாகலை''

''டில்லி, எம்.ஃபில் இதெல்லாம் நினைவுக்கு வர்றப்ப ஏணி வழியா உச்சாணிக் கொம்புக்கே போயிடறேன். அவரையும் இந்தக் குடும்பத்தையும் நினைக்கறப்பவும் கைலாசத்தைப் பத்தி நினைக்கறப்பவும் தேவகி பேசிய பேச்சு காதிலே ஒலிக்கறப்பவும் திபுதிபுன்னு பாம்பு வழியா இறங்கிடறேன்.''

ஈசுவரன் வாய்விட்டுச் சிரித்தார்.

''மின்னால தேவகி என்ன சொன்னாங்கறதைச் சொல்லு.''

''நான் பிஎச்.டி. பண்றது என்னோட லட்சியம்னு சொன்னேன். அது லட்சியம் இல்லே, வெறும் ஆசை தான்னு தேவகி சொன்னா. இது என்னைத் திங்க் பண்ண வைச்சது.''

''ஏன் அப்படிச் சொன்னா அவ? பிஎச்.டிங்கறது ஒரு புட்பால் கோல் போஸ்ட். நீ அறிவு, படிப்புங்கற பந்துகளை வைச்சுண்டு... அந்த கோலுக்கு ஓடணும்னு துடிக்கறே...'' ''கோல் போடறது லட்சியம் இல்லையாம்''

''காரணம்?''

''ஆசைக்காக, திருப்திக்காக எதையாவது ஒண்ணை அடைஞ்சா அது சுயநலம் காரணமாகத்தான் இருக்கு.



மாம். பிஎச்.டியை முடிச்சுட்டு டீச்சிங் லைனுக்குப்போய் என்னால நூத்துக் கணக்கான பேருக்கு உபயோகமா இருக்கணும்னு நான் நினைச்சிருந்தா ஒரு லட்சியம், ஒரு பர்ப்பஸ் இருக்குமாம். இதை நான் ஒரு லட்சியவாதி மூலமாத்தான் கத்துக்க முடியும்னு அவள் என்னை கைலாசம் வீட்டுக்கு அழைச்சுட்டுப் போனா!''

''பேஷ் பேஷ்...சுவாரசியமா இருக்கே இதை ஏன் எங்கிட்ட நீ மின்னாலேயே சொல்லலை?''

''அன்னிக்கு ராத்திரிதான் அத்தையை பாம்பு கடிச்சுது அதுக்கு அப்றம் சொல்ல சந்தர்ப்பம் கெடைக்கலே.''

''கைலாசத்தை நேக்கு நந்நாத் தெரியும். அவன் ஒரு ஜீனியஸ்....பாரஸ்ட்ரியிலமன்னன். இந்நைக்கும் ஆப்பிரிக்கா அமெரிககாவில் இருந்தெல்லாம் லெக்சர் பண்ண அழைப்பு வர்றது. காங்கோ காட்லே மூணுமாசம் இருந்திருக்கான். இப்ப என்ன செயறான் தெரியுமா?''

''தெரியும்.''

''ஆனா இந்த லட்சியம் அவனுக்குப் படிக்கறப்பவோ வேலையில இருக்கறப்பவோ தீர்ச்சையா இருந்திருக்காது. இருந்திருந்தா அந்நைக்கே இந்நைக்குச் செயறதைத் தொடங்கி இருப்பன், காட்ல இருக்கறப்ப காட்டுவாசிகளோட நிலைமையைப் பார்க்கறப்ப மனசில ஏதோ ஒண்ணு தட்டியிருக்கணும். இல்லாட்டா ஆராவது அவாளுக்கு நடுவிலதான் வாழ்வேன்னு வாழ்வாளா? அவன் ஒய்ஃப் மீனாட்சி பெரிய ஐடியலிஸ்ட்''

''இவங்களை நினைச்சுப் பார்க்கறப்ப மனசு தளர்ந்து போறது...''

''பாம்பு வழியா எறங்கியுடறாய் அல்லவா?''

''ஆமாம்''

''ஆருக்கு எப்ப என்ன லட்சியம் மனசிலஞானோதயம் மாதிரி பொறக்கும்னு ஆராலும் சொல்ல முடியாது பொண்ணே...ஒனக்கு ஒண்ணு தெரியுமா?''

''என்ன அத்திம்பேர்?''

''நம்ப களத்தில ஏழெட்டு ஏக்கர் நிலத்தில கோந்தை மரச்சீனி போட்டிருக்கான்.''

''டாபியோக்கா.''

''கரெக்ட் வர்ஷா வர்ஷம் பத்து இருபதாயிரத்துக்கு மேல கெடக்கறது. அத்தறை ருபாயையும் என்ன செயறான் தெரியுமா?

''தெரியாது. அத்திம்பேர்.''

''களத்துக்கு அஞ்சு கிலோ மீட்டர் தூரத்தில வயசான அநாதைகள் சௌகரியமா இருக்க ஒருத்தன் நிலம் கொடுத்தான். இன்னொருத்தன் கட்டடம் கட்டிக் கொடுத்தான் பல பேர் டொனேஷன் கொடுக்கறா. கோந்தை, அவாளோட வைத்தியச் செலவுக்குன்னு இந்த மரச்சீனி வித்த பணத்தை நாலஞ்சு கொல்லமாகக் கொடுத்து வர்ரான். ஆராவது செத்துப் போயிட்டா. இவனுக்குத்தான் மின்னால சொல்லி அனுப்புவா. அநாதை ஆச்சே? கொள்ளி போட ஆர் இருக்கா? இவன் சவத்தையும் தலைமாட்ல தூக்கி வைச்சுண்டு நடப்பன். மசானத்திலே கொள்ளியும் போடுவன்!

''எனக்கு இதெல்லாம் தெரியவே தெரியாது, அத்திம்பேர்.''

''எனக்கே போன வர்ஷம்தான் தெரியும். அதுவும் எப்படி? ஆடிட்டர் வந்து சொல்லி, 'ஓங்க புள்ளை மரச்சீனி வரவைக் காட்டிட்டு சொந்தச் செலவுக்கு எடுத்துண்டதா கணக்குக் காட்டறான் சார்னு'' சொன்னான். நான் ஒடனே விசாரிக்கலை. அவன் இல்லாதப்ப களத்துக்குப் போனேன். அங்கே ஆசிரமத்தை நடத்தறவா இரண்டு பேர் கோந்தையைக் காண வந்திருந்தா. அப்ப அவா சொன்னா.''

பாரதி திகைத்துப் போய் ஈசுவரனைப் பார்த்தாள்.



''இப்ப என்ன சொல்றாய், பொண்ணே? இது ஆசையா, லட்சியமா? அவன் இப்படிச் செயறது அவனுக்கும், எனக்கும்தான் தெரியும். நாங்க வர்ஷா வர்ஷம் எங்க லாபத்தைப் பங்கு போட்டுக்கறப்ப மரச்சீனிப் பணத்தை நாங்க எடுத்துண்டாச்சுன்னு எழுதிப்போம்.''

''பிஎச்.டி. என்னோட ஆசைதான் என்கிறதை ஒத்துக்கறேன் அத்திம்பேர், ஆனா இந்த ஆசை நிறைவேறணும்ங்கற பேராசையும் எங்கிட்ட இருக்கே!''

''இதை அடக்க ட்ரை பண்ணு! ஒன் வாழ்க்கை அமோகமாக இருக்கும் பெண்ணே!''

''அடக்க முடியாமப் போச்சுன்னா!''

''கோந்தை கிட்ட டிஸ்கஸ் பண்றேன். நீயும் பேசு. ஒரு மாசத்துக்குள்ள ஒன்னோட முடிவைச் சொல்லு.''

''உங்களுக்குப் பிடிக்காத முடிவா இருந்தா?''

''இந்தக் குடும்பத்துக்கு சகிச்சுக்கற சாமர்த்தியம் உண்டு.''

''நான் வரேன் அத்திம்பேர்.''

''ஒன் ஆசைதான், ஒன் லைஃப்ல முக்கியம்னு நீ தீர்மானிச்சா நாங்களே ஸீட் வாங்கித் தர்றோம்!''

வியப்புடன் பாரதி அவரைப் பார்க்க, அவர் அவளுடைய கண்களைச் சந்திக்காமல் எங்கேயோ பார்த்துக் கொண்டிருந்தார்.

பாரதி மாடிக்குச் சென்றாள்.

தான் ஒரு சுயநலக்காரி என்ற எண்ணம் அவளையும் மீறி எழுந்து அறைந்தது. அதே சமயம் நாராயணன் உதவி மூலம் உதவி பெறும் அநாதைகளையும், அந்த ஆசிரமத்தையும் பார்க்க வேண்டும் என்ற ஆசையும் பிறந்தது.

ஈசுவரன், பாரதி வெளியேறியதும் அறையை விட்டு வெளியேறி ரேழிக்கு வந்தார்.

தங்கம்மா நின்று கொண்டிருந்தாள்.

''என்ன தங்கம் இங்க நிக்கறாய்? உள்ளே வா.''

மீண்டும் அவர் நாற்காலியில் உட்கார, எதிரே தங்கம்மா நின்றாள்.

''உம் சொல்லு''

''ரெண்டு பேரும் என்ன பேசிண்டிருந்தேள்?''

''விசேஷமா ஒண்ணுமில்லை தங்கம்.''

''கட்டின பொண்டாட்டிக்கிட்டக் கூடச் சொல்லப் படாத விஷயமாக்கும்.''

''ஒனக்குத் தெரியாம இந்தாத்திலே ஏதாவது நடந்திருக்கா? திர்ச்சையா கொஞ்ச நாள்லே உனக்கு நானே சொல்றேன்.''

''ஓ. அப்படியா?''

''அப்படித்தான்''

''நான் அலகிட்ட கேக்க ரொம்ப நேரமாகாது.''

''அப்ப எந்துக்கு இப்ப என் மென்னியைப் பிடிக்கிறாய்?''

''அத்தைக்கு பாம்பு கடிச்சுதே. அந்நைக்கே நான் போயிருக்கணும்.''

''இதப்பாரு தங்கம்...பாம்பு கடிச்சது ஒரு கண்டம். அதைத் தாண்டறதும் தாண்டாததும் நம்ப கையிலே இல்லை.''

''நேத்தைக்கு வந்தவளைக் காட்டிலும் நான் இளப்பமாப்போயிட்டேன். இல்லையா?

''இல்லை.''

''அப்ப என்னென்னு சொல்லுங்கோ''

''சரி சொல்லிடறேன், ஆனா நீ அவகிட்ட மூச்சு விடப்படாது.''

''கண்டிஷன் போட்டா, நீங்க சொல்லண்டாம்.''



''அல ரெண்டு ரெண்டரைக் கொல்லம், நம்மாத்ல இருக்க மாட்டா.''

''எங்க போறா?''

''முக்காலே | மூணு வீசமும் மதிராசியாத்தான் இருக்கும்.''

''எந்துக்கு?''

''படிக்க''

''மின்ன சொன்னாளே, பிஎச்.டி. அதுவா?''

''அதேதான்.''

''நீங்க சம்மதிச்சேளா?''

''இல்லை.''

''கோந்தை?''

''இல்லை!''

''அப்ப ஆர் சம்மதத்தோட அவ இந்த ஆத்தைவிட்டுப் போறா? சம்மதம் இல்லாதைக்கு இத்தறை கொழுப்பா?''

''கொழுப்பும் இல்லை. கொலஸ்ராலும் இல்லை. அவ மேல படிக்க ஆசைப்படறா. அந்த ஆசையை அடக்க நான் ட்ரை பண்றேன். நல்லதனமாச் சொன்னா வழிக்கு வருவள். நாம அதடடி மிரட்டிப் பேசினா, 'போடா, பே'ன்னு போவள். எப்படிப் பேசணும்னு நீ விசாரிக்கறாய், தங்கம்?''

தங்கம்மா உடனே பதில் சொல்லவில்லை.

ஓரிரு நிமிட மௌனத்துச்குப் பிறகு, ''அப்ப நம்ப பிள்ளை பொண்டாட்டி இல்லாதைக்கு ரெண்டு ரெண்டரை வர்ஷம் தள்ளணுமா? என்றாள்

''எத்தனையே இடங்கள்லே கல்யாணத்துக்கு அப்றம் பொண்டாட்டிமார் ஆம்படையான்களோட ஒரு வர்ஷம் வாழாம இருக்கா. நம்ப சாத்தப்புரம் விசுவநாதன் புள்ளை மணி என்ன சேதான்? தாலியைக் கட்டிப்புட்டு

ஸ்டேட்ஸ் போனான். வர்ஷம் ரெண்டாறது. அவளுக்கு இன்னம் விஸா கெடைச்சுட்டில்லா. இதுக்கு என்ன சொல்றாய்?''

''நீங்க சொல்ற மணிக்கு ஆறுமாசக் குழந்தை இருக்கு. இது தெரியுமா ஓங்களுக்கு? இந்த ரெண்டு வர்ஷத்தில அவன் மூணு பிராவசியம் வந்தாச்சு.''

''இப்ப குழந்தை பெத்துக்கறதா பெரிய காரியம்...? எந்துக்கு நீயும் நானும் தர்க்கம் பண்ணனும், தங்கம்? கோந்தை என்ன சொல்றான்னு பார்ப்போமே?''

''கோந்தை என்ன வேணம்னாலும் சொல்லிண்டு போகட்டும். அவ இந்த வீட்டுப் படியை விட்டு எறங்கி மெட்ராசுக்கு வண்டி ஏறினா அம்புட்டுதான். அப்றம் இந்தாத்துப் படியில கால் வைக்கமாட்டா.''

''அவ ஒன் அண்ணா பொண்''

''அது தாலி ஏற்றதுக்கு மின்னால! இப்ப என் மாட்டுப் பெண். குடும்பம் நடத்த வந்த பெண்.''

''அப்படியே அவ படி இறங்கிப் போனா என்ன சேவாய்? அவளைப் படி ஏத்தமாட்டாய்? இப்படிச் சேதா, அப்ப நம்ப கோந்தை கதி என்னவாகும்?''

''ஒரு டைவொர்ஸ் நடக்கும். இன்னொரு கல்யாணத்துக்கு மேளம் கொட்டும்.''

''நீ இப்படியெல்லாம் பேசுவாய்னு தெரிஞ்சுதான் எல்லாத்தையும் அப்றமாச் சொல்றேன்னேன்... நான், சகஸ்ரம், தேவகின்னு எல்லாரும் நல்லதனமாப் பேசி அவ ஆசைங்கற விஷத்தைக் கொஞ்சம் கொஞ்சமா எறக்கப் பாக்கறோம். நீ குறுக்கே வந்து காரியத்தைக் கெடுக்காதே!''

''நல்லதெல்லாம் நான் சேயறப்ப, எல்லார் வாயிலேயும் கொழக்கட்டை அடைச்சுண்டிருக்கும். நான் குறுக்கே வரேனாம், கெடுக்கறேனாம்.''

தங்கம் வெளியேறினாள்.



அவளை ஈசுவரனால் புரிந்து கொள்ள முடிந்தது அவள் அவர் மீதோ, மருமகள் மீதோ கோப்பட்டுப் பேச வில்லை. அவளுடைய பிள்ளையை நேற்று வந்த ஒருத்தி பறித்துக்கொண்டு போய் விட்டாளோ என்ற பயத்திலும் பீதியிலும் கத்துகிறாள். இப்போது பாரதி வெளியேறிப் போய்ப் படிப்பதையும் எதிர்க்கிறாள். டிவோர்ஸ் என்று பிதற்றுகிறாள்.

பிள்ளைக்கு ஒரு மனைவி வேண்டும். தான் மாமியாராக இருக்கவேண்டும். ஆனால் பிள்ளை தனக்கு மட்டுமே சொந்தம். ஒவ்வொரு தாயாரின் மனத்திலும் பிள்ளையின் மணவாழ்க்கையின் ஆரம்ப காலத்தில் இப்படிப்பட்ட விந்தையான எண்ணங்கள் ஏன் தோன்றுகின்றன?

ஈசுவரன் பழைய நாள்களை நினைவு கூர்ந்தார். ஊருக்கெல்லாம் நல்லவளாக இருந்த அவளுடைய தாயார் மருமகள் தங்கத்தை மட்டும் எதிரியாகக் கருதினாள்.

அவருக்குத் சிரிப்பதா அழுவதா என்று தெரியவில்லை.

## 18

நங்கவரத்தில்—

சந்திரமௌலி சாப்பிட்டு அன்றைய 'இந்து' நாளிதழை மீண்டும் விவரமாகப் படிக்க சாய்வு நாற்காலியில் உட்கார்ந்தார். அந்தச் சமயம் பார்த்து, தபால்காரர் ஒரு கடிதத்தைத் திண்ணையில் போட்டுவிட்டுச் சைக்கிளில் சென்றார். ஏற்கனவே தபால்காரர் 'போஸ்ட்' என்று குரல் கொடுத்திருந்ததால் மௌலி மெல்ல எழுந்தார்.

''நான் போய் எடுத்து வரேன். பாரதிதான் போட்டிருப்பா'' என்றாள் சுசீலா.

"சுசீலா ஏமாற்றத்துடன் கடிதத்துடன் திரும்பி வந்தாள்.

"உங்களுக்குத்தான். ஈச்சா எழுதியிருக்கிறார்."

"கையெழுத்திலேந்து கண்டு பிடிச்சியா?" கூறிக் கொண்டே அவளிடமிருந்து கடிதத்தை வாங்கினார் மௌலி.

"இன்லண்ட். பின்னாடிதான் பி.என். ஈசுவரன், பள்ளிப்புரம், பாலக்காடு சிக்ஸ்னு கொட்டை கொட்டையா எழுதி இருக்கே?"

அவளுடைய வார்த்தைகளைக் காதில் வாங்கிக் கொள்ளாமல், மௌலி கடிதத்தை உடைத்துப் படித்தார். அவருக்குத் திடுக்கிட்டது.

"என்ன எழுதி இருக்கார் உங்க தங்கை புருஷன்?"

"தங்கை புருஷன் எழுதலே, சுசீலா."

"பின்னே?"

"சம்பந்தி."

"என்னவாம்?"

"நான் இன்னிக்கு பாலக்காடு புறப்படறேன். ரெண்டு நாள்லே திரும்பறேன்."

"என்ன விஷயம் அதைச் சொல்லுங்க."

"திரும்பி வந்தப்புறம் சொல்றேன்."

"பாரதியைப் பத்தியா?"

"ஆமாம்."

"என்ன நடந்திருக்கு?"

"அதான் வந்து சொல்றேன்னேனே?"

"அவ உங்களுக்கு மட்டும் பெண் இல்லே, எனக்கும் தான். அந்த லெட்டரை இப்படிக் கொடுங்கோ."

"நீ மனசு கஷ்டப்படுவே சுசீலா"

"பாரதியாலே நான் என்னிக்கு மனசு கஷ்டப்படாம இருந்திருக்கேன்? அதைத் தாங்கோ."



21202
374181

"சரி உன் இஷ்டம்."

சுசீலா கடிதத்தைப் படி[illegible] இருந்தது.

ஒரு தடவைக்கு இரண்டு தடவைகளாகப் படித்த பிறகு—

"நம்ப பெண்ணுக்கு புத்தி ஏன் இப்படிப் போறது?

"எல்லாம் உன்னால்தான்."

"அது சரி... இப்ப இதுக்கு நான்தான் காரணம் கிறேளா?"

"முழுக்காரணம்னு இல்லைன்னாலும் நீயும் அவளுடைய இந்தப் போக்குக்குக் காரணமா இருந் திருக்கே!"

"எப்படி? சொல்லுங்கோ, கேட்கலாம்."

"தனக்கு பாரதியைப் பண்ணிக்கொள்ள இஷ்ட மில்லை. தன்னால் அவளுக்குச் சுகமான வாழ்க்கை கிடைக்காதுன்னெல்லாம் அன்னிக்கு இங்க வந்தப்ப நாராயணன் சொன்னான். அதுக்கு ஈச்சா அவ சம்மதிச்சா நீ சரின்னு 'சொல்லுவியான்னு அவன்கிட்டக் கேட்டார். நாம என்ன செய்ஞ்சோம்? பாரதியை இழுத்துண்டு வந்து அவகிட்டத் தனியாப் பேசினோம். அப்ப நீ என்ன சொன்னே? சரின்னு சொல்லு பாரதி. நிச்சயமா உன் ஆசையும் நிறைவேறும் 'ஒரு கோடீசுவரன் வீட்டு சௌகரியங்களும் கிடைக்கும். நாராயணனும் ராஜா மாதிரி இருக்கான். இப்படிப் பேசினே நீ! நினைவு இருக்கா?"

"நன்னா நினைவு இருக்கு. ஆனா அன்னிக்கு நான் ஏன் அப்படிப் பேசினேன்? அது தெரியுமில்லையா? பிஎச்.டிக்கு அவ ஒத்தக்கால்லே நின்னுட்டிருந்தா. அதை ஒடிச்சாத்தானே கல்யாணம் நிச்சயமாகும்? நம்ப பாரம் இறங்கும்?

"அதுக்காகப் படிச்ச பெண்கிட்ட ஆசை வார்த்தை களை அள்ளிக் கொட்றதா? நான் என்னோட இல்லாமை

யையும் இயலாமையையும் சொல்லி அவ காலைப் பிடிச்சேன். நீ பொய்யா, தொடுவானத்தை அவனுக்குக் காட்டினே. அவனும் அதை மெய்னு நினைச்சு சம்மதிச்சா''

''அப்படிப் பார்த்தா உங்க ஈச்சா ஏன் தேன் ஒழுகப பேசணும்? 'மூணு மணி நேரத்திலே கோழிக்கோடு போலாம். எர்ணாகுளம் போகலாம் அங்கெல்லாம் யூனிவர்சிட்டி இருக்கு'ன்னு அவர் ஏன் தூண்டில் போடணுமாம்?''

''அவன் அப்படிச் சொன்னதுக்கு இப்ப அனுபவிக்கறான். நீ ஆசை காட்டினதுக்கு, நீ அனுபவிக்கப் போறே.''

''பாரதி ஒண்ணும் பாலக்காட்டை விட்டுப் போகலையே.''

''போனா எல்லார்க்கும் தலைக்குனிவுதானே சுசீலா?''

''நானும் உங்ககூட வர்றேன்,''

''எதுக்கு? காரியத்தைக் குட்டிச்சுவராக்கவா?

''ஏன் அப்படி நினைக்கறீங்க? பொறந்த முப்பதாம் நாள்லேயே பாரதிக்குப் பிடிவாதமும் பொறந்தாச்சு, சின்ன வயசிலே கொஞ்சமா அழிச்சாட்டியம் பிடிச்சிருக்கா? புரண்டு புரண்டு அழுவள்.''

''நீ மொத்து மொத்துன்னு மொத்துவே. 'பிடிவாதம் செய்ஞ்சா அம்மா என்ன செய்வா? அடிப்பா. அவ்வளவு தானே'ன்னு அவனுக்குத் தோணித்து. பலன் பிடிவாதம் வளர்ந்தது.''

''சரி அப்ப என்ன நடக்கும்னு உங்களுக்குத் தோண்றது?''

''நீதான் லெட்டரைப் படிச்சியே? ஈச்சாவுக்கு இஷ்டமில்லை. மாப்பிள்ளைக்கு இஷ்டமில்லை. எல்லாத்துக்கும் மேலா என் தங்கை தங்கம்மாவுக்கும் இஷ்டமே இல்லை.''



''இந்த மூன்று பேர் பேச்சையும் மீறிண்டு பாரதி பிஎச்.டிக்கு ஓடறாள்னு வைச்சுப்போம். அப்புறம் என்ன நடக்கும்?

''அப்புறம்னா எப்புறம், சுசீலா?''

''படிச்சு முடிச்சப்பறம்.''

''என் தங்கையைப் பத்தி உனக்குத் தெரியாது. தன் புள்ளைக்கு வேறொருத்தியைக் கல்யாணமே பண்ணி வைச்சுடுவா.''

''சட்டப்படி அது செல்லாதே?''

''கல்யாணமான ஒரு மாசத்துக்குள்ளே பெண் வீட்டை விட்டு யார்ட்டேயும் சொல்லிக்காமப் போயிட்டா, கான்ஜுகல் ரைட்ஸ் அதான் கல்யாணம் ஆனப்புறம் ரெண்டு பேருக்கும் உள்ள உரிமைகளைப் புறக்கணிச்சுட்டாள்னு கேஸ் போடுவா. கேஸ் வர்றப்ப வாதம் மட்டும் பேசாது. பணமும் பேசும். ஈச்சா பணக்காரன், தங்கம்மா ரோஷக்காரி.''

''அடக் கடவுளே!''

''இன்னும் மிஞ்சிப் போகலை, அதான் ஈச்சா என்னை வரச் சொல்லியிருக்கான்.''

'சரி போய்ட்டு வாங்கோ. எனக்குத் திட்டவும், அடிக்கவும்தான் தெரியும் உங்களை மாதிரி உணர்ச்சி நெகிழ்ச்சியோட, அழுகைக் குரல்லே பேசத் தெரியாது''

''அழ வேண்டிய இடத்தில் அழுதுதான் காரியத்தைச் சாதிச்சுக்கணும். அப்ப நாமும் குழந்தைகள் மாதிரி ஆயிடறோம்.''

''வேதாந்தம் போறும். கிடைக்கற முதல் பஸ்ஸைப் பிடியுங்கோ.''

''ரெயில்லே போறேன். திருச்சியிலிருந்து ஒரு எக்ஸ்பிரஸ் இருக்கு. கொச்சிக்குப் போறது. ஏழரை மணிக்குப் புறப்படும்.''

"அது பாலக்காட்டுக்கு அர்த்த ராத்திரியிலே போகாதா?"

"ஆமாம். போகும். ரெண்டு மணிக்குப் போகும். பிளாட்பாரத்தில் நிறைய சிமெண்ட் பெஞ்சு இருக்கும். ஒண்ணுலே காலை நீட்டிக்கறேன், விடிஞ்சப்புறம் பள்ளிப் புரம் போறேன்.

"இப்படிக் கஷ்டப்பட்டுப் போகணுமா?"

"பொண்ணைப் பெத்தவன் எவன் சுகப்பட்டிருக் கான் ஆளை விடு."

ரெயில் பிரயாணத்தில் மௌலிக்கு உடல் களைத்துப் போகவில்லை. மனம்தான் வலித்து வலித்துக் களைத்துப் போயிருந்தது.

பாரதி முரண்டு பிடிக்கிறாள் என்பது நிதர்சனமாகத் தெரிகிறது

ஈச்சா நல்ல மனிதர். நிறைந்த குடும்பத்தில் பிறந்து பாரம்பரியப் பெருமையைக் காப்பாற்றுகிறவர். வெளித் தோற்றத்தில் நல்லவனாகத் தெரிகிறார். எளிமையான உடை, குரலை உயர்த்தாமல் பேசும் குணம். தங்கம்மா ஒருத்திதான் வாயாடக் கூடியவள். இவர்களிடமெல்லாம் பாரதி இத்தனை நாள்களாக எப்படி நடந்துகொண்டிருக் கிறாள்?யாராவது அவளிடம் ஒருவார்த்தை கடுமையாகப் பேசி விட்டால் புலி போலப் பாய்வாள். ஏழு வயதி லிருந்து பதினாறு வயதுவரை அவள் எத்தனை சக மாணவிகளிடமும் அக்கம் பக்கத்துப் பெண்களிடமும் சண்டை பிடித்துக் கொண்டிருக்கிறாள்! வடக்கத்திக் காரப் பெண்ணுக்கு இணையாகச் சளைக்காமல் ஹிந்தி யில் பேசக்கூடாததெல்லாம் பேசுவாளே? கல்லூரி வாழ்க்கையிலும் எத்தனையோ பிரச்சனைகள். எல்லா பரிட்சைகளிலும் முதல் வகுப்பில் தேர்வு பெற்றாலும், ஆசிரியர்களிடம் நல்ல பெயர் இல்லை.



மௌலி மனம் குழம்பிப் போனார். என்னதான் பாரதி அவரிடம் மட்டும் அதீத பாசத்துடன் பழகினாலும் அவருடைய புத்திமதிகளுக்குச் செவி சாய்த்தாலும், அப்போது முளைத்துவிட்ட பிரச்சனையைச் சுமுகமாகத் தீர்க்க முடியும் என்ற நம்பிக்கை வரவில்லை. பெற்ற தகப்பன் சொல்லியாவது மகள்மனம் மாறுவாளோ என்ற நப்பாசையில்தான் ஈச்சா அவருக்குக் கடிதம் எழுதியிருக்க வேண்டும்.

ரெயில் பாலக்காட்டை அடைந்தது? ஈச்சாவையோ நாராயணனையோ எதிர் பார்க்காத மௌலி, ப்ளாட் பாரத்தின் ஒருகோடியில் வெறிச்சோடிக் கிடந்த சிமெண்ட் பெஞ்சியை அடைந்தார். உட்கார்ந்தார். சற்றைக்கெல் லாம் கால்களை நீட்டிக் கொண்டால் சௌகரியமாக இருக்கும்என்று நினைத்தார். முடிவில், கைப்பெட்டியைத் தலையணையாக மாற்றிப் படுத்துக்கொண்டார்.

அரைப் பிரக்ஞை, அரைத் தூக்கத்தில் தவிக்க, நாலா புறங்களிலிருந்தும் அவருடைய பெண் பயந்து வந்து தாக்குவதான பிரமை உண்டாயிற்று.

ஒரு பக்கத்திலிருந்து பத்து வயது பாரதி.

வலப் புறத்தில் கல்லூரியில் படிக்கும் பாரதி.

கால்களையாரோ தாக்குவது போலப் பட்டது.பார்த் தார். கல்யாணமாகிவிட்ட பார்தி கோபக் கனல் கண் களில்வீச நின்று கொண்டிருந்தாள்.

அவர் பள்ளிப்புரத்தை அடைந்தபோது காலை ஐந்தரை.

பெண் பாரதிதான் முதலில் அவரைப் பார்த்தாள்.

"வாங்க அப்பா! ஒரு பெரிய ப்ளெசன்ட் சர்ப்ரைஸா இருக்கு! உட்காருங்க. அத்தைட்ட சொல்றேன். அத்திம் பேர் பூப்பறிச்சுட்டிருக்கார். இப்ப வந்துடுவார்.மொதல்ல காப்பி கொண்டு வரேன்."

பாரதி உள்ளே ஓடினாள்.

ஆச்சர்யத்தில் மௌலி ஸ்தம்பித்துப் போனார். ஈச்சாவின் கடிதம் அவர் மனத்தில் ஒருபாரதியைஉருவாக்கி இருந்தது. ஆனால் இப்போது அவர் பார்க்கிற பெண் வேறு பாரதியாக இருக்கிறாளே? எட்டு மணி வரை தூங்கிப் பழகியிருந்த அவள் ஐந்தரை மணிக்கு முன்னதாகவே குளித்து நெற்றி நிறைய குங்குமமும், ஈரத்தலையைக் காட்டிக் கொடுக்கும் துண்டுமாக நிற்கிறாளே?

இப்போது பார்க்கிற பாரதியா ஒரு பிரச்னையை உருவாக்கியிருக்கிறாள்? இவள் பொருட்டா ஈச்சா அவரை நங்கவரத்திலிருந்து கொக்கி போட்டு இழுத்திருக்கிறார்?

காப்பியுடன் வந்த பாரதி "ஏம்ப்பா அம்மாவையும் கூட்டிக்கிட்டு வந்திருக்கலாமே? அம்மா எப்படி இருக்காப்பா..? காப்பியைக் குடியுங்கோ. அவளுக்கு நான் இல்லாதது வீடே வெறுச்சுன்னு ஆயிருக்குமே? அவளோட மல்யுத்தம் நடத்த இன்னொரு பெண்ணும் இல்லே... காப்பியைக் குடிங்கப்பா. கையிலேயே வைச்சுட்டிருந்தா எப்படி?

"நீ நன்னாயிருக்கியாம்மா?"

"ஒரு குறைச்சலும் இல்லாமல்திவ்யமா இருக்கேம்ப்பா"

"மாப்பிள்ளை எங்கே?"

"நேத்து கோழிக்கோடு போனார், ஏதோ ஸெமினாராம். அதோ அத்தை வர்றா, உங்களுக்குத் தெரியாதே. அத்தையை பத்துநாள் முன்னாலே பாம்பு கடிச்சுது நல்ல பாம்பு!"

"ஐயய்யோ, எனக்குத் தெரியவே தெரியாதே! அப்புறம்?"

"பாம்புக்கடி இந்த ஊர்ல தலைவலி மாதிரிப்பா. மாத்திரைப் போட்டுண்டதும் வலி போறதே. அதுமாதிரி..



"அண்ணா நீ எப்ப வந்தே?" தங்கம்மா அருகே வந்தாள்.

"இப்பதான்"

"இப்ப ரெயில் இருக்கா என்ன?

"ரெயில் ரெண்டு மணிக்கு வந்தது. அசமயத்திலே இங்கே வருவானேன்னு ஸ்டேஷன்லேயே இருந்துட்டேன்."

"ஏதானும் விசேஷமா?"

மின்னாகப் புரிந்தது மௌலிக்கு ஈச்சாவின் கடிதம் பற்றித் தங்கம்மாவுக்கு ஏதும் தெரியாது என்று.

"அதெல்லாம் ஒண்ணுமில்லே தங்கம்மா."

"இவர்ட்ட பணம் கிணம் ஏதானும் கடன்வாங்க வந்திருக்கியா?"

"சேச்சே, பொண்ணைக் குடுத்த இடத்திலே கடன் வாங்கக் கை நீட்டுவேனா?"

"யார் கண்டா? இந்தக் காலத்திலே என்ன வேணும்னாலும் நடக்கும்."

"பாரதியைப் பார்க்கணும் போல இருந்தது. அதான் வந்தேன்."

"இதுமாதிரி மன்னிக்குத் தோணலையோ? அவ வயத்திலே பொறந்தவதானே இவ?"

மௌலி பதில் சொல்லவில்லை. சின்னவயசில் தங்கம்மா இப்படித்தான் நெஞ்சைக் குத்துகிற மாதிரி பேசுவாள். அது அடங்கி விட்டது என்று கல்யாணத்துக்கு முன்னாலும் கல்யாணத்தின் போதும் அவர் நினைத்தது எவ்வளவு பெரிய தப்பு? யாராக இருந்தால் என்ன, சுயரூபத்தைக் காட்டாமல் இருக்க மாட்டார்கள்.

"நீ திரும்பிப் போறப்ப வேணும்னா இவளையும் கூட்டிண்டு போ. நீயும் மன்னியும் இவளை நன்னா வளர்த்தி இந்த வீட்லே தள்ளியிருக்கீங்க. இன்னம் கொஞ்ச

நான் உன் வீட்ல சேராட்டுங்கோ திருச்சியிலிருந்து மெட்ராஸ் போறது இன்னும் சுலபம்.''

சொல்லிவிட்டு அவள் நகர, மௌளி பரிதாபமாகப் பாரதியைப் பார்த்தார்,

தங்கம்மா கண்ணைவிட்டு அகன்றதும், ''அத்தை ஒரு மென்ட்டல் கேஸ் அப்பா. நீங்க பார்த்த தங்கை, நான் பார்த்த அத்தை டாக்டர் ஜெகில். இப்ப மிஸ்டர் ஹைடா மாறி இருக்கா. ஸைக்யாட்ரிக் ஸ்பெஷலிஸ்ட்கிட்ட கூட்டிண்டு போக வேண்டிய கேஸ்.''

''இப்படியெல்லாம் பேசாதே பாரதி.''

''மத்தவா எல்லாரும் எங்கிட்ட நன்னா அன்பாப் பழகறப்ப அத்தைக்கு மட்டும் என்ன வந்ததாம்?''

''ஈச்சா வர்றார்.''

ஒரு கூடையில் பற்பலவிதமான பூக்களை வழிய விடாமல் ஜாக்கிரதையாக எடுத்துக் கொண்டு முன்னேறி வந்த ஈச்சா முன் தாழ்வாரத்தை அடைந்ததும் மௌளியைப் பார்த்தார், கூடையை ஊஞ்சலின் மேல் வைத்து விட்டு.

''எப்ப வந்தாய் மௌளி...? பொண்ணே! ஒன் அப்பாவுக்கு காப்பி கொடுத்தியா?''

''வந்து அரை மணி நேரமாறது. வந்ததுமே பாரதி காப்பி தந்தா.''

''தங்கம்...தங்கம்.''

''அத்தை வந்து அண்ணாவைப் பார்த்துப் பேசிட்டு உள்ளே போயாச்சு. அத்திம்பேர்.''

''சரி வாடா மௌளி! சகஸ்ரத்தாத்துக்குப்போவோம். பொண்ணே!ஒன் அப்பாவுக்குஎன்ன பிடிக்கும்னு ஒனக்குத் தான் தெரியும். அதுபோல சமைச்சுச் வைக்கிறியா?''

''சரி அத்திம்பேர்.''



''அஞ்சாறு நாளா ஒன் பொண்தான் சமையல் உள்ளில. சொல்லிக் கொடுத்தா டக்குன்னு பிடிச்சுக்கறா. வா, போலாம்.''

இருவரும் சகஸ்ரத்தின் வீட்டை அடைந்தார்கள். சகஸ்ரம் ஊஞ்சலில் உட்கார்ந்து கம்போதியை இழுத்துக் கொண்டிருந்தான். இருவரையும் பார்த்துவிட்டு ''வா, அண்ணா வாங்கோ சந்திரமௌளி'' என்று கூறி, ''ராஜி... ராஜி...'' என்று கத்தினார்.

''இப்ப ஒண்ணும் வேண்டாம்பா சகஸ்ரம் ராஜியைக் கூப்பிடாதே!'' என்றார் ஈசுவரன். பிறகு தொடர்ந்து, ஒன் ஆலோசனைப்படி மௌளிக்கு எழுதிப் போட்டேன், அவனும், உடனே பொறப்பட்டு வந்துட்டான்'' என்றார்.

''பாரதியைப் பார்த்தா ஒரு பிரச்னையும் இல்லாதது மாதிரி இருக்கு ஈச்சா.''

''ஒன் பொண் புத்திசாலி, கெட்டிக்காரி. இதமாப் பேசினா இதமா நடந்துக்கற பொண். எல்லாம் சம்மதிக்கிறேன். இந்த ஆத்ல எல்லார்ட்டேயும்—அவ அத்தையை ஒழிச்சு—அனுசரணையோட பழகறா சம்மதிக்கிறேன். ஆனா பிஎச்.டி விஷயத்திலே மாத்றம் பிடிவாதமா இருக்கா. எங்களாலே அவளை அடக்கி இங்கேயே ஆணி அடிச்ச மாதிரி ஒக்கார வைக்கக் கழியும். ஆனா அப்படி சேதா நாங்களும் அவளுக்கு விரோதிகளாயிடுவோம். எங்களுக்கும் ஒரு நல்ல பொண்ணு பதி போன மாதிரி ஆயிடும்.''

''நான் என்ன செய்யணும், ஈச்சா?''

''என்ன சேயப்படாதுன்னு கேளு சொல்றேன். மேற் படிப்புக்கு அவ போறதால உண்டாகப் போற விபரீதங் களை அவ தீர நெனைச்சுப் பார்க்கலை.''

''அதையெல்லாம் எடுத்துச் சொல்லி சமாதானப்படுத் தணுமா?''

''அதான் இல்லை.''

''பின்னே?''

''ஒரு சூத்திரம் இருக்கு.''

''யூமீன்... தந்திரம்?''

''கரெக்ட்.''

''என்ன அது?''

''சகஸ்ரம் இது ஒன்னோட ஐடியா. நீயே சொல்லு.''

''அதுக்கு மின்னாலே ஓர் அரைக்கிளாஸ் காப்பி!''

சொல்லிவிட்டு சகஸ்ரம் உள்ளே செல்ல, மௌலி உள்ளூர பயந்து போய் உட்கார்ந்திருந்தார்.

## 19

சகஸ்ரம் உள்ளே அரைத் தம்ளர் காப்பிக்காகச் சென்றவன், சொன்னபடி சீக்கிரம் திரும்பவில்லை.

ஈசுவரன் மெல்ல எழுந்து கூடத்தினுள் பிரவேசித்து, சமையலறையை நோக்கி நடந்தார். சகஸ்ரத்தின் வீட்டுக் கூடம் எப்போதுமே இருட்டாகத்தான் இருக்கும். சமையல் அறை வெளிச்சத்தில் பார்த்தபோது, கூடத்தின் எல்லையில் சுவரோரமாய் ராஜி படுத்துக் கொண்டிருப்பதைக் கண்டார். அவளுக்கு வாரத்தில் ஒரு தடவையாவது ஒற்றைத் தலைவலி வரும். வந்தால் அவ்வளவுதான். கிடைத்த ஒரு மூலையில் படுத்துவிடுவாள். மணிக்கணக்காக எழுந்திருக்க மாட்டாள். இந்த மைக்ரையினுக்கு மருந்து கிடையாது. அனுபவித்துத்தான் தீரவேண்டும் என்று அவள் பிடிவாதமாக இருந்ததால் எந்த முறை சிகிச்சையையும் அவள் ஏற்கவில்லை. ஆயுர்வேதம், ஹோமியோபதி, அலோபதி, நாட்டு வைத்தியம் என்று முன்பெல்லாம் பார்த்துப் பார்த்து அவளுக்கு அலுத்துப்



போயிற்று' 'பாவம் ராஜி என்று தம்முள் முணுமுணுத்துக்கொண்டே அவர் சமையலறைக்குள் சென்றார்.

அங்கே சகஸ்ரம் தலையில் துவாலையைக் கட்டிக் கொண்டு காஸ் அடுப்பின் எதிரே நின்று கொண்டிருந்தா.ன்

''என்னடா செயறே?'

''குக்கர்ல் இட்லி வேகறது. இப்பத்தான் ஃபில்டர்ல வெள்ளம் விட்டிருக்கேன். தேங்காய்ச் சொரலி சட்னி அரைக்கண்டதுதான பாக்கி, அண்ணா... நீ மௌலிட்டே பேசிண்டிரு. பத்து நிமிஷத்தில் இட்லி, சட்னியோட வரேன்.''

''நாங்க வந்தப்ப, 'ராஜி' ராஜின்னு கூப்பிட்டியே?''

''கார்த்தால வரை ஒண்ணும் இல்லை. இப்ப வந்தப்பத்தான் படுத்துண்டாச்சுன்னு தெரிஞ்சுது. நீ போ அண்ணா நாம பேசப் போறதைக் கேக்கறப்ப மௌலி தெம்பா இருக்கணும், அதுக்கு அவன் வயறு நறயஞ்சிருக்கணும்.''

''இந்த டிபனை நான் நம்மாத்ல செயச் சொல்லியிருப்பேனே, சகஸ்ரம்.''

''எந்த ஆமானால் என்ன? அண்ணா, நீ போ. என்னவோ ஏதோன்னு மௌலி அரண்டு போயிருக்கான்''

பதில் பேசாமல் ஈசுவரன் திரும்பினார். சகஸ்ரம் படித்தவன் அறிவாளி.இதற்கெல்லாம் மேலாக நல்லவன்; பரோபகாரி. ஊரில் யார் என்ன கேட்டாலும் தன்னால் முடிந்தால் சளைக்காமல் உதவி செய்வான். பாவம் இப்படிப்பட்டவனுக்கும் பகவான் ஒரு கஷ்டத்தைக் கொடுத்திருக்கிறார்.

ராஜி படுத்திருக்கும் திசையைப் பாராமலே ஈசுவரன் திரும்பினார். மௌலி நாற்காலியில் அதே நிலையில் இருந்தார்.

''சகஸ்ரம் இப்ப வருவன்.''

''என்ன ஈச்சா, ஏதோ சூத்திரம்னு சொன்னேன் இல்லியா? சகஸ்ரம் இப்ப வருவன்னு... ஏன் அவசரப் படறாய்...? இப்பவே நங்கவரம் மடங்கப் போறதில்லையே?''

''சரி அவன் வரட்டும்'' என்றார் மௌலி.

''அதுவரையில் நாம பேசிண்டிருப்போமே''

''பேசலாமே!''

''பாரதி தன் சின்ன வயசுப் பிடிவாதங்களை மனசு தொறந்து சொன்னா. அதனால் ஏற்பட்ட சங்கடங்களையும் விவரிச்சா. காலேஜ்ல சஸ்பெண்ட் கூடப் பண்ணினாளாம்.''

''ஆமாம் தன் காரியத்தைச் சாதிச்சுக்கணும்ங்கற வெறி வந்துட்டா கடைசி வரையில் மூர்க்கத்தனமா இருப்பா.''

''ஜெயிக்கவும் ஜெயிப்பா இல்லியா?''

''முக்காலே மூணு வீசமும்.''

''அப்ப அந்த பாக்கி வீசத்திலே தோத்திருப்பாள்னு அர்த்தம்.''

''ஆமாம், தோல்வியும் இருந்திருக்கு. ஒரு தடவை எக்ஸ்கர்ஷன் போறதா இருந்தது. ஒண்ணரை மாசம் முன்னாடியே காலேஜ்லே சொல்லியிருந்தா. போகணும்னா. சரின்னேன். ஹரித்வார், டேராடூன், முசூரி, ரிஷிகேஷ்னு பத்ரிநாத் வரை முப்பது பெண்கள் பஸ்ல போறதாப் பிளான். போறதுக்கு ஒரு மாசம் இருக்கறப்ப டைபாய்ட் வந்தது இருபது இருபத்திரண்டு நாள்ளே குணமாச்சு... ஆனாலும் அவ கம்ப்ளீட் ரெஸ்ட் எடுத்துக்கணும்னு டாக்டர் சொன்னார் பத்து நாள் போதுமான்னு டாக்டர்ட்ட கேட்டாள் ஒரு மாசம்னார் டாக்டர். எக்ஸ்கர்ஷன் பிளானை அவர்ட்ட



சொல்லி அபிப்ராயம் கேட்டேன். அசையப்படாது. உடம்பு வீக்கா இருக்கு. இந்த இடங்களுக்கெல்லாம் பஸ்ல போனா நிச்சயமா ரிலாப்ஸ் ஆகும்னார். ஆனா பாரதி கேக்கலே. போய்த்தான் ஆகணும்னு பிடிவாதம் செஞ்சா. நான் கெஞ்சினேன். சுசிலா தற்கொலை செய்துப்பேன்னு கூட மிரட்டினா. ஆனா அப்பவும் பாரதி தன் முடிவை மாத்திக்கலே.''

''அப்றம் என்ன செய்தேள்?''

''சுசீலா இன்னம் உசிரோடதான் இருக்கா.

''இவபிடிவாதத்துக்கு ரண சிகிச்சைதான் மருந்துன்னு பட்டது. வெளிப்பூச்சா சரி உன் இஷ்டம் போலச் செய்னேன். உல்லன் ஸ்வெட்டர், ஜீன்ஸ் தலைக்குத் தொப்பின்னு அவ தயார் பண்ணிட்டா. ஒருநாள் கார்த்தால ஆறு மணிக்கு அவ காலேஜ் வாசல்ல இருக்கணும் ஆட்டோவில் கொண்டு விடறதாச் சொல்லியிருந்தேன். அவ ரொம்ப சந்தோஷமா விடியறதுக்குக் காத்திருந்தா.''

''அப்றம்?''

''அவளுக்குன்னு ஒரு தனி ரூம் உண்டு.''

''நான் டில்லி வந்தப்ப அதில்தானே இருந்தேன்.''

''நாலு மணிக்கு எழுப்ப சொல்லியிருந்தா. சரின்னோம். நாங்க ரெண்டு பேரும் மூணே முக்காலுக்கு அவ ரூம் கதவை வெளியே பூட்டிட்டு, லோடி கார்டனுக்குப் போயிட்டோம். ஆறுமணிக்குத்தான் திரும்பி வந்தோம்.''

''கூண்டுல அடைச்ச புலி மாதிரி உங்க ரெண்டு பேர் மேலேயும் பாய்ஞ்சு கடிச்சுக் கொதறி இருப்பாளே?''

''அதான் இல்லை ஈச்சா...''

''என்ன சொல்றாய் நீ?''

அவள் காலேஜ் எக்ஸ்கர்ஷன் பத்தியே பேசலை. தயார் பண்ணி வைச்ச துணிகளையெல்லாம் பெட்டியிலேர்ந்து

எடுத்து அலமாரியிலே ஒழுங்கா வைச்சா. சாப்பிட வேண்டிய நேரத்திலே சாப்பிட்டா. ஆனா என்னஏழெட்டு நாளுக்கு எங்க ரெண்டு பேர்ட்டேயும் சௌஜன்னியமாப் பேசலே."

"டேய் மௌலி, இவ ரொம்ப க்ரேட்டுடா! நினைச்சதை சாதிச்சுக்க பிடிவாதம் செதா. இனிமே கெடைக்கவே சான்ஸ் இல்லேன்னு தெரிஞ்சதும் தனக்குள்ளேயே அடங்கிப் போயிட்டா. மனசை எப்படித் தேத்திக்கறதுன்னு எத்தனையோ பேருக்கு—ஏன் எனக்கும், ஒனக்கும் தான் தெரியறதில்லே. ஆனா பாரதியாலே முடியறது. ஔவையார் தான்னு நெனைக்கறேன். என்னா, ஒண்ணு கெடைக்கலேன்னா, அதை மறந்துடுன்னா கரெக்டா?"

"கிட்டாதாயின் வெட்டென மற" என்றான் மௌலி.

"சூத்திரம்னா என்னென்னு கேட்டியே, இதுதான் சூத்திரம். தந்திரமாச் செயற ஒரு காரியம். ஆனா அது ஒருத்தரோட நல்லதுக்காக இருக்கணும். சகஸ்ரம் எல்லோருடைய நல்லதுக்கும் ஒரு சூத்திரம் சொன்னான்."

"அவனை இன்னும் காணோமே?"

"இப்ப மிக்ஸியோட சத்தம் கேட்டுது இல்லியா?"

"ஆமாம். ராஜி என்னமோ அரைக்கறாள்."

"அது ராஜி அல்லா. அவ மைக்ரையின்ல துடிச்சுப் போய்ப் படுத்துண்டிருக்கா... சகஸ்ரம்தான் சட்னிக்கு அரைக்கிறான். இப்ப தாளிச்சுக் கொட்ட கரண்டியை அடுப்புமேல வைச்சுருப்பன்... ஹாங், ஒண்ணு ஒன்னைக் கேக்கணும்னு நெனைச்சேன்!"

"என்ன அது ஈச்சா?"

"இந்த பிஎச்.டி. படிப்பு பத்தி பாரதி உங்கிட்ட பிடிவாதம் பிடிச்சிருக்காளா?"



"எம்.ஃபில் ரிஸல்ட் எப்ப வந்ததோ அந்த க்ஷணத்திலிருந்து அவ விட்ட மூச்சே அதுதான்."

"ஏன் மாட்டேன்னு சொன்னாய்?"

"நான் மாத்திரம் காரணம் இல்லை, ஈச்சா!"

"சுசிலாவும் இல்லியா?"

"ஆமாம். உங்கிட்ட நான் ஒன்னரை லட்சம் கடன் வாங்கியிருந்தேன். நங்கவரத்து வீடு சிதிலமாயிருந்தது. சில இடங்கள்லே இடிச்சுக் கட்ட வேண்டியிருந்தது. கவர்ன்மெண்ட்லேர்ந்து ரிடையராயிட்டா அரைகுறை உசிரோட தவிக்கிற பாம்பு மாதிரித்தான்...வெளியேதான் யாரும் மதிக்க மாட்டான்னா. வீட்லேயும் நிஷித்தமா பேசுவா. கட்டின பெண்டாட்டிகூட அதுவரையில் காட்டி வந்த மதிப்பையும் மரியாதையும் குறைப்பா. பிரைவேட் கம்பெனியில் குறைஞ்ச சம்பளத்துக்கு வேலைக்குப் போலாம்னு அட்வைஸ் பண்ணுவா. முப்பத்தஞ்சு வருஷம் உழைச்சதெல்லாம் மறந்து போகும்."

"லோக ரீதியாப் பேசறதிலே ஆருக்கு என்னடா லாபம் மௌலி! பாரதி விஷயத்துக்கு வா."

"ரிடயரானப்புறம் அவனை மேற்படிக்கு அனுப்ப எங்கிட்ட பணவசதி இருக்கலே. பெத்த புள்ளை எப்பவாவது ஒரு கடுதாசி போடறானே ஒழிய அதுக்குள்ள ஒரு டாலர் நோட்டைக்கூட வைச்சு அனுப்பினதில்லை. பாரதிக்கு டீச்சர் வேலைன்னா பிடிக்காது. இருந்தாலும் ஏதானும் காலேஜ்ல லெக்சரரா வேலை செய்ஞ்சு, பிஎச்.டிக்குப் போறேன்னா..."

"அது நல்ல ஐடியாவாச்சே?"

"கவர்ன்மென்ட் க்வார்ட்டர்ஸைக்காலி பண்ணிட்டா பிளாட்பாரம்தான் கதி. கரோல்பாக்ல ஒரு பெட்ரூம் ஃப்ளாட்டுக்கு என்ன வாடகை தெரியுமா? ரெண்டாயிரம். க்ரீன பார்க்ல மூணு. நான் என் பென்ஷன்ல ரேஷன் வாங்குவேனா இல்லே வாடகை கொடுப்பேனா?"

''அப்ப அவளை அங்கே விட்டுட்டு நீங்க மாத்திரம் நங்கவரம் வந்திருக்கணும்.''

''இதைத்தான் பாரதியும் சொன்னா. ஆனா சுசிலா கேக்கலே. அவ டில்லியிலே ஒருநாள் கூடத் தனியா இருக்கப்படாதுன்னா. உடனடியாக் கல்யாணம் பண்ணனும்னா. சத்தியமாச் சொல்றேன். ஈச்சா என்னைத் தப்பா எடுத்துக்காதே. என் பொண்ணை தங்கம்மா இருக்கற வீட்டுக்கு அனுப்ப எனக்கு இஷ்டமிருக்கலை. நீ நல்லவன். உனக்குதாராளமனசு. மனசு எப்பவும் வெள்ளை. உன்பேர்ல எனக்குத் தனி மதிப்பும் மரியாதையும் அபிமானமும் உண்டு. உன் பிள்ளையும் உன்னைக் கொண்டிருப்பதாகவே பட்டது. ஆனா தங்கம்மா பதினேழு பதினெட்டு வயசிலே எப்படி எப்படி இருந்தான்னு எனக்குத் தெரியும் அப்படிப்பட்டவ உங்கிட்ட வந்தப்புறம் கம்ப்ளீட்டா மாறிட்டான்னு நெனைச்சேன்''

ஈசுவரன் சிரித்தார்.

''பழைய கதை! விடு. விட்டுத் தள்ளு. ஜன்மகுணத்தை யாராலும் மாத்த முடியாது. கெட்ட பழக்கங்கள், சிகரெட், குடி, தேவடியாள் இதெல்லாம் நடுவிலே வந்தா நடுவிலேயே போக்கிக்கலாம். ஆனா சோரையோட வந்த குணம் சோரை உறைஞ்சு போறப்பத்தான் போகும். இப்ப தங்கம் ப்ரோப்ளம் இல்லை. பாரதிதான் ப்ரோப்ளம்.''

''சகஸ்ரம் வர்றான்.''

''மின்னால இட்லி திம்போம்'' என்றார் ஈசுவரன்.

''நீ தொடங்குடா. நான் அப்ஸர்வர் மாதிரி வாயைத் தொறக்காம ஒக்கார்ந்திருக்கேன்!'' என்று ஈசுவரன் சகஸ்ரத்திடம் சொல்ல, சகஸ்ரம் 'மௌளி உனக்கு நெஞ்சுறுதியும் தைரியமும் இருக்கா?'' என்று கேட்டான்.

ஒருகணம் மௌளிக்குக் கோபம் வந்தது. சகஸ்ரம் நட்புரிமையோடு கேட்பதை அவர் உணர்ந்திருந்தாலும் அவமானப்படுத்துவது போலத் தோன்றியது.



''எம் பேர்ல ஒனக்கு இப்ப தேஷ்யம் உண்டாறது நேக்குத் தெரியறது. பட் ஐ டோண்ட் கேர். இப்ப நம்ம எல்லார்க்கும், முக்கியமா அண்ணா குடும்பத்துக்குக் காரியம்தான் முக்கியம்.''

''சரி சொல்லு''

' நீ இந்நைக்கோ, நாளைக்கோ ஒன் பொண் பாரதியைக் கூட்டிண்டு போறாய்.''

''எங்கே?''

''அப்பன் பொண்ணை எங்கே கூட்டிண்டு போவன்? ஒண்ணு புக்காத்துக்கு, இல்லைன்னா பொறந்தாத்துக்கு! பாரதி இப்ப புக்காத்திலேதானே இருக்கா?''

''கூட்டிக்கிட்டுப் போய்...''

''ஒன் இஷ்டம் போலச் செய்.''

''புரியலே சகஸ்ரம்.''

''நீயும் ஒன் ஒய்ஃபும் ஆசைப்பட்டா நங்கவரத்திலேயே வைச்சுக்கோங்கோ. பிஎச்.டி படிச்சுத்தான் ஆகணும்னா அவ அதைப் படிக்க நங்கவரத்திலேந்து அனுப்பு. அது கழியலேன்னா மூணு பேருமா காவிரியிலே விழுங்கோ, எங்களுக்கு அவ இங்கேந்து போனாப் போரும்!''

''என் பொண் என்ன தப்பு செய்ஞ்சா?''

''அவ தப்பு சேஞ்சிருந்தா நடக்கற கதையே வேறே. நாங்களே வண்டி ஏத்தி அனுப்பிச்சிருப்போம் அவ இப்ப நல்லவளாத்தான் இருக்கா எல்லார்ட்டேயும் சிரிச்சுத்தான் பேசறா ஆனா இதெல்லாம் மாத்திரம் போறாதே?''

''இன்னும் என்ன வேணும் மௌளி?'' என்றார் ஈசுவரன்.

''ஒடம்பு இங்கேயும் மனசு பிஎச்.டியிலேயும் இருக்கப்படாது. ரெண்டும் ஒரே எடத்தில இருக்கணும். நம்ப கண்ணுக்கு அவ நல்ல பொண்ணா, புத்திசாலிப் பொண்ணா, வீட்டுக் காரியங்களை வேகத்திலேமனசிலாக்

கிண்டு திருப்தியா சேயற பொண்ணாத் தோணினாலும் அவ மனசு இங்கே இல்லை. பிஎச்.டியில் இருக்கு அவ அதைப் படிக்கணும்ங்கற ஆசையிலும் மோகத்திலும் பாரதியை எங்க கோந்தைக்கு வாங்கிக்கலை.''

''கூடிய சீக்கிரம் அவ முழுகாம இருந்தா இந்தப் பிரச்னை தானாத் தீர்ந்துடாதா?''

''பாரதி முழுகிண்டுதான் இருப்பா. மாசாமாசம் தொழுத்துப் பொரையல மூணு நாள் ஒக்கார்ந்துண்டு தான் இருப்பா.''

''இதை உன்னால எப்படி அவ்வளவு நிச்சயமா, தீர்மானமாச் சொல்ல முடியும். சகஸ்ரம்?''

''என்னால் அடிச்சுச் சொல்லக் கழியும்.''

''அப்ப அதைநான் தெரிஞ்சுக்கறேன்.''

''சொல்லண்டாம்னு பார்த்தேன். நீ சொல்ல வைக்கிறாய், சரி சொல்லியூடறேன். அவர்களுக்கு இன்னும்...''

''சாநதி முகூர்த்தம் நடந்ததே?''

''வாத்தியார் மந்திரங்களைச் சொன்னார் அம்படத்தான்! அதுக்கு அப்புறம் என்ன நடக்கணுமோ அது இன்னித் தேதி வரை நடக்கலை. என்னையோ எங்கிட்ட இந்தக் குஞ்சப்பாகிட்ட எல்லா ரகசியங்களையும் சொல்ற கோந்தையையோ நீ நம்பண்டாம் நீபெத்தபொண்ணையே தனியாக் கூப்பிட்டுக்கேளு. ஒனக்கும் கூச்சமா இருந்தா நங்கவரத்துக்குக் கூட்டிண்டு போய் உன் ஒய்ஃபை விட்டுக் கேக்கச் சொல்லு.''

''சரி நீ சொல்றது உண்மையாவே இருக்கட்டும். உன் பேச்சைக் கேட்டு நான் என் பெண்ணை அழைச்சுட்டுப் போனா அப்புறம் அவ கதி?''

''மூணு சாய்ஸ் தந்தேனே நங்கவரம் பிஎச்.டி காவிரி.''

''அப்புறம் நீங்க என்ன செய்வீங்க?''



''அதை நாங்க பார்த்துக்கறோம். நீ விசாரப் படண்டாம். கோர்ட்டும் வக்கீலும் இருக்கு. பலமான பாயிண்ட் இருக்கு.''

''என்ன அது, பலமான பாயிண்ட்?''

''கல்யாணமாச்சு ஆனா கன்ஸுமேஷன் - கல்யாணத்தின் முடிவான நிறைவு அது- ஆகலையே? எங்க வக்கீல் ஆறு மாசத்திலே டிவோர்ஸ் வாங்கித் தருவன் ''

மௌலி சீற்றத்துடன் எழுந்தார்.

''இதைச் சொல்றத்துக்கா என்னை லெட்டர்போட்டு வரலழைச்சீங்க. கோர்ட்டுன்னு வந்தா நானும் ஒரு கை பார்த்துக்கறேன்'' மௌலி எழுந்தார்.

சகஸ்ரம் கலகலவென்று வாய்விட்டுச் சிரித்தான். இது வரை மௌனமாய் பார்வையாளராக இருந்த ஈசுவரனும் சிரித்தார்.

அவர்களுடைய சிரிப்பு மௌலியின் ஆத்திரத்தை மேலும் அதிகமாக்கியது.

''சகஸ்ரம் நம்ப மௌலிக்குப் புத்தி போறாது.''

''இல்லாட்ட இப்படி தேக்ஷ்யப்பட்டு எழுந்து நிப்பானா? ஒக்காரு மௌலி. இதுதான் எல்னோட சூத்திரம்.''

''என்ன?''

''ஒரு ஷாக் ட்ரீட்மெண்ட்...இல்லைன்னா சர்ஜரி.''

''கொஞ்சம் புரியறது'' என்றார் மௌலி உட்கார்ந்து கொண்டே சிரிப்பு வந்தது. ஆனால் அது அசட்டுச் சிரிப்போ என்று அவருக்கே தோன்றியது.

'நீ சாப்பிட்டப்புறம் என்ன சேயறாய்.. பாரதியை மச்சு மேலுக்குக் கூட்டிண்டு போறாய். அந்தாத்தில அல்ல. அங்கே ஒன் தங்கை இருக்கா குறுக்கே வந்தாலும் வருவள்,

''மன்னியால நம்ப பிளான் குட்டிச் சுவராகப்படாது. நான் இப்ப சொன்னதையெல்லாம் ஒன் பாணியிலே பாரதிக்கு ஏற்றபடி அவகிட்டப்பேசணும் மனசிலாச்சா?''

''ஆச்சு சகஸ்ரம்.''

''எங்க குடும்பத்துக்குப் பாரதி வேணம். எங்க ஆசை நிறைவேறணும்னா இதுதான் ஒரே வழி.''

''ஒருவேளை எல்லாத்துக்கும் அவ துணிஞ்சா? நாராயணன் வேண்டாம். பிஎச்.டிதான் வேணும்னு அவ நின்னா?'' என்றார் மௌலி.

''அப்ப பகவான் விட்ட வழின்னு இருந்துக்கறோம்!'' என்றார் ஈசுவரன்.

## 20

**பா**ரதிக்குத் தகப்பனார் எதற்காகத் திடீரென்று பாலக்காட்டுக்கு வந்திருக்கிறார் என்று இன்னும் புரியவில்லை. பாசம் காரணமாக அவர் நிச்சயமாக வரவில்லை இந்த வீட்டில் சேர்த்துவிட்டு அவரும், அம்மாவும் ஊர் திரும்பி இன்னும் முழுதாக இருபது நாள் ஆகவில்லை. அப்படியே பாசம் பொங்கி வழிந்த காரணத்தினால் வந்திருந்தால் கூடவே அம்மாவையும் அழைத்து வந்திருப்பார். வெறுங்கையுடனும் வந்திருக்க மாட்டார். காரணத்தை அவளிடமும் சொல்லவில்லை. கூடப்பிறந்தவளிடம்நம்பும்படியான விதத்தில் கூறவில்லை. மாமனார் அப்பாவை சகஸ்ரத்தின் வீட்டுக்கு அழைத்துச் சென்றிருக்கிறார். அங்கே என்ன பேசப் போகிறார்கள்? அல்லது பேசிக் கொண்டிருக்கிறார்கள்? இந்தப் பத்து நாள்களில் எல்லோருடைய பாராட்டையும் பெற்றிருக்கிறாள். அத்தை மட்டும்தான் இன்னும் அப்படியே இருக்கிறாள். ஆரம்பத்தில் அவளைத் தூக்கி எறிந்து பேசியதை இன்னமும் மனதில் ஊறப் போட்டுக் கொண்டிருக்கிறாளோ என்னவோ? ஆனால் நாளடைவில் அத்தைக்கும்அவளைப் பிடித்துப் போகும். பாட்டிக்கு அத்தையைப் பிடித்துப்



போகவில்லையா? அதுபோல ஆனால் இந்த சுமுகமான வேளையில் அப்பா ஏன் வரவேண்டும்?

பிஎச்.டி., திடீரென்று மண்டையில் அடித்தது. இது பற்றிய கருத்தை அவள் இன்னும் மாற்றிக் கொள்ளவில்லை. அதே துடிப்பும், ஆர்வமும் இம்மியும் குறையாமல் அப்படியே இருக்கின்றன கைலாசமும் தேவகியும் மனத்தைச் சற்றே குழப்பினார்கள். உண்மை. ஈசுவரனும், சகஸ்ரமும் திசை திருப்பப் பார்க்கிறார்கள் சந்தேகமில்லை நாராயணன் தன்னுடைய முடிவைத் திட்டவட்டமாகக் கூறியாகிவிட்டது. இப்படியெல்லாம் இருந்தும் அவள் தன் ஆசையை அடக்கிக் கொள்ளவில்லை. வாய்ப்பு கிடைத்தபோதெல்லாம் ஈசுவரன் மற்றும் சகஸ்ரம் சித்தப்பாவிடம் மீண்டும் மீண்டும் வெளியிட்டிருக்கிறாள் ஏன், கமலம் சித்திபிடம்கூடத் தன் அபிலாஷையைக் கூறியிருக்கிறாள்.

ஆசை வேறு, லட்சியம் வேறு என்று தேவகி சொன்னதை அவள் மனப்பூர்வமாக ஆமோதித்தாள். கைலாசம் காட்டு இலாகா சம்பந்தமாகப் படிக்க ஆசைப்பட்டுத்தான் அந்தத் துறைக்கு வந்தார். அவருடைய ஆசை நிறைவேறியது. அதன் பலனை அவர் பல ஆண்டுகள் அனுபவித்திருக்கிறார். அதன் பின்னர்தான் ஒரு லட்சியம் அவரை ஆட்கொண்டிருக்கிறது.

கணவன் நாராயணனுக்கும் திடீரென்று ஒருலட்சியம் பிறந்திருக்கிறது. வசதி இருக்கிறது. சிந்திக்க நேரம் இருக்கிறது. அநாதை ஆசிரமத்தை நேரில் காணும் வாய்ப்பு ஏற்பட்டிருந்தது. அந்தச் சமயத்தில் ஒரு கிழவனோ, கிழவியோ உயிருக்குப் போராடிக் கொண்டிருப்பதைப் பார்த்திருக்கலாம். அந்தக் காட்சி அவனுடைய மனதில் ஒரு பாதிப்பை ஏற்படுத்தியிருக்கக்கூடும். அவனுடைய கொடை வள்ளல்தனம் லட்சியத்தால் ஏற்பட்டது என்று ஈசுவரன் உயர்த்தினாலும் அவளால் முழுதும் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. நாராயணனிடம் இயல்பாக

தயாள குணம் இருக்கலாம். அதற்கு ஒரு வடிகால்கிடைத்த போது அவன் அதைப் பயன்படுத்திக் கொண்டான். பரோபகாரம் என்பது அவ்வப்போது எழக்கூடிய செயல் தான். நாராயணன் உண்மையான லட்சியவாதி என்றால் தன்னுடைய பங்கு முழுதையும் தானமாக அளித்து, ஏழை எளியவர்களுக்குத் தொண்டு அல்லவா செய்ய வேண்டும்?

விவசாயத்தில் தீவிர ஈடுபாடு ஏன் கொள்ள வேண்டும்? சம்மேளனங்களில் ஏன் கலந்து கொள்ள வேண்டும்? மந்திரியைப் பார்க்க ராத்திரியில் ஏன் ஓடவேண்டும்?

அவளுக்கு இப்போது லட்சியம் இல்லைதான். எந்த லட்சியமும் இல்லாமலேயே அவள் வாழ்ந்து முடியவும் கூடும். ஒரு லட்சியம் அவளுள் பிறப்பதற்காக அவள் பிஎச்.டியைத் தேடிப் போக வேண்டிய அவசியமும் இல்லை.

அவளிடம் இருப்பது ஆசை. வெறும் ஆசைதான். டாக்டர் பாரதி என்று எழுதிப் பார்த்துக் கொண்டால் நிச்சயம் பெருமையாகத்தான் இருக்கும். மற்றவர்கள் அவளைக் கண்டு பொறாமைப்படும்போது எத்தகைய குதூகலமும், திருப்தியும் கிடைக்கும்?

அவள் பிஎச்.டி.. ஆசையைக் கைவிட மாட்டாள். அதற்கு ஆதரவும் அனுமதியும் கிடைக்கவும் கிடைக்கும். இப்போது அவளைப் பற்றி ஒரு நல்ல எண்ணம் உருவாகி வந்து கொண்டிருக்கிறது. அதை அவள் கெடுத்துக் கொள்ள மாட்டாள். நல்ல பெண்ணாக தொடர்ந்து இங்கேயே இருப்பாள். ஈசுவரன், சகஸ்ரம், நாராயணன், தேவகி இவர்கள் எல்லோருமே ரெயில்வே ஸ்டேஷன் வரை வந்து வழி அனுப்புவார்கள். அவள் டாக்டர் பட்டம் வாங்கித் திரும்பி வரும்போது மாலை போட்டு வரவேற்க தேவகி நிச்சயம் வருவாள்.

''என்னடீ! மச மசன்னு நிக்கறே?''



திடீரென்று அத்தையின் குரல் அவளைத்தாக்க, பாரதி ஏறிட்டுப் பார்த்தாள்.

''என்ன அத்தே?''

''உன் அப்பா சாப்பிடப் போறார், தெரியுமோ இல்லியோ?''

''தெரியும்.''

''நான் காய்கறிகளை நறுக்கி வைச்சாச்சு. இனிமே நீ பார்த்துக்கோ.''

''என்ன சமையல்...?''

''என்ன சமையல்னு நேத்து எங்கிட்டக் கேட்டியா? முந்தாநாள் கேட்டியா? பாட்டிட்டேயும், உன் மாமனார்ட்டேயும் தானே ஏழெட்டு நாளாக் கேட்டுச் சமைக்கிறே... நீ எதைப் பொங்கி, என்ன போட்டால் எனக்கு என்ன?''

பாரதிக்கு வரும் கோபத்தை அடக்கிப் பழக்கமில்லை இருந்தாலும் சிரமப்பட்டுத் தன்னைத்தானே கட்டிப் போட்டுக் கொண்டாள். அப்பா வந்திருக்கிற தினம் மாமியாரிடம் வாயாடுவானேன்?

தங்கம்மா சமையலறையை விட்டு வெளியேறியது நிம்மதியை அளித்தது நறுக்கி வைக்கப்பட்டிருந்த காய் கறிகளைப் பார்த்தாள்

வெண்டைக்காய்.

அவரைக்காய்.

சாம்பார், கறி, கூட்டு என்று தனக்குள் தீர்மானித்துக் கொண்டாள். அப்பாவுக்கு வெண்டைக்காயே பிடிக்காது. ஆனால் என்ன செய்ய? தங்கம்மா சாம்பாருக்கான அளவில் தானே வெட்டி வைத்திருக்கிறாள்?''

பன்னிரண்டு மணிக்கு மேல் அப்பாவும், மாமனாரும் வந்தார்கள்.

''பொண்ணே, எல்லாம் ரெடியா?''

''ரெடி அத்திம்பேர்.''

''தங்கம் எங்கே?''

''தொழுவத்திலே இருக்கா.''

''சரி அவ வர்றப்ப வரட்டும். நீ எல்லாத்தையும் கொண்டு வந்து டேபிள் மேல வை.''

''சரி.''

''பாயசம் வைச்சிருக்காய் இல்லியா?''

''இல்லையே''

''என்ன நீ, ஒன் அப்பா மின்னு மின்னால வந்திருக்கான். எனக்கு அவன் சம்பந்தி அல்லவா?''

''விருந்து சாப்பிடறதுக்குன்னு நங்கவரத்திலேர்ந்து உங்க சம்பந்தி வந்திருக்கிறதா எனக்குப் படலை. அத்திம்பேர்!''

ஈசுவரன் வாய்விட்டுச் சிரித்தார்.

''பார்டா மௌலி! ஒன் பொண் என்னை எப்படி மடக்கறான்னு.''

''பாரதி நீ உன் மாமனார்ட்ட இப்படியெல்லாம் பேசப்படாது'' என்றார் மௌலி.

''நீ பேசாதைக்கு இருடா. நாங்க ரெண்டு பேரும் ஃப்ரண்ட்ஸ். மாமனார் ஸ்தானமாடா இப்பப் பெரிசு? என்னை அவ மனசிலாக்கிண்டிருக்கா. நானும் அவ மனசை. எலையைப் பாரு. பாரதி பரிமாறத் தொடங்கியாச்சு.''

மௌலி அதன் பின் வாய் திறக்கவில்லை.

அவர் சாப்பிட்டு விட்டு முற்றத்தில் கை அலம்ப வந்த போது தங்கம்மா வந்தாள்.

''அண்ணா!''

''என்னம்மா?''

''கை அலம்பி முடிச்சதும் நீ கொஞ்சம் மாடிக்கு வா.''



''வரேனே.''

''உங்கிட்டப் பேசணும்.''

மௌலி தங்கையைப் பார்த்தார். அவளுடைய முகத்தில் பிரதிபலிப்பது கோபமா, வெறுப்பா, விரக்தியா, வேதனையா? ஒன்றும் தெரியவில்லை.

மாடி அறையில் அண்ணாவும், தங்கையும் சந்தித்துக் கொண்டார்கள். தங்கம்மா ஆரம்பிக்கட்டும் என்று மௌலி காத்துக் கொண்டிருந்தார். பெண் பாரதியைப் பற்றிப்பொதுவாக என்ன எண்ணம் இருக்கிறது என்பதை அவர் சகஸ்ரத்தின் வீட்டில் தெரிந்து கொண்டாகி விட்டது. அதனால் இப்போது மனம் கலங்கவில்லை.''

''அண்ணா!''

''சொல்லு தங்கம்மா.''

''உன் பெண் சரியில்லே''

''விவரம் தெரியாத பெண் பாரதி, தங்கம்மா! கொஞ்சம் செல்லமா வளர்த்துட்டேன் போலிருக்கு. டில்லியிலே பொறந்து வளர்ந்தவ, இங்கே அட்ஜஸ்ட் செய்ஞ்சுக்கக் கொஞ்சம் டயம் கொடு.''

''நான் இதைப் பத்தியெல்லாம் பேச உன்னை இங்கே கூப்பிடலே. அவளுக்கு வாய்க்கொழுப்பு ரொம்ப ஜாஸ்தி, வந்த ரெண்டு நாள்லே அவ எங்கிட்ட எப்படி எப்படி என்னென்னவெல்லாம் பேசினான்னு உனக்குத் தெரியாது. அந்தச் சமயத்திலே மட்டும் என் கையிலே டேப்ரிகார்டர் இருந்திருந்தா நீயும் அவ பேச்சைக் கேட்டு ரசிச்சிருக்கலாம்.''

''அவ உன்னை எதிர்த்துப் பேசறது தப்பு ரொம்பத் தப்பு கண்டிக்கறேன்.''

''எனக்கே பெப்பே காட்றவள் உன் பேச்சையா கேட்கப் போறா...? கார்த்தால எத்தனை மணிக்கு தூங்கி எழுந்திருப்பா, தெரியுமா? ஒன்பது, ஒன்பதே கால்... ஒருநாள் பத்து.''

''ஏன் என்னாச்சு அவளுக்கு!''

''உன் பொண்ணாலே என் மானமே போறது. நங்கவரம் மானத்தையும் அவள் காசு கொடுக்காமக் கூடிய சீக்கிரம் வாங்கிடுவா! அதனால...?''

''அவளை நீ அழைச்சுட்டுப் போயிடு.''

''எத்தனை நாளைக்கு.''

அதை இப்ப சொல்ல மாட்டேன்.''

''என் பொண்ணை உன் பிள்ளைக்குக் கொடுக்க எனக்கோ சுசிலாவுக்கோ ஆரம்பத்திலே இஷ்டம் இல்லை. ஈச்சா தான் மொதல்ல எழுதினான்.''

''எல்லாம் அவராலே வந்த வினை தான்.''

''நான் ஏன் இஷ்டப்படலைன்னு நீ கேக்கலியே, தங்கம்மா?''

''சரி இப்பக் கேக்கறேன், சொல்லு.''

''நீ வீட்ல எப்படி இருந்தவன்னு எனக்குத் தெரியும். அம்மாவையே அடிக்கக் கை ஓங்கினவள் நீ. அப்பா செத்துப் போனப்ப உன் கண்ல மட்டும் தான் நீர் வரல்லே. அவர் செத்த நாலாம் நாள் நீ சினிமா பார்க்கப் போனே! இப்படிப்பட்டவகிட்ட என் பெண் மாட்டிக்கப்படா துன்னுதான் நினைச்சேன். ஆனா ஈச்சாவோட நங்கவரம் வந்தப்ப நீ முழுசா மாறிட்டதாத் தோணித்து. குழையக் குழையப் பேசினே. என் பொண் ஜெனிச்ச அன்னிக்கே அவ உன் பிள்ளைக்குத்தான்னு நெகிழ்ந்தே...உன் குணமே மாறிட்டதுன்னு நான் கணக்குப் போட்டேன். அந்தக் கணக்கு தப்புன்னு இன்னிக்குத் கார்த்தாலே நான் வந்ததுமே புரிஞ்சுது. தலையிலே இடி விழுந்தாப்ல ஆயிடுத்து...''

''எதுக்கு அண்ணா வளவளன்னு பேசணும்? உன் பொண்ணை அழைச்சுட்டுப் போ!''

''நீ மாத்திரம் சொன்னாப் போதாதே...என் மாப்பிள்ளை சொல்லட்டும்.''



''அவன் என் புள்ளை. நான் கிழிச்ச கோட்டைத் தாண்ட மாட்டான்.''

''அதையும் பார்த்துடுவோம். ஈச்சாவும் சொல்லட்டும்.''

''அவர்ட்ட நீ இது பத்திப் பேசத் தேவையில்லை!''

''எப்படித் தேவை இல்லாமப் போகும்? அவர் தானே சம்பந்தி? என் பெண்ணோட தலைவிதியை நிர்ணயிக்கும் பொறுப்பு அவருக்கும் இருக்கே?''

''அவர் சம்மதிக்க மாட்டார்.''

''ஏனாம்?''

''அவங்க ரெண்டு பேரும் சகஜமாப் பழகறா.''

'அப்ப அது தான் காரணமா உன் முடிவுக்கு? சீ! என்ன அற்பத்தனமான, ஈனத்தனமான எண்ணம், உனக்கு!''

''நீ உன் பெண்ணைக் கூட்டிட்டுப் போயே ஆகணும்.''

''பாரதி வர்றதுக்கு மறுத்தா?''

''மறுக்க மாட்டா... சொல்லப் போனா துள்ளிக் குதிச்சுக்கிட்டு உன் பின்னாலே வருவள்.''

''எப்படி அவ்வளவு நிச்சயமாச் சொல்றே?''

''அவளுக்கு இந்த ஊர் பிடிக்கலே. இந்த வீட்டுச் சாப்பாடு பிடிக்கலே. எல்லாத்துக்கும் மேலா அவ கண் பிஎச்.டியிலே நிலைச்சு நிக்கறது, அந்தப் படிப்பைப் படிக்க என் புள்ளை சம்மதம் கொடுக்க மாட்டான். அவனோட அப்பாவும் கூடாதும்பார்.''

''சரி, நான் அழைச்சுட்டுப் போறேன்னே வைச்சுக்கோ... அதுக்கு அப்புறம்? '

''அதான் அப்பவே சொன்னேனே. நான் அப்புறமா முடிவு எடுக்கறேன்னு.''

''என் பெண்ணை வாழாவெட்டி ஆக்கறதுன்னு நீ கங்கணம் கட்டிட்டு நிக்கறே!''

''நான் கங்கணமும் கட்டலே, வளையலும் போட்டுக்கலே... உன் பெண் இந்த வீட்ல இருக்கறதே என் கண்ணுக்கு எரிச்சலா இருக்கு.''

''அப்ப வேறு ஒரு வழிதான் இருக்கு.''

''என்ன வழி?''

''தனிக்குடித்தனம்!''

தங்கம்மா கேலியாகச் சிரித்தாள்.

''என் பிள்ளையோட அப்பாவே கல்யாணமாகி முப்பது வருஷமானப்புறமும் தனிக்குடித்தனம் வைக்க நினைக்கலே.''

''இப்ப நினைக்க வைக்கிறேன். என் பொண் அவ புருஷனோட வேற ஒரு வீட்ல தனியா இருக்கட்டும்.''

''அது என் பொணம் விழுந்தப்புறம்தான் நடக்கும்'' தங்கம்மா சீறினாள்.

''அப்ப உன் பொணம் விழுந்தப்புறம்தான் என் பெண் இந்த வீட்டை விட்டுப் பிறந்த வீட்டுக்குப் போவா! நீ இப்ப இதையெல்லாம் இந்த மாடி ரூம்ல தனியா உட்கார வைச்சுப் பேசறே. சாது மாதிரி இருக்கேங்கறதாலே சாமர்த்தியமும், தைரியமும் இல்லேன்னு எடை போட்டுடாதே. இன்னிக்குச் சாயங்காலமே இந்தப் பள்ளிப்புரம் கிராமத்திலே இந்த வீட்டெதிரே நின்னுண்டு கோஷம் போட்டு கூட்டம் சேர்ப்பேன். நீ இப்ப சொன்னதையெல்லாம் அவாகிட்ட சத்தம் போட்டுச் சொல்லி என் பெண்ணுக்கு நியாயம் கேட்பேன்... அடிபட்ட புலியைப் பார்க்கணும்னு உனக்கு ஆசை இருந்தா இன்னிக்கு சாயங்காலம் பாரு!''

''என் மானத்தை நடுத்தெருவுக்குக் கொண்டுவரத் துடிக்கிறியா?''

''உனக்கு மட்டும்தான் மானம் இருக்கோ? எனக்கு இல்லியோ? என் பெண் பாரதிக்கு இல்லியோ?''

''கத்தாதே''



''நீ கத்த வைக்கிறே?''

''கீழே என் மாமனார், மாமியார் இருப்பா. அவரும் இருப்பார்.''

''இருக்கட்டுமே! உன் மனசிலே எவ்வளவு அழுக்கு இருக்குன்னு அவங்களுக்கும் தெரியட்டுமே.''

''சரி... சரி... இப்ப நீ உன் பெண்ணைக் கூட்டிட்டுப் போக வேண்டாம்.''

''இப்ப என்ன இப்ப? எப்பவுமே கூட்டிட்டுப் போக மாட்டேன்.''

''நான் கீழே போறேன். நம்ம நாத்தம் மத்தவாளுக்குத் தெரிய வேண்டாம்.''

''நான் என்னிக்குமே நாறாதவன். நாறவும் மாட்டேன். ஒரு தங்கமான மனுஷனுக்கு நீ பெண்டாட்டியா வாய்ச்சியே! பாவம் அவர் என்ன பாவம் பண்ணினாரோ?''

தங்கம்மா சரசரவென்று கீழே இறங்கிப்போக மாடிப் படிகளில் விரைந்தாள்.

கீழ்ப்படிக்கு அருகே ஈசுவரன் நின்று கொண்டிருந்தார். அவரைத் தாண்டிச் செல்ல அவள் யத்தனிக்கையில்-

''தங்கம்!'' என்றார் ஈசுவரன்.

அவள் தாண்டிச் சென்றாள்.

''எங்கே ஓடறாய்! நில்லு.''

''என்ன வேணம்?''

''உன் அண்ணாகிட்ட என்ன பேசிண்டிருந்தாய்?''

''ஒண்ணுமில்லை.''

''ஒண்ணுமில்லாததைக்கா அரைமணிக் கூறு மச்சு மேல் இருந்தாய்?''

''இப்ப ஒங்ககிட்டச் சொல்லும்படியா விசேஷமா ஏதும் இல்லை.''

''பாரதியைப் பத்தியா?''

தங்கம்மா பதில் சொல்லாமல் சென்றாள்.

சற்றைக்கெல்லாம் மௌலி இறங்கி வந்தார்.

''என்ன அண்ணாவும், தங்கையும் ரொம்ப நேரமா சொகாரியம் பேசிண்டிருந்தேள்? நானும் தெரிஞ்சுக்கலாமா, மௌலி?''

''சொகாரியம்னா ரகசியம்தானே?''

''ஆமாம்.''

''ரெண்டு பேருக்குள்ளே இருந்தாத்தான் ரகசியம். உன் பாஷையில சொகாரியம்! மூணாம் மனுஷனுக்குத் தெரிஞ்சா பரஸ்யமாயிடறது... சரி, இப்ப நான் சகஸ்ரத்தின் வீட்டுக்குப் போறேன்.''

''சரி நீ போய்க்கோ... இப்ப பாரதி அங்கதான் இருக்கா... நான் என் கடை, பங்க் இதையெல்லாம் சுத்திப் பார்த்துட்டு நாலு மணிக்கு மின்னால வந்துடறேன்.''

''நீ எப்ப வேணும்னாலும் வா. நான் வந்த காரியம் முடியாமல் நங்கவரம் திரும்பறதா இல்லை!''

''மௌலி நீயா இப்படி அடிச்சுப் பேசறாய்? சாதுமிரண்டா...''

''காடு கொள்ளாது. எனக்கும் தெரியும். நான் வரேன் ஈச்சா;''

''ஆல் தி பெஸ்ட்.''

மௌலி பதில் கூறாமல் வெளியேறி, தெருவைத் தாண்டி சகஸ்ரம் வசிக்கும் வீட்டுக்குள் பிரவேசித்தார்.

இரண்டு கட்சிகள். ஒரே திசையில் அவர் செல்ல வேண்டும் என்று வற்புறுத்துகிறார்கள். ஆனால் நோக்கங்கள் வெவ்வேறு!

அவராகச் செயல்பட மூன்றாவது திசை இருக்கிறதா? தேடினார். புத்தி மழுங்கியதுதான் மிச்சம்.

# 21

ராஜியின் ஒற்றைத் தலைவலியின் கடுமை குறைந்திருந்தாலும், அவளால் வீட்டுக் காரியங்களைக் கவனிக்க இயலவில்லை.

''சித்தப்பா. நீங்க எதுக்கு இங்கே சாதம் வடிக்கணும் நான் அங்கேயிருந்து உங்களுக்கும், சித்திக்கும் கொண்டு வந்திருப்பேனே!'' என்றாள் பாரதி.

''ஸெல்ஃப் ஹெல்ப் இஸ் தி பெஸ்ட் ஹெல்ப். கேள்விப்பட்டிருக்காயா, பாரதி?''

''நீங்க ஓர் அபூர்வ மனுஷர்தான். நீங்க ஊருக்கெல்லாம் உதவி செய்யறீங்க. ஆனா இன்னொருத்தர்ட்டேந்து எந்த உதவியும் எதிர் பார்க்கறதே இல்லை.''

''ஸ்டாண்ட் ஆன் யுவர் ஓன் லெக்ஸ். கேள்விப்பட்டிருக்காயா?''

பாரதி சிரித்தாள்.

''இந்த மாதிரி அஞ்சாறு இங்கிலீஷ் அறிவுரைகளை வைச்சிக்கிட்டு ஊரையே உங்க பக்கம் மடக்கிப் போட்டிருக்கீங்க... அது சரி, என்ன சமையல்?''

''ரைஸ், டால், கர்ட்.''

''அரிசி, பருப்பு, தயிரா?''

''விட்டில் கீ ஆல்ஸோ! டச் பண்ணிக்க மஸ்டர்ட் மாங்கோ.''

''கொஞ்சம் நெய்யும், தொட்டுக்க கடுகு மாங்காய்! வயிறு நிறைஞ்சுதா?''

''நிறையாம... சித்திகூட ரெண்டு மூணு வாய் தயிர் சாதம் சாப்பிட்டாளே... அதிருக்கட்டும், மௌலி வந்திருக்கா ? ன? என்ன விசேஷம்?'' என்று கேட்டான் சகஸ்ரம்.

''எனக்கே தெரியாது. அத்தை கேட்டதுக்கும் சரியா பதில் சொல்லலே. ஆமாம், அப்பா உங்க வீட்டுக்கு வந்தாரே, உங்ககிட்டச் சொல்லலையா?''

''சொல்லியிருந்தா நான் அபத்தமா உங்கிட்ட ஏன் வந்திருக்கார்னு கேட்டிருப்பேனா, பாரதி?''

''உண்மையான காரணம் ஒருத்தருக்குத்தான் தெரியும் போல இருக்கு.'

''ஆரு, அண்ணாவா?''

''ஆமாம்.''

''ஆனாக்கா, அண்ணா எங்கிட்ட ஒண்ணும் சொல்லலை. இப்ப என்ன செயறால் மௌனி?''

''அண்ணாவும், தங்கையுமாப் பேசிண்டிருக்கா. நான் சாப்பிடப் போனப்ப அத்தை மாடிக்குப் போனா. நான் கை அலம்பி இங்கே வந்து கால்மணி நேரமாறது. என்ன தான் பேசிக்கிறாங்களோ?''

''உன்னைப் பத்தியாக இருக்குமோ, பாரதி?''

''இருக்கலாம். அத்தைக்கு என்னமோ என்னைப் பிடிக்கலை. இப்பவெல்லாம் அவளை எப்படியாவது திருப்தி செய்யணும்னு பார்க்கறேன். முடியலை.''

''மன்னியைத் திருப்தி படுத்த யாராலும் கழியாது. என்னைக் கண்டாக்கூட மன்னிக்குப் பிடிக்காது. ஏன் தெரியுமோ பாரதி? நான் ஆரையும் முகஸ்துதி பாட மாட்டேன். பாடிக் காரியம் சாதிச்சுக்க ஆவஸ்யம் இல்லை பட்பட்டுன்னு நான் மன்னிட்ட மின்னெல்லாம் பேசியிருக்கேன்,''

''ஒவ்வொருத்தர் சுபாவம் ஒவ்வொரு மாதிரி.''

''ரொம்பக் கரெக்ட் பாரதி. உங்கிட்ட சில குணங்கள் பிடிச்சிருக்கு, ஆனா சிலது பிடிக்கலே.''

''உதாரணம்?''



''ஆராவது உங்கிட்ட வந்து பேசினாத்தான் நீ பேசறே?''

''இது கெட்ட குணமில்லையே, சித்தப்பா...?''

''கெட்ட குணம்னு சொல்ல வரலே, எனக்குப் பிடிக்கலேன்னுதான் சொன்னேன். ஒன்னை மாதிரியே எல்லோரும் இருந்துட்டான்னு வைச்சுக்கோ, அப்புறம் என்ன ஆகும்? எல்லாரும் ஊமைகளாத் திரிவா. நீயாக ஒருத்திட்டப் போய் பேசறதிலே தப்பு இல்லை. அதனாலே நீ குறைஞ்சும் போயிட மாட்டாய்! மனுஷாளுக்கு மனுஷாள்தான் வேணும்.''

''அப்புறம் வேற என்ன பிடிக்கலே?''

''சொன்னா தேக்ஷ்யப் படப்படாது.''

''நான் என்னிக்காவது உங்ககிட்ட கோவிச்சுட்டிருக்கேனா?''

''ஒன் பிடிவாதம்,''

''அது என் கூடப் பொறந்த வியாதி.''

''கண்டுடாமைக்கும், கஷண்டிக்கும்தான் மருந்து இல்லை மத்த எல்லாத்துக்கும் உண்டு.''

''எனக்குப் புரியலே, சித்தப்பா.''

''பொறாமை, வழுக்கை.''

பாரதி சிரித்தாள்.

''எனக்கே தெரியாது சித்தப்பா. எனக்கு ஏன் பிடிவாதம் அளவுக்கு மேலேயே இருக்குன்னு. சின்ன வயசிலே அம்மா, அப்பா, சரியா வளர்க்கலையோ என்னமோ?''

''வயசு வந்தப்புறம், தப்பு ஒண்ணு இருக்குன்னு தெரிஞ்சுப்புறம், நாமே நம்மை கரெக்ட் பண்ணிக்கலாம், இல்லியா பாரதி...? அதா ஒன் அப்பா மௌனி வர்றான். ஒனக்கு அவர்ட்ட தனியாப் பேசணுமானா மச்சு மேலுக்குப் போ? ஏணியைப் போட்டுக்கோ. ஆரும் ஒங்களை டிஸ்டர்ப் செய வரமாட்டா.''

''எனக்கு ஒண்ணும் அவர்ட்ட் ஸ்பெஷலா பேச இல்லை.''

''வா மௌலி! என்ன இத்தற நேரம்? அண்ணா அப்பவே காரை எடுத்துண்டு போயாச்சே?''

''தங்கை தங்கம்மா இருக்காளே? அவகிட்ட பேசிண்டிருந்தேன்.''

''சரி ஒக்காரு.''

''நான் பாரதிகிட்ட இன்னும் ரெண்டு வார்த்தை சரியாப் பேசலே.''

''ரெண்டோட ஏன் நிறுத்திக்கறாப், மௌலி. ரெண்டாயிரம் வார்த்தை பேசேன். என்னால இந்த ஈஸிச்சேரை விட்டுப் போகக்கழியாது, அதா, மச்சுமேல் இருக்கு. அங்க போய் ஆசை தீரப் பேசிக்குங்கோ''

ஒரு நிமிடம் பாரதி அப்பாவைப் பார்த்தாள்.

''பாரதி.''

''என்னப்பா?''

''வா, மாடிக்குப் போகலாம்.''

· இங்கேயே பேசலாமே அப்பா!''

''நாம பேசறது சகஸ்ரத்துக்குத் தொந்தரவா இருக்கும்,''

''அப்படியா, சித்தப்பா?''

''அப்படீன்னு இல்லை. ஆனா என்கூடப் பேச ஆரும் இல்லைன்னா கொஞ்சம் கண் அசருவேன், அம்படத்தான்.''

''சரிப்பா! மாடிக்கே போகலாம்.''

மாடி அறை சதுரமாக நேர்த்தியாக இருந்தது. ஏஸி அறையாக இருந்ததால் எல்லா ஜன்னல்களையும் அடைத்து வைத்திருந்தார்கள். மங்கிய வெளிச்சத்தில் அவள் விளக்கைப் போட்டாள். ஏஸியையும் முடுக்கி



விட்டாள். கொஞ்சம் நாராசமாக ஆரம்பித்த சப்தம் மெல்ல மெல்ல அடங்கிப் போயிற்று.

கட்டிலில் பாரதி உட்கார, அவள் எதிரே ஒரு பிரம்பு நாற்காலியில் மௌலி அமர்ந்தார்.

''என்னப்பா பேசணும்?''

''சொல்றேன்.''

''அதுக்கு முன்னாடி எதுக்குத் திடீர்னு இங்கே வந்திருக்கீங்கன்னு சொல்லுங்க.''

''என் பேச்சிலே இந்தக் கேள்விக்கு பதில் கிடைக்கும் பாரதி.''

''ஓகே. நான் ரெடி.''

வார்த்தைகளைத் தேடிக் கண்டுபிடித்துக் கோவையாக்கிக் கொண்ட மௌலி ஆரம்பித்தார்.

''நான் இப்பச் சொல்லப் போறது ஷாக் அடிக்கற மாதிரி இருக்கலாம். அனாவசியத் தலையீடாப் படலாம். ஏன், பைத்தியக்காரத் தனமாகவும் தோணலாம்.''

''அதை நான் முடிவு செய்துக்கறேன், அப்பா.''

''நம்ம ஊர்ல காவிரியை நீ நின்னு நிதானமாப் பார்த்ததில்லே. நீரோட்டம் ரொம்ப அமைதியா சாதுவா இருக்கும். ஆனா உள்ளே காலை வைச்சுட்டா கரெண்ட் இழுக்கும் அது மாதிரி...'!

.'அது மாதிரி?''

''அது மாதிரித்தான் நீ புகுந்திருக்கிற வீடும் இருக்கு.''

''எதை வைச்சுட்டுச் சொல்றீங்க?''

''இந்த லெட்டரை வைச்சுட்டு! இந்த லெட்டர்தான் என்னை இங்கே இழுத்த கரெண்ட். வெளியே நின்னு பார்க்கறப்ப எல்லாம் அமைதியா. ஏன் சுமுகமா இருக்கு. 'பொண்ணே, பொண்ணே'ன்னு மாமனார் நெகிழறார். 'வா மௌலி, வா மௌலி'ன்னு சகஸ்ரம் குலாவறான் நீயும் ரொம்ப சௌக்கியமா இருக்கறாப்ல நடமாடறே.''

"நீங்க உங்க கண்ணாடியை மாத்தணும் அப்பா... அந்த லெட்டரை இப்படித் தாங்கோ."

கொடுத்தார்.

ஒரே மூச்சில் படித்தாள்.

பிறகு "இதில எழுதியிருக்கறதெல்லாம் உண்மை தான்" என்ற பாரதி தொடர்ந்து, "ஆனா அத்திம்பேர் இவ்வளவு கடுமையா இருப்பார்னு நான் எதிர் பார்க்கலே!" என்றாள்.

"பேசறப்ப சில சமயங்கள்லே வார்த்தைகளோட கடுமை தெரியாது பாரதி! நீ பிஎச்.டி., பண்ணணும்னு பிடிவாதமா இருக்கே. உன் புருஷன் வீட்ல எல்லாரும் எதிர் துருவத்திலே நிக்கறாங்க. இது எப்படி எத்தனை நாளுக்கு ஒடி எப்ப முடியும்னு ஈச்சா கேள்வி கேக்கறார்."

"நீங்க என்ன சொல்றீங்க?"

"நீ பிஎச். டி.யைப் பத்தி ரொம்ப நாளா எங்கிட்டப் பேசி என்னை நிம்மதியில்லாமச் செய்திருக்கே. அப்ப மாட்டேன்னேன்."

"இப்ப?"

"நீ ஆசைப்பட்டது எதையும் நான் நிறைவேத்தின தில்லே. இதையாவது இப்பவாவது நிறைவேத்தறேனே?"

"நிஜமாவா அப்பா?",

"நிஜமா"

"கல்யாணத்துக்கு முன்னால பணம் இல்லேன்னு கையை விரிச்சீங்களே?"

"அப்ப அது உண்மை. ஆனா இப்ப இருக்கு."

"அமெரிக்காவிலேர்ந்து அண்ணா அனுப்பினானா?"

"இல்லை."

"பின்னே?"

"உன் கல்யாணம் முடிஞ்சதும், கல்யாணச் செலவில ஒரு பங்கை நான் ஏத்துக்கறதுதான் நியாயம், முறைன்



னெல்லாம் சொல்லி நாப்பதாயிரத்துக்கு மேல் ஈச்சா தந்தான்."

"அப்படியா?"

"அவனோட பெருந்தன்மை ஆருக்கும் வராது, பாரதி! ஆனா அதே ஈச்சாதான் உன் ஆசைக்கு சம்மதிக்க மாட்டேன் என்கிறான்."

"நான் என் கோணத்திலேந்து பார்க்கறேன். அவர் தம் கோணத்திலேந்து..."

"யார் எந்தக் கோணமானா என்ன, பாரதி? விதியின் கோணம் சரி இல்லை. நீ இந்தப் பாலக்காட்டுக்கும், பள்ளிப்புரத்துக்கும் இந்தப் புகுந்த வீட்டுக்கும் குட்பை சொல்லிட்டு என்னோட புறப்படு."

"அப்பா...என்னப்பா புதுசா ஒரு குண்டைத் தூக்கிப் போடறீங்க?"

"உன் ஆசையை நிறைவேத்தறதுன்னு வந்தா, வேற வழி என்னம்மா?"

"நீங்க இப்ப செய்ய முன் வந்திருக்கிற காரியம் அத்திம்பேருக்குத் தெரியுமா?"

"இந்தக் காரியத்துக்காக நான் வரலே. ஈச்சாவோடப் பேசிப் பார்க்கலாம்னு வந்தேன். உனக்கு ஒண்ணு தெரியுமா? பாரதி!"

"என்னப்பா?"

"அவருக்கு உன் பேர்ல கொள்ளை ஆசை. நீ ரொம்ப புத்திசாலியாம். கெட்டிக்காரியாம், உன்னால் நங்கவரத்துக்கும் பெருமைதான் வருமே தவிர, அவமானம் வராதாம். இதை அவரே அவர் வாயாலேயே சொன்னார்.

"அவருக்கு என் பேர்ல ஒரு தனி வாத்ஸல்யம் உண்டுன்னு எனக்கே தெரியும்ப்பா."

"இன்னும் என்ன சொன்னார் தெரியுமா, பாரதி?"

"சொல்லுங்க,"

"நாராயணன் எதையும் மனசிலேர்ந்து கொட்ட மாட்டானாம், 'பாரதி நல்ல பொண்ணு. அவளை

நடத்தறபடி நடத்தினா வீட்டுக்கே பெருமை கிடைக்கும். ஆனா அம்மாவுக்குத்தான் தன் மருமகளை சரியாகக் கொண்டு நடத்தத் தெரியலேன்னு சொல்லியிருக்கான். யார்ட்ட தெரியுமா? இந்த சகஸ்ரத்துகிட்ட. அவன் அதை அப்படியே அண்ணா ஈச்சாவிடம் ஒப்பிச்சிருக்கான்.''

பாரதி ஓரிரு நிமிடங்கள் மௌனமாக அவரைப் பார்த்தாள்.

''ஆனா என்ன செய்யறது பாரதி. பொன் ஊசின்னா கண்ல குத்திக்க முடியுமான்னு ஈசுவரன் எங்கிட்டக் கேட்கிறார்...''

''அதாவது...''

''நீ படிக்கறதுன்னு உன் வழியிலே நீ போறதுன்னு முடிவு எடுத்தா, அவர் தம் வழியிலே வேறு முடிவு எடுக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுமாம்,''

''வேற முடிவுன்னா?''

''விவாகரத்து.''

''யூ மீன் டிவோர்ஸ்.''

''ஆமாம்.''

''அதுக்கு நீங்க என்ன சொன்னீங்க?''

''என் பொண்ணுக்குக் கல்யாணமாகி இன்னும் முழுசா ஒரு மாசம் ஆகலே... அதுக்குள்ள டிவோர்ஸ் பத்திப் பேசறியே ஈச்சான்னேன். அதுக்கு என் இடத்திலே நீ இருந்தா என்ன செய்வேன்னு திருப்பிக் கேட்டார். என்னாலே பதில் சொல்ல முடியலை.''

''டிவோர்ஸ்னா அவ்வளவு சுலபமா? பண்டாரா ரோடு விமல்நாத் ஞாபகம் இருக்காப்பா? அவரோட பொண் அபர்ணாதேவி என் க்ளாஸ்மேட், அபர்ணா வோட அக்கா பேர்ல கல்யாணமான மூணாம் மாசமே அவ புருஷன் டிவோர்ஸ் கேஸ் போட்டான். ஆனா ஜட்ஜு கொடுக்கலையே? பாலக்காட்ல ஜட்ஜுகள் தனி ரகமா இருப்பாங்களா என்ன?''



''ஆனா உன் கேஸ் அப்படிப்பட்டதில்லே, பாரதி!''

''எப்படிச் சொல்றீங்க?''.

''உனக்குக் கல்யாணம்தான் ஆகியிருக்கு.''

''புரியலே.''

''உன் கழுத்திலே தாலி மட்டும்தான் ஏறியிருக்கு. மத்தபடி... மத்தபடி...''

''ஓ, புரியறது. ஆமாம் இதை யாரால் நிரூபிக்க முடியும்?''

''ஏன் உன்னாலேயேகூட! கோர்ட் கூண்டிலே ஏத்தி எதிர்த்தரப்பு வக்கீல் துருவித் துருவிக் கேள்வி கேட்கறப்ப உன்னால் பொய் சொல்ல முடியுமா, பாரதி? கல்யாண கன்ஸமேன் ஆகாமப் போனா கேஸ் போறவன் ஈஸியா ஜெயிச்சுடுவான்''

''நாராயணன் நல்லவர்''

''இப்ப நீ நல்லவ இல்லியா?''

''அவர் கேஸ் போட மாட்டார்.

''அவன் தானாப் போட மாட்டான். அவனுடைய அம்மா என் தங்கை ஒருத்தி போதும். உன்னைக் கோர்ட்டுக்கு இழுக்க நீ மெட்ராஸ்லேயோ டில்லியிலேயோ பிஎச்.டி., பண்ணிட்டிருப்பியா, இல்லே சம்மன்ஸ் அனுப்பறப்பவெல்லாம் பாலக்காட்டு கோர்ட் வாசப்படி ஏறிட்டிருப்பியா?''

பாரதி பதில் சொல்லவில்லை.

மௌலி தொடர்ந்தார். ''நீ ஏன் கவலைப்படறே, பாரதி? டிவோர்ஸ் ஆன கையோட நாராயணனுக்கு வேறு ஒருத்தி மனைவியாக வந்தா வந்துட்டுப் போகட்டுமே. நீ உன் பிஎச்.டியை முடிச்சுட்டு உன் மனசுக்கும் பிடிச்ச ஒருத்தனைக் கல்யாணம் பண்ணிக் கொள்ளேன். நீ டாக்டர் பாரதின்னு தெரியறப்ப எத்தனை பி.எச்.டிக்கள் உன்னைத் தேடிக் கொண்டு வருவார்கள்!''

"இப்பத்தான் எனக்கு எல்லாம் புரியறது. சரி, இப்ப நான் என்ன செய்யணும்?"

"என்னோட இன்னிக்கு ராத்திரியே புறப்படு. அப்புறம் ஒரு நாள் நாம மெட்ராஸ் போகலாம். மெட்ராஸ்லே கிடைக்கலேன்னா என்ன, டில்லி, பாம்பே, கல்கத்தான்னு எவ்வளவோ இருக்கு."

"நான் இது பத்தி யோசிக்கணும்."

"இதிலே யோசனை செய்ய என்ன இருக்கு பாரதி?"

"யோசனை செய்ய என்ன இருக்குன்னு எனக்குத் தானே தெரியும்?"

"சரி உன் இஷ்டம்."

"அத்திம்பேர் எதுக்காக உங்களை வரவழைத்து இதில் ஈடுபடுத்தணும்? நேரடியா எங்கிட்டேயே சொல்ல வேண்டியது தானே?"

"வாஸ்தவமான பேச்சுதான் பாரதி! ஆனா ஈச்சா உங்கிட்டே அழுதுகிட்டு சொல்வானா, இல்லே கோபமா முரட்டுத்தனமா சொல்லுவானா? அவன் உன் பேர்ல அலாதிப்பிரியம் வைச்சிருக்கான். இந்த விஷயத்தைப் பேச ஆரம்பிக்கவே அவனுக்குத் தொண்டை அடைச்சுக்காதா?"

"அதான் உங்களை தூது விட்டிருக்கார், இல்லே?"

"நல்லவேளை. இப்ப எங்கிட்ட பண வசதி இருக்கு. அது மட்டும் இல்லாமப் போயிருந்தா என்ன செய்திருப்பேன்? பூர்விகமான நங்கவரம் வீட்டை வித்திருப்பேன்."

"நீங்க ஊருக்குப் போங்கப்பா. நான் ஒரு நிமிஷத்திலே என் வாழ்க்கைப் பிரச்னைக்குத் தீர்வு காண முடியாது."

"கல்யாணமே வேண்டாம்னு சொன்னவதானே நீ? முடிவு எடுக்க என்ன கஷ்டம்?"

"கல்யாணத்துக்கு முன்னாடி இருந்தாப்லதான் மனசு அப்புறமும் இருக்கணுமா? அது மாறப்படாதா?"



"கல்யாணத்துக்கு முன்னாலே பிஎச்.டி., மேல் இருந்த தீவிரம் கல்யாணத்துக்கு அப்புறமும் குறையாம அப்படியே இருக்கறப்ப..."

"போதும்ப்பா. நான் யோசனை பண்ணி முடிவு எடுத்துக்கறேன். நீங்க ஊரைப் பார்க்கப் போங்க!"

"இப்ப ஈச்சாவுக்கு நான் என்ன பதில் சொல்றது பாரதி?"

"பாதிக்கப்பட்டிருப்பவள் நான்! அவராலதான் நேரடியா இதைப் பத்தி பேச முடியலே. ஆனா என்னால முடியும்."

"நீ என்ன முடிவு எடுத்தாலும் அதுக்கு பரிபூரணமான அங்கீகாரம் என்கிட்டேந்து நிச்சயமா வரும் பாரதி!"

"நான் பிஎச்.டிக்குத்தான் ஆசைப்பட்டேனே தவிர, யாருடைய அங்கீகாரத்துக்காகவும்-எனக்கு அப்பாவா இருக்கிற உங்களையும் சேர்த்துத்தான்-ஆசைப்படவும் இல்லை அது எனக்குத் தேவையும் இல்லை!"

அவர் முன்னால் இறங்க, அறை விளக்கை அணைத்து ஏஸியையும் நிறுத்திவிட்டு பாரதி மாடிப் படிகளில் கால் வைத்தாள்

சகஸ்ரம், "என்ன மௌளி? பொண்ணோடப் பேசிப் பேசி மடுக்கலையாக்கும். அதாலது அலுக்கலை போலிருக்கு" என்றான்.

பாரதி, வந்தவள் வாசலை நோக்கி நடந்தாள்.

"பாரதி என்ன நீ, என்கிட்டச் சொல்லிக் கொள்ளாதைக்கு விர்ர்னு போறாய்?" என்றார் சகஸ்ரம்.

அவளுடைய காதுகளில் எதுவும் விழவில்லை. மனதில் ஊழிக்காற்று போல எழுந்துவிட்ட சத்தம் ஓங்காரமாக அவளுடைய உடம்பையே தாக்கிக் கொண்டிருக்கையில் மற்றவர்களுடைய குரலா அவளுடைய காதில் விழும்?

# 22

பாரதி வீட்டை அடைந்தபோது மணி மூன்றரை. குளியல் அறைக்குச் சென்று கை கால்களைக் கழுவி விட்டு சமையலறைக்கு வந்தாள்.

காஸ் அடுப்பு எரிந்து கொண்டிருக்கவில்லை. பிற்பகல் போட வேண்டிய காப்பி டிகாக்ஷன் போட்டாகவில்லை. மனத்தில் ஒருகடுமையான புயல் வீசிக்கொண்டிருந்தாலும் அவள் தடுமாறவில்லை. இதுவரை பிறந்து அறியாத நெஞ்சுறுதி தன்னிடம் ஏற்பட்டிருப்பதை உணர்ந்தாள். விஷயம் முற்றிவிட்டது. இரண்டு கட்சிகளில் ஒரு கட்சி தீர்மானமான முடிவை எடுத்து எதிர்க்கட்சியிடம் வெளியிட்டாகி விட்டது, ஒருவர் தம்மைத் தாமே ஆலோசகராக நியமித்துக் கொண்டு இந்த இரண்டாவது கட்சிக்கு உபதேசம் செய்ய முன் வந்திருக்கிறார். ஆனால் இக்கட்சிக்கு என்று ஒரு தனித்தன்மை இருக்கிறதே! அந்தத் தன்மையை எந்த ஆலோசகராலும் தகர்த்து எறிய முடியாதே?

''இத்தனை நேரமா நீ எங்கே இருந்தே?''

பாரதி கொதிக்கும் நீரை காப்பி ஃபில்டரில் நிதானமாக மெல்ல மெல்ல ஊற்றிக்கொண்டிருக்கையில் தங்கம்மாவின் கேள்வி வெடித்தது. பாரதி உடனே பதில் சொல்லவில்லை. நீரையெல்லாம் ஊற்றிய பிறகு, ஃபில்டரை மூடியபின், பால் பாத்திரத்தை மேடையின் மீது வைத்து விட்டுத் திரும்பினாள்.

''என்னடீ பார்க்கறே? காதுல விழலையா?''

''விழுந்தது. அவசரமாப் பதில் சொல்ல வேண்டிய கேள்வியாப் படலே. சகஸ்ரம் சித்தப்பா வீட்டுக்குப் போயிருந்தேன்.''

''அங்கே என்ன வேலை உனக்கு? சகஸ்ரம் என் புள்ளைக்குத்தான் சித்தப்பா. உனக்கு இல்லை.''



''நீங்க சொல்றதும் சரிதான் அத்தே! சின்ன மாமனார் வீட்டுக்குப் போயிருந்தேன்.''

''அங்க என்ன வேலைன்னு கேட்டேன்?''

''என் அப்பா அங்கே இருந்தார் எங்கிட்டப் பேசணும்னார்.''

''என்ன சொன்னான்?''

''எங்க பேச்சு, அப்பா—பெண்ணுக்கு இடையே நடந்த பேச்சு.''

''எங்கிட்டச் சொல்லப்படாதோ?''

''படாதுன்னு படறது.''

''நீ எப்பப் புறப்படறே?''

''எங்கே?''

''தெரியாதா?''

''தெரியாது! அதான் கேட்கிறேன்.''

''நங்கவரத்துக்கு.''

''இன்னிக்கு ராத்திரி.''

''இன்னிக்கு ராத்திரியா?''

''அப்பா புறப்படறார்.''

''நீ?''

''ஏன்?''

''உன் அப்பா சொல்லலையா?''

''என்னன்னு?''

''என்னடீ, எங்கிட்ட ஜாலவித்தை காட்றியா?''

''ஜாலவித்தைன்னா?''

''இரு, உன்னைக் கவனிக்கிற விதத்தில் கவனிச்சுக்கறேன்.''

தங்கம்மா வெளியேறத் திரும்பினாள்.

''ஒரு நிமிஷம் அத்தே.''

''என்னடீ?''

''இது எப்படி உங்க வீடோ அதே மாதிரி என் வீடும்தான். இதை உதறி எறிஞ்சுட்டுப் போறதும் போகாததும் என் முடிவிலே அடங்கியிருக்கு. பாட்டி உங்களைத் துரத்தினா நீங்க போக மாட்டீங்க, இல்லியா? அது மாதிரித்தான் நானும். இதை நன்னா ஞாபகம் வைச்சுக்குங்க. அனாவசியமா என்கிட்டக் கத்திக் கத்தி உங்க பிளட்பிரஷரை ஏத்திக்காதீங்க.''

மௌனச் சீற்றத்துடன் அவளை விறைத்துப் பாாத்து விட்டு தங்கம்மா வெளியேறினாள்.

டிகாக்ஷன் இறங்கிக் கொண்டிருக்கையில் பால் பாத்திரத்தை வைத்தாள். இரண்டு லிட்டர் பால் கொதிக்கச் சில நிமிடங்களாவது ஆகும்.

என்ன டிபன் செய்ய?

இட்லி அல்லது தோசை மாவு இல்லை. உப்புமா பாதிப் பேருக்குப் பிடிக்காது.

திடீரென்று மீனாட்சி அம்மாளின் சமையல் புத்தகம் நினைவுக்கு வந்தது. எவ்வளவு அரிசிக்கு எவ்வளவு பயத்தம் பருப்புப் போட வேண்டும். பார்க்க வேண்டும். அலமாரியில் சீராக வைக்கப்பட்டிருக்கும் ஹார்லிக்ஸ் பாட்டில்களைப் பார்த்தாள் முக்கால் பாட்டில் முந்திரிப் பருப்பு இருப்பது திருப்தி அளித்தது.

பாலைப் பார்த்தாள். காய்ந்து கொண்டிருந்தது இன்னும் ஓரிரு நிமிடங்களில் கொதிக்க ஆரம்பித்துவிடும். பொங்கிவரும் போது காஸை நிறுத்திவிட வேண்டும்.

பாலும் கொதித்தது.

ஃபில்டரின் அடிப்பாத்திரத்தில் அப்போதைக்குத் தேவையான டிகாக்ஷன் இறங்கியிருந்தது.

ஒன்று ஸ்ட்ராங், சர்க்கரை கம்மி.

இரண்டாவது மீடியம், சர்க்கரை வேண்டாம்.

மூன்றாவது ஸ்ட்ராங், சர்க்கரைக் கொஞ்சம் அதிகம்.



ஒரு பெரிய தட்டில் டபரா தம்ளர்களை வைத்துக் கொண்டு முன் தாழ்வாரத்துக்கு வந்தாள். ''இந்தாங்க பாட்டப்பா காப்பி. கொஞ்சம் லேட்டாயிடுத்து.''

''தோஷமில்லை பொண்ணே!''

''பாட்டம்மா காபி''

''பஞ்சாரை இல்லையே?''

''இல்லை.''

''நீ குடிச்சியா?''

''இனிமேத்தான்.''

''பின்னே இது ஆருக்கு?''

''அத்தைக்கு.''

சொல்லிவிட்டு தங்கம்மா அருகே பாரதி வந்து அவள் முன்னால் காப்பியை வைத்தாள், தங்கம்மா வாய் திறக்கவில்லை.

''பொண்ணே!''

''என்ன பாட்டாப்பா?''

''காப்பி அமிர்தமா இருக்கு. எச்சுமி நீ என்ன சொல்றாய்?''

''நீங்க சர்ட்டிபிகேட் கொடுத்தாச்சே? நானும் கொடுக்கணுமா? பாரதி! வாஸ்தலத்திலேயே காப்பி ருசியா இருக்கு.''

''இந்நைக்கு என்ன பலகாரம்?''

''அரைமணி நேரத்திலே ரெடியாயிடும் பாட்டப்பா''

சமையலறைக்குத் திரும்பி, அவசர அவசரமாகப் புத்தகத்தைப் புரட்டினாள். அத்தியாயமும் கிடைத்தது. அளவும் கிடைத்தது.

குக்கரை ஏற்கனவே பால் பொங்கினதும் இன்னொரு அடுப்பில் வைத்திருந்தாள்.

சரசரவென்று காரியத்தில் ஈடுபட்டாள்.

குக்கர் சத்தம் கேட்ட ஓரிரு நிமிடங்களுக்குப் பின் ஜுவாலையைத் தாழவிட்டுத் தேங்காயை எடுத்தாள். உடைத்தாள். பூவாக்கினாள்.

அவள் பொங்கல் சட்னியுடன் மீண்டும் முன் தாழ்வாரத்துக்கு வந்தபோது கடிகாரத்தைப் பார்த்தாள். நாலரை. சொன்ன நேரத்துக்கு மேல் கால்மணி தாமதமாகியிருக்கிறது என்று மனம் கணக்குப் போட்டது.

''இது என்ன பொங்கலாட்டம் இருக்கு?'' என்றார் தாத்தா.

''பொங்கலேதான் பாட்டப்பா.''

''நெய் மணம் மூக்கைத் துளைக்கறது; அண்டிப் பருப்பை அள்ளிப் போட்டிருக்காய்.''

தாத்தா சாப்பிடத் தொடங்கினார்.

''ஏ கிளாஸா இருக்கு, பொண்ணே! உண்டாக்க ஆர் சொல்லித் தந்தா? உன்னோட அம்மைதானே?''

''ஆமாம்.''

'எச்சுமி நீயும் எடுத்துக்கோடி. ஆத்ல பொங்கல் உண்டாக்கி வர்ஷம் ஒண்ணாறது.''

''நங்கவரம் கல்யாணத்தில்தான் கல்கண்டு சாதத்தையும், பொங்கலையும் வயிறு தெரியாமல் தின்னேனே'' என்றாள் பாட்டி.

பாரதி சிரித்தாள்.

''உங்களுக்கும் கொண்டு வரேன், பாட்டம்மா.''

''வேண்டாம்டீ. நான் அங்கே வரேன்.''

''அங்கே போனாத்தான் மூக்கொத்தம் திங்கலாம்'' என்றார் தாத்தா.

''உங்க மூக்கிலேர்ந்து பொங்கல் வழியாமப் பார்த்துக்குங்கோ!''

பாரதிக்கு உள்ளூரச் சிரிப்பு வந்தது. இந்த வயதிலும் தாம்பத்யத்தை எப்படி ஒருவருக்கொருவர் ரசித்துக் கொண்டிருக்கிறார்கள்?



தங்கம்மா முற்றத்துக்கு அப்பால் சுவரோரமாய் உட்கார்ந்திருந்தாள். காலியாகிவிட்ட டபரா, டம்ளர் இன்னும் அவள் அருகேயே இருந்தன.

''அத்தே உங்களுக்கும் டிபன் கொண்டு வரட்டுமா?'' என்று கேட்டாள்.

''இப்ப வேண்டாம்''

எங்கேயோ பார்த்தவாறு தங்கம்மா பதில் அளித்தாள்.

தான் பண்ணிய பொங்கல் எப்படித்தான் இருக்கிறது என்று ருசி பார்க்கத்தான் தோன்றியதே தவிர, தட்டு நிறையப் போட்டுக் கொண்டு சாப்பிட வயிறு இடம் கொடுக்கவில்லை.

சமையலறையில் மீண்டும் மௌனம் நிலவியது.

அவளுடைய மனமும் சிந்திக்கத் தொடங்கியது.

அப்பா பேசிய பேச்சின் பாதிப்பைக் காட்டிலும், அதற்குக் காரணமான ஈசுவரன் மீது தான் கோபம் வந்தது. அவர் எப்படி இப்படி ஒரு முடிவுக்கு வரலாம்? கடந்த நான்கைந்து நாள்களாக இருவரும் சுமுகமாகப் பேசிக்கொண்டிருக்கிறார்கள். அப்படிப் பேசிக் கொண்டிருக்கையில்தான் ஈசுவரன் அப்பாவுக்குக் கடிதம் எழுதியிருக்கிறார். இதை ஏமாற்று வேலை என்பதா? வஞ்சகம் என்பதா? அவர் கடிதம் எழுதிய விஷயம் நாராயணனுக்குத் தெரியுமா? தெரிந்திருந்தால் அவனாவது கோழிக்கோடு போவதற்கு முன் அவளிடம் சொல்லியிருக்க வேண்டாமோ?

அன்று இரவு மாமனாரை அவள் தனிமையில் சந்தித்துப் பேசியாக வேண்டும். அவளுடைய தனிப்பட்ட பிரச்சனையில் அப்பாவை அவர் ஏன் இழுக்க வேண்டும்?

இரண்டில் ஒன்று தெரிந்து கொள்ள வேண்டும் என்பதில் உறுதியாயிருந்தாள். ஆனால் அவள் அதுவரை தன் இயல்பிலேயே நடந்து கொள்வாள்.

ஐந்தே காலுக்கு ஈசுவரன், அப்பா பின் தொடர வீட்டுக்குள் பிரவேசித்தார். இருவரும் டிபன் சாப்பிட்டார்கள். காப்பி குடித்தார்கள். அவளுடைய அப்பாவின் தொடர்ந்த மௌனத்தில் அவருடைய நெஞ்சுக் குமுறல் எதிரொலிப்பதாகப் பாரதிக்குத் தோன்றியது. ஆனால் எதுவுமே நடக்காததுபோல ஈசுவரன் அவளிடம் சரளமாகப் பேசினார்.

''பொண்ணே, உன் அப்பாவோட வண்டி ராத்திரி பந்நிரண்டே முக்காலுக்குத்தான். ஒன் பிளான் என்னென்னு நேக்குத் தெரியாது. நீ படிச்ச பொண். எல்லாம் தெரிஞ்ச பொண். ஒன் ஆசை நிறைவேற நீ சந்தோஷமா இருந்தா எனக்கும் சந்தோஷம்தான். இதையெல்லாம் ஏன் நான் சொல்றேன்னா. நான் ஓர் அவசர காரியமா எர்ணாகுளம் போறேன். வர்றதுக்கு ரெண்டு நாளாகும்'' என்று கூறிய ஈசுவரன்,

''மௌலி நான் சொன்னது எல்லாம் ஒறமை இருக்கு இல்லியா? என்று கேட்டார்.

மௌலி மௌனமாகத் தலையாட்டினார்.

''இப்ப நான் என் ரூமுக்குப் போய் பொட்டியிலே துணிமணிகளை எடுத்து வைச்சுக்கறேன். ஆறு, ஆறே காலுக்கு நான் பொறப்படணும்.''

பாரதி இடிந்து போய் நின்றாள்.

அன்று இரவு ஈசுவரனிடம் பேச வேண்டும் என்று திட்டம் போட்டிருந்தாள். அதில் மண் விழுந்தது. ஆனால் அவள் விடவில்லை. அவருடைய அறைக்குச் சென்றாள். ஈசுவரன் அலமாரிகளைத் திறந்து வேஷ்டிகளை எடுத்துக் கொண்டிருந்தார்.

''ஒரு நிமிஷம் அத்திம்பேர்''

''நேக்கு நேரமாறது, பொண்ணே!''

''இன்னமும் பொண்ணேன்னு என்னைக் கூப்பிடறது அசம்பாவிதமா இருக்கு''.



''பின்னே?''

''நாயேன்னு கூப்பிடுங்கோ, கழுதேன்னு கூப்பிடுங்கோ''

''நீ என்ன சொல்றாய்?''

''என்னை என் அப்பா நங்கவரத்துக்குக் கூட்டிட்டுப் போயிடணும் இல்லே? இங்கு உள்ள எல்லார்க்கும் நான் குட்பை சொல்லணும் இல்லே?''

''நேக்கு டயமாறது''

''எனக்கு டயம் நிறைய இருக்கு. நான் இந்த வீட்டை விட்டு ஒரே அடியாப் போறதானாலும் உங்ககிட்டேயும் உங்க பிள்ளைகிட்டேயும் ரெண்டு வார்த்தை பேசிட்டுத்தான் போவேன். நீங்க இப்ப எர்ணாகுளம் போயிட்டு வாங்கோ. அவர் கோழிக்கோட்லேர்ந்து எப்ப வரணுமோ வரட்டும். அதுவரையில் நான் இங்குதான் இருப்பேன். அதுவரையில் இந்த வீட்ல இருக்க எனக்கு எல்லா உரிமைகளும் இருக்கு. இதைச் சொல்லத்தான் வந்தேன். குட் நைட் அத்திம்பேர்! குட்பை இல்லே''

ஈசுவரன் அவளை ஏறெடுத்துப் பார்க்கவும் இல்லை, ஒரு வார்த்தை பேசவும் இல்லை.

அவர் பெட்டியுடன் புறப்படுவதற்கு முன் அப்பா, அம்மா மற்றும் தங்கம்மாவிடம் விடை பெற்றுக் கொண்டார் பாரதியைப் பார்க்க முயற்சியே செய்யவில்லை.

ஈசுவரன் வெளியேற, மௌலி பின் தொடர்ந்தார். அவர் யாரிடமும் விடைபெற்றுக் கொள்ளவில்லை. இரவு பன்னிரண்டே முக்காலுக்குத்தானே ரெயில்? அதில் செல்ல இப்போதே ஏன் யாத்திரை செல்ல வேண்டும்?

தரைமேல் தரை அருகே கண்கள் கனக்க நின்ற பாரதி, இருவரும் சகஸ்ரம் வீட்டுக்குள் பிரவேசிப்பதைக் கண்டாள். சிரித்துப் பேசி ஆட்களையே மயக்கும் சகஸ்ரம் தான் இதற்கெல்லாம் காரணமோ? அவன் ஹீரோ அல்ல.

கிழ்த்தரமான வில்லன். இனிமேல் அவன் வீட்டுப்படியை மிதிக்கக் கூடாது.

சகஸ்ரம் வீட்டில் அவன் மட்டும் இருந்தான். ராஜி கமலம் வீட்டுக்குப் போயிருந்தாள்.

''என்ன, அண்ணா பொறப்பட்டாச்சா?

''ஆச்சு. ஆர்ட்டேயும் மூச்சு விடாதே. நான் எஸ்டேட் ஹவுஸில் இருப்பது கோந்தைக்கு மாத்திரம் தெரிஞ்சாப் போரும். சிவராமன், கோவிந்தன் ஆருக்கும் கூடத் தெரியண்டாம். ஆராவது அவசரமாகப் பேசணும்னா என்னன்னு கேட்டுக்கோ போரும்''

''நான் சொன்ன பிளான் தானே அண்ணா இது?''

''மௌலி பேசின பேச்சில் பாரதிகிட்ட ஆட்டம் கண்டிருக்கு'' என்ற ஈசுவரன், ''நானும் அவளுக்கு மனசிலாகற மாதிரி வார்த்தைகளைப் பிரயோகிச்சேன். இனிமே பொண்ணேன்னு, கூப்பிடண்டாம். நாயே. கழுதேன்னு கூப்பிட்டாப் போறும்னா.''

''ஆட்டம் இப்பதானே அண்ணா தொடங்கியிருக்கு போகப் போகத்தான் சூடு பிடிக்கும்'' என்றான் மௌலி.

''மௌலி! ஒண்ணு மாத்திரம் எனக்குத் தெளிவாப் புரிஞ்சுது. அவளுக்கு டிவோர்ஸிலும் இஷ்டம் இல்லை, ரெண்டாவது கல்யாணத்திலும் ஆசை இல்லை'' என்றார்.

''நாம சொல்லிக் கொடுத்ததுக்கு மேலே மௌலி ஜமாய்ச்சிருக்கான். கட்டிலுக்கு அடியில் டேப்ரிகார்டர் இருந்தது. அவளுக்குத் தெரியாது. ஆனா ரெண்டு மூணு நிமிஷம் டேப் வேஸ்டாயிருக்கு'' என்றான், சகஸ்ரம். பிறகு. ''அதை எஸ்டேட்ல எங்கேயாவது வைச்சுத் தொலைச்சுடாதே. கோந்தையும் கேக்கணும்'' என்று சொல்லி முடித்தான்.



''தெரியும்டா. அப்ப நான் வரேன்... மௌலி நம்ம பிரயத்தனம் எப்படி முடியும்னு என்னால தீர்ச்சையா சொல்லக் கழியலை. எல்லாம் நல்லபடியா முடியணும்னு வேண்டிக்கோ, அது போறும்''

''ஈச்சா இன்னும் ஒண்ணு''

''என்ன மௌலி?''

அன்று தங்கப்மா தம்மிடம் பேசியதையெல்லாம் மௌலி விவரித்தார்.

''தங்கத்தை நான் பார்த்துக்கறேன். நீ விசாரப் படாதே... நான் பொறப்படறேன். அவசரம்னு பாரதிட்ட சொல்லியருக்கேன். ரொம்ப நேரம் இங்கேயே இருந்தேன்னா இங்கே ஏதோ துரியோதனன் சூழ்ச்சி நடக்கறதுன்னு அவ எண்ணத் தொடங்குவள்.''

''சரி அண்ணா, நீ போயிட்டு வா. நான் பார்த்துக்க றேன்.... ஆனா ஒண்ணை நீ ஒறமை வைச்சுக்கணம்...

''என்னடா அது சகஸ்ரம்?''

''பாரதிக்கு இப்ப ஒரு சின்ன ஆட்டம் தான் கண்டிருக்கு. அவளோட பிஎச்.டி. ஆசை குறைஞ் சுட்டில்லை''

''தெரியும்''

பாரதி ரேழியில் நின்றபடி எதிர்வீட்டையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

மணி ஆறு முப்பத்தைந்து.

அவளிடம் அவசரம் காட்டிய அவர் இருபது நிமிடங்கள் சகஸ்ரத்தின் வீட்டில் தங்கியிருக்கிறார்!

ஏன்?

அவருக்கும் அவளுடைய அப்பா மௌலிக்குமிடையே ஏதாவது தர்க்கமா? ஒருவரை ஒருவர் வாய் வார்த்தை களால் தாக்கிக் கொண்டார்களா? ஈசுவரனை வழி அனுப்ப அப்பா வாசல் வரை வரவில்லை. இதற்கு என்ன அர்த்தம்?

இருவருக்கும் சிண்டு முடிக்கிறவன் நிச்சயமாக சகஸ்ரமாகத்தான் இருக்கும்.

சிந்தனையில் மனம் வலிக்க பாரதி உள்ளே சென்றாள்.

அன்று இரவு படுக்கச் சென்றபோது அன்று நடந்ததையெல்லாம் எண்ணிப் பார்த்தாள். அப்பா பேசிய வார்த்தைகள் எல்லாம் காதில் மோதி ஒலித்தன?

எல்லாவற்றிற்கும் அடிப்படைக் காரணம் யார்? சகஸ்ரம் அல்லன். ஈசுவரன் அல்லன். அப்பா, அம்மா அல்ல. நிச்சயமா நாராயணனும் அல்லன்.

பின் யார்?

யார்?

அவள்தான்.

அவளுடைய பிஎச்.டி., வெறிதான். இந்த வெறியை இவ்வளவு முற்றிய பிறகு எப்படி அடக்குவது? அடக்காவிட்டால் என்ன ஆகும்? வெறி தீரும். ஆசை நிறைவேறும்.

ஆனால் இந்த பிஎச்.டி.யைவிடப் பல்லாயிர மடங்குப் பெரிதாக ஒன்று இருக்கிறதே?

அது என்ன?

என்ன என்பதை பாரதி கண நேரத்தில் புரிந்து கொண்டாள்.

அவள்தான் புத்திசாலிப் பெண்ணாயிற்றே!

## 23

கடந்த ஒரு வாரத்துக்கு மேலாக அதிகாலையில் எழுந்திருப்பதும், குளித்துவிட்டுச் சமையலறையினுள் பிரவேசித்து வேலையை ஆரம்பிப்பதும் பாரதிக்குப் பழக்கமாகிவிட்டது சின்னவயதிலிருந்து சூரிய உதயத்

21202
3741781



தையே பார்த்திராத பாரதி எங்கே… போனாள்? மற்றவர்கள் பல… நிச்சயமாக அவள் அவர்களுக்குப் …போயிருக்க மாட்டாள். ஈசுவரன், தாத்தா மற்றும் பாட்டி அவளை அன்பால் கட்டிப்போட்டார்கள். அதிகம் பழகியே இராத கமலம் அவளிடம் நெகிழ்ச்சியுடன் நடந்து கொண்டாள். ஒரு நாள் காலை மிகவும் தாமதமாகப் படுக்கையிலிருந்து எழுந்ததைத் தங்கம்மா தவிர வேறு யாரும் கண்டிக்கவில்லை. உடம்பு சரியில்லையோ என்று கனிவாகத்தான் விசாரித்தார்கள். பாரதியே வெட்கிப் போனாள் அதன் பிறகு மிகவும் சிரமப்பட்டு நாலு, நாலே காலுக்கு தூக்கத்தை உதறி எறியத் துவங்கினாள்.

நேற்று நடந்த சம்பவம் அவளுடைய இந்தப் பழக்கத்தைச் சிறிதும் பாதிக்கவில்லை. இன்றும் அவள் நான்கு மணிக்குக் கண் விழித்தாள்.

தாத்தா மற்றும் பாட்டிக்கு காப்பி உபசாரம் செய்துவிட்டு சமையலறைக்குத் திரும்பியபோது தேவகியின் நினைவு திடீரென்று அவளைத் தாக்கியது. ஏன் என்ற காரணம்தெரியவில்லை.தேவகி அவளுடைய உள்மனத்தில் ஒரு சிறு புள்ளியாக ஒளிந்து கொண்டிருந்தாள் போலும். அவளைப் பார்த்தாக வேண்டும். அவளுடன் பேச வேண்டும். அவள்வாழ்க்கையில் முன் அறிவிப்புஇல்லாமல் ஒரு பரீட்சை நடக்கிறது. அக்னிப் பரீட்சை. இதற்கு அவள் தன்னைத்தானே தயாராக்கிக் கொண்டதில்லை. எப்படித் தயார் செய்வது என்றும் புரியவில்லை ஒரே குழப்பம்.தேவகி அவளைவிட ஓரிரு வயது சிறியவள்தான். ஆனால் அவளைப் போலப் படித்தவள் அவளைவிட நன்றாக எதையும் அலசி ஆராய்ந்து பார்த்துப் பேசத் தெரிந்தவள். அவளுடைய சில கருத்துகளில் பாரதிக்கு உடன்பாடு இல்லாமற் போனாலும் தன் கருத்துகளை விருப்பு வெறுப்பின்றி தேவகி வெளியிடுகிறாள் என்ற எண்ணம் தோன்றியது. இந்த ஊரில் யாரிடம் அவள் தன்

பரீட்சையில் தேற யோசனை கேட்பாள்? தாத்தா பாட்டிக்கு விஷயமே தெரியாது. தங்கம்மாவை நினைத்துப் பார்க்கவே கூடாது.

சகஸ்ரம் நிஜமா போலியா என்றே தெரியவில்லை. நாராயணனோ அல்லது ஈசுவரனோ வீட்டில் இல்லை. அப்படியே இருந்திருந்தாலும் தம்முடைய கண்ணோட்டத்தில்தான் அவளுடைய பிரச்சினையை அணுகுவார்கள் சித்தியிடம் கேட்கலாம். ஆனால் அந்தரங்கங்கள் பேசும் அளவுக்கு அவளைத் தெரியாது. அப்பா சொல்ல வேண்டியதைச் சொல்லிவிட்டுப் போய்விட்டார். விவாகரத்து என்று ஒரு பெரிய வார்த்தையைக் காட்டி அவளைப் பயமுறுத்தப் பார்த்தார்.

அவள் விவாகரத்தைப் பற்றிப் பயப்படவில்லை. ரத்து ஏற்படுவதும் ஏற்படாததும் அவள் கையில் மட்டும் இல்லை. இரு தரப்பினர் எதிர் எதிரே நின்று நடத்தி முடிக்க வேண்டிய சடங்கு. விவாகரத்தில் அவளுடைய வாழ்க்கை ஓரளவுக்குப் பாதிக்கப்படலாம். அவ்வளவு தான். அது குலைந்தோ அழிந்தோ போய்விடாது. இப்போது இருக்கும் ஓர் ஆண் துணை இல்லாமல் போகும். இதற்காக அவள் வாடி வதங்கிச் சீரழிந்து போய்விட மாட்டாள். லட்சக்கணக்கான விவாகரத்துகள் ஆண்டு தோறும் நாட்டில் நடக்கின்றன. அவர்களில் அவளும் ஒருத்தி ஆவாள். அவ்வளவுதான். அதன் பின்னர் இன்னோர் ஆண் துணையைத் தேடி அலைவதோ தனிமரமாக மொட்டை மரமாக நிற்பதோ எதிர்காலம் நிர்ணயிக்க வேண்டிய விஷயம்.

அவள் முன்எழுந்துள்ள கேள்வி ஒன்றுதான். குழந்தைகள் விளையாடும்போது காயா பழமா என்று ஒரு கேள்வி கேட்டுக் கொள்வார்கள். காய் என்றால் தோல்வி பழம் என்றால் வெற்றி.

அவளுடைய பரீட்சையில் காய் கிடைக்கப் போகிறதா, பழம் கிடைக்கப் போகிறதா என்பது அன்று பிரச்சினை



பரீட்சையை மேலும் நடக்கவிடாது தடுப்பதா இல்லையா என்பதுதான் பிரச்சினை எதிர்க்கட்சியினர் ஆரம்பித்ததை முளையிலேயே கிள்ளி எறிய வேண்டியதுதானா? அல்லது வளரவிட வேண்டுமா?

அவள் அன்று தேவகியைப் பார்த்தே தீர்வாள்.

சமையல் வேலையை ஆரம்பித்தாள். நேற்று சாம்பார் அதனால் இன்று அது இருக்கக் கூடாது. நேற்று ரசம் இல்லை. அது இன்று இருக்க வேண்டும். அந்த வீட்டுப் பழக்க வழக்கத்துக்கு ஏற்றவாறு சமையல் செய்ய வேண்டும் என்பதைக் கருத்தில் கொண்டு அதற்குஏற்றபடி காய்கறிகளைத் தேர்ந்தெடுத்தாள். கடிகாரத்தைப் பார்த்தாள் ஐந்தே முக்கால். ஆச்சரியப்பட்டாள். கடிகாரத்தின் முள் தாவித்தாவி ஓடவில்லை. நேரம்தான் ஓடுகிறது.

ஒன்பதரைக்குள் நிச்சயமாகச் சமையல் வேலைமுடிந்து விடும். காலை உணவில் தாத்தா பாட்டி இருவருக்குமே நாட்டமில்லாதது சௌகரியமாகப் போயிற்று.

இன்று தங்கம்மா பரிமாறிக் கொள்ளட்டும். பத்து அல்லது பத்தரைக்குள் தேவகியின் வீட்டில் இருக்க வேண்டும்.

இடை இடையே அத்தை மாமியாராக, ராட்சச வேகத்தில் வந்து கோஷித்தாள். பாரதி லட்சியமே செய்ய வில்லை. இரு கைகளும் சேர்ந்தால்தானே சத்தம்பிறக்கும். அவள் தன் கையைக் கட்டிப் போட்டுக் கொண்டு, வேலையில் கவனத்தைச் செலுத்தினாள்.

நினைத்ததற்கு முன்பாகவே அவளுடைய வேலை முடிந்துவிட்டது. கடிகாரத்தில் இப்போது மணி ஒன்பது ஆகச் சில நிமிடங்கள்.

டெலிபோன்.

"குட்மார்னிங் தேவகி, பாரதி பேசறேன்."

''ஹாய்! பாரதி எப்படி இருக்கே? நானே உனக்கு போன் பண்ணனும்னு ரெண்டு நாளா நினைச்சுட்டிருந் தேன்.''

''நீ ஃப்ரீயா?''

''ஃப்ரீ இல்லேன்னாலும் உனக்காக ஃப்ரீ பண்ணிப் பேன். எப்ப வர்றே? நான் கார் எடுத்துட்டு வரட்டுமா?''

''நோ வேண்டாம். நான் ஓர் ஆட்டோ பிடிச்சு வர்றேன். உன் வீடு இருக்கிற இடம்தான் சரியா பிடி படலே.''

''வொர்ரி பண்ணிக்காதே. சந்திரா நகர்னு சொல்லு. அல்லது வசந்தம் ஷிப்பிங் நாயர் வீடுன்னு சொல்லு.''

''ஒகே! தேவகி.''

''லஞ்ச் என் கூடத்தான்.''

''சரி.''

''உன் மதர்-இன்-லாவைப் பாம்பு கடிச்சுதாமே?''

''உனக்கு எப்படித் தெரியும்?''

''உங்க ஊர்லஇருக்கிற அம்பாஸிடர் போன்பண்ணிச் சொன்னார். உன் புடைவைத் தலைப்பிலே இப்பக் கொஞ்சம் காணோம் இல்லே?''

''நேர்ல பேசுவோம்'' டெலிபோன் ரிசீவரை வைத்து விட்டு அவள் மாடியை நோக்கி நடக்க,

''எங்கே போறே?'' என்ற கேள்விக் குரல் கேட்டது.

பார்த்தால் தங்கம்மா.

''தேவகி வீட்டுக்கு.''

''எதுக்கு?''

''பார்க்க, பேச,''

''என்ன பேச?''

''அது சொந்த விஷயம்.''

''இப்ப என்ன பேசினா?''



''உங்களைப் பாம்பு கடிச்சதைப் பத்தி!''

பாரதி நகர்ந்தாள்.

''பாட்டா பாட்டிக்கு யார் பரிமாறுவா?''

''ஆபீஸ்ல ஒருத்தர் லீவ்ல போனா அவர் வேலையை இன்னொருத்தர் கவனிக்கிறதில்லையா? நான் லீவு!''

அடுத்த கணம் மாடிக்கு ஓடினாள்

அலமாரியைத் திறந்தாள். நாராயணன் வாங்கிக் கொடுத்திருந்த ஆறு புடைவைகள் கண்ணில் பட்டன. அவற்றில் ஒன்றைஎடுத்துக்கட்டிக்கொள்ளத்தோன்றியது. இணையான நிறத்தில் சோளி வேணுமே? தையற்காரனிட மிருந்து இன்னும் வரவில்லை. இரத்தச் சிவப்பிற்கு இணை யாக அவளிடம் ஒரு சோளி இருக்கிறது.

வெளியே வந்தாள்

இருபுறமும் பாராமல் நடந்தாள். கிராம வாசிகள் முதன் முறையாக அவள் தனியாக நடந்து போவதைப் பார்க்கிறார்கள். பார்க்கட்டுமே? விமரிசனங்கள் செய் கிறார்கள்! கவலை இல்லை.

ஆதித்ய புரத்தைத் தாண்டிச் சென்று நான்கு பாதை களின் சந்திப்பை அடைந்தாள்.

ஐந்தாறு ஆட்டோக்கள் நின்று கொண்டிருந்தன

'சந்திரா நகர்' என்று சொல்லிவிட்டு ஏறினாள்...

'ஷிப்பிங் நாயர் வீடு எங்கே இருக்கிறது?' என்று ஆட்டோ டிரைவருக்குத் தெரிந்திருந்தது.

பணத்தைக் கொடுக்கக் கைப்பையைத் திறந்தபோது தான், தன்னிடம் கிட்டத்தட்ட இரண்டாயிரம் ரூபாய் இருப்பதை அவள் உணர்ந்தாள். ஊருக்குப் புறப்படு முன் அம்மா அவளுடைய கைச் செலவுக்கென்று ஆயிரம் ரூபாய் கொடுத்திருந்தாள் கிரஹப் பிரவேசத்தின்போது நமஸ்காரம் பண்ணி எழுந்ததற்குப் பரிசாக நூறு ரூபாய், ஐம்பது ரூபாய் நோட்டுகள் சில கிடைத்திருந்தன. ரெடி

மேட் ஆடைகள் வாங்கச் சென்றபோது நாராயணன் ஆயிரம் ரூபாய் கொடுத்திருந்தான். மிச்ச பணத்தை அவன் வாங்கிக் கொள்ளவில்லை.

ஆட்டோ நின்ற இடத்தில் அவன்தான் பெரும் பணக்காரி. டிரைவர் கேட்டதைக் கொடுத்து விட்டு காம்பவுண்டுக் கதவைத் தள்ளினாள். வாயிற் காப்போன் சலாம் அடித்தான். புன்னகையால் சலாத்துக்கு நன்றி தெரிவித்து விட்டு அவள் தேவகியின் வீட்டை நோக்கி நடந்தாள்.

ஆட்டோவை வீட்டு வாசல் வரை ஓட்டச் சொல்லி இருக்கவேண்டும் என்று பாரதி தன்னுள் நினைத்துக் கொண்டாள்.

அவளைக் கண்டதும் தேவகி ஆரவாரமாய் வரவேற்றாள். ஹாலுக்குள் வந்ததும், 'தேவகி, முதலில் தண்ணி தா. கூல் வாட்டர்!'' என்றாள். ஐஸ் வாட்டராக இல்லாமல் அவள் கேட்டபடி மிகவும் தண்மையாகத் தண்ணீர் வந்தது. மடக் மடக்கென்று இரண்டு தம்ளர் குடித்தாள்.

''டிபன் சாப்பிட்டது நெஞ்சைக் கரிச்சுதா?''

''கார்த்தாலே காப்பி குடிச்சதுதான்.''

''அப்பப் பசிக்கிறதா?''

''பசி அடைச்சுப் போச்சு'' என்ற பாரதி ''தேவகி, புதுசா ஒரு ப்ராப்ளம்!'' என்றாள்.

''என்ன பிராப்ளம்?''

''டிவோர்ஸாகும் போலிருக்கு.''

''வாட்? என்ன பேத்தறே, பாரதி?''

''இன்னும் ஆகலே. ஆகும்போல இருக்குன்னுதான் சொல்றேன்.''

''விவரமாகச் சொல்லு.''

சொன்னாள்.

''எல்லாரும் விரோதிகளா நடந்து கொள்றாங்களா?''



''இல்லை. சொல்லப் போனா எல்லாருமே—மாமியாரைத் தவிர—ரொம்ப அன்பாகத்தான் என்னை நடத்தறாங்க.''

''அப்ப என்ன காரணம்?'' என்ற தேவகி சற்று யோசித்துவிட்டு,

''உன்னுடைய பிஎச்.டி...பிளான்தானே?'' என்று கேட்டாள்.

''அப்படித்தான் படறது'' என்ற பாரதி தொடர்ந்து, ''நான் ரெண்டு ரெண்டரை வருஷத்துக்கு வெளியூர்ல இருப்பேன் இல்லியா? நான் திரும்பி வர்ற வரைக்கும் அவங்களால பொறுத்துக் கொள்ள முடியாது'' என்றாள்.

''நீ சொல்ற ரெண்டு ரெண்டரை வர்ஷத்துக்கு அப்புறம்-நீ டாக்டரேட் வாங்கினத்துக்கு அப்புறம் - உன் மனோபாவமும் மாறும் இல்லியா?''

''அதை இப்போ-எப்படிச் சொல்ல முடியும் தேவகி? திரும்பி வரணும்ங்கற எண்ணத்தோடுதான் புறப்படுவேன்.''

''எண்ணம் மாறாதுன்னு உன்னால் உறுதியாச் சொல்ல முடியாது.''

''ஒத்துக்கறேன் ''

''உன் எண்ணமும் மனோபாவமும் மார்றதுன்னு வைச்சுப்போம். அப்ப உனக்கு இந்தப் பள்ளிப்புரதத்துக்கு திரும்பி வரவே பிடிக்காது.''

''பிடிக்காமல் போகலாம்.''

''நாராயணன் நீ இழுக்கிற இடத்துக்கு வந்து உன்னோடு வாழ்க்கை நடத்தத் தயாராக இருக்கமாட்டான்.''

''நிச்சயமாக மாட்டார்.''

''இதையெல்லாம் இப்பவே தீவிரமா நினைச்சுப் பார்த்துத்தான் அவங்க இப்படி ஒரு முடிவை எடுத்து உன்

மடிமேல போட்டிருக்காங்க. நிச்சயமா உன்னை பிடிக்கலேன்னோ, உன்னை வெறுத்துப் போயோ முடிவு செய்யலே.''

''ஒகே. ஒத்துக்கறேன். ஆனா இப்ப என்ன செய்யறது?''

''ஹாப்ஸன்ஸ்-சாய்ஸ்...''

''நான் எம்.ஃபில்தான். இந்த வார்த்தைக்கு என்ன அர்த்தம்னு இன்னும் நான் தெரிஞ்சுக்கலே தேவகி.''

''ரெண்டில ஏதாவது ஒண்ணை நீ எடுத்துக்கலாம். இரண்டாவது என்ன தெரியுமா?'' ஒண்ணுமில்லை. அதாவது தத்தை வாங்கிக்கோ. இல்லேன்னா ஒண்ணை வாங்கிக்கோ.''

''புரியறது.''

''பதினாறாவது நூற்றாண்டிலே இங்கிலண்ட்ல தாமஸ் ஹாப்ஸன்னு ஒருத்தன் இருந்தான். அவன் என்ன செய்வான் தெரியுமா? தன் குதிரைகளை வாடகைக்கு விடறப்ப, லாயத்துக் கதவுக்குப் பக்கத்திலே இருக்கிற குதிரையைத்தான் எடுத்துக்கலாம்பான். முடியாதுன்னா கிடையாதும்பான்.''

''அது மாதிரி?''

''ஒன்று வாழ்க்கை! இல்லாமப் போனா ஒண்ணுமில்லை. நீ வாழ்க்கையைத் தேர்ந்தெடுக்கப் போறியா? இல்லே ஒண்ணுமில்லாததை ஏத்துக்கப் போறியா?''

''ஒண்ணுமில்லேன்னு எப்படிச் சொல்ல முடியும் தேவகி.''

''ரெண்டுல ஒண்ணு. ஃபர்ஸ்ட் வாழ்க்கை! இன்னொண்ணு பிஎச்.டின்னு உன் மனசு கணக்கு போடறது. ஆனா அவங்க ஒண்ணு குடும்பத்தில் இடம். இரண்டு ஒண்ணுமில்லே, நத்திங். இப்படீன்னா ஈசுவரன் நினைக்கிறார்?''

''நிச்சயமாக இப்படிப்பட்ட குயுக்தியான யோசனை அவர் மண்டையிலிருந்து உதிச்சிருக்காது. நீ கார்த்தால சொன்ன அம்பாளிடராகத்தான் இருக்கும்.''



''இப்ப யார் மண்டைங்கறதா முக்கியம் பாரதி? முடிவு செய்ய வேண்டியவள் நீ.''

''குழப்பமா இருக்கு தேவகி.''

''இதில் குழம்ப ஒண்ணுமே இல்லை. அன்னிக்குச் சொன்னதைத்தான் இப்பவும் சொல்றேன். நீ பிஎச்.டிக்கு போகணும்ங்கறது மனத்தோட ஆசை. ஆனா ஆசை இருக்கிற அதே மனசிலே, நல்ல வாழ்க்கை வாழணும்ங்கற லட்சியமும் இருக்கு, இதை உணரலே, அதான் குழப்பமா இருக்குன்னு பேத்தறே!''

''நீ வெட்டு ஒண்ணு துண்டு ரெண்டாப் பேசறே, தேவகி.''

''அதுக்குக் காரணம் மத்தவங்க திருப்திக்காக நான் பேசறதில்லே.''

''நீ உன் எம்.ஃபில்லைப்பத்தி என்ன முடிவு எடுத்தே?''

''என் முடிவைத் தெரிஞ்சுக்கவா பாரதி நீ இப்ப இங்கே வந்திருக்கே? உன் ப்ரோப்ளத்தைப் பார்ப்போம்'' என்ற தேவகி,

''நாராயணன்ட்ட இதுபத்திப் பேசினாயா?'' என்றாள்.

''கோழிக்கோடு போனவர் இன்னும் திரும்பலே. அவர் முந்தாநாள் போனார். இது நேத்து முளைச்சுது.''

''ஈசுவரன்ட்டே?''

''அக்கு வேறு, ஆணி வேராப் பிரிச்சு அலசி அவர்ட்ட பேசிடறதுன்னு நேத்து சாயங்காலம் திட்டம் போட்டேன். ஆனா அவர் கிடைக்கலே. எர்ணாகுளம் போயிட்டார்.''

''வேறு யார்ட்டேயும்...?''

''யார் இருக்கா?''

''அத்தை—கம்—மாமியார்.''

''இப்ப மாமியார் மட்டும்தான். அவ ரெடியா இருக்கா! என்னைத் துரத்தறதுக்கு''

''ஏன்?''

''ஏதோ காம்ப்ளக்ஸ்.''

''பிள்ளைக்கு மனைவி வந்தாலே சில அம்மாக்களுக்கு பொறுக்கறதில்லே. காம்ப்ளக்ஸ் வந்துடறது. பொஸஸிவ் ஃபீலிங்ஸ். ஆனா இது மெல்ல மெல்ல அடங்கிப் போயிடும்.''

''நான் அவளைப் பத்திக் கவலைப்படலே, தேவகி!''

''நீ எதைப்பத்திக் கவலைப்படறேன்னே எனக்கு இன்னும் புரியலையே பாரதி''

''என் நிலைமையைச் சொல்லிட்டேன்.''

''இதப்பார் பாரதி, ஒரு கர்ப்பப் பையிலே இரண்டு குழந்தைகள் உருவாகலாம். ஆனா ஒரு மனசுக்குள்ள ஒண்ணை ஒண்ணு மோதிக்கிற ரெண்டு எண்ணங்கள் இருக்கப்படாது. சஞ்சலமும், குழப்பமும் அதனாலதான் உண்டாறது. திருப்பவும் சொல்றேன். உனக்கு இப்பத்தான் கல்யாணமாகியிருக்கு. பொல்லாத புருஷனா இல்லாம நல்லவன் ஒருவன் வாய்ச்சிருக்கான். அவனுக்கு நல்ல மனைவியா வாழ்றது லட்சியம். நீ எம்ஃபில் படிச்சவ. பிஎச்.டி., போக மனசு துடிக்கிறது, ஒண்ணு ஆசையைத் துரத்தி அடிச்சுட்டு மனைவியா இரு. இல்லே புருஷனைத் தூக்கி எறிஞ்சுட்டு ஆசையை நிறைவேத்திக்க ஓடு.''

''கேக்கும், பிஸ்கட்டும் தரேன். லஞ்ச் ஒரு மணிக்குத்தான். அதுவும் ஒட்டல்லே.'' என்றாள் தேவகி.

''ஒட்டலா?''

''ஒரு ஏ கிளாஸ் ராஜஸ்தானி ஒட்டல் இருக்கு. பூரி சப்ஜி பிரமாதமா இருக்கும்.''

''சரி'' என்ற பாரதி, ''மிஸ்டர் கைலாசம் வீட்ல இருப்பாரா'' என்றாள்.



''பார்க்கணுமா?''

''தோணறது.''

''அப்ப பன்னண்டு மணிக்கே சாப்பிடப் போலோம். உனக்கு கேக் பிஸ்கட் கிடையாது. காப்பி மட்டும்தான்.''

''அதுவும் வேண்டாம் தேவகி'' என்ற பாரதி டீப்பாயின்மேல் இருந்த கண்ணாடிக் கூஜாவிலிருந்து தண்ணீரை எடுத்து தம்ளர் தம்ளராகக் குடித்தாள்.

என்ன தாகம் இவளை இப்படி வாட்டுகிறது?

தேவகி யோசித்தாள்.

## 24

தேவகியின் மாருதி எண்பது கிலோ மீட்டர் வேகத்தில் கோயமுத்தூர் சாலையில் ஓடியது.

வண்டி கஞ்சிக்கோடு என்னும் சிறிய ஊரைக் கடந்து வாளையாருக்குள் பிரவேசித்தது, லாரிகளின் போக்குவரத்து அதிகமாகிக்கொண்டு வரவே, மாருதியின் வேகம் குறைந்தது.

''அம்பது வர்ஷம், அறுபது வர்ஷம் முன்னால இங்கேயெல்லாம் காடு ரொம்ப அடர்த்தியாக இருந்ததாம், யானை, புலி, சிறுத்தை, ஓநாய்னு எல்லா மிருகங்களும் சகஜமாத் திரியுமாம் வாளையார் ரெயில்வே ஸ்டேஷன்ல ஸ்டேஷன் மாஸ்டர் முப்பது அடி உயரத்தில்தான் இருப்பார். அவருடைய அறையை அப்படி உயரமாகக் கட்டியிருந்தாங்க. திடீர் திடீர்னு யானைக் கூட்டம் வரும். ரெயில் போக விடாம தண்டவாளத்தில் நிக்கும். உம், அதெல்லாம் பொற்காலம். ஆனா காடு இன்னும் முழுசா அழியலே. போகப் போக உனக்கே தெரியும்'' என்றாள் தேவகி.

காடும், மிருகங்களும் பாரதியின் மனத்தில் ஒட்டவில்லை. அவளுடைய மனம் அலை பாய்ந்து கொண்டிருந்தது. பிஎச்.டியா? நாராயணனா?

கார் வானையார் ரெயில்வே ஸ்டேஷன் அருகே வந்து நின்றது.

"நீ ரெண்டு கிலோ மீட்டர் நடக்கணும் என்றாள் தேவகி.

பாரதி இறங்கினாள்.

ஒரு ஒற்றையடிப் பாதையில் இருவரும் நடந்தார்கள், பாரதிக்குக் கால் வலிக்க ஆரம்பித்தது. இரண்டு கிலோ மீட்டர் என்று தேவகி கூறினாள். ஏற்கனவே அரைமணி நேரம் நடந்தாகிவிட்டது.

திடீரென்று ஒரு சிறு வெட்டவெளியும், பனை ஓலை வேய்ந்த மண் சுவர்க் கட்டடங்களும் தெரிந்தன.

"கைலாசத்துக்கு வந்து விட்டோம்" என்று கூறி தேவகி சிரித்தாள்.

அவர்கள் சென்றபோது கைலாசம் ஒரு பெரிய அறையில் தரையில் உட்கார்ந்து பாடம் நடத்திக் கொண்டிருந்தார். மாணவ மாணவிகளைப் பார்த்தாள். எட்டு வயதிலிருந்து முப்பது வயது வரை, ஏறக்குறைய இருபது பேர் இருந்தனர்.

அறைக்கு வெளியே நின்ற இருவரையும் கைலாசம் பார்த்துப் புரிந்து கொண்டாலும், தம் வேலையை நிறுத்தவில்லை. கண்களாலும் சமிக்ஞை செய்யவில்லை.

"வா, பாரதி" என்று தேவகி கூற, இருவரும் நகர்ந்தார்கள்.

இப்போது வெட்டவெளியில் பல பெண்கள் கீழே உட்கார்ந்து பற்பல வேலைகளில் ஈடுபட்டிருந்தனர். ஓரிருவர் பிரம்பு நாற்காலி வேலையில் மூழ்கி இருந்தனர். இரண்டு சிறுவர்களும், சிறுமிகளும் மரத்துண்டுகளைச் செதுக்கிக் கொண்டிருந்தார்கள். ஒருவன் அருகே பம்பரம்



ஒருத்தி அருகே முருகன். இன்னொருத்தியின் கையில் யானை. எல்லாம் பொம்மைகள்.

"மிஸஸ் மீனாட்சி அங்கே இருப்பா" என்ற தேவகி இன்னோர் அறையை நோக்கி நடந்தாள்.

நான்கு பெண்கள் தையல் மிஷின்களில் வேலை செய்து கொண்டிருக்க மீனாட்சி ஒவ்வொருவர் அருகேயும் சென்று மேற்பார்வை செய்தாள்.

அவர்களைக் கண்டதும், "இன்னும் பத்து நிமிஷம் நீங்க காத்திருக்கணும். இரண்டரை மணிக்கு வகுப்பு முடியும்" என்றாள். 'சரி' என்ற தேவகி, பாரதியிடம், "கார்த்தால எட்டரை மணிக்கு ஸ்கூல் ஆரம்பிக்கும். தேசிய கீதத்தோட ரெண்டரைக்கு முடியும். சில பேர் காட்டுக்குள்ளே ரொம்ப தூரத்திலே மலை அடிவாரத்தில் இருக்காங்க. அவங்க மட்டும் பத்து மணிக்கு வரலாம்" என்றாள்.

"அப்ப கைலாசத்தைச் சந்திக்கஇன்னும்பத்து நிமிஷம் இருக்குன்னு சொல்லு"

"ஆமாம்."

பாரதி பொறுமை இழந்தாள். அவளுடைய பிரச்னையை கைலாசம் ஒரே நிமிஷத்தில் தீர்த்துவிடப் போவதில்லை என்பதை அவள் உணர்ந்திருந்தாலும் மனத்தின் அவசரத்தை அவளால் கட்டுப்படுத்திக் கொள்ள முடியவில்லை. ஒரு வழியாக கைலாசமும் வெளி வந்தார். மாணவ மாணவிகள் விரைவாக இடத்தைக் காலி செய்தார்கள்.

"இங்கேயே உட்கார்ந்து பேசலாம்" என்று கைலாசம் அழைக்க இருவரும் அங்கே வந்தார்கள்.

"செருப்பு, வெளியே ப்ளீஸ்."

பாரதி கழற்றி வைத்துவிட்டு உள்ளே சென்றாள்.

"உட்காருங்க."

சொல்வதற்கு முன்பாகவே தேவகி கோரைப் பாயில் உட்கார்ந்தாகிவிட்டது. தரையில் உட்கார்ந்து பழக்கப் படாத பாரதி புடைவையைச் சரி செய்துவிட்டு சிரமத் துடன் உட்கார்ந்தாள்.

''அன்னிக்கு நாராயணன் வந்தான். திடீர்னு அவன் தாயாரைப் பாம்பு கடிச்ச செய்தி வந்தது. சங்குண்ணி சிகிச்சையைச் செய்து முடித்து அவனுடைய அம்மா வீட்டுக்குப் புறப்பட்டுப் போன பிறகு மறுபடியும் வந்து சொல்லிவிட்டுப் போனான்'' என்றார் கைலாசம்.

''அதான் கொஞ்ச லேட்டா வந்தார் வீட்டுக்கு!'' என்றாள் பாரதி

''கைலாசம் சார், நாங்க இப்ப எதுக்கு வந்திருக்கோம் தெரியுமா?'' என்றாள் தேவகி.

''சொன்னாத்தான் தெரியும்.''

''பாரதிக்கு ஒரு ப்ரோப்ளம்''

''என்ன பிரச்சினை பாரதி?''

''தேவகி நீயே சொல்லு''

''அதுக்கென்ன சுருக்கமாச் சொல்லிடறேன்''

தேவகி ரத்னச்சுருக்கமாகப்பிரச்சினையைக்கூறினாள்.

''இது ஒரு பிரச்சினையாகவே படவில்லை எனக்கு'' என்றார் கைலாசம்.

''இவ மண்டையைப் போட்டு உடைச்சுக்கறா, சார்'' என்றாள் தேவகி.

''அதுக்கு காரணம் பாரதிக்கு எது அத்தியாவசியம் எது அவசியம், எது அனாவசியம்ங்கற பாகுபாடு தெரியலே''

''கொஞ்சம் விவரமாச் சொல்லுங்க சார்!'' என்றாள் தேவகி.

''ஆணானாலும் சரி, பொண்ணானாலும் சரி, சின்ன வயசில துறவியாப் போகலேன்னா மணவாழ்க்கை



அத்தியாவசியம். யாராயிருந்தாலும் அறிவை வளர்க்கிற கல்வி அவசியம். ஒரு நிலையைத் தாண்டி வசதியான வாழ்க்கையின் தேவைக்காக மேற்படிப்பு அவசியம். அப்படி வாழ்க்கைக்குத் தேவைப்படாதுன்னா அது அனாவசியம்.''

''அப்ப நான் ஆசைப்படற பிஎச்.டி.?''

''பிஎச்.டி., படிச்சுட்டு என்ன செய்வே? ஏதானும் வேலையில் சேருவியா? வேலையில சேர்ந்தாத்தான் வசதியா வாழ முடியும்னு நினைக்கிறாயா? ஒரு தொண்டும் செய்யற எண்ணம் இல்லாம, வசதியா வாழ சௌகரியம் இருக்குன்னா, அந்த மேற்படிப்பால யாருக்கு என்ன லாபம்? நீ எம்.ஃபில்! அன்னிக்கே சொன்னே! இப்ப எல்லாம் ஞாபகத்தில இருக்கா?''

''இல்லே''

''எப்படி மறந்து போச்சு?''

படிச்சதைப் பிரயோகம் பண்ணாததாலே பிஎச்.டி., படிச்சுட்டு மறுபடியும் சமையலறை மட்டுமே போதும்னு நீ முடிவு எடுத்தா, ஒண்ணு ரெண்டு வர்ஷத்திலே என்ன படிச்சோம்ங்கற நினைப்பே வராமப் போகும். ஆதார மான கல்வி ஞானமும், அறிவும் உனக்கு இருக்கு. அறிவு வளர்ச்சியிலும், உனக்குப் பிடிச்சிருக்கிற ஆங்கில இலக் கியத்திலும் உனக்கு உண்மையான நாட்டம் இருக்குன்னா அதை நீ வீட்ல உட்கார்ந்துக்கிட்டே வளர்த்துக்கலாம். அதில ஒரு தனி சுகமும், மகிழ்ச்சியும் கிடைக்கும். எந்த விதிமுறைகளுக்குள்ளேயும் நீ அடங்கிப் போக மாட்டாய் என்ன? பிஎச்.டின்னோ, டாக்டர்னோ பெயருக்குப் பின்னாலேயும் முன்னாலேயும் போட்டுக்க முடியாது, அவ்வளவுதான்.

''நான் ஃபாரஸ்ட்ரியில டாக்டர் பட்டம் வாங்கி னேன். இன்னிக்கும் காடுகள் சம்பந்தமா படிச்சுட்டிருக் கேன். படிக்கிற காலத்திலே படிப்பு ஒரு சுமையா இருந் தது. தீஸிஸ் சரியா இருக்குமோ இருக்காதோங்கற கவலை

யும், பயமும் வந்தது. ஏதானும் விட்டுப் போய் விட்டதோங்கற கிலேசமும் உண்டாச்சு. ஆனா இப்ப, 'ஐம் எ ப்ரிமேன்...' இன்னிக்குப் புதுசா ஒண்ணுக் கத்துக் கறப்ப நேத்து வரை முட்டாளா இருந்தோங்கற வெட்சம் வர்றது. வெட்கம்தான் நம்ப அறிவு வளர்ச்சியை ஊக்கு விக்கிறது''

''இவ்வளவு தூரம் சொன்ன நீங்க என் பிரச்சினைக் குத் தீர்வு சொல்லலே சார்!'' என்றாள் பாரதி.

கைலாசம் சிரித்தார்.

''நான் பொதுவாத்தான் பேச முடியும் பாரதி. மதக் குருக்களாலகூடத் தனி மனிதனோட பிரச்னையைத் தீர்த்து வைக்க முடியாது. ஒரு சமூகத்துக்குத்தான் அவங்களால புத்தி சொல்ல முடியும். உன் பிஎச்.டி., உன் சொந்த விஷயம். உன் மணவாழ்க்கை உன் சொந்த விஷயம். தராதரம் பார்த்து விளைவுகளைப் பத்திச் சிந்திச்சு, இந்த சமூகத்திலே எப்படிப்பட்ட ஸ்தானத்தை அல்லது இடத்தை நீ விரும்பறேங்கறதைத் தீர்மானம் செய்ஞ்சு முடிவு எடுக்க வேண்டியவளும் நீயே. நான் அல்ல''

இதற்கு மேல் அவரிடம் பேசுவதற்கு எதுவும் இல்லை என்று பட்டது பாரதிக்கு.

''ரொம்ப தாங்க்ஸ் சார்... உங்க மிஸஸ் எங்கே காணோம்?''

''அதோ உட்கார்ந்திருக்கா. பின்னாலே பாரு!''

''நான் அவா உள்ளே வந்ததை அப்பவே கவனிச்சுட் டேன்'' என்றாள் தேவகி.

திரும்பி வரும்போது தேவகி, பாரதியின் பிரச்சினை யைப் பற்றி எதுவுமே பேசவில்லை. மாறாகத் தன்னைப் பற்றி கூறத் தொடங்கினாள்.

''நீ, கார்த்தால கேட்ட கேள்விக்கு இப்ப பதில் சொல்லப் போறேன் பாரதி''



''நான் என்ன கேட்டேன்?''

''எம்.ஃபில் பத்தி முடிவு எடுத்தாச்சான்னு கேட்டே!''

''ஆமாம்.''

''நான் எம்.ஏ. மட்டும்தான். நோ. எம்.ஃபில்.''

''அப்பா வேண்டாம்னு சொன்னாரா?''

''என் படிப்பு விஷயத்தில் அப்பா தலையிடறது இல்லை. நானாக யோசனை செய்த முடிவு.''

''என்ன செய்யப் போறே? கல்யாணம் பண்ணிக்க லாம்னு...''

''அது நடக்கறப்ப நடக்கட்டும். இப்ப ஒரு ஸ்கூல் ஆரம்பிக்கப் போறேன். அதில் இரண்டு பகுதி. ஒண்ணு ஏழைகளுக்கு. இன்னொண்ணு...''

''வசதி உள்ளவர்களுக்கு!''

''அதான் இல்லே. ஹாண்டிகாப்ட் சில்ட்ரனுக்கு, டெஃப் அண்ட் டம், ப்ளைண்ட், மென்ட்டலி ரிடார்டர்ட். இது மாதிரி''

''நல்ல திட்டம்.''

''என் வீட்டுக்குப் பக்கத்து வீடு விலைக்கு வந்தது. ரெண்டு ஏக்கர். பெரிய பில்டிங் வேற. இருபத்திரண்டு லட்சம் கேட்டாங்க. நான் என் திட்டத்தைச் சொன்னேன். அஞ்சு லட்சத்தைக் குறைச்சாங்க. ஒரு லட்சம் டொனேஷனும் தர்றதா சொன்னாங்க.''

''எப்ப ஆரம்பம்?''

''பிராஜக்ட் ரிபோர்ட் ரெடி. செயலாக்க திறமை யான ஈடுபாடு உள்ள மனுஷங்கதான் தேவை அவங் களைத் தேடிக் கண்டு பிடிச்சு அமர்த்தணும். ஸ்கூலுக்கு தேவையான டெஸ்க், நாற்காலி, மேஜைகள் இதெல்லாம் வாங்கணும். சொல்லப் போனா வரப்போற மாசங்கள்லே எனக்கு மூச்சுவிடக்கூட நேரமிருக்காது.''

''இது ஆசையா, லட்சியமா?'' என்று கேட்டாள் பாரதி''.

தேவகி சிரித்தாள்.

"ரெண்டுமில்லே. மனசு துருப்பிடிக்காம இருக்கனும்னா ஏதானும் செய்யணும். அப்படிச் செய்யற காரியததில் உற்சாகம், மனநிறைவு இருக்கணும்! நாலு பேருக்குப் பிரயோசனப் படற காரியமா இருக்கணும். அப்பா கோடி கோடியா சம்பாதிக்கிறார். அதில ஒரு துளிதானே இதுக்குச் செலவாகும்?"

"ஸ்டேஷன் பக்கத்தில என்னை ட்ராப் பண்ணு."

"வீட்லேயே ட்ராப் செய்யறேன்."

"பரவாயில்லை தேவகி."

"நத்திங் டூயிங்."

கார் ஊரை நெருங்கிக் கொண்டிருக்கையில் எதிர்த் திசையில் ஒருவர் வந்து கொண்டிருநதார்.

தேவகி காரை நிறுத்தினாள்.

"பணிக்கர் சார்! எங்கே இவ்வளவு தூரம்?"

"நாராயணனைக் காணான் வந்து தேவகி!"

"காருண்ய ஆசிரமம் எங்ஙனயா உள்ளது? நீங்கள்டே ஆசிரமம் அல்லே?"

"நந்நாய் ஓடுன்னு. நாராயணன் சார் வீட்ல இல்லா."

"நீங்கள் இப்ப செக்ரடரி அல்லே பணிக்கர்?"

"அதே."

"இத்தற தூரம் செக்ரடரி தன்னே வருந்நது கண்டா எதைங்கிலும் வெஷமம் உண்டாயிருக்கணும, இல்லே பணிக்சர்?"

"அதே தேவகி, ஒரு தள்ளை இந்நு வச்சி யார்த்த மரிச்சுப் போய். எஸ்டேட்ல ஆரும் இல்லா. வீட்லேக்கு போன் செய்து உத்தரம் கிட்டியில்லா. அது கொண்டான நேரிட்டு இவ்வட வந்நு. புள்ள கோழிக்கோட்லேர்ந்து இன்னம் மடங்கிட்டில்லான்னு ஸ்திரீ பறைஞ்சு."



ஒரு மாதிரியாக இருவர் பேசிக் கொண்டதும் பாரதிக்குப் புரிந்தது. தள்ளை என்றால் என்ன எனறு தான் புரியவில்லை.

"தள்ளைன்னா என்ன அர்த்தம், தேவகி?"

"கிழவி."

திடீரென்று ஒரு சிவப்பு மாருதி, பஸ்ஸுக்கு வழி விட்டு முன்னேறி வருவதைக் கண்டாள் பாரதி.

"அதோ அவரே வந்துட்டார். தேவகி, நான் இறங்கிக்கறேன்."

"ஓகே நாராயணன் சார் வந்து பணிக்கரே! நான் அப்ப வரட்டே?"

பாரதி மற்றும் பணிக்கரையும் தேவகியின் காரையும் பார்த்த நாராயணன் தன் வண்டியைச் சாலையின் ஓரமாக நிறுத்திவிட்டு இறங்கி வந்தான்.

"தேவகி கார்ல நீதான் இருந்தியா?"

"ஆமாம். அவ வீட்டுககுப் போயிருந்தேன். அவளோடு கைலாசத்தைப் பார்க்கப் போனேன். நீங்க இப்பத்தான் வர்றீங்களா?"

"ஆமாம்."

"பணிச்கர் நம்ப வீட்டுக்குப் போயிட்டுத்தான் திரும்பறார். ஆசிரமத்தில் ஒரு கிழவி செத்துப் போய் விட்டாளாம்."

"பணிக்கர், வண்டியில கேறணும்... உன்னை ட்ராப் பண்ணிட்டு நான் பணிக்கரோட போயிட்டு வரேன். ஒரு முக்கியமான காரியம் இருக்கு"

"நானும் உங்ககூட வரேன்."

"நான் போற இடத்துக்கெல்லாம் நீ வரப்படாது பாரதி."

"வருவேன்."

"உன்னால தாங்கிக்க முடியாது."

''எதை?''

''எல்லாத்தையும்.''

''முடியும்.''

''சரி வா, ஆத்துக்குப் போய் பணம் எடுத்துண்டு வரேன்.''

''எங்கிட்ட இருக்கு.''

''எத்தறை?''

''கிட்டத்தட்ட ரெண்டாயிரப்.''

''ராத்திரி வர்றதுக்கு ரொம்ப நேரமாகும்.''

''பரவாயில்லை.''

''அப்பா தேடுவார். விசாரப்படுவார்.''

''அப்பா நேத்து எர்ணாகுளம் போனார். திரும்பிவர ரெண்டு நாளாகும்னார்.''

''இருந்தாலும் நீ லேட்டா வருவேன்னு ஆத்துக்குத் தகவல் கொடுக்கணும்.''

''போன்ல கொடுக்கலாம்.''

பணிக்கர் காரில் ஏறிக் கொண்டார்.

''நீ ரொம்பப் பிடிவாதக்காரி.''

''பிடிவாதம் என் கூடப் பிறந்த வியாதி.''

''நீ பாக்கப் போற காட்சி உன்னை ஜென்மம் பூரா வாட்டி வதைக்கும்.''

மானசீகமா நான் பார்த்தாச்சு. இப்ப இந்தக் கண்ணாலே பாக்கறேன்'' என்றாள் பாரதி.

கார் வேகமெடுத்தது.

காருண்ய ஆசிரமத்தில் நாராயணன் மற்றும் காரிய தரிசிக்காக மற்ற அங்கத்தினர்கள் காத்திருந்தார்கள்.

திடீரென்று சகஸ்ரத்தின் உருவம் தெரியவே, பாரதி திகைப்பில் ஆழ்ந்து போனாள்.

''குஞ்சப்பா நீ எப்படி இங்கே?''

நாலரைக்குப் போன் வந்தது.மன்னி சொல்றப்ப மணி அஞ்சு! நீ ஊர்ல இல்லை. அதுக்காக காரியத்தை நிறுத்தக் கழியுமா? அதான் வந்தேன்.''



சகஸ்ரம் பஞ்சகச்சம் கட்டிக்கொண்டு மேல் வேட்டியை இடுப்பில் சுற்றியவனாய் நின்றான். நெற்றி நிறைய நாமம்

மூங்கில் படுக்கையில் ஒருத்தி படுத்துக் கொண்டிருந்தாள்.

''நிங்ஙள் ஆர் சாரே? நான் கண்டிட்டில்லல்லோ.''

''நாராயணன்டே அச்சன்டே அனியன். சகஸ்ர நாமம்னு பேரு.''

''நாராயணனே எல்லாம் செயும்.''

''அறியும்!'' என்ற சகஸ்ரம், ''ஆப்பணியை இந்நு ஞான் செயான் போணு'' என்றான்.

சகஸ்ரம் தீச்சட்டியுடன் முன் செல்ல, ஆசிரமத்தில் இன்னும் உயிரோடு இருப்பவர்கள் கூடவர 'தள்ளை'யை நாராயணன், பணிக்கர் மற்றும பெயர் தெரியாத இருவர் சுமந்து நடக்க,

பாரதி வியப்பு மேலிட கார் அருகே ஆணி அடித்தாற் போல நின்றாள்.

குழந்தை பிறக்கும்போது அதன் உலகப் பிரவேசத்தை எவ்வளவு உற்சாகமாகக் கொண்டாடுகிறார்கள்? எத்தகைய வரவேற்பு அதற்குக் கிடைக்கிறது?''

ஆனால் போகும்போது?

பெரிய மனிதனாக இருந்தால் ஒரு கூட்டம். நீலிக் கண்ணீர்க் கூட்டம். பொய்ம்மையான மாலை உபசாரம். இவர்களால் பெரிய மனிதனுடைய ஆத்மா சாந்தி அடையுமா? நிச்சயமாக அடையாது. ஆனால் இந்தக் கிழவியின் ஆத்மா? உள்ளார்ந்த உண்மையான கனிவும், பரிவும் அவளுக்குச் சிலரிடமிருந்து கிடைக்கின்றன. அவளை மரியாதையுடன் வழி அனுப்புகிறார்கள். நிச்சயமாக இந்த ஆத்மா சாந்தி அடையும்!

இந்த நாராயணனும், பணிக்கரும், சகஸ்ரமும் மற்றவர்களும் ஏன் இப்படிப்பட்ட தொண்டில் ஈடுபட்டிருக்கிறார்கள்?

ஆசையா?

லட்சியமா?

என்ன லட்சியம்?

மனித உடலுக்கும் மரியாதை செலுத்துகிறார்கள் என்றால் உடலுக்குள் இருந்து வந்த உயிருக்கு எவ்வளவு மரியாதை கொடுத்திருக்க வேண்டும்?

அவள் இதை எந்த ஆராய்ச்சிக் கட்டுரையில் எழுதி டாக்டர் பட்டம் வாங்குவாள்?

நாராயணன் திரும்பி வரும் வரை அவள் கார்மீது சாய்ந்தவளாக நின்றாள்.

அவளுக்குக் கால் வலிக்கவில்லை.

## 25

நாராயணன் மற்றும் சித்தப்பா சகஸ்ரத்துடன் ஆசிரமத்துக்குத் திரும்பும்போது இரவு மணி எட்டு.

''போலாமா பாரதி?''

''போலாம்.''

''ராஜி கார் எடுத்துண்டு போனதால குஞ்சப்பா ஆட்டோவிலேயும் பஸ்லேயும் வரண்டதாப் போச்சு, குஞ்சப்பா நீ ஓட்டறியா இல்லே நானே ஓட்டட்டுமா?'' என்று நாராயணன் கேட்டான்.

''நீ பார்த்தன். நான் சாரதி. கோழிக்கோட்லேர்ந்து ஒத்தைக்கு ஓட்டிண்டு வந்திருக்காய். இங்க தோள்ள சொமந்து ஒரு மைல் நடந்திருக்காய். பேக் ஸீட்ல பாரதியோட ஒக்காரு, கோந்தே'' என்றான் சகஸ்ரம்.

''நான் இந்த ஆசிரமத்தோட சம்பந்தப்பட்டிருக்கேன்னு ஒனக்கு எப்படித் தெரிஞ்சுது, குஞ்சப்பா?'' என்று காரினுள் ஏறும்போது நாராயணன் கேட்டான்.

''இந்த சோத்தியதை நீ எத்தற பிராவசியம் கேப்பாய் கோந்தே?''

''சொல்லேன்'



வண்டி புறப்பட்டது.

''நேக்கு நாலு கொல்லமாத் தெரியும்''

''ஆர் சொன்னா? அப்பாவா?''

''அண்ணா மூச்சு விட்டுட்டில்லை.''

''பாரதிகிட்ட அப்பா சொல்லியிருக்கார். இவ பேச்சிலேர்ந்து தெரிஞ்சுது.''

''மாதவ ராஜா இளப்ல கேசவ நம்பூத்ரி என்னைக் கூப்பிட்டுச் சொன்னாங். நீ இதில ஈடுபடறது அவனுக்குப் பிடிக்கலை. ஒங்கிட்ட நேர்ல சொல்றதுக்கும் பயம்.''

''நல்ல காரியம்னு நேக்குத் தோணித்து. சேயறேன்''

''பாரதி என்ன சொல்றா?''

''நான் சேயறது தெரிஞ்சும் வந்திருக்கான்னா என்ன அர்த்தம்?''

''பிடிச்சிருக்குன்னு''

''நீ ரொம்ப மொள்ளமா ஓட்டறாய் குஞ்சப்பா. ரோடு ஃப்ரியாத்தானே இருக்கு. ஸ்பீடாப் போயேன்''

''அம்பதில போறேன். அது போரும். இப்ப என்ன அவசரம்?''

வண்டி ஓடிக் கொண்டிருந்தது. எல்லாரும் மௌனமாக இருந்தார்கள்.

திடீரென்று சகஸ்ரம் பேசினான்.

''ஒன் மாமனார் நேத்தைக்குக் கார்த்தால வந்து ராத்திரி போனார்.''

''அப்படியா? என்ன பாரதி, நீ சொல்லவே இல்லை?''

''பெரிய நியூஸாப் படலே?''

''எந்துக்கு வந்தார். குஞ்சப்பா?''

''ஆருக்குத் தெரியும்? அண்ணாவுக்குத் தெரிஞ்சிருக்கும். பாரதிக்கும் தெரிஞ்சிருக்கலாம்.''

''ஒனக்குத் தெரியுமா பாரதி?'' என்று கேட்ட நாராயணன் தொடர்ந்து, ''எந்துக்கு?'' என்றான்.

''என்னைக் கூட்டிண்டு போக.''

''எங்கே?''

''பொறந்தாத்துக்கு''

''எந்துக்கு?''

''பிஎச்.டி., படிக்க வைக்க.''

''அதுக்கு அவர் தயவு எந்துக்கு? நான் இருக்கேனே?''

''இங்கதான் ஆருக்கும் இஷ்டமில்லையாமே?''

''உன் அப்பா சொன்னாரா?''

''ஆமாம்''

''எப்பக் கூட்டிண்டு போக வர்றார்?''

''இனிமே வரமாட்டார்''

''ஏன்?''

''நேத்தே தன்கூடப் புறப்படணும்னார். மாட்டேன்னேன்''

''ஏன்?''

''உங்களை கேட்காம நான் எப்படி முடிவுஎடுக்கறது? அதுவும் ரெண்டு வருஷம் பிரிஞ்சு இருக்கணும்னு வர்றப்போ?''

''இப்ப நான்தான் வந்தாச்சே!''

''நானும் ஒரு முடிவு எடுக்கலாம்'' என்றாள் பாரதி.

வீட்டை அடைந்தபோது இரவு ஒன்பதேகால்



''என்னடீ பொண்ணே எங்களை கலங்க வைச்சுட்டியே?'' என்றாள் பாட்டி.

''டில்லியில் நீ ராத்திரி நேரம் கழிச்சு ஆத்துக்கு மடங்கி வரப் பழகி இருப்பாய். பொண்ணே, இந்தப் பாலக்காடு ஒனக்குப் புதுசு அல்லவா? தங்கம்மா அஞ்சாறு பிராவஸ்யம் அந்தப் பொண்ணாத்துக்கு போன் பண்ணிவா. மணி அடிச்சுண்டே இருந்ததாம்''

''இனிமே அப்படி நடக்காது பாட்டப்பா''

''பொறந்த வீட்ல ரொம்ப எடம் கொடுத்தா எப்படி இருப்பா? இப்படித்தான்?'' என்றாள் தங்கம்மா,

''பாரதி சாயங்காலமே தேவகி கார்ல வந்தாச்சும்மா. நான்தான் அவளைக் கூட்டிண்டு போனேன்''—நாராயணன்.

''அப்ப ஆத்துக்கு எங்கேயிருந்தாவது போன்ல சொல்லியிருக்கணும்''

''விட்டுப் போச்சு அம்மா''

''உனக்கு விட்டுப் போச்சு. அவ சொல்லியிருக்கலாமே? கார்த்தாலே ஒம்பதரை மணிக்குப் போனவள்''

''போருமே அம்மா''

''ஒன்னோட அப்பா ரூம்ல தன்னந்தனியா ஒக்கார்ந்துண்டிருக்கார் தெரியுமா?''

''அப்பா எர்ணாகுளத்திலேர்ந்து அதுக்குள்ளே வந்தாச்சா? என்றாள் பாரதி.

அவள் சொல்லி முடிக்கவும் ஈசுவரன் அறையில் இருந்து வெளிவரவும் சரியாக இருந்தது.

''நாலும் கோந்தையும் ஒரு நாள் ஆத்ல இல்லேன்னா நீ ஒன் மனசு போகிற போக்கில போயிடறதா, பொண்ணே? என்றார் ஈசுவரன்''

''இதுக்கு நான் அப்புறமா பதில் சொல்லலாமா அத்திம்பேர்?'' என்று பாரதி கேட்டாள்.

கைகால்களைக் கழுவி விட்டு பாரதி புடைவை மாற்ற மாடிக்குச் சென்றாள்.

''இந்தா பாரதி!'' என்று ஒரு நீண்ட உறையை நாராயணன் நீட்டினான்.

''நீயே படிச்சுப் பாரேன்''

உறையின் வெளியே ஏதும் எழுதப்படவில்லை. உடைத்து, உள்ளேயிருக்கும் தாள்களை எடுத்தாள்.

மூன்று சர்வ கலாசாலைகளிலிருந்து பிஎச்.டிக்கான விண்ணப்பத்தாள்கள்,

சென்னை சர்வ கலாசாலை.

டில்லி சர்வ கலாசாலை.

கல்கத்தா சர்வ கலாசாலை

நாராயணனை ஏறிட்டுப் பார்த்தாள்.

''கோழிக்கோட்டுக்குப் போயிருந்தப்ப நேக்குத் தெரிஞ்ச புரொபசர் ஒருத்தரை மீட் பண்ணினேன். அவர் இங்கிலீஷ் ப்ரொபசர். எல்லா யூனிவர்சிட்டியிலேர்ந்தும் வர்ஷா வர்ஷம் சிநேகிதாள் மூலமா இதெல்லாம் வருமாம். ரூபாய் கொடுத்து வாங்கினேன். அவர் சொன்னார்: கல்கத்தா டில்லியை விட பெட்டராம் மெட்ராஸ்ல ஸீட் கெடைக்கிறது கஷ்டமாம்''

''ரொம்ப தாங்க்ஸ்''



''எல்லாத்துக்கும் அப்ளை பண்ணு... எதிலாவது ஒண்ல கெடைக்கட்டுமே!''

''அன்னிக்கு அப்படிப் பேசினேளே?''

''அந்த அபிப்பிராயத்தை நான் மாத்திக்கலையே?''

''அப்ப?''

''நீ உன் ஆசையைச் சொன்னாய் நான் என் மனசு என்னாங்கறதைச் சொன்னேன். அம்படத்தான்''

''நீங்க உங்க அம்மா, அப்பா பேச்சைத் தட்ட மாட்டேள் இல்லியா?''

''ஏன் கேட்கறாய்?''

''பதில் சொல்லுங்களேன்.'

''அவர் சொல்றது நியாயமாப் பட்டாக் கேட்பேன்''

''நான் படிக்கப் போனா திரும்பி வர்றதுக்கு குறைஞ்சது ரெண்டு வர்ஷமாவது ஆகும்''

''தெரியும்''

''அதுவரையில் உங்களுக்கு மனைவி இல்லை''.

''ஒனக்கு ஆம்படையாளும் இல்லை''.

''என்னை விடுங்கோ. இப்ப நான் உங்களைப் பத்தித்தான் பேசறேன். நான் பிஎச்.டி. படிக்கப் போனா நான் வர்ற வரை நீங்க காத்துண்டிருக்கலாம். ஆனா உங்க அம்மாவும், அப்பாவும் காத்துண்டிருப்பான்னு நிச்சயம் இல்லே. நான் வராமயே இருந்தாலும் இருந்துடுவேன்னு அவா நினைக்கலாம்.''

''சரி அவா அப்படி நினைக்கட்டும், அதுக்கென்ன?''

''என்னை டிவோர்ஸ் பண்ண வைச்சுட்டு உங்களுக்கு ரெண்டாம் கல்யாணத்துக்கு ஏற்பாடு பண்ணுவா.''

''சேயலாம்.''

''அப்ப நீங்க என்ன செய்வீங்க?''

''அதை இப்ப எப்படிச் சொல்றது பாரதி? காத்துண்டிருப்பேன்னு எழுதித் தரக் கழியுமா?''

''நான் உங்களுக்கு வேணுமா, வேண்டாமா?''

''இந்தக் கேள்வியை நானும் திருப்பிக் கேட்கலாம். இல்லியா?''

''கேட்டுப் பாருங்களேன்.''

''வேணுமா, வேண்டாமா?''

''வேணும்''

''நேக்கும் அப்படித்தான்! வேணும்.''

''அப்ப இநத அப்ளிகேஷன்களை அனுப்பறது நியாயமா இருக்காதே?''

''அதை நீதான் சொல்லணும்.''

' நீங்க போய்ச் சாப்பிடுங்கோ.நான் அத்திம்பேர்ட்ட ஓர் அஞ்சு நிமிஷம் பேசிட்டு வரேன்.''

''என்ன பேசப் போறாய்?

''அது எங்களுக்குள்ள மட்டும்தான்.'' மூன்று விண்ணப்பத் தாள்களுடன் அவள் மாடிப்படிகளில் நிதானமாக இறங்கி ஈசுவரன் அறைக்குள் பிரவேசித்தாள்.

''வா, பொண்ணே'' என்ற அவர், ''ஒன்னைக் கழுதே, நாயேன்னு கூப்பிட நேக்கு மனசு வரலே!'' என்றார்.

''மொதல்ல நீங்க கேட்ட கேள்விக்குப்பதில் சொல்லிடறேன். நீங்களும் அவரும் ஊர்ல இல்லாதப்ப நான் என் மனசு போல அலையறதா சொன்னீங்க. நான்



அலையலே, அத்திம்பேர்! நீங்க அப்படி அலைய விட்டுடங்க.''

''நான் சொன்னதைப் பெரிசா எடுத்துண்டுட்டியா?''

''உங்க கருத்துப்படி இது சாதாரண சின்னவிஷயமாவே இருக்கட்டும் ஆனா பெரிசா ஒரு காரியம் செய்துட்டீங்களே?''

''என்ன சேதேன், பொண்ணே?''

''என் அப்பாவுக்கு லெட்டர் போட்டு அவரை இங்கே வரவழைச்சீங்களே.''

ஈசுவரன் சிரித்தார்.

''சிரிப்பா இருக்கா?''

''நீ இந்தாத்துக்கு வேணும் பொண்ணே. என் புள்ளைக்கு ஒன்னைவிட நல்ல பொண், புத்திசாலிப்பெண் இந்த ஜன்மத்திலே கிடைக்கமாட்டா இது சத்தியமான வார்த்தை.''

''அப்ப எதுக்கு நங்கவரத்துக்கு லெட்டர் போட்டுடுங்க?''

''ஒன் மனசை எப்படி மாத்தறதுன்னே தெரியலே பொண்ணே! நீ ரொம்பப் பிடிவாதம் பிடிச்சாய். நீ இந்தக் குடும்பத்தை விட்டுப் போயிடுவியோன்னு நான் பயந்தேன்.''

''அத்திம்பேர் ஏழெட்டு நாளா நான் இநத வீட்லே எப்படி நடந்துக்கறேன்? பாட்டப்பா பாட்டிம்மா குறை சொல்லும்படியா நடந்து கொண்டிருக்கேனா?''

''இல்லை.''

''இதிலேந்து உங்களுக்கு என்ன புரிஞ்சுது?''

''இப்படிப்பட்ட ஒரு பொண்ணு ஒரே ஒரு விஷயத்திலே மட்டும் பிடிவாதமா இருக்காளேன்னு விசாரமா இருந்தது.''

''என் ஆசையை நான் நிறைவேத்திக்க நான் புறப்படத்தான் போறேன்னு வந்தா, அப்ப நான்விளைவுகளையும் விபரீதங்களையும் பத்தி துளிக்கூடக் கவலைப்பட்டிருக்க மாட்டேன். டிவோர்ஸ்,ரெண்டாங்கல்யாணம்னெல்லாம் சொல்லி என்னை பயமுறுத்த முடியாது அத்திம்பேர்! நான் பிடிவாதக்காரிதான்! மெல்ல மெல்ல என் பிடிவாதத்தில் நியாயமில்லைன்னு பட்டுது. அதைப் பத்தி அதிகம் நினைக்கப்படாதுன்னு எனக்குள்ளேயேஒரு தீர்மானம் செய்ஞ்சேன். ஆனா அதுக்குள்ளேயே நீங்க அவசரப்பட்டுட்டீங்க. உங்க மிரட்டலைக் கண்டு பயந்தோ, என் அப்பாவின் நீலிக் கண்ணீரைப் பார்த்துக் கசிந்தோ என் முடிவை நான் மாத்திக்கலே.

''கைலாசம், தேவகி, என் ஹஸ்பெண்ட் இவர்களைப் பார்த்தேன். பழகினேன். நீங்க காருண்யாஸ்ரமம் பத்திப் பேசினப்ப நிலத்தை தானமாக் கொடுத்தவாளும் கண் முன்னால வந்தா. சங்குண்ணி எந்த டாக்டர் பட்டமும் வாங்காமத்தான் மனுஷ உயிர்களைக் காப்பாத்தறான் என்கிற உண்மை என் நெத்திப் பொட்டிலே அறைஞ்சுது. இவர்கள் மத்தியில் நான் யார்ங்கற கேள்வி பொறந்தது. நான் ஓர் அற்பம். ஆயிரக்கணக்கான எம்.ஃபில்கள்லே ஒரு எம்.ஃபில்! பிஎச்.டி... ஒரு சாதனை இல்லைங்கற ஞானோதயம் கொஞ்சம் கொஞ்சமா ஒவ்வொருத்தரைப் பார்த்துப் பார்த்துப்பிறவி எடுத்தது'' என்று கேவலுடன் கூறிய பாரதி,

முத்தாய்ப்பாக, ''நான் இந்தாத்துப் பொண். என் இடம் இங்கதான். நான் வரேன்'' என்றாள்.



கண்கள் கலக்க ஈசுவரன் உட்கார்ந்தார். கைஅமர்த்தி மீண்டும் அவளை அமரச் செய்தார். மெல்ல மெல்ல அவரிடமிருந்து கேவல் ஒலி கேட்கலாயிற்று.

ஒரு சிங்கம் அழுகிறதா?

பாரதியால் தாங்கிக் கொள்ள முடியவில்லை.

''இன்னொரு சமாசாரம்! ரொம்ப முக்கியம்!'' குரலைச் சற்றே உயர்த்திப் பேசினாள்.

அவர் கேவல் நின்றது.

தீனமான குரலில், ''என்ன பொண்ணே?'' என்றார்.

''நீங்களும் லிட்ரேச்சர்ல எம்.ஏ.''

''ஆமாம் பொண்ணே!''

''லயோலா...பர்ஸ்ட் க்ளாஸ்.''

''ஆமாம்.''

''பிஎச்.டி., பண்ண உங்களுக்கு ஆசையோ உத்தேசமோ இருந்தா அப்ளிகேஷன் ஃபாரத்துக்காக அலைய வேண்டியதில்லை. மூணு யூனிவர்சிட்டி ஃபார்ம்ஸ் இதோ இருக்கு!''

திடீரென்று ஈசுவரன் சிரித்தார்.

''என்னப்பா சிரிப்பு?'' என்று கேட்டுக் கொண்டே நாராயணன் வந்தான்.

''அது எங்க ரெண்டு பேருக்குள்ளே!'' என்றார் ஈசுவரன்.

''சாப்பிட வா பாரதி, மணி பத்தரை.''

''நீங்க சாப்பிடலையா?''

''இல்லை, ஒனக்காகக் காத்துக் கொண்டிருக்கேன்.''

''அத்திம்பேர்ட்ட நீங்க கொடுத்த பாரங்ளெைக் கொடுத்தேன். அவரும் பிஎச்.டிக்குப் போகலையாம்.''

''இந்த வயசிலே எவன் அவருக்கு ஸீட் கொடுப் பான்?'' என்றான் நாராயணன்.

''அப்படி என்னடா எனக்குப் பெரிசா வயசாயிடுத்து? இந்நைக்கெல்லாம் இருந்தா...''

''என்ன, இன்னம் ஆத்ல விளக்கு எரிஞ்சுண்டிருக்கு! அண்ணா நீ எப்ப எர்ணாகுளத்திலேர்ந்து வந்தாய்?'' என்று கேட்டுக்கொண்டே சகஸ்ரம் வந்தான்.

''சாயங்காலம்,''

''எர்ணாகுளத்திலே மழை இருக்கா?''

''நான் கவனிக்கலேடா, சகஸ்ரம்.''

''அது இருக்கட்டும், இங்கே என்ன களிப்பும், சிரிப்பும்!''

''இந்நைக்குத்தானேடா நம்ப ஆத்துக்கு ஒரு மாட்டுப் பொண் வந்திருக்கா! அதான் சிரிப்பும் களிப்பும்!''

''குஞ்சப்பா!'' என்றாள் பாரதி திடீரென்று.

ஆச்சரியமாய்ப் பார்த்த சகஸ்ரம், சரியாச் சொல்லு பாரதி! சித்தப்பாவா, குஞ்சப்பாவா?'' என்றான்.

''உங்க அண்ணாவோட புள்ளைக்கு நீங்க ஆரு?''

''குஞ்சப்பா!''

''அப்ப எனக்கும் அதுதான்... ஹாங், எதுக்குக் கூப்பிட்டேன்னா...''

''சொல்லு.''

''இந்தப் பாலக்காட்டு ஹிஸ்டரியை வைச்சுக்கிட்டு நீங்க ஏன் ஒரு தீஸிஸ் எழுதப்படாது? டாக்டர் சகஸ்ர நாமம்னா நன்னா இருக்கும்.''



''நந்நா இருக்கும். இல்லேன்னு சொல்லலே. வைத்தியம் பண்ற டாக்டர்னு நினைச்சுப் பாதிப்பேர் ஒதுங்கிப் போயிடுவா.''

''குஞ்சப்பா நீயும் வா, சாப்பிடலாம்'' என்றான் நாராயணன்.

''பசிக்கத்தான் பசிக்கறது. மாட்டேன்னா ஒனக்கு மனசு சங்கடப்படும். அது எதுக்கு அனாவசியமா? சாப்பிட்டு வைக்கிறேன்.''

''சரி ஒக்காரு. ஒரு நாள் டேபிள்லே ஒக்காந்துதான் சாப்பிடறேன். நீயும் ஒக்காரு பாரதி.''

''வேண்டாம். அத்தை கோவிச்சுப்பா.''

''இனிமே இந்த வீட்ல என் கோபம் செல்லாது. பாரதி! நீ உன் இஷ்டத்துக்கு உட்கார்ந்து சாப்பிடு'' என்ற குரல் வெகு சமீபத்திலிருந்து வந்தது.

''அம்மா, நீ இங்கதான் இருக்கியா, நான் பார்க்க லையே?'' என்றான் நாராயணன்.

''இனிமே உன் கண்ல நான் எப்படிப் படுவேன்? கண்ணை பொத்தத்தான் ஒருத்தி வந்தாச்சே!''

''மன்னி நந்நாவே ஜோக் அடிக்கறா!''

''நங்கவரமா கொக்கா!'' என்றாள் பாரதி.

சாப்பாடு அமர்க்களமாக ஆரம்பித்தது.

அன்று இரவு மணவாழ்க்கையும் மௌனமாய்த் தொடங்கியது.

—முற்றும்—

சென்னை ... நூலகம்
21202
3741781
கொளத்தூர், சென்னை-99.